# TNPSC GROUP I MAIN
# PAPER I UNIT – III - SCHOOL BOOK SOURCE

## சமூக பொருளாதார பிரச்சனைகள் -
## இந்தியா மற்றும் தமிழ்நாடு
## உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் | 3 |
| 2. | பெண்கள் உரிமைகள் | 8 |
| 3. | மகளிர் தொழில் முனைவோர்கள் | 9 |
| 4. | மனித உரிமை மீறல்கள் | 15 |
| 5. | குழந்தைகள் உரிமைகள் | 21 |
| 6. | கருப்பு பணம் | 30 |
| 7. | மக்கள் தொகை | 32 |
| 8. | இந்தியாவில் மக்கள் தொகை போக்குகள் | 35 |
| 9. | இடம்பெயர்வு | 44 |
| 10. | நகரமயமாதல் | 49 |
| 11. | இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு | 55 |
| 12. | வேலையின்மை | 61 |
| 13. | ஊரக வேலையின்மை | 64 |
| 14. | ஊரக தொழிற்சாலைகள் | 67 |
| 15. | ஊரக கடன்சுமை | 69 |
| 16. | ஊரக பொருளாதாரம் | 76 |
| 17. | ஊரக வறுமை | 81 |
| 18. | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் | 84 |
| 19. | சுயதொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு | 91 |
| 20. | தொழில் முனைவோருக்கான அரசின் திட்டங்கள் | 103 |
| 21. | தமிழக அரசின் தொழில் முனைவோருக்காக திட்டங்கள் | 110 |
| 22. | துணிகர முதலீட்டு நிதி | 112 |
| 23. | கூட்டுறவு அமைப்பு | 113 |
| 24. | சமயச்சார்பின்மை | 122 |
| 25. | மேம்பாட்டு குறியீடுகள் | 127 |
| 26. | உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து | 128 |

# பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

## அறிமுகம்

**பெண்ணியம்** என்பது பெண்களை வலிமையாக்குவது மட்டும் அன்று. அவர்களிடம் ஏற்கனவே உள்ள வலிமையை உலகம் உணரும் விதமாக மாற்றுவதே பெண்ணியம் ஆகும்.

பெண்கள் சமத்துவத்திற்கான போராட்டமானது எந்த ஒரு பெண்ணியவாதிக்கோ அல்லது ஏதேனும் ஒரு அமைப்பிற்கோ சொந்தமானது அல்ல. மாறாக, அது மனித உரிமைகள் பற்றிய அக்கறை கொண்டவர்களின் கூட்டு முயற்சியாகும்.

‘‘ஒரு ஆணுக்கான கல்வி என்பது அவருக்கு மட்டுமே பயன்படும். ஆனால் ஒரு பெண்ணுக்கு வழங்கும் கல்வியானது, ஒரு தலைமுறைக்கான கல்வியாகும்.

பெண்களைப் பலவீனமான பாலினம் என்று சொல்வது ஒரு அவதூறு. அது பெண் இனத்திற்கு ஆணினம் இழைத்த அநீதியாகும் என்று மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளார்.

பெண்களின் மேம்பாடு மற்றும் தனித்துவம் என்பது அவர்கள் அரசியல், சமூகப் பொருளாதார மற்றும் நல்வாழ்வு நிலையில் பெறும் முன்னேற்றத்தையே குறிக்கும். இதுவே அவர்களின் நிலைத்த மேம்பாட்டிற்கு ஆணிவேராகும்.

நாட்டின் நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கு நமது சமூகத்தில் பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்தலும் பாலினச் சமத்துவம் அடைதலும் அவசியமாகும்.

## பாலினம் பற்றிய சமூக அம்சங்கள்

சமூகவியலில் பாலினத்திற்கு இடையே வேறுபாட்டைக் காண்கிறோம். பாலியல் என்பது உயிரியல் பண்புக்கூற்றின்படி ஆண் அல்லது பெண் என சமூகத்தில் பயன்படுத்துவதாகும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை மக்கள் பேசும்போது. பெரும்பாலும் பாலியல் பற்றிய கருத்துகளே பேசப்படுகின்றன. ஆனால், பாலினம் என்பதைவிட உயிரியல் பண்பிலான வேறுபாடு மட்டுமே அது என்பது பற்றிய நமது சமூகத்தின் புரிதல் மிக அவசியமானதாகும்.

பாலினம் என்பது உயிரியல் பண்புகளைச் சார்ந்தது. குறிப்பாக, சமூகம் எவ்வாறு பாலியல் வகைகளைக் கருத்தில் கொள்கிறது மற்றும் நடத்துகிறது என்பதே இதன் கருப்பொருளாகும். பாலினம் ஆண் பெண் பங்களிப்பின் சமூக விதிமுறைகளை உள்ளடக்கியது. இது ஆண், பெண், திருநங்கை மற்றம் பிற பாலின நிலைகளை உள்ளடக்கி அதனை சமூகம் எவ்வாறு அணுகிச் செயல்படுத்துகிறது என்பதும் பார்க்கப்பட வேண்டும். அதே போன்று, பாலினம் என்பதை ஒரு நபர் எவ்விதம் உணர்கிறார் என்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

பாலினச் சமூகவியல் ஆண்மை, பெண்மைக்கு இடையிலான வேறுபாடுகளை எவ்வாறு ஆராய்கிறது மற்றும் சமூகம் எவ்வாறு புரிந்து கொள்கிறது என்பதும் ஆகும். (ஆண்கள் மற்றும் பெண்களுக்குப் பொருத்தமான நடத்தை என்ன என்று சமூகம் கருதுவதைப் பார்ப்பது) இவை எவ்வாறு சமூக நடைமுறைகளின் அடையாளத்தைப் பாதிக்கின்றது என்பதை நாம் ஆராய வேண்டும்.

**மேம்பாட்டிற்கான முக்கிய காரணிகள்:**

1. **கல்வி:** ஒருவருக்கு அறிவுப்பூர்வமாகச் சிந்திக்கும் திறன் மற்றும் தனித்தன்மை வாய்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது.

2. **பாலினப்பாகுபாடு:** பாலினப்பாகுபாடு பார்க்கும் சமூகம் எக்காலத்திலும் முன்னேறுவதற்கான வாய்ப்பு அரிது.

3. **சாதி, இன, சமய** பாகுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட சமூகம், முன்னேற்றம் அடையாது.

40 ஆண்டுகளுக்கு முன்பே பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் 'அனைவருக்கும் கல்வி'' என்ற உரிமையை வலியுறுத்தி உள்ளது.

கல்விபெறும் பெண்குழந்தை, தாயான பின்பு பிள்ளைகளுக்கும் குடும்பத்தாருக்கும் அரவணைப்பை வழங்குவதன் மூலம் சமுதாயத்திற்குச் சிறப்புச் சேர்க்கிறார். பெண் குழந்தைகளின் அவசியத் தேவையான கல்வி, அறிவினை பெறவும் அவர்களின் திறனை மேம்படுத்தவும் அதனால் சமூகத்தில் அவர்களின் தகுதிநிலை உயரவும் அவர்களின் சுய முன்னேற்றத்திற்கும் உறுதுணையாய் இருக்கின்றது.

நமது எதிர்காலம் பெண்களை உதாசீனப்படுத்துவோர் கையிலில்லை. அது நமது மகன்களைப் போல் பள்ளிக்குக் கல்வி கற்கச் செல்லும் நமது மகள்களின் கனவுகளில் உள்ளது. அவர்களே, இவ்வுலகத்தில் தாங்கிநிற்கும் வல்லமைக் கொண்டவர் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஐக்கிய நாடுகளின் பொது சபையில், 2012ஆம் ஆண்டு உரையாற்றும்போது கூறினார்.

**பெண்கல்வியின் இணையற்ற முக்கியத்துவங்கள்**

1. **அதிகரித்த கல்வியறிவு:** உலகெங்கிலும் கல்வியறிவற்ற இளையோரில் கிட்டத்தட்ட 63 சதவிகிதம்பேர் பெண்கள். எனவே அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி வழங்கப்பட வேண்டும் அப்போதுதான் பின்தங்கிய நாடுகளும் முன்னேற்றம் அடையும்.

2. **ஆள் கடத்தல் :** ஆள் கடத்தலில் அதிகம் பாதிக்கப்படுவது படிப்பறிவு இல்லாத பெண்கள் மற்றும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்களேயாகும். இளம் பெண்களுக்கு அடிப்படைத் திறன்கள் மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதினால் ஆள் கடத்தல்கள் கணிசமாகக் குறைக்கப்படும் என்று ஆள்கடத்தல்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் இடைமுகமைத் திட்டம் விளக்குகின்றது.

3. **அரசியல் பிரதிநிதித்துவம்:** உலகம் முழுவதும் பெண்கள் வாக்காளர்களாகவே உள்ளனர். அவர்களது அரசியல் ஈடுபாடு கட்டுப்படுத்தப்படுகிறது. குடிமைக்கல்வி மற்றும் குடிமைப் பயிற்சி அனைத்து விதமான மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கான தடைகளை உடைக்கின்றது என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான தலைமை மற்றும் பங்கேற்பினைப் பற்றிய ஆய்வு பரிந்துரைக்கிறது.

4. **வளரும் குழந்தைகள்:** கல்வியறிவு பெற்ற தாய்மார்களின் குழந்தைகள் கல்வியறிவு பெறாத தாய்மார்களின் குழந்தைகளை ஒப்பிடுகையில் இருமடங்கு அதிகரித்து ஐந்து வயதுக்கு மேல் வாழ வாய்ப்புள்ளது என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான கல்வி முனைப்பு நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

5. **காலம் தாழ்த்திய திருமணம்:** பின்தங்கிய நாடுகளில் மூன்றில் ஒரு பெண்குழந்தைக்குப் பதினெட்டு வயதுக்குள் திருமணமாகிவிடுகிறது மற்றும் எந்த நாடுகளில் பெண்குழந்தைகள் ஏழு அல்லது அதற்கும் மேலான வருடங்கள் படிக்கிறார்களோ, அவர்களின் திருமணம் நான்கு ஆண்டுகள் வரை தள்ளிப்போகிறது என்று ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதியம் பரிந்துரைக்கிறது.

6. **வருமான சாத்தியம்:** ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (UNESCO) கூற்றுப்படி கல்வி பெண்ணின் வருமானம் ஈட்டும் திறனை அதிகரிக்கிறது. ஒரு பெண் ஆரம்பக் கல்வி பெற்றாள் கூட அந்த பெண்ணின் வருவாயில் 20 சதவீதம் வரை அதிகரிக்கிறது.

7. **மொத்த உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துதல்:** பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் வழங்கப்படும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உயருகிறது. 10 சதவீதம் கூடுதலாக பெண்கள் கல்வி கற்றால் மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரியாக மூன்று சதவிகிதம் அதிகரிக்கின்றது.

8. **வறுமை குறைப்பு :** பெண்களுக்குக் கல்வியில் உரிமைகள் சம வாய்ப்புகள் வழங்கப்பட்டால் அவர்களும் பொருளாதார செயல்பாடுகளில் பங்கேற்பர். இதனால் அவர்களின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரித்து வறுமை அளவைக் குறைக்க வழி ஏற்படும்.

**பெண்களின் கல்வியறிவு விகிதம் குறைவுக்கான காரணங்கள்**

1. பாலின அடிப்படையிலான சமத்துவமின்மை
2. சமூகப் பாகுபாடு மற்றும் பொருளாதார சீரழிவு
3. பெண் குழந்தைகளை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்துவது
4. பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கை குறைவு
5. பள்ளிகளில் குறைந்த தக்கவைப்பு வீதம் மற்றும் அதிக இடைநிற்றல் விகிதம்.

| **வ.எண்** | **மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆண்டு** | **நபர்கள்** | **ஆண்கள்** | **பெண்கள்** | **ஆண்-பெண் கல்வியறிவு இடைவெளி வீதம்.** |
|---|---|---|---|---|---|
| 1 | 1951 | 18.33 | 27.16 | 8.86 | 18.30 |
| 2 | 1961 | 28.3 | 40.4 | 15.35 | 25.05 |
| 3 | 1971 | 34.45 | 45.96 | 21.97 | 23.98 |
| 4 | 1981 | 43.57 | 56.38 | 29.76 | 26.62 |
| 5 | 1991 | 52.21 | 64.13 | 39.29 | 24.84 |
| 6 | 2001 | 64.83 | 75.26 | 53.67 | 21.59 |
| 7 | 2011 | 74.04 | 82.14 | 65.46 | 16.68 |

**பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு**

- பெண்களின் பொருளாதார வளர்ச்சி அல்லது முன்னேற்றம் சமூகத்தில் தவிர்க்க முடியாத ஒன்று.
- மனித உரிமைகளை முன்னெடுக்கும் போதும் அதன் வளர்ச்சியின் போதும் பெண்கள் மேம்பாடு அவசியமான நடைமுறைகளில் ஒன்றாகும்.
- நீடித்த நிலையான வளர்ச்சிக்கு பெண்கள் முன்னேற்றம், மேம்பாடு மற்றும் பாலின சமத்துவம் அடைவது ஆகியன அவசியக் காரணிகள் ஆகும்.

## பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைவதால் ஏற்படும் நன்மைகள்

1. பெண்களின் பொருளாதார மேம்பாடானது, பெண்கள் பாலியல் சமத்துவம் பெறுவதற்கும் உரிமைகளை அடைவதற்கும் வழிவகுக்கிறது.
2. பெண்களைப் பொருளாதார முன்னேற்றமடைய செய்வதும், உலகில் பாலின இடைவெளிகளை குறைப்பதும் நிலைத்த நீடித்த இலக்கை அடைய உதவுகிறது.
3. பொருளாதாரம் மேம்பாடு அடைகின்றது.
4. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி இலக்கினை அடைவதன் மூலம் பெண்களால் பொருளாதார முன்னேற்றம் அடைய முடிகிறது.
5. மூன்று அல்லது அதற்கு மேலான பெண்கள் ஒரு நிறுவனத்தில் செயல்படும்போது, அனைத்து பரிமாணங்களிலும் அந்த நிறுவனம் வளர்ச்சியடைகிறது.

## பெண்களின் பொருளாதார மேம்பாட்டின் நோக்கங்கள்

1. சட்டங்களில் பாலின வேறுபாடுகள் காணப்படுவது வளரும் மற்றும் வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தையம் பெண்களையும் பாதிக்கும்.
2. உலகத் தொழிலாளர் சந்தையில் பெண்கள் பங்கேற்பதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது.
3. ஆண்களைவிட பெண்களுக்கு வேலைவாய்ப்பு குறைவாக உள்ளது.
4. முறைசாரா மற்றும் பாதிக்கப்படக்கூடிய வேலைகளில், பெண்கள் அதிகம் பணிபுரிகிறார்கள்.
5. உலகளவில் ஆண்களைவிட பெண்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது.
6. பெண்கள் சமமற்ற பொறுப்புணர்வுடன் ஊதியம் பெறாமல் வீட்டு பராமரிப்ப பணிகளைப் பார்க்கின்றனர்.
7. ஊதியம் பெறாத பராமரிப்பு பணி அவசியமான ஒன்று. ஆனால், அதை பொருளாதார செயல்பாடாகவோ அங்கீகாரமுடையதாகவோ கணக்கிடுவது இல்லை.
8. பெண்கள் தொழில்முனைவோராக இருப்பது குறைவு. மேலும், அவர்கள் தொழில் தொடங்குவதில் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கிறார்கள்.
9. நிதி நிறுவனங்களையோ, வங்கிகளையோ ஆண்களை விட பெண்கள் குறைவாகவே அணுகுகிறார்கள்.
10. பெண்கள் இன்றளவும் சமூகப் பாதுகாப்பைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு.
11. பணிபுரியும் இடங்களில் வன்முறை மற்றும் துன்புறுத்தல் போன்ற பிரச்சனைகள், பெண்களுக்கு வயது. இருப்பிடம், வருமானம், சமூகநிலை போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் ஏற்படுகிறது.

இந்திய சமூகம் பன்முகத்தன்மைக்கும் ஒற்றுமைக்கும் பெயர் பெற்றது. இந்திய சமுதாயத்தைப் போலவே வேறுபட்ட சமூகத்தின் பலவீனமான பிரிவினரைப் பெற்ற இந்த சமுதாயத்திலும் சமூக சமத்துவமின்மை நிலவுகிறது. அது பெண்கள், குழந்தைகள், ஏழை, நிலமற்ற விவசாயிகள் ஆகியோரைப் பலவீனமான பிரிவினர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் பண்டைய காலத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்தும் பிரிவின் கைகளில் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் பாகுபாட்டை எதிர்கொண்டுள்ளனர். மேலும் உரிமைகள் மற்றும் நீதிக்கான அவர்களின் போராட்டம் இந்த தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் பலவீனமான குழுவிற்கு எதிரான முந்தைய பாகுபாட்டைப் போலவே பழையது.

**சுருக்கம்**

பெண்கள் அதிகாரம் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகள், இப்போது உலகளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. தனிப்பட்ட உரிமைகள் சமூக, சமத்துவம் அரசியல் சக்தி மற்றம் பொருளாதார வாய்ப்பு ஆகியவை பெண் அதிகாரமளிப்பின் அம்சங்களாகும். உலகின், வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் பெண்களுக்கு

அதிகாரமளித்தல் இலக்கை அடைய உண்மையிலேயே செயல்படுகின்றன. உலகின் மொத்த மக்கள்தொகையில் 50% பெண்கள் பகிர்ந்துகொண்டுள்ளனர். இந்த உலகில் பெண்களை மேம்பாடு அடையச் செய்யாமல் உலக அமைதியையும் நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஒவ்வொரு பெண்ணையும் ஒரு சுய சிந்தனையுடைய அதிகாரம் பெற்ற பெண்ணாக மாற்றுவது அனைவருடைய பொறுப்பாகும்.

APOLLO STUDY CENTRE

# பெண்கள் உரிமைகள்

பெண்கள் மற்றும் சிறுமியின் உரிமைகளும் மனித உரிமைகளாகும். பெண்களுக்கு தங்களது உரிமைகளை முழுமையாகவும் சமமாகவும் அனுபவிக்கவும், அனைத்து பாகுபாடுகளிலிருந்தும் விடுபடவும் உரிமை உள்ளது. அமைதி, பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவைகள் மனித உரிமைகளுக்கான ஆகியவைகள் மனித உரிமைகளுக்கான அடிப்டைகள் ஆகும். ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் சமமான உரிமைகளை உறுதிசெய்கிறது.

1979ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மசோதாவை ஐ.நா.பாதுகாப்பு சபை ஏற்றுக்கொண்டது. இது பெண்களுக்கான சர்வதேச உரிமைகள் மசோதா என அழைக்கப்படுகிறது.

1995ஆம் ஆண்டில் பெய்ஜிங்கில் நடைபெற்ற நான்காவது உலக மகளிர் மாநாடு, பெண்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்கும் உலகளவில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு தளத்தை உருவாக்கியது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டங்கள் இந்த இலக்குகளை அடைவதற்கு தேவையானவற்றை கண்காணிக்கிறது. மேலும் பெய்ஜிங் மாநாட்டின் இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக யுனிபெம்(UNIFEM) என்றழைக்கப்படும் பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதி அமைப்பு 1995 முதல் செயல்பட்டு வருகிறது. பெண்களும் சிறுமிகளும் உரிமைகளை முழுமையாக அனபவிக்கும் போதுதான் உண்மையான சமத்துவம் நிலவுகிறது.

**பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நல்வாழ்வுச் சட்டம்**

இந்த சட்டம் மூத்த குடிமக்களுக்கும் பெற்றோர்களுக்கும் வழங்குவதற்கும் அவர்களின் குழந்தைகள் மற்றும் வாரிசுதாரர்களின் சட்டப்பூர்வமான கடமையாகிறது. முதுமை காலத்தில் பாதுகாப்பும் ஆதரவும் மனித உரிமைகளாக கருதப்படுகின்றன.

| சட்டங்கள் | விதிகள் |
|---|---|
| இந்து விதவை மறுமணச் சட்டம், 1856 | விதவைகள் மறுமணத்தை சட்டப்பூர்வமாக்கியது |
| இந்து திருமணச் சட்டம், 1955 | பெண்களின் திருமண வயது 21 என்று சட்டப்பூர்வமாக்கியது. |
| இந்து வாரிசு சட்டம், 1956 | பெண்கள் தங்கள் பெற்றோர்கள் சொத்தினை மரபு வழியாக பெறுவதை உறுதி செய்கிறது. |
| வரதட்சணைத் தடைச்சட்டம், 1961 | வரதட்சணை என்ற பெயரில் மருமகளை மோசமாக நடத்துவதற்க கடுமையான தண்டனை வழங்குகிறது. |
| பெண்களை கேலி செய்வதற்கு எதிரானச்சட்டம், 1997 | பெண்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. |
| அநாகரிகமாக சித்தரித்தலுக்கெதிரான சட்டம், 1999 | பத்திரிகைகள், செய்தித்தாள்கள், போன்றவற்றில் பெண்களை அநாகரிகமாக சித்தரித்தலைத் தடைசெய்கிறது. |
| தொழிற்சாலைச் சட்டம், 1948<br>தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951<br>சுரங்கச் சட்டம், 1952<br>மகப்பேறு நலச் சட்டம், 1961 | பெண் தொழிலாளர்களைப் பாதுகாக்கிறது. |
| வன்கொடுமை தடுப்பு சட்டம், 2005 | கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் பெண்கள் துன்புறுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கிறது. |

# மகளிர் தொழில் முனைவோர்கள் (Women Entrepreneurs)

தொழில் முனையும் மகளிர்கள் அண்மைக் காலமாக மக்கள் மத்தியில் மிகவும் அறிமுகமானவர்களாக விளங்குகிறார்கள். பெண் தொழில் முனைவோர் தங்களுக்கான வேலை வாயப்பினைத் தாங்களே ஏற்படத்திக் கொள்வதுடன், பிறருக்கும் வேலை வாய்ப்பை உருவாக்கி வருவது பெருமைக்குரிய செய்தியாகும். அமெரிக்க நாட்டு பெண் தொழில் முனைவோர்கள் அந்நாட்டின் பொருளாதார எழுச்சிக்கு அளப்பரிய பங்களிப்பை நல்கி வருகின்றனர். அமெரிக்காவில் பெண்கள் நடத்திவரும் தொழிலை ஆய்வு செய்து வரும் மையம் நடத்திய ஆய்வில் தெரியவரும் உண்மை என்னவென்றால் பெண் உரிமையாளர்களால் நடத்தப்பட்டு வரும் நிறுமங்கள் மற்றும் பெரும்பாண்மை பெண் ஊழியர்களை கொண்ட நிறுமங்கள், 1997ம் ஆண்டில் 5.4 மில்லியனில் இருந்து 2013ம் ஆண்டு இது 10-மில்லியன்களை தொட்டது. இன்று உள்ள புள்ளி விவரப்படி பொதுவாக அமெரிக்காவில் நடந்து வரும் தொழிலில் நான்கில் ஒரு பங்கு மகளிரால் நடத்தப்படும் அல்லது அல்லது மகளிரால் பெருமளவில் இயக்கப்பட்டு வரும் நிறுமம் என்றால் மிகையாகாது. மேலும் அந்த ஆய்வு கூறுவது மேற்கூறப்பட்ட நிறுமங்கள் சுமார் 1.15 டிரில்லியன் அளவிற்கு சரக்கை விற்பனை செய்துள்ளது. இவ்வாறே வளர்ந்த நாடான கனடாவிலும் மூன்றில் ஒரு பங்கு நிறுமங்கள் மகளிருக்கு சொந்தமானதாகும். பிரான்ஸிஸ் ஐந்தில் ஒரு பங்கு மகளிரால் நடத்தப்படும் நிறுவனம். சுவீடன் மற்றும் இங்கிலாந்திலும் அதிக அளவில் பெண்பாலார் சுயவேலையில் அமர்ந்திருப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. பெண்கள் மேற்கூறிய வளர்ந்த நாடுகளில் சில்லரை வணிகம், சிற்றுண்டி சாலைகள், கல்வி நிறுவனங்கள், காப்பீட்டு தொழில் மற்றும் உற்பத்தி தொழிலில் கூட ஈடுபட்டு வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்தியாவில் பெண்களால் உரிமை ஏற்று நடத்தப்படுவதும் மற்றும் பெண்களை அதிகம் கொண்டிருக்கும் நிறுமங்கள் 5.2 விழுக்காடே எனலாம். இவர்கள் பெரும்பாலும் வேளாண்துறை, வேளாண் சார்புத் தொழில்கள், கைவினைப் பொருள் உற்பத்தி, கைத்தறி ஆடைகள் மற்றும் குடிசைத் தொழில்களில், ஈடுபட்டிருப்பதாக 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. பொருளாதாரம் தாராளமாக்கப்பட்டவின் மகளிர் தொழில் முனைவு சூடு பிடித்துள்ளது. பெண்கள் பொருளாதார விடுதலை அடைய அவர்களின் தொழில் முனைவு ஆற்றலையும் மற்றும் திறனையும் கூட்ட அரசும் மற்ற சார்பு நிறுவனங்களும் சிறப்பான கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்து அதனடிப்படையில் பெண்களுக்கு தொழில் முனைவு செயலில் இறங்க தொழில் கல்வியும் மற்றும் பயிற்சியும் அளித்து வருகின்றன. இதனால் தற்போது மூன்றில் ஒரு பங்கு பொருளாதார தொழில்கள் மகளிர் வசம் உள்ளதென இந்தியாவில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. தற்போது உள்ள இந்திய பொருளாதாரசூழல் பெண் தொழில் முனைவோருக்கு ஆதரவாகவே உள்ளன. எனவே வருங்காலத்தில் மற்ற மேலை நாடுகளைப் போலவே இந்தியாவிலும் தொழில்களில் பெண் முதலாளிகள் மற்றும் பெண்களை அதிக எண்ணிக்கையில் கொண்டு இயங்கும் நிறுமங்கள் பல மடங்கு பெருகும் என எதிர்பார்க்கலாம். அதிகமான மகளிர் படித்து வரும் நிலையில் மற்றும் ஊடகங்கள் பெண் பாலினத்திற்கு அளித்து வரும் மகத்தான ஆதரவு, எப்போதும் உள்ள அரசினர் மற்றும் அரசு சாராத நிறுமங்களின் பேராதரவு, மகளிர் தொழில் முனைப்பிற்கு மிகவம் சாதகமான சூழலை உருவாக்கி வருகிறது என்பதில் ஐயமில்லை.

**வரைவிலக்கணம்:**

ஹீம் பீட்டர், "புதினம் பேணும் அல்லது ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட பொருளை முன்மாதிரியாக கொண்டு அதே பொருளை உற்பத்தி செய்து வரும் மகளிரே மகளிர் தொழில் முனைபவர்" என வரையறுக்கிறார்.

இந்திய அரசு, வணிக நிறுவனம் ஒன்றில் சாதாரண பங்கு மூலதனம் மற்றும் பணியில் மகளிரின் பங்கேற்பு அடிப்படையில் மகளிர் தொழில் முனைவோர்க்கு பின்வருமாறு இலக்கணம் வரைந்துள்ளது.

“நிறுவனத்தின் மூலதனத்தில் குறைந்த பட்சம் 51 விழுக்காடு நிதிசார்ந்த உரிமையும் உருவாக்கப்பட்ட பணியில் 51 விழுக்காட்டிற்கு குறையாதவற்றை மகளிருக்கு அளிக்கும் மகளிரால் உரிமை ஏற்று நடத்தப்படும் மற்றும் கட்டுப்படுத்தப்படும் ஒரு தொழில் வினை மகளிர் தொழில் முனைவு ஆகும்.

## மகளிர் தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள்: Opportunities for Women Entrepreneurs

### 1. தொழில் அடிப்படையில் எழும் வாய்ப்புகள் Opportunities Based on Business

மகளிர்கள் அவர்கள் சார்ந்துள்ள இடம் தேர்வு செய்யும் தொழில் முதலீடும் திறன் தொழில் மற்றும் தொழில் நுட்பம் சாரா ஆற்றல் மற்றும் திறன் இவைகளின் அடிப்படையில் ஏராளமாக தொழில் வாய்ப்பை பெற்றுள்ளனர். மகளிர் தொழில் முனைவோராக எண்ணிவிட்டால் அவருக்கு ஏராளமான வாய்ப்பு கதவுகள் திறக்க காத்துக் கிடக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

#### i. உற்பத்தி பிரிவில் In the sphere of Manufacturing

உற்பத்தி பிரிவில் பெண்கள் மெழுகுவர்த்தி செய்தல், அப்பளம் செய்தல், அகர்பத்திகள் செய்தல், பின்னலாடைகள் செய்தல், கைவினைப் பொருட்கள் செய்தல், ஆடை உற்பத்தி செய்தல், மென்பானங்கள் செய்தல், அச்சகம் நடத்துதல், இனிப்பு பொருட்கள் தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல், கம்பள விரிப்புகள் தயாரித்தல் போன்ற தொழில்கள், மகளிருக்கு ஏற்றத் தொழில்களாக நிரூபிக்கப்படுகின்றன.

#### ii. சேவை தொழில் பிரிவு in the Sphere of Service

சேவை தொழில் பிரிவைப் பொறுத்தவரை, சிற்றுண்டி சாலை நடத்துதல், உணவு சமைத்து விற்பனை செய்தல் கல்விச்சாலை அமைத்தல், கணிணி மையம் துவங்குதல், உலர் வெளுப்பகம் அமைத்தல், தையல் வேலை செய்தல், ஒப்பனை கடைகள் நடத்துதல், குழந்தைகள் காப்பகம் நடத்துதல், மலர் நிலையங்கள், அழகு மையங்கள், நிகழ்வுகள் நடத்தி தரும் நிறுவனங்கள் நடத்துதல் மகளிருக்கு அதிக வாய்ப்பை உருவாக்கித் தருகின்றன.

#### iii. வணிகப்பிரிவு in the sphere of Commerce

வணிகப்பிரிவை பொறுத்த மட்டில் அழகுப் பொருட்கள் வணிகம், நோய் அறியும் மையம் (Diognostic centre), பால் விநியோகம், இனிப்புக் கடைகள், மளிகைக் கடைகள், ஆடை அகங்கள், காய்கறி வணிகம், பழச்சாறு நிலையங்கள், குளம்பியகங்கள், தேனீர் வணிகம், மருந்துக்களம், துணி விற்பனை, போன்ற பல முயற்சிகளை வணிகப்பிரிவில் மேற்கொள்ளலாம்.

#### iv. பெரிய தொழில் In the sphere of Large Business

மொத்த பழத்த அதிக பட்டறிவு பெற்ற தொழில் கல்வி பயின்ற மகளிர் பெரிய தொழிலான பல்நோக்கு மருத்துவமனை, நட்சத்திர விடுதிகள், தொழில்கல்வி, பயிற்சி நிலையங்கள், தயாரிப்பு வினைகள், விளம்பர நிறுவனங்கள், திரைப்படம் தயாரிக்கும் நிறுவனங்கள், அழைப்பு மையங்கள், போன்ற பல பெரிய தொழில்களில் அவரவர் படிப்பிற்கு ஏற்ற வகையில் தொழில்வினை மேற்கொள்ளலாம்.

### 2. நிதி திரட்டும் வாய்ப்புகள் Financial Opportunities

பெண்கள் தொழில் முனைவோர்களுக்கு இந்தியாவிலுள்ள அனைத்து வங்கிகளும் கச்சா பொருள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு நுண் சிறு கடன்களை வழங்கி நிதி ஆதரவு நல்கி வருகிறது.

### 3. நிதி சாரா ஆதரவு Non-Financial Support

மகளிர் தொழில் முனைவோர்க்கு கீழ் குறிப்பிட்ட வகையில் நிதிசாரா ஆதரவு வழங்கப்படுகிறது.

i. மகளிர் தொழில்களுக்கு ஏற்ற கொள்கைகள் மற்றும் சட்ட அமைப்புகளை நிறுவ உதவுகிறது.
ii. நிதிசார் ஆலோசனை வழங்குவது.
iii. தொழில் ஆலோசனை சேவை வழங்குவது.
iv. சட்ட தடைகளை களைய உதவுவது.
v. வியாபார தொடர்புகளை ஏற்படுத்த உதவுவது.
vi. ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு உதவுவது.
vii. இலாபம் ஈட்டும் திறனை கூட்ட ஆலோசனை தருவது.
viii. பொருட்களை வடிவமைக்க யோசனை வழங்குவது
ix. குறைந்த வட்டியில் கடன் தருவது.
x. பிணையமற்ற கடன் தருவது.
xi. கடன் கோரும் விண்ணப்பங்களை உடனடியாக பைசல் செய்வது.
xii. வாங்கிய கடனை திருப்பி வசூல் செய்வதில் நெளிவு சுளிவுகளுடன் நடந்து கொள்வது.

### 4. சங்கங்கள் ஏற்படுத்தி தரும் வாய்ப்புகள் Opportunities Created by Associations

சுய உதவிக் குழுக்கள் இந்திய மகளிர் தொழில் முனைவோர் சம்மேளனம் (Federation of Indian women Entrepreneurs). சிறு தொழிலில் வளர்ச்சி அமைப்பு (SIDO) இந்திய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD), சுயதொழில் ஈடுபட்டுள்ள மகளிர் சங்கம்(SEWA), கர்நாடக மகளிர் தொழில் முனைவோர் சங்கம் (AWARE), பன்னாட்டு தொழில் முனைவு மற்றும் தொழில் முன்னேற்ற மையம்(The international Centre for entrepreneurship and career development) டை ஸ்ரீ சக்தி Tie sree Shakthi(TSS) தமிழ்நாடு மகளிர் வளர்ச்சி கழகம், மகளிர் தொழில் நிறுமங்களின் சந்தை அமைப்பு, (Marketing organisation of women entrepreneur) மகளிர் தொழில் முனைவு சங்கம், தமிழ்நாட்டு மகளிர் தொழில் முனைவோர் சங்கம், விவோ பை கூகுள் (Weow by google) போன்ற பல அமைப்புகள் மகளிர் தொழில் முனைவோர்களுக்கு நல்லாதரவை வழங்கிவருகின்றன.

மகளிர் நடத்தி வரும் நடுத்தர தொழில்களைப் பொறுத்த வரையில் கடன் பொறுப்பு திட்டத்தின் கீழ் மகளிரால் நடத்தப்படும் குறு மற்றும் சிறு தொழில்களுக்கு வழங்கப்படும் 80% பொறுப்புறுதி சலுகை மேற்கூறிய நடுத்தர தொழில்களுக்கு வழங்கப்படுகிறது.

### 5. அரசு ஏற்படுத்தி தரும் வாய்ப்புகள் Opportunities Created by Government

நடுவன் மற்றும் மாநில அரசுகள் மகளிர் தொழில் முனைவை பெருக்கிட பல்வேறு திட்டங்களை தீட்டி அவற்றை செயல்படுத்தி வருகின்றன. அவைகளாவன:

i. மகளிர் நிறுமங்களுக்கான "Stand Up" இந்தியா திட்டம்.
ii. மகளிருக்கான வணிகம் தொடர்பான தொழில் முனைவு உதவி மற்றும் வளர்ச்சி திட்டம் (Trade related entrepreneurs Assistance in development scheme)
iii. மகிள கயறு திட்டம் (Mahile coir scheme)
iv. மகிள E.hatt
v. மகளிர் உதவி திட்டம்.

vi. பிரதம மந்திரி ஊரகத்திட்டம்
vii. ஊரகத்திலுள்ள மகளிர் மற்றும் சிறார்கள் வளர்ச்சி திட்டம்.
viii. மகளிருக்கான முத்ரா யோஜனா திட்டம்.
ix. யுத்யோகினி திட்டம்.
x. ஊரக இளைஞர்களின் சுயதொழில் பயிற்சி திட்டம்.

## 6. பயிற்சியின் மூலமாக ஏற்படுத்தப்படும் வாய்ப்புகள் Opportunities Created through Training Programme

நடுவண் அரசு தேசிய அளவில் இளைஞர்களின் ஆற்றலை பெருக்கிட கொள்கைகளை வகுத்தும் (Skill development Policy) மற்றும் அதன் கீழ் தேசிய ஆற்றல் செயல்திறன் மேம்பாடு நோக்கத்தை 2007ம் ஆண்டு பிரகடனம் செய்தது. இத்திட்டத்தினால் தற்கால இளைஞர்களுக்கு தொழில் ஆற்றலை பெருக்கிடவும், தொழில் கல்விகளை புகட்டவும் மற்றும் தொழில் முனைவு உணர்வை ஊட்டவும் சிறப்பு பயிற்சிகள் தரப்பட்டு வருகின்றன. நடுவண் அரசு பல பயிற்சி திட்டங்களை கீழ் குறிப்பிட்டுள்ள முகமைகள் மூலமாக பயிற்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

i. மகளிருக்கான பயிற்சி மற்றும் சுயதொழில் ஆதரவு திட்டம் (STEP).
ii. ஊரகத்தில் உள்ள மகளிர் மற்றும் சிறார்களுக்கான வளர்ச்சி திட்டம் (DWCRA).
iii. சிறுதொழில் சேவை நிறுவனம்.
iv. மாநில நிதி கழகம்
v. தேசிய சிறு தொழில் கழகம்.
vi. மாவட்ட தொழில் மையம்.

## 7. இந்திய மகளிர் தொழில் முனைவோர் கூட்டமைப்பு Consortium of Women Entrepreneurs in India

இந்திய மகளிர் தொழில் முனைவோர் கூட்டமைப்பு 1996ம் ஆண்டு ஒரு அரசு சார்புடைய சங்கமாக (Civil Society) பதிவு செய்யப்பட்டது. இது ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பாக இந்தியர அரசால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு, இவ்வமைப்பு இந்திய தேசிய வாரியத்தின் உறுப்பினராக உள்ளது மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில் (MSME) அமைச்சகத்தின் உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பு ஊரக வளர்ச்சி அமைச்சகத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறது. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் தன்னை முழுமையாக அர்பணித்துக் கொண்டுள்ளது.

i. மகளிரால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஊன்றுகோலாக விளங்குகிறது.
ii. மகளிரின் பொருளாதார ரீதியான சக்தியை பெற்றிட உதவுகிறது.
iii. இயற்கை வளவசதியை பெற்றிட மகளிர் நிறுவனங்களுக்கு உதவுவது.
iv. மகளிரால் நடத்தப்படும் நிறுமங்கள் தயாரிக்கும் பொருட்களின் வடிவமைப்பு மற்றும் புதுப்பொருட்களை உருவாக்கும் முயற்சிக்கு ஆலோசனை தருவது.
v. மகளிர் நிறுமங்களுக்கு சந்தையிடுகை ஆதரவு, தரக்கட்டுப்பாடு ஆதரவு, தொழில்நுட்ப ஆதரவு இவைகளை தருவது.
vi. பல்வேறு மகளிர் தொழில்முனைவு தொடர்பான அரசுத் திட்டங்களை குறித்து மகளிருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது.
vii. சுருங்கக் கூறின் மகளிர் நிறுமங்கட்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் நல்கும் ஒரு சிறந்த அமைப்பாகச் செயல்படுகிறது.

APOLLO STUDY CENTRE

## மகளிர் தொழில் முனைவோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் Challenges of Women Entrepreneurs

மகளிர் தொழில் முனைவோர்கட்கு மேற்குறிப்பிட்டவாறு ஏராளமான வாய்ப்புகள் இருந்தபோதும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஏராளம் என பல ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன. அவைகளில் சிலவற்றை கீழே விவாதிப்போம்.

### 1. நிதிப்பிரச்சனை Problem of Finance

மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழில் வினையில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையை சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக விளங்குகிறது. தங்களின் பெயரில் சொத்துக்கள் இல்லாத மகளிர் உரிமையாளர்கள் பிணைக்கடன் பெறுவதில் பெரும் இன்னல்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். மேலும் நிதி நிறுவனங்களும் மகளிர் தொழில் முனைவோர்களின் தொழில் முனைவு திறமையில் போதிய நம்பிக்கை இல்லாமல், மகளிர் உரிமையரின் கடன் கோரிக்கைகளை கண்டு கொள்வதில்லை எனவும் மகளிர் கடன் பெறா வண்ணம் பல நிபந்தனைகள் விதித்து அவர்களை தொழல் முனைவிலிருந்து ஆர்வம் இழக்க செய்யும்படி நிதி நிறுவனங்களின் செயல்பாடுகள் இருப்பதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. எனவே மகளிர் தொழில் முனைவோர்கள் தங்களின் சொந்த சேமிப்பையோ அல்லது தெரிந்த சுற்றுவட்டாரங்களிலிருந்து நிதி முடக்கையை தீர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. இதன் விளைவாக மகளிர் தொழில் முனைவோர்கள் தாங்கள் மேற்கொண்டுள்ள வினைகளை போதிய அளவில் விரிவாக்கம் செய்ய இயலாமல் தவிப்பதாக கூறப்படுகிறது.

### 2. இயக்கத்தடை Limited Mobility

மகளிர் தொழில் முனைவோர்கள் நமது நாட்டு கலாச்சாரப்படி அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய சூழலில் வீட்டு பொறுப்புகளையும் சுமக்க வேண்டியுள்ளது. என்னதான் தொழில் உரிமையாளராக மகளிர் உயர்ந்தாலும் தாயாக, மனைவியாக, மகளாக, மருமகளாக, மாமியாராக, பாட்டியாக தன்னுடைய கடமைகளை தட்டிக்கழிக்க முடிவதில்லை. தொழிலை துவங்கிய பின் பல்வேறு காரணங்களுக்காக மகளிர் வெளியில் செல்ல முடிவதில்லை. உதாரணமாக பொருளை கொள்முதல் செய்வது தொடர்பாக, வங்கியில் கடன் பெறுவது தொடர்பாக விற்பனை பொருட்டும் தரக்கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும், ஊழியர்களை மேற்பார்வை செய்யவும், பலதரப்பட்ட ஒப்புதல்களை அரசு மற்றும் பிற ஒழுங்காற்று நிறுமங்களிடமிருந்து (Regulatory Bodies) பெற்றிடவும் பயணிக்க வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட பயணம் ஆண்களுக்கு என்னமோ எளிது. ஆனால் வீட்டு வேலையும் தன் தோளில் ஏற்றி சுமந்து வரும் மகளிரால் எப்படி சதா வெளியில் சென்று பயணத்தில் இருக்க முடியும். இதனால் அவர்கள் பிறரிடம் இந்த பயண வேலைகளை ஒப்படைக்க வேண்டியுள்ளது. எனவே ஆண் தொழில் முனைவோர்க்கு நிகராக மகளிர் தொழில் முனைவோர்கள் பயணத்தில் போட்டியிட விரும்புவதில்லை.

### 3. கல்வியறிவு இன்மை Lack of Eductaion

ஏட்டறிவு இல்லா அல்லது குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள் வியாபாரம் அல்லது தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதாக புரிந்து கொள்ள முடியாதவராக உள்ளனர். உதாரணமாக கணக்கை பராமரித்தல், பணம் கொடுக்கல் வாங்கலை கணக்கு வைத்துக் கொள்ளுதல், பொருளை சந்தையிட தொழில்நுட்ப கருத்துக்களை உள்வாங்குதல் போன்ற பலதரப்பட்ட செய்திகளை தெளிவாக விளங்கிக் கொள்ள குறைவான படிப்பு அல்லது படிப்பறிவு இன்மை மிகப்பெரிய இடையூறாக இருக்கிறது.

## 4. ஆதரவு இன்மை Lack of Support Network

மகளிர் தொழில் முனைவோர் செம்மையாக தன் வினையை செயல்படுத்த பலதரப்பட்ட மக்களின் கனிவு, பரிவு மற்றும் ஆதரவு இவைகள் தேவைப்படுகின்றன. குறிப்பாக கணவன், பிள்ளைகள், பெற்றோர்கள், வாழக்கைப்பட்ட இடம், நண்பர்கள், அயல் அண்டையில் வசிப்பவர்கள் என பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. மிகவும் குறிப்பாக மகளிர் தொழில் முனைபவர் உணர்வு ரீதியாக தொழிலில் துவண்டு கிடக்கும்போது அவர்களுக்கு உளவியல் ரீதியான ஆதரவும் மற்றும் கனிவான அதே சமயம் நம்பிக்கை கொடுக்கின்ற அறிவுரை வேண்டும். பல சமயங்களில் இப்படிப்பட்ட நெருக்கடிகள் தொழிலில் வரும்போது மேற்கூறிய ஆதரவு மையங்கள் தோள் கொடுக்க முன் வர வேண்டும். அந்த நேரங்களில் மகளிரை கேலி செய்யும் பேச்சு, சாபம், ஏளனம் ஆகியவை அவர்களின் நம்பிக்கையை தகர்க்கின்றது. குறிப்பாக ஆண் ஆதிக்க மனப்பான்மை கொண்ட நபர்களின் நடத்தை மற்றும் வார்த்தை வன்முறைகள் மகளிரின் தொழில் துணிவை மிகவும் பாதிக்கிறது.

## 5. கடும்போட்டி Stiff Coxmpetition

தாராளமயமான போட்டி உலகில் மகளிர் தொழில் முனைவோர்கள் பெரிய நடுத்தர தொழில்களிடமிருந்து கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர். போட்டியை வலுவாக எதிர்கொள்ள விளம்பரம் மற்றும் விற்பனை பெருக்க யுக்திகளை கையாள வேண்டியுள்ள சூழ்நிலையில் மகளிர் தொழில் முனைவோர்கள் ஈடுகொடுக்க முடியாமல் திணறுகின்றனர். காரணம் போதிய நிதி ஆதாரம் இல்லாததே ஆகும்.

## 6. உணர்ச்சி வயப்படல் Sensitivity

மகளிராக இருப்பவர்கள் இயற்கையாகவே உணர்ச்சி வயப்படக் கூடியவர்கள், உணர்ச்சி பொங்கி எழும்போது கோபப் படக்கூடியவர்கள். இப்படிப்பட்ட மனநிலை தொழிலில் சிக்கல் அல்லது சவால்கள் எழும்போது அமைதியாக, நிதானமாக, பொறுமையாக முடிவெடுக்க அவர்களை விடுவதில்லை. தொழில் பயணத்தால் அவ்வப்போது ஏற்படும் சங்கடங்கள், மனக்கசப்புகள், ஏமாற்றங்கள் சிறு தோல்விகள் மகளிர் தொழில் முனைவோரை ஆர்வம் இழக்கச் செய்கின்றன. இத்தகைய சூழல்கள் மகளிர் தொழில் முனைவரின் செயல்பாட்டை பெரிதும் பாதிக்கின்றன.

## 7. போதிய விவரமின்மை Lack of Information

மகளிர் தொழில் முனைவோர்கள் தங்களின் குறைந்த படிப்புத் தகுதி காரணமாகவோ அலட்சியம் காரணமாகவோ அல்லது வீட்டு வேலை சுமையின் காரணமாக தங்களால் துவக்கப்படும் தொழிலை சுற்றி என்ன நடக்கிறது? என்னென்ன சலுகைகள் அரசு நல்குகிறது? அரசுசாரா அமைப்புகளின் ஆதரவு என்ன, தங்களைப் போன்று தொழிலை நடத்தி வரும் சக மகளிர் முனைவோர்கள் எப்படி சவாலை சமாளிக்கின்றனர் என்ற விவரங்களை அறிய விரும்புவது இல்லை. இப்படிப்பட்ட போக்குகள் அவர்கள் நடத்தும் தொழிலின் திறனை வெகுவும் பாதிக்கின்றன. எனவே பலதரப்பட்ட வழிகளில் வரும் செயதிகளை தகவல்களை மகளிர் தொழில் முனைவொர்கள் உள்வாங்க இயலாதவராக இருக்கின்றனர்.

## 8. சார்ந்து வாழும் கலாச்சாரம் (Dependency Culture)

பல சமயங்களில் மகளிர் பாலினர் தன் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டில் பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர். உதாரணமாக திருமணத்திற்கு முன்பு பெற்றோர்கள் திருமணத்திற்கு பின்பு கணவன், வயதான காலத்தில் பிள்ளைகள் என பிறரை மையமாக வைத்தே மகளிர் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அவர்களாக தன்னிச்சையாக தடையின்றி எந்த முடிவையும் அவர்கள் எடுக்க விரும்புவதில்லை. எல்லா முடிவுகளுக்கும் பிறரின் அனுமதி வேண்டி காத்து கிடக்கின்றனர். ஆணுக்கு நிகராக மகளிரால் பல முடிவுகளை மேற்கொள்ள முடிவதில்லை. இப்படிப்பட்ட கலாச்சார தடை மகளிர் தொழில் முனைவோர்களை தன்னுடைய விருப்பப்படி தொழிலை துவங்கி அதனை நிர்வகிக்க அனுமதிப்பதில்லை.

# மனித உரிமை மீறல்கள்

**அறிமுகம்:**

பிறப்பால் அனைவரும் சமம். உலகில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தன் விருப்பப்படி வாழ உரிமை உண்டு. மனித உரிமைகளானது தனிநபர்கள் மற்றும் சமூகம் தொடர்பானவை மனித உரிமைகள் மக்கள் சுதந்திரமாக மற்றும் விருப்பப்படி வாழ்வதை உறுதிசெய்வதுடன் இயல்பாக பெறும் அனைத்து உரிமைகளையும் குறிப்பிடுகிறது. மக்களின் சமஉரிமைகளை ஒவ்வொரு நாடும் உறுதி செய்கிறது.

**மனித உரிமைகள் என்றால் என்ன?**

**மனித உரிமைகள் என்றால் என்ன?**

- ஐ.நா. சபை மனித உரிமைகளைப் பின்வருமாறு வரையறுக்கிறது. ‘இன, பாலின, தேசிய, இனக்குழு, மொழி, மதம் அல்லது வேறு தகுதி அடிப்படையைப் பொருத்து மாறுபடாமல் மனிதர்களாகப் பிறக்கும் அனைவருக்கும் மரபாக இருக்கும் உரிமையே மனித உரிமை ஆகும். எவர் ஒருவருக்கும் இந்த உரிமையை வழங்குவதில் பாரபட்சம் காட்டக் கூடாது.

| |
|---|
| மனித உரிமை நாள் ஒவ்வொரு வருடமும் 10ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. |

- மனித உரிமையின் வரலாற்று வேர்கள், உலகின் பல முக்கிய நிகழ்வுகளில் ஊடுருவி சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றினை நிலை நிறுத்தியுள்ளன. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை சமாளிக்கவும், எதிர்காலத்தில் உலகப்போர் போன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும், 1945-ல் ஐ.நா. சபை தொடங்கப்பட்டது.

**ஐ.நா. சபை நாள் அக்டோபர் 24**

- மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை (The Universal Declaration of Human Rights) பெரும்பங்கு வகிக்கின்றது.

மனித உரிமைகள் என்பது இனம், பாலினம், தேசிய இனம், இனக்குழுக்களின் தன்மை, மொழி மற்றும் சமய வேறுபாடின்றி அனைத்து மனிதர்களுக்குமான இயல்பான உரிமைகள் ஆகும்.

**மனித உரிமைகள் என்ற கருத்து எங்கிருந்து ஆரம்பித்தது?**

அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் தொகுப்பானது ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் வேரூன்றியிருந்தது.

**அ. எழுதப்பட்ட மனித உரிமை ஆவணங்களின் முன்னோடி:**

**மகாசாசனம்(The Magna Carta), 1215, இங்கிலாந்து** – மக்களுக்கு புதிய உரிமைகளை வழங்கியதுடன் அரசரை சட்டத்திற்கு உட்படுத்தியது.

**உரிமை மனு (The Petition of Right), 1628, இங்கிலாந்து** – மக்கள் உரிமைகளின் தொகுப்பு.

**ஹேபியஸ் கார்பஸ் சட்டம், 1679, இங்கிலாந்து** – மக்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான சட்டம்.

**ஆங்கில உரிமைகள் மசோதா, 1689** – சில அடிப்படை சமூக / குடிமக்கள் உரிமைகளை அமைத்தல்.

**மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பற்றிய பிரான்ஸின் அறிவிப்பு, 1789** – சட்டத்தின் கீழ் அனைத்து குடிமக்களும் சமன் என்று கூறும் பிரான்சின் ஆவணம்.

அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் மற்றும் உரிமைகள் மசோதா, 1791 – குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது.

**ஆ. ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம்:**

மனித உரிமைகள் பற்றிய சிந்தனை இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வலுவாக எழுச்சி பெற்றது. இப்போர் கற்பனை செய்ய முடியாத வகையில் மனித உரிமை மீறலுக்கு வழிவகுத்தது. போர்க் காலங்களில் மனித உயிர்கள் அதன் மதிப்பினை இழந்தன. மேலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழ்க்கையின் இறுதிவரை கடுமையாக போராட வேண்டியிருந்தது. தனிநபர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் போதுமானதாக இல்லை என்பதை இரண்டாம் உலகப்போரின் போது நடந்த கொடுமைகள் தெளிவுபடுத்தின. உலகின் பல பகுதிகளில் பல்வேறு காரணங்களால் மனித உரிமைகள் மறுக்கப்பட்டன. மற்றும் நிக்கப்பட்டன. இது சில நாட்டின் அரசாங்கத்தால் மட்டுமே மனித உரிமைகளை பாதுகாக்க முடியாது என்பதை நிரூபித்தது. வாழ்க்கை, சுதந்திரம், உணவு, இருப்பிடம், தேசம் ஆகியவை நியாயமற்ற முறையில் மறுக்கப்படமாட்டாது என்பதை மக்கள் உறுதிப்படுத்த விரும்பினர். 1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனச் சட்டம் உருவாக்கப்பட்ட சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் மக்களின் இத்தகைய விருப்பங்கள் ஒரு முக்கிய பங்கினை வகித்தன. இச்சூழ்நிலையில் 1945ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் நாள் நிறுவப்பட்ட அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பிரச்சனையில் கவனம் செலுத்தியது. அமைதி மற்றும் சமூக, பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அனைத்துக் கொள்கைகளிலும் திட்டங்களிலும் முக்கிய கருப்பொருளாக இந்த மனித உரிமைகள் விளங்குகின்றன.

**மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு – முகவுரை:**

மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமைகளும் சமமானவர்கள். அவர்கள் அறிவாற்றலையும் மனசாட்சியையும் இயற்பண்பாகக் கொண்டவர்களாகவும் எல்லா மக்கிடையேயும் பொதுவான சகோதரத்துவத்தின் உணர்வை வளர்க்க கடமைப்பட்டவர்களும் ஆவர்.

**மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு(UDHR):**

ஐக்கிய நாடுகள் சபையின் மிகப்பெரிய சாதனைகளுள் ஒன்று மனித உரிமைகளுக்கான சட்டத்தை உருவாக்கியதாகும். இந்த இலக்குகளை அடைவதற்காக ஐக்கிய நாடுகள் உரிமைக்கான ஓர் ஆணையத்தை நிறுவியது.

எலினார் ரூஸ்வெல்டின் (முன்னாள் அமெரிக்க அதிபர் பிராங்களின் டி ரூஸ்வெல்டின் மனைவி) வலுவான தலைமையால் வழிநடத்தப்பட்ட ஆணையம் உலகின் கவனத்தை ஈர்த்தது. இறுதியாக உலக மனித உரிமைகள் அறிவிப்பு ஐ.நா. பொதுச்சபையால் 1948இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கள் ஆகும். இந்த அறிவிப்பு ஐ.நா.பொதுச்சபையால் 1948இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கள் ஆகும். இந்த அறிவிப்பு பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் ஐ.நா. பொதுச்சபையால் 1948ஆம் ஆண்டு டிசம்பர்-10ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. (பொதுச்சபை தீர்மானம் 217A) இதை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இது 1950ஆம் ஆண்டிலிருந்து வழக்கமாக

கடைப்பிடிக்கப்படுகிறது. இது மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் கொள்கைகள் பெரும்பாலான நாடுகளின் (185 நாடுகளுக்கும் மேல்) அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. உலக மனித உரிமைகள் அறிவிப்பு 500க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதுவே உலகில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட ஆவணம் ஆகும்.

**சைரஸ் சிலிண்டர் கி.மு.(பொ.ஆ.மு) 539**

பண்டைய பாரசீகத்தின் முதல் மன்னரான மகா சைரஸ், அடிமைகளை விடுவித்து மக்கள் அனைவரும் தங்கள் சொந்த மதத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு என்று அறிவித்தார். இன சமத்துவத்தை நிலைநாட்டினார். மேற்கூறியவைகளும் மற்ற ஆணைகளும் கியூனிபார்ஃம் எழுத்துகளில் அக்காடியன் மொழியில் சிலிண்டர் வடிவிலான சுட்ட களிமண்ணில் பதிவு செய்யப்பட்டன. இது ஐக்கிய நாடுகள் சபையின் ஆறு அலுவல் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவை உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் முதல் நான்கு விதிகளுக்கு இணையாக உள்ளன.

- மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பேரறிக்கையில் 30 உறுப்புகள் (Articles) உள்ளன. அது சுதந்திரத்திற்கான உரிமையை உறுதி செய்வதோடு குடிமை, அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகளையும் தருகிறது. இவ்வுரிமைகள் இனம், பால், தேசியம் ஆகியவற்றைக் கடந்து அனைத்து மக்களுக்கும் பொருந்தும். ஏனெனில் மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவும், சம உரிமையோடும் பிறக்கின்றனர்.

**சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள்:**

- சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள் இரண்டாம் உலகப் போரின் விளைவுகளுக்குப்பின் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் சட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- ஒரு சமூகத்தில் முழுமையாகப் பங்காற்றத் தேவைப்படும் உரிமைகளே சமூக உரிமைகள். ஒவ்வொரு மனிதனும் தனது தேவைகளை நிறைநேற்றக்கூடிய பொருளாதார நிலைக்கு உறுதி அளிப்பவை பொருளாதார உரிமைகள். ஒரு நாட்டில் சட்டத்திற்கு உட்பட்ட பொருளாதார சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியன இதனால் பாதுகாக்கப்படுகின்றன.

- ஒவ்வொருவரும் தமது பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் உரிமைகளை உறுதிப்படுத்துபவை பண்பாட்டு உரிமைகள். பண்பாட்டு மகிழ்வில் சமத்துவம், மனித கணிணியம். பாகுபாடின்மை ஆகியவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது.

**குடிமை மற்றும் அரசியல் உரிமைகள்:**

- அரசு, சமூக நிறுவனங்கள் மற்றும் தனியாரின் அத்துமீறல்களிடமிருந்து ஒரு தனிமனிதனின் சுதந்திரத்தைப் பாதுகாப்பவையே இவ்வுரிமைகள். ஒருவர் சமூகத்தின் குடிமை மற்றும் அரசியல் வாழ்வில் பங்கேற்கும் திறமையை உறுதி செய்கின்றன.

- ‘குடிமை உரிமைகள்’ என்பன ஒவ்வொரு மனிதனுக்கும் இன, தேசிய, நிற, பால், வயது, சமய போன்ற பாகுபாடுகளின்றி, அரசின் சட்டத்தால் தரப்படும் உரிமைகளைக் குறிக்கின்றது.

- அரசாங்கம் அமைக்கவும், நிர்வாகம் செய்யவும் பயன்படுத்தப்படும் உரிமைகளே அரசியல் உரிமைகள்’ ஆகும். இவை சட்டத்தின் மூலம் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நாட்டின்

நிர்வாகத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ குடிமக்கள் பங்காற்றும் அதிகாரத்தை இவ்வுரிமைகள் அளிக்கின்றன.

**மனித உரிமைகள் கொண்டுள்ள அடிப்படை மதிப்புகள்:**

**அ. கண்ணியம்:** வாழ்வதற்கான உரிமை, ஒருமைப்பாட்டிற்கான உரிமை, கட்டாய தொழிலாளர் முறை, அடிமை முறை இழிவான தண்டனை ஆகியவற்றிற்கான தடை.

**ஆ. நீதி:** நேர்மையான விசாரணைக்கான உரிமை, குற்றத்திற்கு ஏற்றாற்போல் தண்டணை, ஒரே குற்றத்திற்காக ஒன்றுக்கு மேற்பட்ட முறை விசாரணைக்குட்படுத்தாத உரிமை.

**இ. சமத்துவம்:** சட்டத்தின் முன் அனைவரும் சமம். இனம், மதம், பாலினம், வயது, திறமை மற்றும் இயலாமை ஆகியவற்றில் பாகுபாடின்மை.

**மனித உரிமையின் அடிப்படைப் பண்புகள்**

**இயல்பானவை:** அவை எந்தவொரு நபராலும் அதிகாரத்தாலும் வழங்கப்படுவதில்லை.

**அடிப்படையானவை:** இந்த அடிப்படை உரிமைகள் இல்லையென்றால் மனிதனின் வாழ்க்கையும், கண்ணியமும் அர்த்தமற்றதாகிவிடும்.

**உலகளாவியவை:** இந்த உலகளாவிய உரிமைகள் ஒருவரின் தோற்றம் அல்லது நிலையைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் இந்த உரிமைகள் பொருந்தும். இந்த உரிமைகள் தேசிய எல்லையைத் தாண்டி அனைத்து நாடுகளிலும் அமல்படுத்தப்படுகின்றன.

**சார்புடையவை:** இவைகள் ஒன்றுக்கொன்று சார்புடையவைகள் ஆகும். ஏனென்றால் ஒரு உரிமையைப் பயன்படுத்தும் போது மற்றொன்றை உணராமல் இருக்க முடியாது.

| |
|---|
| ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர்-10 நாள் உலக மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. மனித உரிமைகளை உலக அளவில் அறிவித்த பெருமை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையையே சாரும். |

**மனித உரிமைகளின் வகைகள்:**

மனித உரிமைகள் பிரகடனத்தில் 30 சட்டப்பிரிவுகள் உள்ளடக்கியுள்ளன. இந்த உரிமைகள் ஐந்து முதன்மைப் பிரிவுகளாக விரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவைகள் பின்வருமாறு:

**அ. வாழ்வியல் உரிமைகள்:**

வாழ்வியல் (சிவில்) உரிமைகள் என்ற சொல் ஒவ்வொரு நபருக்கும் அரசாங்கத்தின் சட்டங்களால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடப்படுகிறது. இந்த உரிமைகள் அனைவருக்கும் சமமாக கருதப்பட வேண்டியவைகள் ஆகும். இதில் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம், அடிமைத் தளையிலிருந்து விடுபடுதல், நியாயமற்ற முறையில் கைது செய்யாமை ஆகிய உரிமைகள் அடங்கும்.

**ஆ. அரசியல் உரிமைகள்:**

அரசாங்கத்தை அமைப்பதிலும், நிர்வகிப்பதிலும் அரசியல் உரிமைகள் பயன்படுத்தப்படுகின்றன. வாழ்வியல் உரிமைகளும், அரசியல் உரிமைகளும் நவீன மக்களாட்சியுடன் நேரடி தொடர்புள்ளவைகள் ஆகும். அவைகள் அரசியல் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து தனிநபரை பாதுகாக்கின்றன. மேலும் ஒவ்வொரு தனி

நபரையும் தங்கள் அரசியல் செயல்பாட்டில் பங்கேற்க இவ்வுரிமைகள் வழிவகுக்கிறது. கருத்துச் சுதந்தரம், அமைதியாக கூட்டம் நடத்துதல், தன் நாட்டின் அரசாங்கத்தில் பங்குகொள்ளும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, பேச்சுரிமை மற்றும் தகவல்களைப் பெறும் உரிமை ஆகியவைகள் அரசியல் உரிமைகளுள் அடங்கும்.

**இ. சமூக உரிமைகள்:**

ஒரு தனிநபர் சமுதாயத்தில் முழுமையாக பங்கேற்பது அவசியமானது ஆகும். சமூக உரிமைகள் என்பது வாழ்க்கைத் தரத்திற்கு தேவையான கல்வி, சுகாதாரம், உணவு, உடை, தங்குமிடம் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகிய உரிமைகளை உள்ளடக்கியதாகும்.

**ஈ.பொருளதார உரிமைகள்:**

பொருளாதாரத்தில் பங்கேற்பதற்கான உரிமை என்பது அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் விரும்பத்தக்க வேலைக்குச் செல்வதாகும். ஒவ்வொரு தனிநபரும் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்யக் மூடிய நிலைமை இருப்பதை உறுதி செய்கிறது. வேலைவாய்ப்பு, நியாயமான ஊதியத்திற்கான உரிமைகள், நியாயமான ஊதியத்திற்கான உரிமைகள், நியாயமான ஊதியத்திற்கான உரிமைகள், நியாயமான வேலை நேரம், தங்குமிடம், கல்வி, போதுமான வாழ்க்கைத் தரம், மற்றும் சொத்துரிமை ஆகிய உரிமைகள் இதில் அடங்கும்.

**உ. கலாச்சார உரிமைகள்:**

சமயசுதந்திரம், மொழியைப் பேசுவதற்கான உரிமை மற்றும் சமூகத்தின் கலாச்சார வாழ்க்கையை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமை, அறிவியல் முன்னேற்றத்தில் பங்கு பெறுவதற்கான உரிமை, தார்மீக மற்றும் பொருள் ஆர்வத்தைப் பாதுகாக்கும் உரிமை ஆகியவைகள் கலாச்சார உரிமைகள் ஆகும்.

**மனித உரிமைகள் ஆணையம்:**

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக ஓர் ஆணையத்தை அமைக்க ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அங்கமான பொருளாதார மற்றும் சமூக சபை (ECOSOC) அதிகாரம் பெற்றது. மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய மற்றும் மாநில அளவிலான மனித உரிமை ஆணையங்கள் நிறுவப்பட்டன.

**அ. தேசி மனித உரிமைகள் ஆணையம் (NHRC):**

இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) 1993ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் நாள் நிறுவப்பட்டது. இது சுதந்திரமான, சட்டப்பூர்வமான, அரசியலமைப்பு சாராத ஓர் அமைப்பாகும். இதன் தலைமையகம் புதுடெல்லியில் அமைந்துள்ளது. தேசிய மனித உரிமைகள் ஆணையம் என்பது ஒரு தலைவரையும் பிற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும். தலைவரையும் உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் (அ) 70 வயது வரை இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரை பதவியில் நீடிப்பார். தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஐந்து பிரிவுகளைக் கொண்டுள்ளது. சட்டப்பிரிவு, புலனாய்வுப் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் திட்டப்பிரிவு, பயிற்சி அளித்தல் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு ஆகியனவாகும்.

**மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகளுக்கு இடையேயான வேறுபாடுகள்:**

| மனித உரிமைகள் | வாழ்வியல் சிவில் உரிமைகள் |
|---|---|
| மனித உரிமைகளானது தேசிய இனம், பாலினம், இன, மதம் மற்றும் வயது | சிவில் உரிமைகள் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டில் அல்லது மாநிலத்தில் குடியுரிமை |

| | |
|---|---|
| ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் எல்லா இடங்களிலும் அனைவருக்கும் உரித்தானது. | பெறுவதன் மூலம் ஒருவர் அனுபவிக்கும் உரிமைகள் ஆகும். |
| மனித உரிமைகள் உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் மற்றும் அனைத்து நாடுகளுக்கும் உரியதாகும். | சிவில் உரிமைகள் நாட்டிற்கு நாடு அல்லது அரசாங்கத்திற்கு பெரிதும் வேறுபடுகின்றன. இவை அரசியலமைப்புச் சட்டத்துடன் தொடர்பானவை |
| எந்த ஒரு தேசமும் தனிநபருக்கான மனித உரிமைகளை பறிக்கக் முடியாது. | அந்தந்த நாடுகள் பல்வேறு வகையான சிவில் உரிமைகள் மூலம் சுதந்திரங்களை வழங்கவோ அல்லது மறுக்கவோ முடியும். |
| மனித உரிமைகள் பிறப்பின் அடிப்படையில் இயற்கையாக அமையப்பெற்ற அடிப்படை உரிமைகள் ஆகும். | சிவில் உரிமைகள் சமூகத்தினால் உருவாக்கப்படுகின்றன. |

**ஆ. மாநில மனித உரிமைகள் ஆணையம்:**

தமிழ்நாட்டில் 1997ஆம் ஆண்டு ஏப்ரல் 17இல் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது. இது மாநில அளவில் செயல்படுகிறது. இது ஒரு தலைவர் உட்பட மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கியது. இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள மாநிலப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றின் கீழுள்ள துறைகள் தொடர்பான மனித உரிமை மீறல் தொடர்பானவைகளை மாநில மனித உரிமைகள் ஆணையம் விசாரிக்கும் (NHRC) ஏற்கனவே விசாரிக்கும் வழக்குகளைத் தவிர)

**மனி உரிமை நிறுவனங்கள்:**

உலகெங்கிலும் பல நிறுவனங்கள் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் முயற்சிகளை எடுத்துள்ளன. இந்த அரசுசாரா நிறுவனங்கள் அரசாங்கங்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதுடன் மனித உரிமைக் கொள்கைகளின்படி செயல்படுமாறு வலியுறுத்துகின்றன. அவைகளுள் ஆம்னஸ்டி இண்டர்நேஷனல் (Amnesty international), குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் (Children's Defence fund), மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) ஆகியனவாகும்.

**இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள்**

**பிரிவு 24** – குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடைசெய்கிறது.

**பிரிவு 39 (f)** – ஆரோக்கியமாக குழந்தைகள் வளர வழிவகைச் செய்கிறது.

**பிரிவு 45** – 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது.

# குழந்தைகள் உரிமைகள்

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் பிரிவு-1 இன்படி பதினெட்டு வயதுக்குட்பட்ட அனைவரும் 'குழந்தை' எனப்படுவர். குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான மாநாட்டின் அறிக்கை 1989ஆம் ஆண்டு நவம்பர் 20ல் வெளியிடப்பட்டது.

குழந்தை ஒரு முக்கியமான தேசியச் சொத்தாக கருதப்படுகிறது. தேசத்தின் எதிர்காலமானது அந்நாட்டின் குழந்தைகள் எவ்வாறு, வளர்ந்து முதிர்ச்சியடைகிறார்கள் என்பதைப் பொறுத்தது. எனவே அனைத்து வகையான சுரண்டல்கள் மற்றும் தவறான பயன்பாட்டிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பது நமது சமூகத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. இந்தியாவில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க நமது சமூகத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. இந்தியாவில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

| |
|---|
| 1978 – சர்வதேச பெண்கள் ஆண்டு<br>1979 – சர்வதேச குழந்தைகள் ஆண்டு என ஐ.நா.சபை அறிவித்துள்ளது. |

**அ. கல்வி உரிமைச் சட்டம்:**

6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாக மற்றும் கட்டாயக் கல்வியை அரசு வழங்குவதற்கு சட்டப்பிரிவு 21A வழிவகைச் செய்கிறது.

**ஆ. குழந்தைத் தொழிலாளர் சட்டம் (தடை மற்றும் சீரமைப்புச்சட்டம், 1986)**

இது 15வயது பூர்த்தியடையாத எந்த ஒரு குழந்தையையும் வேலைக்கு அமர்த்த தடை செய்கிறது.

**இ. சிறார் நீதிச்சட்டம்:**

இந்தச் சட்டம் போதுமான கவனிப்பு இல்லாமல் இருக்கும் குழந்தைகளை நட்பு ரீதியில் அணுகி அவர்களை சீர்திருத்த முயற்சி மேற்கொள்கிறது.

**ஈ. போக்சோ(POCSO) சட்டம், 2012**

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம். குழந்தைகளின் நலனே மிக முக்கியத்துவம் அளிககப்பட வேண்டிய அம்சம் எனக் கருகிறது.

| |
|---|
| **1098 குழந்தைகளுக்கான உதவி மைய எண்:** இது இந்தியாவில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட 24 மணி நேர கட்டணமில்லா அவசரத் தொலைத் தொடர்பு சேவையாகும். குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனும் வன்கொடுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. |

**குழந்தைகளுக்கான உரிமைகள்:**

- அரசியலமைப்பினால் விளக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைக் கடந்து நாம் வேறு சில உரிமைகளையும் உறுதி செய்தல் வேண்டும்.

- ஐக்கிய நாடுகள் சபை 18 வயதுவரையுள்ள அனைவரையும் குழந்தைகள் என வரையறுக்கிறது. இது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் பிரிவு 25ல் காணப்படுகின்றது. இக்கொள்கைகளின் அடிப்படையில் ஐ.நா. சபை 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.

- வாழ்வதற்கான உரிமை
- குடும்பச் சூழலுக்கான உரிமை
- கல்விக்கான உரிமை
- சமூகப் பாதுகாப்பு உரிமை
- பாலியல் தொல்லைகளுக்கு எதிரான உரிமை
- விற்பது அல்லது கடத்தலுக்கெதிரான உரிமை
- குழந்தை உழைப்பு முறை போன்ற மற்ற சுரண்டல்களுக்கெதிரான உரிமை

**வாழ்வதற்கான உரிமை:**

- ஒரு குழந்தை பிறப்பிற்கு முன்பே அது வாழத்தகுதி பெறுகின்றது. வாழ்வதற்கான உரிமை என்பது பிறப்புரிமை, அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை மற்றும் கண்ணியமான வாழ்வு வாழும் உரிமை ஆகியவற்றை உள்ளடக்கியது.

**குடும்பச் சூழலுக்கான உரிமை:**

- ஒரு குழந்தைக்கு ஒரு நல்ல குடும்பச் சூழலில், இயல்பான குழந்தைப் பருவத்தினைக் கழிக்க உரிமையுண்டு. ஆதரவற்ற, கைவிடப்பட்ட அல்லது அனாதைக் குழந்தைகளும் வாழ தகுதியுடையவர்கள். இது போன்ற குழந்தைகள், அக்கறையுள்ள குடும்பங்களுக்குத் தத்துக் கொடுக்கப்படலாம்.

**சமூகப் பாதுகாப்பு உரிமை:**

- உடல் நலமின்மை, இயலாமை அல்லது வயது முதிர்வு காரணமாகப் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களால், குழந்தைகளுக்குத் தரமான வாழ்வைத் தர இயலாத சூழ்நிலையில் அக்குழந்தைகளுக்கு அரசு நிதியுதவி அளிக்க வேண்டும்.

**கல்விக்கான உரிமை:**

- அசியலமைப்பின் பிரிவு 21யு ல் உள்ளபடி 6 முல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்க 2009 ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றம் கல்வி உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தியது.

இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் (Rihgt of children to free and compulsory education) சட்டம் 2009, ஒவ்வொரு குழந்தையும் தொடக்கக் கல்வி பயில உரிமை உள்ளது என்பதை வலியுறுத்துகின்றது. இவ்வுரிமை, குழந்தைகள் தொடக்கக் கல்வி முடியும் வரை அருகாமையில் உள்ள பள்ளியில்

இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வழிவகை செய்கிறது. கல்வி பயிலும் குழந்தை எந்த வகையான கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

மலாலா – நோபில் பரிசு வென்றவர் கூறுகிறார்



"நான் பள்ளியை நேசித்தேன். ஆனால் அடிப்படைவாதிகள் என் வசிப்பிடமாகிய ஸ்வாட் பள்ளத்தாக்கினை ஆக்கிரமித்தபொழுது அனைத்தும் மாறியது. பெண்கள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. மற்ற பெண்களுக்காகவும், எங்கள் கல்வி கற்கும் உரிமைக்காகவும் நான் குரல் கொடுத்தேன்.

2012 அக்டோபரில், பள்ளியிலிருந்து வீடு திரும்பும்பொழுது, துப்பாக்கி ஏந்திய ஒருவர் எங்கள் பேருந்தில் ஏறி இதில் மலாலா யார்? என்று கேட்டு, தன் தலையின் இடது பக்கத்தில் சுட்டான். பத்து நாட்கள் கழிந்து இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம் என்னுமிடத்தில் உள்ள மருத்தவமனையில் கண்விழித்தேன். பல மாதங்கள் அறுவை சிகிச்சைகளிலும், மறுவாழ்வு சிகிச்சையிலும் கழிந்தது இங்கிலாந்திலுள்ள எனது புது வீட்டில் என் குடும்பத்தினரோடு மீண்டு சேர்ந்த நான், ஒவ்வொரு பெண் குழந்தையும் பள்ளி செல்லும்வரை என் போராட்டத்தைத் தொடர்வேன் என உறுதி பூண்டேன் அனைத்து பெண்களும் 12 வருட இலவச, பாதுகாப்பான மற்றும் தரமான கல்வி பயில வேண்டும் என்பதை உறுதி செய்ய நான் ஒவ்வொரு நாளும் போராடுகிறேன். 130 மில்லியன் பெண்கள் பள்ளியில் பயிலாத இன்றைய சூழலில், நான் செய்ய வேண்டிய வேலைகள் அதிகம் உள்ளன. கல்வி மற்றும் சமத்துவத்திற்காக என்னோடு சேர்ந்து போராடுவீர்கள் என நம்புகிறேன். நாம் இணைந்து, பெண்கள் கல்வி பயின்று, வழிநடத்தும் ஓர் உலகை உருவாக்குவோம்".

நீ மலாலாவாக இருந்தால், என்ன செய்திருப்பாய்? மாலாலாவின் போராட்டம் தேவையா? பெண்களுக்கு சமமான கல்வி உரிமை கொடுக்கப்பட்டு, சமமாக நடத்தப்படுகின்றனரா?

**குழந்தை விற்பனை அல்லது கடத்தலுக்கெதிரான உரிமை:**

- குழந்தைகள் அனைவரும் அடிப்படை மனித உரிமைகள் கொண்ட தனிநபர்கள் எனக் கருதுதல் வேண்டும் அவர்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள். குழந்தைகள் விற்பனை மற்றும் கடத்தல் நடைபெற ஏழ்மை, பாலினப்பாகுபாடு, சிதறிய குடும்பங்கள் ஆகியன முக்கிய காரணங்களாகும்.

ஆபத்து காலத்தில் உதவிட காவலன் SOS செயலி தமிழ்நாடு அரசினால் பொது மக்களின் பன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெண்கள் மட்டுமின்றி, சிக்கலான அல்லது நெருக்கடியான சூழலில் இருக்கும் அனைவரும் மாநில காவல் கட்டுப்பாட்டு அறையினை இச்செயலியின் உதவியோடு எளிதாகவும், நேரடியாகவும், தொடர்பு கொள்ள இயலும்.

- குழந்தைகள் பொருளாதாரச் சுரண்டல், பாலியல் சுரண்டல், பாலியல் துன்புறுத்தல் போதைப்பொருள் கடத்தல் மற்றும் குழந்தைத் தொழில் ஆகிய காரணங்களுக்காக விற்பனை அல்லது கடத்தல் செய்யப்படுகின்றனர்.

**பாலியல் தொந்தரவுக்கெதிரான உரிமை:**

- குழந்தைகள் உடலளவிலோ, மனதளிவிலோ பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட கட்டாயப்படுத்தப்படுமபோது, மாநில அரசு அக்குழந்தைகளைப் பாலியல் சுரண்டலிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

**குழந்தை உழைப்பு முறை போன்ற மற்ற சுரண்டல்களுக்கு எதிரான உரிமை:**

- பல்வேறு தொழிலகங்களில் குழந்தைகள் பணியமர்த்தப்படுகின்றனர். இவர்கள் தங்கள் குழந்தைப் பருவத்தினையும், உடல்நலம் மற்றும் கல்வி ஆகியவற்றையும் இழக்கின்றனர். இது வறுமை மற்றும் தேவைகள் நிறைவேற்றப்படாத வாழ்விற்கு வழிவகுக்கும். இக்குழந்தைகள் கண்ணாடி, தீப்பெட்டி, பூட்டு தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும், குப்பை பொறுக்குதல், கம்பளம், பீடி தயாரிப்பு, சுரங்கவேலை, கல் குவாரிகள், செங்கல் சூளைகள் மற்றும் தேயிலைத் தோட்டங்கள் ஆகிய இடங்களில் பணியமர்த்தப்படுகின்றனர்.



- POSCO சட்டம் - பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்.
- பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (The Protection of children from sexual offence Act, 2012) ஒவ்வொரு நிலையிலும் குழந்தைகளின் நலனை மையமாகக் கொண்டு செயல்படுகின்றது.

**பாஸ்கோ சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:**

- பாலியல் வன்கொடுமையில் அதிகாரத்தில் இருப்பவரோ, குடும்ப உறுப்பினரோ, அண்டை வீட்டாரோ அல்லது அறிமுகமானவரோ ஈடுபட்டால் அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படும்.
- பாதிக்கப்பட்ட குழந்தையை அடிக்கடி சாட்சி சொல்ல அழைக்கக் கூடாது.
- பனிரெண்டு வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமைச் செய்யப்படும்போது, வன்கொடுமை செய்தவருக்கு மரண தண்டனை வழங்குவதோடு கடுமையான தண்டனைகள் விதிக்க வகைசெய்யும் சட்டம் 2018 ஏப்ரல் மாதம் கொண்டுவரப்பட்டது. குற்றவியல் சட்ட திருத்தச்சட்டம் 2018. இது இந்திய குற்றவியல் சட்டத்தில் கடுமையான திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதன் சிறப்பம்சம் என்னவென்றால் விதிக்கப்படும் அபராதத் தொகையானது பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவை ஈடுகட்டும் வகையில் இருக்க வேண்டும் என்பதாகும்.

1098-உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கான உதவி மைய எண் (Child line) இந்தியாவின் முதல் 24 மணி நேர கட்டணமில்லா அவசர தொலைதொடர்பு சேவை ஆகும். குழந்தைத் தொழிலாளர், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனும் வன்கொடுமைக்கு ஆளாகும் குழந்தைகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

- வேலைவாய்ப்புகளில் பாலினப்பாகுபாடு காணப்படுகின்றது. பெண் குழந்தைகள் வீடு சார்ந்த வேலைகளிலும் ஆண் குழந்தைகள் கூலி வேலைகளிலும் பணியமர்த்தப்படுகின்றனர். இக்குழந்தைகள் விவசாய நிலங்கள், உணவகங்கள், வாகனங்களைப் பழுது பார்க்கும் பட்டறைகள் மற்றும் குடிசைத் தொழில்களில் பணிபுரிவதால், குழந்தை உழைப்பை ஒழிப்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது.



பச்பன் பச்சாவ் அந்தோலன் (இளமையைக் காப்பாற்று இயக்கம்) போன்ற பல குழந்தைகள் உரிமை அமைப்புகளின் நிறுவனர் கைலாஷ் சத்யார்த்தி. அவர் குழந்தை உழைப்பு, கொத்தடிமை, கடத்தல் போன்ற பல குழந்தைகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலிருந்து சுமார் 86,000 த்திற்கும் அதிகமான இந்தியக் குழந்தைகள் இவராலும், இவரது குழு உறுப்பினர்களாலும் மீட்கப்பட்டுள்ளனர். 1998 ல் உலக மக்களின் கவனத்தை குழந்தை உழைப்பு முறை மீது திசை திருப்ப, 80,000 கி.மீ நீள குழந்தை உழைப்புக்கு எதிரான உலகளாவிய அணிவகுப்பை (Global March against child labour) முன்னின்று நடத்தினார்.

- குறைபாடுகள் உடைய குழந்தைகளே, மற்ற குழந்தைகளை விட 3.4% அதிகமாக பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர் என உலகளாவிய ஆராய்ச்சி ஒன்றின் முடிவுகள் குறிப்பிடுகின்றன.

**இந்திய அரசியலமைப்பில் குழந்தைகள் உரிமை:**

பிரிவு 24: பதினான்கு வயதுக்குட்பட்ட எந்த குழந்தையும் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது.

பிரிவு 45: பதினான்கு வயது நிறைவடையும் வரை இலவச மற்றும் கட்டாயக் கல்வி அனைத்து குழந்தைகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

குழந்தைகள் தேசத்தின் அடித்தளமாக விளங்குகின்றனர். சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்படும்போது குழந்தைப் பருவத்தின் மகிழ்ச்சிகள், கல்வியறிவு, ஆரோக்கியமான வாழ்வு போன்ற பல சலுகைகளை

அவர்கள் இழந்து விடுகின்றனர். இதனால் குழந்தைத் திருமணங்கள் சமூகத்தைப் பெருமளவில் பாதிக்கின்றன. எனவே குழந்தைத் திருமணங்கள் அனைத்து விதத்திலும் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

**பெண்களுக்கான உரிமைகள்:**

- இந்தியாவில் பெண்களுக்கான தேசிய ஆணையம் அமைக்கப்பட்டு பெண்களுக்கான அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியிலான பாதுகாப்பினை மீளாய்வு செய்து உறுதிப்படுத்துகிறது. பெண்களுக்கான நலவாழ்வு மற்றும் வளர்ச்சி குறித்த அரசின் அனைத்து செயல் திட்டங்கள் மீதான தனது கருத்தையும் மாற்றுக் கருத்துக்களையும் இவ்வாணையம் பரிந்துரை செய்கிறது.

- குடியரசுத் தலைவர், பிரதமர், நாடாளுமன்ற அவைத்தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் என இந்தியாவின் முக்கிய பதவிகளில் பெண்கள் பதவி வகிக்கின்றனர். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பெண்கள் உரிமைகளில் சமத்துவம், கண்ணியம் மற்றும் பாகுபாடுகளில் இருந்து சுதந்திரம் ஆகியன அடங்கும். பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் மேலும் பல்வேறு சட்டங்கள் இந்தியாவில் உள்ளன.

**பெண்களுக்கு மூதாதையர் சொத்துரிமை:**

தமிழ்நாடு இந்து வாரிசு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம், 1989 ஐ நிறைவேற்றி மூதாதையரின் சொத்துகளில் பெண்களுக்கும் சம உரிமை வழங்கியுள்ளது.

மத்திய அரசு இந்து வாரிசுரிமைச் சட்டம் 2005-இல் திருத்தங்களை மேற்கொண்டது. இதில் மூதாதையரின் பிரிக்கப்படாத சொத்தில் வாரிசு அடிப்படையில் பெண்களுக்கு சம உரிமையினை அளித்தது.

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பெண்கள் உரிமைகளில் சமத்துவம், கண்ணியம் மற்றும் பாகுபாடுகளில் இருந்து சுதந்திரம் ஆகியன அடங்கும். பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் மேலும் பல்வேறு சட்டங்கள் இந்தியாவில் உள்ளன.

**பெண் தொழிலாளர் நலனும் - டாக்டர் பி.ஆர். அம்பேத்கரும்:**

சுரங்கத் தொழிலாளர் பேறுகால நன்மைச் சட்டம், பெண் தொழிலாளர் நல நிதி, பெண்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம், பெண் தொழிலாளர்களுக்கான பேறுகால நன்மைகள், நிலக்கரிச் சுரங்கங்களில் சுரங்கப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்தப்படவதற்கான தடையை மீட்டெடுத்தல் போன்ற

சட்டங்கள் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களால் பெண் தொழிலாளர்களுக்காக இந்தியாவில் இயற்றப்பட்டது.

**இடஒதுக்கீடு:**

- பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு, முஸ்லீம்கள், மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு அரசு வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் 69மூ இடஒதுக்கீட்டைத் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. ஆதிதிராவிடர் பிரிவில் இடம் பெற்றுள்ள அருந்ததியர் வகுப்பினருக்கு முன்னுரிமை அடிப்படையில் சிறப்பு ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

- கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை மூலம் தமிழ்நாட்டின் பல்வேறு வகுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டினைப் பற்றி தெளிவாக புரிந்துகொள்ள இயலும்.

| **பிரிவுகள்** | **இட ஒதுக்கீடு (சதவீதத்தில்)** |
|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் | 26.5 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | 3.5 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் | 20 |
| ஆதிதிராவிடர் | 18 |
| பழங்குடியினர் | 1 |
| மொத்தம் | 69 |

- மேலும் பெண்களுக்கு 30% மாற்றுத் திறனாளிகளுக்கு 4% முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு பிரிவின் கீழும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு ஒவ்வொரு பிரிவின்கீழும் முன்னுரிமை அடிப்படையில் 20% ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் திருநங்கையர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

**தகவல் அறியும் உரிமைச்சட்டம்:**

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஓர் புரட்சிகரமான சட்டமாகும். அரசு நிறுவனங்களின் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருவதற்கான இச்சட்டம் இந்தியாவில் 2005 அக்டோபர் மாதம் இயற்றப்பட்டது.

- இச்சட்டத்தின்படி அரசு நிறுவனங்களில் தேவைப்படும் தகவல்களை எந்த ஒரு சாதாரண குடிமகனும் கோரிப் பெறலாம். தகவல்கள் 30 நாட்களுக்குள் வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் தகவல் வழங்கும் அதிகாரியிடமிருந்து கட்டணமாக ஒரு குறிப்பிட்டத் தொகை வசூலிக்கப்படும்.

APOLLO STUDY CENTRE

- நாட்டின் வலிமை வாய்ந்த சட்டங்களுள் தகவல் அறியும் உரிமைச் சட்டமும் ஒன்றாகும். இச்சட்டம் மிகவும் எளிமையானதாகவும், சாதாரண மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இச்சட்டத்தின் வாயிலாக தகவல்களைப் பெற படிக்கத் தெரியாதவர்களுக்கு பொதுத்தகவல் அலுவலர் உதவி செய்ய வேண்டும். அனைத்து அரசு அலுவலகங்கள் அதாவது ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலகங்கள் போன்ற உள்ளாட்சி அமைப்புகள் பல்வேறு அரசுத் துறைகள், அரசுப் பள்ளிகள், நெடுஞ்சாலைத் துறைகள் போன்றவை இச்சட்டத்திற்கு உட்பட்டதாகும்.

- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் ஒருவர் அரசு ஆவணங்களான கோப்புகள், அறிக்கைகள், தாள்கள் மற்றும் தனிப்பட்ட ஒருவரின் தகவல்கள் போன்றவைகள் கிடைக்கப்பெறலாம். நாட்டின் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைகளான எல்லைப் பாதுகாப்புப் படை (BSF), மத்திய சேமக் காவல் படை (CRPR) மற்றும் உளவுத்துறைப் பணியகம் (Intelligence Bureau) ஆகிய அமைப்புகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

- விண்ணப்பத்தில் உங்கள் முழுபெயர், முகவர் எழுதி கையெழுத்திட்டு தேதியுடன் பதிவு தபாலின் குறிப்பிட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

- அனுப்பப்பட்ட அஞ்சலுக்கு 30 நாட்களுக்குள் பதில் பெறப்படவில்லை எனில் 1 விண்ணப்பத்தை மேல் முறையீடுக்கு அனுப்பலாம்.

பத்து ஆண்டுகளாக கேரளாவில் உள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் வேலை செய்யும் பெண்கள் ஒரு நாளில் ஏறக்குறைய 12 – 14 மணிநேரம் நின்றுகொண்டே வேலை செய்து கொண்டிருந்தனர்.
கடைகளிலிலும், வணிக வளாகங்களிலிலும் வேலை செய்யும் பெண் பணியாளர் அமர்ந்தோ, சுவரில் சாய்ந்தபடியோ பணியாற்ற அனுமதிக்கப்படவில்லை. ஒரு நாளைக்கு, இருமுறை 5 நிமிடங்கள் மட்டுமே ஒய்வு எடுக்க அனுமதிக்கப்பட்டனர். பெண்களுக்கு இழைக்கப்படும் இந்த மனித தன்மையற்ற செயலுக்காக நீண்ட நாள்களாக பெருத்த கண்டனக் குரல்கள் ஒலித்து வந்தன.
இப்பிரச்சனையைப் பரிசீலித்து குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு கேரள அரசு வணிக நிறுவன சட்டத்தில், 2018 ஜுலை மாதத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்தது. இதன் மூலம் பெண்கள் இந்துயர் நீங்கி வெற்றி கண்டுள்ளனர்.

**தொழிலாளர் நலனில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் பங்களிப்புகள்:**



- தொழிற்சாலையில் வேலை நேரம் குறைப்பு
- தொழிற்சங்கங்களின் கட்டாய அங்கீகாரம்
- இந்தியாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அமைத்தல்
- தொழிலாளர் காப்பீட்டுக்கழகம் (ESI)
- தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்
- நிலக்கரி மற்றும் மைகா சுரங்கத்தின் வருங்கால வைப்பு நிதி

**தொழிலாளர் உரிமைகள்:**

- சமத்துவத்திற்கான உரிமை, பொது வேலைவாய்ப்பில் சமத்துவம், அமைப்புகள் மற்றும் சங்கம் தொடங்குவதற்கான உரிமை, வாழ்வாதார உரிமை, கடத்தலைத் தடுத்தல், மற்றும் கட்டாயத் தொழிலாளர் மற்றும் குழந்தைகள் உரிமைகளை, இந்திய அரசியலமைப்பு உறுதி செய்கிறது. பிரிவு 39பி, இருப்பாலினருக்கும் சம வேலைக்கு சம ஊதியம் என்பதை உறுதி செய்கிறது.

- "ஒரு மனிதனுடைய உரிமை அச்சுறுத்தப்படும் போது, ஒவ்வொரு மனிதனுடைய உரிமையும் குறைக்கப்படுகிறது" என்றார் ஜான். எஃப் கென்னடி. உலகின் நாகரிகமடைந்த நாடுகள் சமத்துவத்தை வலியுறுத்துகின்றன. சமத்துவத்தை உறுதி செய்ய, நாடுகள் மனித உரிமைகள் மீது கவனம் செலுத்துகின்றன. இது ஒரு நாட்டின் அமைதி, நல்லிணக்கம் மற்றும் முன்னேற்றத்திற்கு உதவுகிறது.

# கருப்பு பணம்

கருப்பு பணம் என்பது அரசாங்கத்திற்கு செலுத்தாத எந்தவொரு பணத்தையும் குறிக்கும். நாட்டின் ஒழுங்கு கட்டுபடுத்துகையில் சட்ட விரோதமாக சம்பாதிக்கும் பணம் அனைத்தும் கருப்பு பணமாகும். கருப்பு பண வருவாய்கள் வழக்கமாக மறைமுக பொருளாதார நடவடிக்கை மூலம் பணமாக பெறப்படுவதால் அதற்கு வரியில்லை.

குற்றவாளிகள், கடத்தல்காரர்கள், பதுக்குபவர்கள், வரி ஏய்ப்பவர்கள் மற்றும் சமுதாயத்தில் மற்ற சமூக விரோதிகள் மூலம் கருப்பு பணம் சேர்க்கப்படுகிறது. இந்தியாவில் சட்ட விரோதமாக சந்தையில் கருப்பு பணம் சம்பாதித்து அந்த வருமானத்திற்கு எந்த வரியும் செலுத்துவதில்லை. வெளிநாட்டு வங்கியில் இந்தியர்கள் வைப்புகளாக வைத்துள்ள மொத்த கருப்புப்பணத்தின் இருப்பைக் கண்டறிய முடியாது. நாட்டில் கருப்பு பணம் அதிகரித்து வருவதற்கான அடிப்படை காரணம் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை இங்கு வழங்கப்படுவதில்லை.

**பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள்:**

1. இரட்டை பொருளாதாரம்
2. உண்மை அளவை குறைத்து மதிப்பீட செய்வது
3. வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு
4. சமத்துவம் வலுவிழத்தல்
5. பணக்காரர் மற்றும் ஏழைகளிடையே இடைவெளி அதிகரித்தல்
6. ஆடம்பர நுகர்வு செலவு
7. உற்பத்தி முறையில் விலகல்
8. பற்றாக்குறை பணத்தை விநியோகித்தல்
9. சமுதாயத்தில் பொது ஒழுக்க நிலைகளின் வீழ்ச்சிகள்
10. உற்பத்தி மீதான விளைவுகள்

**கருப்பு பணத்திற்கு எதிராக சமீபத்திய நடவடிக்கைகள்**

1. இந்தியா மற்றும் பிற நாடுகளின் அழுத்தத்தினால் சுவிட்சர்லாந்து உள்ளூர் சட்டங்களில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தி சுவிஸ் வங்கி வெளிநாடுகளுக்கு உதவுகிறது.

2. உச்ச நீதி மன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் கருப்பு பணத்தை கண்காணிக்க சிறப்பு விசாரணை குழு நியமிக்கப்பட்டது.

3. பண மதிப்பிழப்பு செய்யப்பட்டது.

**கருப்பு பணத்திற்கு எதிராக சில சட்டரீதியான கூட்டமைப்பு**

1. பண மோசடி நடவடிக்கை தடுப்புச் சட்டம் 2002.
2. லோக்பால் மற்றும் லோகாயுக்டா சட்டம்
3. ஊழல் தடுப்புச் சட்டம் 1988.
4. வெளிக் கொணரப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்து மசோதா (வரி விதித்தல்) – 2015.
5. பினாமி பரிவர்த்தனை தடுப்புச் சட்டம் 1988, 2016 ல் திருத்தப்பட்டது
6. ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம் 2016.

APOLLO STUDY CENTRE

# மக்கள் தொகை

ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கையே மக்கள் தொகை எனப்படுகிறது. மக்கள்தொகைப் பண்புகள் பற்றிய புள்ளிவிவர ஆய்வுகள் ‘மக்கட்தொகையியல்’ என அழைக்கப்படுகிறது. மக்கட்புவியியலாளர்கள் மக்கள்தொகை பற்றிய ஆழமான மற்றும் விரிவான ஆய்வை மேற்கொள்கின்றனர். மக்கள் தொகையின் அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் காரணியாக இருக்கலாம். எனவே அதிக மக்கள் தொகை என்பது நமது நாட்டின் வளர்ச்சிக்கு எதிரான முக்கியப் பிரச்சினைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

**தமிழ்நாட்டின் மக்கள்தொகை வளர்ச்சி:**

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7,21,47,030 அல்லது 7.21 கோடி ஆகும். 2001ஆம் ஆண்டு 6.24 கோடியாக இருந்த மக்கள் தொகை 10 ஆண்டுகளில் கிட்டத்தட்ட ஒரு கோடி மக்கள் தொகை அதிகரித்துள்ளது. 2011ஆம் ஆண்டில் மாநிலத்தில் ஆண், பெண் மக்கள் தொகை முறையே 3,61,37,975 மற்றும் 3,60,09,055 ஆகும். இதில் 2001ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 3,14,00,909 மற்றும் 3,10,04,770 ஆகும். இது மாநிலத்தின் மக்கள்தொகையில் ஆணும் பெண்ணும் கிட்டத்திட்ட சமமாக இருப்பதைக் காட்டுகிறது. 2001-2011, 10 ஆண்டு காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி 15.6% ஆக இருந்தது. ஆனால் இதற்கு முந்தைய பத்தாண்டுகளில் இது 11.19 சதவிதமாக இருந்தது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 5.96% ஆகும். 2001இல் இது 6.07% ஆகும்.

**மக்கள்தொகை பரவல்:**

மொத்த மக்கள்தொகையின் அடிப்படையில் தமிழ்நாடு பின்வரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**அதிக மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள்:**

2011, மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மாவட்ட அளவில் 4.219 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட சென்னையானது அதிக அளவு நகர்ப்புற மக்கள் தொகையைக் கொண்டு முதல் இடத்தில் உள்ளது.

கோவை, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், தர்மபுரி, சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை தமிழ்நாட்டில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டங்களாகும். இம்மாவட்டங்களில் அதிக அளவிலான மக்கள் தொகை இருப்பதற்குக் காரணம் விவசாயம் மற்றும் தொழில்துறை மேம்பாடு ஆகும்.

**மிதமான மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள்:**

திருவண்ணாமலை, கடலூர், திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் 30-35 இலட்சம் மக்கள்தொகையைப் பெற்றுள்ளன. வேலூர், திண்டுக்கல், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் ஒவ்வொன்றும் 15-20 இலட்சம் மக்கள்தொகையைக் கொண்டுள்ளன. விவசாயம் சிறிய அளவிலான தொழில்கள் தவிர கடலோரப் பகுதிகளில் மீன்பிடித்தல் ஆகியவை இம்மாவட்டங்களின் முக்கிய தொழில்களாகும்.

**குறைவான மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள்:**

கடலோர மாவட்டங்களான நாகப்பட்டனம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகியவை 15-இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையைப் பெற்றுள்ளன. நீலகிரி மாவட்டம் 10-இலட்சத்திற்கும் குறைவான (7,64,826) மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. இது 2011-மக்கள் தொகைக் கணக்கின்படி மிகக்குறைந்த மக்கள்தொகையைக் கொண்ட மாவட்டமாகும்.

**மக்களடர்த்தி:**

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்களடர்த்தி சதுர கிலோமீட்டருக்கு 555 ஆகும். இதுவே 2001இல் சதுர கிலோ மீட்டருக்கு 480 ஆகவும் இருந்தது. இந்தியாவின் மக்களடர்த்தியில் நமது மாநிலம் 12-வது இடத்தில் உள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தேசிய சராசரி மக்களடர்த்தி 382 ஆகும். சென்னை சதுர கிலோ மீட்டருக்கு 26,903 மக்களடர்த்தி கொண்ட மாவட்டமாகும். இதையடுத்து கன்னியாகுமரி (1,106), திருவள்ளூர் (1,049), காஞ்சிபுரம் (927), மதுரை(823), கோயம்புத்தூர்(748), கடலூர்(702), தஞ்சாவூர்(691), நாகப்பட்டினம்(668), சேலம்(663), வேலூர்(646), மற்றும் திருச்சிராப்பள்ளி(602) ஆகிய மாவட்டங்கள் அதிக மக்களடர்த்தி கொண்ட மாவட்டங்களாகும். நீலகிரி மாவட்டத்தில் குறைந்த அளவு மக்களடர்த்தி(288ச.கி.மீ) பதிவாகியுள்ளது. மற்ற மாவட்டங்கள் மிதமான மக்கடர்த்தியைக் கொண்டுள்ளது.

**மதங்கள்:**

இந்து, கிறித்துவம் மற்றும் இஸ்லாம் நமது மாநிலத்தின் முக்கிய மதங்களாகும். நமது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் இந்துக்கள் அதிகமாகவும் (87.58%) அதனைத் தொடர்ந்து கிறித்துவர்கள்(6.12%), இஸ்லாமியர்கள்(5.86%) சமணர்கள்(0.12%), சீக்கிய மதத்தினர்(0.02%) மற்றும் புத்த மதத்தினரும்(0.02%) உள்ளனர். பிற மதங்களைச் சார்ந்தவர்களும் (0.01%) குறிப்பிடவியலா மதத்தைச் சேர்ந்தவர்களும்(0.26%) உள்ளனர்.

**பாலின விகிதம்:**

பாலின விகிதம் என்பது 1,000 ஆண்களுக்கு இணையாக உள்ள பெண்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. மாநிலத்தின் பாலின விகிதம் 2001இல் 987ஆக இருந்தது. இது 2011இல் 996ஆக அதிகரித்துள்ளது. இந்தியாவின் பாலின விகிதம் 2001இல் 933ஆகவும், 2011இல் 940ஆகவும் அதிகரித்துள்ளது. இதுவே மாநிலப் பாலின விகிதமானது நம் நாட்டின் பாலின விகிதத்தைவிட சாதகமாக உள்ளது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 32 மாவட்டங்களில் 15 மாவட்டங்கள் பாலின விகிதம் ஆயிரத்திற்கும் அதிகமாக உள்ளது. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்போதும் இதே நிலை காணப்பட்டது. சிவகங்கை மாவட்டத்தின் பாலன விகிதம் சரியாக 1,000 ஆக உள்ளது. 12 மாவட்டங்களில் 980 முதல் 1,000 வரையிலான குறைவான பாலின விகிதத்தைக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பாலின விகிதம் அதிகம் கொண்ட மாவட்டங்களாக நீலகிரியும்(1,041) அதைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டமும்(1,031) காணப்படுகின்றன. குறைவான பாலின விகிதம் கொண்ட மாவட்டங்களாகத் தர்மபுரியும் (946) அதனைத் தொடர்ந்து சேலமும் (954) உள்ளன.

**கல்வியறிவு விகிதம்:**

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் கல்வியறிவு விகிதம் 80.09% ஆகும். இது 2001இல் 73.45 சதவீதமாக இருந்தது. தற்போதைய ஆண்களின் கல்வியறிவு விகிதம் 86.77 சதவீதமாகவும், பெண்களின் கல்வியறிவு 73.44% ஆகவும் உள்ளது. 2001 நிலவரப்படி ஆண்களின் கல்வியறிவு 82.42% ஆகவும், பெண்களின் கல்வியறிவு விகிதம் 64.43%ஆகவும் இருந்தது. தர்மபுரி தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலுள்ள ஆண்களில் நான்கில் மூன்று பகுதியினர் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். அதேபோல் 8 மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். அந்த மாவட்டங்கள் தர்மபுரி(60.03%), கிருஷ்ணகிரி(64.86%), திருவண்ணாமலை(65.71%), விழுப்புரம் (63.51%), சேலம் (65.43%) ஈரோடு(65.07%), பெரம்பலூர்(66.11%) மற்றும் அரியலூர்(62.2%) ஆகும்.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் கல்வியறிவு விகிதம் 74.04%ஆகும். இதில் ஆண்களின் கல்வியறிவு விகிதம் 82.14% ஆகவும் பெண்களின் கல்வியறிவு விகிதம் 65.46% ஆகவும் உள்ளது. 2001இல் இந்தியாவில் கல்வியறிவு விகிதம் 64.8%

இருந்தது. இதில் ஆண் பெண் முறையே 75.3% மற்றும் 53.7% ஆக இருந்தது. கன்னியாகுமரி மாவட்டம் அதிக அளவில் கல்வியறிவு விகிதம் (91.75%) கொண்ட மாவட்டமாகவும், தர்மபுரி மாவட்டம் மிகக் குறைந்த அளவில் கல்வியறிவு விகிதம் (68.54%) கொண்ட மாவட்டமாகவும் உள்ளது. மேலும் அதிக கல்வியறிவு கொண்ட மாவட்டங்களாக சென்னை (90.18%), தூத்துக்குடி(86.16%) நீலகிரி(85.20%) மற்றும் காஞ்சிபுரம் (84.49%) மாவட்டங்கள் உள்ளன.

# இந்தியாவில் மக்கள் தொகை போக்குகள்:

மக்கள் தொகை அம்சங்கள் பற்றி அறிவியல் நெறிப்படி படிப்பதே மக்கள் தொகையியல் எனப்படும். இந்திய மக்கள் தொகை போக்கின் பல்வேறு கூறுகளாவன.

- மக்கள் தொகை அளவு
- வளர்ச்சி வீதம்
- பிறப்பு மற்றும் இறப்பு வகிதம்
- மக்கள் தொகை அடர்த்தி
- பாலின விகிதம்
- வாழ்நாள் எதிர்பார்ப்பு
- எழுத்தறிவு விகிதம்

**மக்கள் தொகை அளவு:**

| கணக்கெடுப்பு ஆண்டு | மக்கள தொகை (கோடிகளில்) | சராசரி ஆண்டு வளர்ச்சி |
|---|---|---|
| 1901 | 23.84 | - |
| 1911 | 25.21 | 0.56 |
| 1921 | 25.13 | -0.03 |
| 1931 | 27.90 | 1.04 |
| 1941 | 31.87 | 1.33 |
| 1951 | 36.11 | 1.25 |
| 1961 | 43.92 | 1.96 |
| 1971 | 54.81 | 2.20 |
| 1981 | 68.33 | 2.22 |
| 1991 | 84.33 | 2.16 |
| 2001 | 102.70 | 1.97 |
| 2011 | 121.02 | 166 |

கடந்த நூறு ஆண்டுகளில் நான்கு மடங்கு மக்கள் தொகை அளவு அதிகரித்து உலக அளவில் சீனாவிற்கு அடுத்து 2-ம் நிலையை அடைந்துள்ளது. உலகின் புவிப்பரப்பில் 2.4% பரப்பளவு மற்றும் உலக வருவாயில் 1.2% வருவாயைப் பெற்றுள்ள இந்தியா, உலக மக்கள் தொகையில் 17.5% - ஐக் தன்னகத்தே கொண்டுள்ளது. வேறு வகையில் கூறினால் உலக மக்கள் தொகையில் 6-ல் ஒருவர் இந்தியர். உண்மையில் உத்திரபிரதேசம் மற்றும் மகாராஸ்டிரா இவற்றின் மக்கட்தொகையின் கூடுதலை ஒப்பிட்டால் மக்கள் தொகையில் மூன்றாம் இடம் பிடிக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளை விட அதிகம். இந்தியாவின் சில மாநிலங்களின் மக்கள் தொகை உலகின் பல்வேறு நாடுகளின் மக்கட் தொகையை விட அதிகளவு உடையது.

காலரா, பிளேக், இன்ஃபுளுயன்சா போன்ற கொள்ளை நோய்கள் மற்றும் பஞ்சம் இவற்றின் காரணமாக 1911 – 1921 காலகட்டத்தில் மக்கள் தொகை எதிர்மறையாகக் குறைந்தது. 1921 ஆம் ஆண்டு மக்கள் தொகை அதிகரிக்க துவங்கியதால் அவ்வாண்டு “பெரும் பிரிவினை ஆண்டு” என அழைக்கப்படுகிறது.

1951 ஆண்டு மக்கள் தொகைப் பெருக்க வீதம் 1.33% லிருந்து 1.25% ஆக குறைந்து வந்தது. ஆகையால் இது “சிறுபிளவு ஆண்டு” என அழைக்கப்படுகிறது.

1961-ல் இந்திய மக்கள் தொகை உயர்வு வீதம் 1.96% அதாவது 2% ஆகும். ஆகையால் 1961 ஆம் ஆண்டை ”மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு” என்கிறோம். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை ஒரு பில்லியன் (100 கோடி) அளவைக் கடந்தது.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இளைஞர்களின் மக்கட் தொகை குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. இது “மக்கட் தொகை மாறுதலைக“ குறிக்கிறது.

**பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதம்:**

**குழந்தைகள் பிறப்பு விகிதம்:**
இது 1000 மக்கள் தொகைக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறிக்கம்.

**இறப்பு விகிதம்:** இது 1000 மக்கள் தொகைக்கு இறப்பவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

வெவ்வேறு ஆண்டுகளில் இந்தியாவில் குழந்தைகள் பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதங்கள்.

**பிறப்பு மற்றும் இறப்பு வீதம்:**

| **ஆண்டு** | **பிறப்பு வீதம்** | **இறப்பு வீதம்** |
|---|---|---|
| 1951 | 39.9 | 27.4 |
| 2001 | 25.4 | 8.4 |
| 2011 | 21.8 | 7.11 |

1951-ல் 39.9 ஆக இருந்த பிறப்பு விகிதம் 2011 ஆம் ஆண்டு 21.8 ஆக குறைந்தது. பிறப்பு விகிதம் குறைவாக இருந்தாலும் குறிப்பிடப்படும் படியானதாக இல்லை. இறப்பு விகிதம் 1951 ல் 27.4 ஆக இருந்தது. 2011 – ல் 7.1 ஆக குறைந்தது.

மேற்கண்ட அட்டவணை பிறப்பு விகிதத்தின் குறைவானது, இறப்பு விகிதத்தின் குறைவைவிட குறைவாக உள்ளதைக் காட்டுகிறது.

கேரளா மிகக் குறைந்த பிறப்பு விகிதம் (14.7) மற்றும் உத்திரபிரதேசம் (29.5) அதிக அளவு பிறப்பு விகிதத்தையும் கொண்டுள்ளது. மேற்கு வங்காளம் மிகக் குறைந்த இறப்பு விகிதத்தையும் (6.3) ஒரிசா அதிக இறப்பு விகிதத்தையும் (9.2) கொண்டுள்ளது. மாநிலங்களிடையே பத்தாண்டுகளில் (2001 – 2011) பீகார் அதிக மக்கள் தொகை பெருக்கத்தையும் கேரளா குறைந்த பிறப்பு விகிதத்தையும் கொண்டுள்ளது. பீகார் (BI), மத்திய பிரதேசம் (MA), ராஜஸ்தான் (R), உத்திரபிரதேசம் (U) ஆகிய நான்கு மாநிலங்கள் ”BIMARU” பிமரு மாநிலங்கள் எனப்படுகின்றன. அவை அதிக மக்கள் தொகை கொண்ட மரிநலங்கள் ஆகும்.

$$\text{மக்கள் தொகை அடர்த்தி} = \frac{\text{மொத்த மக்கள் தொகை}}{\text{அப்பகுதியின் நிலப்பரப்பு}}$$

மக்கள்தொகை அடர்த்தி என்பது ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது. அதாவது நிலம் மற்றும் மனிதன் விகித அளவைக் குறிக்கிறது. மொத்த நிலப்பரப்பு மாறாதிருக்கும் போது அதிகரிக்கும் மக்கள் தொகையானது மக்கள் தொகையின் அடர்த்தியை அதிகரிக்கின்றது.

**மக்கள் தொகை அடர்த்தி:**

| ஆண்டு | மக்கள் தொகை அடர்த்தி (ஒரு சதுர கிலோ மீட்டரில் உள்ள மக்கள்) |
|---|---|
| 1951 | 117 |
| 2001 | 325 |
| 2011 | 382 |

சுதந்திரம் அடைவதற்கு சற்று முன்னர் வரை மக்கள் தொகை அடர்த்தி 100-க்கும் குறைவு. ஆனால் சுதந்திரத்திற்கு பின்னர் மக்கள் தொகை அடர்த்தியானது 1951 ல் 117 – ஆக இருந்து உயர்ந்து பின் 2001 – ல் 325 ஆக அதிகரித்தது.

2011- ல் மக்கள் தொகைக் கணக்கீட்டின்படி மக்கள் தொகை அடர்த்தி 382 ஆகும். இவ்வாறு மக்கள் தொகை அழுத்தம் மேலும் அதிகரிக்கிறது. கேரளா, மேற்கு வங்காளம், பீகார், உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் இந்தியாவின் சராசரி அடர்த்தியை விட மக்கள் தொகை அடர்த்தி மிகுந்து காணப்படுகிறது. பீகார் மிகவும் அதிக மக்கள் தொகை அடர்த்தியுடன், ஒரு சதுர கி.மீக்கு 1,102-என உள்ளது. அதனை அடுத்ததாக மேற்கு வங்காளம் 880 மக்கள் தொகை அடர்த்தி கொண்டுள்ளது. ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 17 நபர்கள் என்ற அளவில் அருணாசலப் பிரதேசம் மிக குறைவான மக்கள்தொகை அடர்த்தியைப் பெற்றுள்ளது.

**பாலின விகிதம்:**
மக்கள் இது 1000 ஆண்களுக்கு உள்ள பெண்களின் விகிதத்தை குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆண் பெண் பாலின விகிதத்தை அளவிடவும், பாலினச் சமநிலையை பிரபலப்படுத்துவதற்கான முக்கியமான சுட்டிக் காட்டியாகும்.

**பாலின விகிதம்:**

| கணக்கெடுப்பு ஆண்டு | பாலின விகிததம் (1000- ஆண்களுக்கு உள்ள பெண்கள் வீதம்) |
|---|---|
| 1951 | 946 |
| 2001 | 933 |
| 2011 | 940 |

இந்தியாவில் பெண்களை விட ஆண்களின் பெருக்க விகிதம் அதிக சாதகமாக உள்ளது. கேரளாவில், 2011 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி 1084 என்ற அளவில் வயது வந்தோர் பாலின விகிதம் இருந்தது. இறுதியாக 2011ல் எடுக்கப்பட்ட மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி பாலின விகிதம் அதிகரித்து உள்ளது. 2011-ன் படி ஹரியானா மிகக்குறைந்த பாலின விகிதமான 877-யும் கேரளா மற்றும் மாநிலங்களை விட பெண்கள் பாலின விகிதம் அதிகரித்து 1000 ஆண்களுக்கு 1084 பெண்களைக் கொண்டுள்ளது.

**பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு:**
பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் அளவே வாழ்நாள் எதிர்பார்ப்பு எனக் குறிக்கப்படுகிறது. வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம் அதிகரித்து வருகிறது. இறப்பு விகிதம் அதிகமாக இருக்கும் போது வாழ்நாள் காலம் குறைவாகவும், மாறாக இறப்பு விகிதம் குறைவாக இருக்கும் போது வாழ்நாள் காலம் அதிகமாகவும் உள்ளது. வேறு வகையில் கூறுவதானால் அதிக வாழ்நாள் காலம், குறைந்த இறப்பு விகிதத்தையும், குறைந்த வாழ்நாள் காலம் அதிக இறப்பு விகிதத்தையும் குறிப்பிடுகின்றது.

APPOLO STUDY CENTRE

**வாழ்நாள் எதிர்பார்ப்பு**

| ஆண்டு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1951 | 32.5 | 31.7 | 32.1 |
| 1991 | 58.6 | 59.0 | 58.7 |
| 2001 | 61.6 | 63.3 | 62.5 |
| 2011 | 62.6 | 64.2 | 63.5 |

1901 – 1911 ஆண்டுகாலங்களில் வாழ்நாள் எதிர்பார்ப்பு விகிதம் 23 வருடங்கள் மட்டுமே ஆகும். இது 2011-ல் 63.5 வருடங்கள் என்ற அளவில் அதிகரித்தது இதற்கு முக்கியக் காரணம் இறப்பு விகிதம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததே ஆகும். ஆயினும் மற்ற வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம் குறைவே ஆகும்.

**எழுத்தறிவு விகிதம்**

இது மொத்த மக்கள் தொகையில் எழுத்தறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை விகிதத்தை குறிப்பிடுகிறது. 1951-ல் ஆண்கள் நான்கில் ஒருவர் மற்றும் பெண்கள் பன்னிரெண்டில் ஒருவர் என்ற அளவிலேயே எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை இருந்தது. சராசரியாக ஆறு பேருக்கு ஒருவர் மட்டுமே எழுத்தறிவு பெற்றவர் ஆவார். இது 2011ல் ஆண்கள் 82% மற்றும் பெண்கள் 65.5% என்ற அளவில் ஒட்டு மொத்த எழுத்தறிவு விகிதம் 74.04%. இது மற்ற வளர்ந் நாடுகள் மற்றும் இலங்கையைக் காட்டிலும் கூட மிகவும் குறைவு.

| கணக்கெடுப்பு ஆண்டு | கல்வியறிவு பெற்றவர்கள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| 1951 | 18.3 | 27.2 | 8.9 |
| 2001 | 64.8 | 75.3 | 53.7 |
| 2011 | 74.04 | 82.1 | 65.5 |

கேரளா 92% - உடன் அதிக எழுத்தறிவு விகிதமும், அடுத்தப்படியாக கோவா (82%) எழுத்தறிவு விகிதமும் ஹிமாச்சலப் பிரதேசம் (76%) மகாராஷ்டிரா (75%) மற்றும் தமிழ்நாடு (74%) என அடுத்த இடங்களைப் பிடிக்கிறது. 2011-ன் படி பீகார் 53% குறைவான எழுத்தறிவு விகிதம் பெற்ற மாநிலமாக உள்ளது.

**மக்கள் தொகை புவியியல்**

**அறிமுகம்:**

உலகில் ஒவ்வொரு நாளும் 3,60,000 பேர் பிறக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா? உலகில் ஒரு நொடிக்கு நான்கு குழந்தைகள் பிறக்கின்றன. ‘மனித இனம்’ தொடர்ந்து வாழவேண்டுமென்றால் புதிய கோளைக் கண்டுபிடித்து 100 வருடத்திங்குள் குடியேறவேண்டும்’ என பேராசிரியர் ஸ்டிபன் ஹாக்கின்ஸ் கூறுகிறார் என்பதை பிபிசி உறுதி செய்தது.

காலநிலை மாற்றம், கடந்தகாலத்தில் குறுங்கோள்களின் தாக்குதல், தொற்று நோய்கள் மற்றும் மக்கள்தொகை அதிகரிப்பு போன்றவற்றால் நமது கோள் நிலையற்றதாக மாறிவருகிறது என தொடர்ந்து செய்தி வெளிவருகிறது.

மனித இனம் சுற்றுபுறச் சூழலின் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது. இதன் பரிணாமம் இரண்டு மில்லியன் வருடங்களுக்கு முன்பு தான் தோன்றியதால் அனேகமாக புவியை ஆக்கிரமித்த சமீபத்திய ஒன்றாகும். மக்கள்தொகைப் பரவல் மற்றும் வளர்ச்சி இயற்க்கைச் சூழலால் தூண்டப்பட்டாலும் மனித இனம் இயற்க்கை சூழலை மாற்றியமைக்ககும் வல்லமைப்

பெற்றதாகும். மக்களியல் (Demography) என்பது மக்கள்தொகைப்பற்றி விளக்கும் ஒரு புள்ளிவிவரப் படிப்பாகும். மக்கள்தொகையின் அளவு, அமைப்பு மற்றும் பரவல் பற்றியும் பிறப்பு, இடம் பெயர்வு, முதுமை மற்றும் இறப்பு இறப்பு சார்ந்த காலம் மற்றும் அமைவிட மாற்றத்தைப் பற்றியும் இது விளங்க்குகிறது. மக்கள்தொகை வெடிப்பு என்பது இன்று நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாகும்.

**மக்கள்தொகைப் பரவலைப் பாதிக்கும் காரணிகள்:**

**1. நிலத்தோற்றம்:**

மலைப்பாங்கானப் பகுதிகள் இருப்புக் பாதை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைப்பதற்க்கு ஏற்றதாக இருப்பதில்லை. வளரும் பருவம் குறுதியாக இருப்பதால் விவசாயம் செய்ய ஏற்றதாக இல்லை. நீண்ட குளிர்க்காலம் காணப்படுவதாலும் விவசாயம் செய்ய சாதகமான நிலம் இல்லாததாலும் இப்பகுதிக்ள் அதிகளவிலான குடியிருப்பிற்கு ஏற்றதாக இல்லை. எனவே மலைப்பாங்கான பகுதிகளில் குறைவான மக்களே வசிக்கின்றனர். மறுர்றம் இந்தியாவில் காணப்படும் கங்கா மற்றும் பிரமபுத்திரா் அதிக அளவில் மக்கள் தொகைக் காணப்படுகிறது. வளமான சமநிலங்கள், விவசாயம் செய்ய சாதகமான சூழ்நிலங்கள், விவசாயம் செய்ய சாதமான சூழ்நிலைகள், நீண்ட வளர்பருவம் மற்றும் குடியிரப்புகளுக்கு சாதகமான சூழ்நிலைகள் போன்றவை இதற்கான முக்கியக் காரணங்களாகும்.

**2. அணுகக்கூடிய அமைவிடம்:**

போக்குவரத்து நன்கு வளர்ச்சியடையாத பகுதிகள் குறைவான மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. ஆனால் நன்கு வளர்ச்சியடைந்த போக்குவரத்து கட்டமைப்புகள் மற்றும் சாலை, இருப்புப் பாதை மற்றும் வான்வழி போக்குவரத்து போன்றவற்றால் இணைக்கப்பட்டுள்ள பகுதிகள் அதிக மக்கள் தொகையைக் கொண்டுள்ளன.

கடந்த காலங்களில் நீர் மற்றும் போக்குவரத்து வசதியில்லாதத் தீவுகள் குடியிருப்பின்றிக் காணப்பட்டன. மலைபாங்கானப் பகுதிகள் எளிதில் அணுகக்கூடிய நிலையில் இல்லாததால் குடியிருப்பின்றி காணப்படுகிறன.

**3. நிறைவான நீர் அளிப்பு:**

மக்கள் தொகைப் பரவல் ஒரு பகுதியில் காணப்படும் நீர் அளிப்பால் கட்டுபடுத்தப்படுகிறது. மனிதன் வாழ்வதற்கும் மேம்பாடு அடைவதற்கும் நீர் அளிப்பு இன்றியமையாதது. வறண்ட அல்லது தொடர் வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளை விட நீர் அளிப்பு நிறைந்த பகுதிகள் அதிக மக்கள் அடர்த்தியைக் கொண்ள்ளன. அதிக நீர் அளிப்பைக் கொண்டுள்ள வட இந்திய சமவெளிகள் அதிக மக்களடர்த்தியைக் கொண்டுள்ள வேளையில் வறட்சியால் பாதிக்கப்படும் சகார குறைவான மக்கள் தொகையைக் கொண்டுள்ளது.

**4. மண்:**

உலகில் உள்ள ஆற்றுப் பள்ளதாக்குளில் காணப்படும் வளமான வண்டல் மண் பகுதிகள் அடர்த்தியான மக்கள் குடியிருப்புகளைக் கொண்டுள்ளன. ஏனென்றால் இவை வேளாண் தொழிலை ஊக்குவிக்கின்றன. இந்தியாவில் உள்ள கங்கை பள்ளதாக்கு மற்றும் சீனவில் உள்ள ஹவாங்கோ பள்ளதாக்கு போன்ற பகுதிகளில் அடர்த்தியான மக்கள் பகுதியான சகார குறைவான மக்கள் தொகையைக் கொண்டுள்ளது.

**5. பொருளாதார மற்றும் அரசியல் காரணிகள்:**

சாதகமற்ற பொருளாதார சூழ்நிலை, வேலையின்மை, மத சகிப்பு தன்மையில்லாமை, மோால்கள் மற்றம் போர் போன்றவை அதிக மக்கள் தொகையை ஊக்குவிப்பதில்லை.

**மக்கள் தொகைப் பரவல் வகைகள்:**

ஒரு இடத்தின் மக்கள்தொகை தன்மையை படிப்பதற்கு மக்கள்தொகைப் பரவல் மற்றும் அடர்த்தியை ஆய்வு செய்வது ஒரு அடிப்படையாகும். மக்கள்தொகைப் பரவல் என்பது புவிபரப்பின்மீது மக்கள் எவ்வாறு பரவிக் காணபப்டுகிறார்கள் என்பதாகும். உலகில் பத்து மிக அதிக மக்களதொகைக் கொண்டு நாடுகள் சேர்த்து உலகின் 60 சதவீத மக்கள் தொகையைக் கொண்டுள்ளன.

**மக்கள் தொகை அடர்த்தி:**

மக்கள்தொகையின் அறுதி எண்ணிக்கை ஒரு இடத்தின் நிலந்தோற்றம் மற்றும் வளங்களின் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஒரு சதுர கி.மீ. நிலப் பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கையே மக்களடர்த்தியாகும்.

$$\text{மக்கள் அடர்த்தி} = \frac{\text{மொத்த மக்கள் தொகை}}{\text{நாட்டின் மொத்த பரப்பளவு}}$$

மொத்த மக்கள்தொகையை மெத்த நிலப்பரப்பால் வகுக்ககும்போது மக்கள் அடர்த்தியை பெற முடியும். கணித அடர்த்தியை ஒப்பிடும்போது, நிலம்-மக்கள் விகிதாச்சாரத்தை கண்டறியும் ஒரு பண்பட்ட முறை உடலியில் அல்லது ஊட்டசத்து அடர்த்தி.

**உடலியல் அல்லது ஊட்டசத்து அடர்த்தி** என்பது மொத்த மக்கள்தொகைக்கும் மொத்த பயிரிடப்பட்ட பரப்பளவுக்கும் இடையேயான விகிதாச் சாராமாகும். உலகின் ஊட்டசத்துக்கு 325 பேர். இந்தியாவில் உள்ள மொத்த விளை நிலம் 48.83 சதவீதம் ஆகும். அதன் ஊட்டசத்து அடர்த்தி ஒரு சதுர கிலோமீட்டருக்ககு 753 பேர்.

**மக்கள்தொகை தொடர்கான கலைச்சொற்கள்:**

1. **மக்கள்தொகை**: ஒரு குறிப்பிட்ட புவிப்பரப்பில் காணப்படும் ஒரே இனம் சார்ந்த தனி நபர்களின் குழு.
2. **மக்கள்**: ஒரு குறிப்பிட்ட நாட்டின், சமூகத்தின் உறுப்பினர்கள்.
3. **பிறப்பு விகிதம்**: ஒரு வருடத்தில் 1000 பேருக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை.
4. **இறப்பு விகிதம்**: ஒரு வருடத்தில் 1000 பேருக்கு பிறந்த குழந்தைகளில் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை.
5. **மொத்த இடப்பெயர்ச்சி விகிதம்**: மொத்த இடப்பெயர்ச்சி விகிதத்திற்கான சூத்திரம் மிகவும் எளிமையானது.

   $N = 1000 \times (I-E)/P$

   N= மொத்த இடப்பெயர்ச்சி விகிதம்

   E= ஒரு நாட்டிலிருந்து வெளியேறும் மக்களின் எண்ணிக்கை

   I= ஒரு நாட்டிற்குள் உட்புகும் மக்களின் எண்ணிக்கை

   P= மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை
6. **கருவுறுதல் விகிதம்**: கருவுறுதல் விகிதம் என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் ணரு குறிப்பிட்ட நேரத்தில் அல்லது வருடத்தில் ஒரு பெண்ணுக்கு அல்லது 1000 பெண்களுக்கு அவர்களது வாழ்நாளில் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆகும். உலகிலேயே நைஜரில்தான் மிக அதிக கருவுறுதல் விகிதம் (6.49) காணப்படுகிறது. சிங்கப்பூர் உலகிலேயே மிகக் குறைவான கருவுறுதல் விகிதத்தைதக் (0.83) கொண்டுள்ளது. நாடுகளுக்கிடையே ஏன் இந்த வேறுபாடுகள் என நீங்கள் யூகிப்பீர்களா?

7. **சார்பு நிலை விகிதம்**: சார்ந்திருப்போரின் எண்ணிக்கையை பணிபுரிபவரின் அல்லது வருமானம் ஈட்டுவோரின் எண்ணிக்கையால் வகுக்க கிடைப்பது சார்பு நிலை விகிதம் ஆகும். இதை கணக்கீடு செய்யும்போது 15 வயதுக்கு உட்பட்டவர்களையும் 65 வயதுக்கு மேற்பட்டவரையும் சார்ந்திருக்போர் எனவும், 15-64 வயதுக்கு உட்பட்டவர்களை பணிபுரிவோர் எனவும் பிரிக்கலாம்.

8. **மக்கள்தொகை வளர்ச்சி விகிதம்**: =CBR – CDR+/- நிகர இடப்பெயர்சி விகிதம்/1000 தெற்கு சூடான் மிக அதிக மக்கள்தொகை வளர்ச்சிவிகிதத்தை (3.83%,2017) கொண்டுள்ளது.

9. **இயற்கை மக்கள் தொகை அதிகரிப்பு (RNI)**

   = CBR-CDR (இடப்பெயர்வு இல்லை)

   CBR>CDR=↑ மக்கள் தொகை

   இயற்கை மக்கள் தொகை அதிகரிப்பு (RNI) சதவீதத்தில் காட்டப்படுகிறது. எடுத்துகாட்டாக, 2%=2/100=20/1000

   இடப்பெயர்வு முக்கியமென்றால மக்கள் தொகை வளர்ச்சி இயற்கை மக்கள் தொகை அதிகரிப்பு (RNI)க்கு சமமானது இல்லை.

10. **வயது வந்தோர் கல்வியறிவு சதவீதம்**: வயது வந்தோர் கல்வியறிவு குறியீடு என்பது ஒரு பகுதியில் அல்லது நாட்டில் எவ்வளவு வயது வந்தோர் படிக்கவும் எழுதவும் தெரிந்தவர்கள் என தீர்மானிக்கும் ஒரு புள்ளிவிவர முறையாகும். ஆயட்காலம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம் போன்று வயது வந்தோர் கல்வியறிவு கதவீதமும் மனித வள மேம்பாடு குறியீட்டை அளக்கும் காரணிகளில் ஒன்றாகும். மிகவும் குறைவான வயது வந்தோர் கல்வியறிவு சதவீதம் (218.8%,2015) கொண்ட நாடு பர்க்கினோ பாசோ ஆகும். ஒரு நாட்டின் வாழ்க்கை தரத்தை கல்வியறிவு சதவீதம் எவ்வாறு பாதிக்கிறது?

11. **ஆயுள் எதிர்பார்ப்பு சமவீதம்**: ஆயுள் எதிர்பார்ப்பு சதவீதம் என்பது இறப்பு விகிதம் ஒவ்வொரு வயதிலும் மாறாமல் இருக்கும் நிலையில் ஒரு நாட்டில் பிறந்த நபர் எவ்வளவு வருடங்கள் வாழ்வார் என்பதாகும். ஆயுள் எதிர்பார்ப்பு சதவீதம் ஆண் பெண் என இருபாலருக்கும் தனித்தனியாகவும் ஒன்றாகவும் காட்டப்படுகிறது. சரியாக 2015 வருட புள்ளிவிவரத்தின் அடிப்படையில், நீண்ட ஆயட்காலம் கொண்ட நாடு மொனாக்கோ (89.52 வருடங்கள்) ஆகும். மிக குறைவான ஆயுட்காலம் கொண்ட நாடு (Chad) சாட் (49.81 வருடங்கள்) ஆகும்.

**உலக மக்கள் தொகை வளர்ச்சி:**

சுமார் 8,000 to 12,000 வருடங்களுக்கு முன்பு வேளாண்மையை அறிமுகம் செய்த பின்பு மக்கள் தொகையின் அளவு குறைவாக அதாவது தோராயமாக 8 மில்லியனாக இருந்தது. பதினாறு மற்றும் பதினேழாம் நூற்றாண்டில் வளர்ந்து விரிவடைந்த உலக வர்த்தகம் தான் அதிவேக மக்கள்தொகை வளர்ச்சிக்கு வித்திட்டது. ஏறக்குறைய 1750ல் தொழிற்புரட்சி ஏற்பட்டபோது உலக மக்கள் தொகையானது 550 மில்லியனாக இருந்தது. தொழிற்புரட்சிக்கு பிறகு பதினெட்டாம் நூற்றாண்டில் உலக மக்கள் தொகை திடீரென அதிகரித்தது. தொழில் நுட்ப மேம்பாட்டில் ஏற்பட்ட சாதனை இறப்பு விகிதத்தைக் குறைக்க உதவியது மற்றும் இது விரைவான மக்கள்தொகை வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின் படி, தற்போதைய உலக மக்கள் தொகையான 7.6 பில்லியன் மக்கள்தொகை 2030ல் 8.6 பில்லியனாகவும் 2050ல் 9.7பில்லியனாகவும் 2100ல் 11.2 பில்லியனாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரம் மற்று சமூக அலுவல் துறையின் அறிக்கையின் படி, தற்போதைய அதாவது பிப் 2019ல் உலக மக்கள் தொகையானது 7,685,036,620 ஆகும்.

சீனாவும் (1.4 பில்லியன் மக்கள்) இந்தியாவும் (1.3 பில்லியன் மக்கள்) இரண்டு அதிக மக்கள்தொகைக் கொண்டநாடுகளாக இருக்கின்றன. முறையே 19 மற்றும் 18 சதவீதத்தைக் கொண்டுள்ளன. இன்னும் ஏழு வருடங்களில் அல்லது தோராயாமாக 2024ல் மக்கள்தொகையில் இந்தியா சீனாவை மிஞ்சிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளவில் பத்து அதிக மக்கள்தொகைக் கொண்ட நாடுகளில் நைஜீரியா மிகவும் அதிவேகமாக உலகின் ஏழாவது அதிக மக்கள்தொகைக் கொண்ட நாடான இது தற்போது மூன்றாவது பெரிய மக்கள்தொகைக் கொண்ட நாடாகும் என கணிக்கப்படுகிறது.

உலக அளவிலான மக்கள்தொகை அதிகரிப்பு மிகக் குறைவான எண்ணிகையிலான நாடுகளால் ஏற்படுகிறது. 2017ஆம் ஆண்டு முதல் 2050 வலையிலான காலகட்டத்தில் உலக மக்கள் தொகையில் பாதி பேர் இந்தியா, காங்கோ, பாகிஸ்தான், எத்தியோப்பியா, தான்சானியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் உகாண்டா மற்றும் இந்தோனேசியா போன்ற ஒன்பது நாடுகளில் மட்டும் பரவிக் காணப்படுவர்.

47 மிகக் குறைவாக வளர்ச்சியடைந்த நாடுகளைக் கொண்ட குழு தொடர்ந்து அதிக அளவு கருவுறுதல் விகிதத்தை பெண்ணிற்கு 4.3 குழந்தைகளைக் கொண்டிருந்தன. அதன் விளைவாக, இந்த நாடுகளின் மக்கள் தொகை ஒரு வருடத்திற்கு 2.4 சதவீதம் என்ற நிலையில் வேகமாக வளர்ச்சியைக் கொண்டுள்ளன.

வரும் பத்தாண்டுகளில் இந்த மக்கள் தொகை வளர்ச்சி குறையும் என எதிர்பார்க்கப்பட்டாலும் 2017ல் ஒரு பில்லியன் ஆக உள்ள வளர்ச்சிக் குறைந்த நாடுகளின் மொத்த மக்கள் தொகையானது 2017க்கும் 2030க்கும் இடைபட்ட காலத்தில் 33 சதவீதமாக உயரும் என கணிக்கப்படுகிறது. உலக மக்கள் தொகை 2050ல் 9.7 பில்லியன் ஐ அடையும். அதைப்போலவே ஆப்பிரிக்காவின் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் தொடர்ந்து அதிகித்துக் கொண்டிருக்கிறது. 2017க்கும் 2050க்கும் இடைப்பட்ட காலத்திலும் 26 ஆப்பிரிக்க நாடுகளின் மக்கள் தொகை வளர்ச்சி இப்போதைய அளவைவிட இரண்டு மடங்காகும் என கணக்கிடப்பட்டடுள்ளது.

ஏழ்மையான நாடுகளில் காணப்படும் உலக மக்கள் தொகை வளர்ச்சி அடர்த்தியானது 2030 பேணத் தகுந்த மேம்பாடு கோரிக்கையை அரசுகள் நிறைவேற்றுவதில் சவாலாக உள்ளது. ஏழ்மை மற்றும் பசியை அகற்றுவதையும், உடல்நலம் மற்றும் மேம்படுத்தவும், பாலின சமத்துவத்தை நிலைநிறுத்தவும் மற்றும் பெண்களின் மேம்பாட்டை உறுதி செய்யவும் பேணத் தகுந்த மேம்பாடு நாடுகிறது.

உலக மக்கள் தொகை தற்ப்போது 1.09 சதவீதத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறது (2017ல் 1.12% மற்றும் 2016ல் 1.14%ஆக இருந்ததிலிருந்து குறைந்து) இது 2023ல் 1 சதவீதமாகவும், 2052ல் 05.சதவீதத்திற்கும் குறைவாகவும் மற்றும் 2076ல் 0.25 சதவீதத்திற்க்கும் குறைவாகவும் மற்றும் 2076ல் 0.25 சதவீதத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 2100ல் 0.09 சதவீதமாக மட்டுமே இருக்கவேண்டும் அல்லது மொத்த மக்கள் தொகையான 11.2 மில்லியன் உடன் கூடுதலாக 10 மில்லியன் மக்கள் தொகை சேர்க்கப்படலாம். ஆகவே, உலக மக்கள் தொகை இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் தொடர்ந்து அதிகரிக்கும்.

### பாலின வயது பிராமிடுகள்:

பாலின வயது பிராமிடுகள் மூன்று வகைப்படும். அவை விரிவாக்கக் பிரமிடு, கட்டுப்பாடான பிரமிடு மற்றும் நிலையான பிரமிடு போன்றவையாகும்.

**விரிவாக்கப் பாலின வயது பிரமிடு:**

இப்பிரமிடுகள் மொத்த மக்கள் தொகையில் இளம் வயதுக் குழுவினர் அதிக சதவீதத்தில் இருப்பதைக் காட்டுகிறது. இப்பிரமிடுகள் அதிக இனப்பெருக்கமும் குறைந்த ஆயள் எதிர்பார்ப்பும் கொண்ட மக்கள் தொகையைக் குறிக்கிறது. பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் இதில் அடங்கும். புதிதாக வளர்ந்து வரும் நாடுகளான ஆப்கானிஸ்தான், வங்காள தேசம், கென்யா, மற்றும் சில லத்தீன் அமெரிக்க நாடுகள் இவ்வகைப் பிரமிடுகளைக் கொண்டுள்ளன.

**கட்டுப்பாடான பாலின வயது பிரமிடு**

இவ்வகைப் பிரமிடுகளில் கீழ்ப் பகுதி குறுகலாக காணப்படுவதால் கட்டுப்பாடான பாலின வயது பிரமிடு என அழைக்கப்படுகிறது. இவ்வகைப் பிரமிடுகளில் இளவயதினரின் சதவீதம் குறைவாகக் காணப்படுகிறது. அடுத்தடுத்து வரும் வயதுக் குழுவினரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதால் கட்டுப்பாடான பாலின வயது பிரமிடுகள் சரிந்து வரும் பிறப்பு விகிதத்தைக் காட்டுகிறது

**நிலையான பாலின வயது பிரமிடு**

எல்லா வயதுக் குழுவினரும் ஏறக்குறைய சமவிகிதத்தில் இருப்பதைக் காட்டும் பிரமிடுகள் நிலையான பாலின வயது பிரமிடுகள் எனப்படும். இதில் மக்கள்தொகை வளர்ச்சியில் ஏற்றமோ இறக்கமோ இல்லாமல் நிலையான உள்ளது.

**பாலின வயது பிராமிடுகளின் நோக்கம்**

ஒரு நாட்டின் ஆண்-பெண் பாலினங்களை ஒப்பிடுதல், தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் கண்டறிதல், மக்கள் தொகைக் கட்டமைப்பை அறிதல் போன்றப் பணிகளை துரிதமாக செய்ய பாலின வயது பிரமிடுகள் அமைக்கப்டுகின்றன. ஒரு அரசாங்கம் முன்னேற்றக் கொள்கைகளை உருவாக்க உதவுவது பிரமிடுகளின் நோக்கமாகும்.

APOLLO STUDY CENTRE

# இடம்பெயர்வு

**இடம்பெயர்வின் வகைகள்:**

1. **1.நிகர இடப்பெயர்வு (Net Migration):** நிகர இடப்பெயர்வு என்பது குடியிறக்கதிற்கும் குடியேற்றத்திற்கும் இடையேயான வேறுபாடாகும். அதிக மக்களின் குடியிறக்கமும் மக்கள் தொகை வளர்ச்சியுன் இதன் சாதகமான விளைவாகும் எடுத்துக்காட்டாக, வட அமெரிக்காவின் 44 சதவீத மக்களும் ஐரோப்பாவின் 88 சதவீத மக்கள் வெளியேறுவதும் மக்கள் தொகை குறைவதும் இதன் எதிர்மறை விளவாகும்.

2. **பன்னாட்டு இடப்பெயர்வு**: ஒரு சமுதாயத்தின் பொருளாதார மற்றும் சமூகத் தோல்விகளைச் சுட்டிக்காட்டுவது குடியேற்றமாகும். இது ஒரு நாட்டின் எல்லையைக் கடப்பதாகும். இதை எளிதாக கண்காணித்துக் கட்டுபடுத்தலாம். இவ்வகை இடப்பெயர்வை கட்டுப் படுத்த அல்லது தடைசெய்யச் சட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு வருடமும் இரண்டு மில்லியனிலிருந்து மூன்று மில்லியன் மக்கள் தங்கள் நாட்டைவிட்டு வெளியேறுகிறார். 1965க்கும் 2000க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் 175 மில்லியன் மக்கள் தங்கள் நாட்டைவிட்டு வெளியேறியிருக்கின்றனர். இது உலக மக்கள் தொகையில் மூன்று சதவிகிதமாகும்.

3. **உள்நாட்டு இடப்பெயர்வு (Internal Migration):** இது ஒரு நாட்டின் எல்லைக்குள் நிகழ்வதாகும். மக்கள் ஒரு நாட்டின் மாநில அல்லது மாகாணங்களுக்கு இடையில் இடம்பெயர்வதாகும். இதை அரசு கட்டுப்படுத்துவது எளிதல்ல.

4. **உள்ளூர் இடப்பெயர்வு (Local Migration):** ஒரு மாநிலம் அல்லது மாவட்டத்திற்குள் நிகழும் இடப்பெயர்வே உள்ளூர் இடப்பெயர்வாகும். இதில் மக்கள் மாநில எல்லைகளைக் கடப்பதில்லை. ஒரு நகரம் அல்லது மாநகரத்திற்குள் புதிய வீடு வாங்குவர் போன்ற பல காரணங்களுக்காக இந்த இடப்பெயர்வு நடைபெறுகிறது. பொதுவாக இது மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் இடப்பெறாததால் இதற்கானக் காரணங்களை ஆய்வு செய்வது கடினமாகும். வருமானம் அல்லது வாழ்க்கை முறை மாற்றத்தினால் இது நிகழ்கிறது.

5. **தன்னார்வ இடப்பெயர்வு (Voluntary Migration):** ஒருவர் தன் விருப்பத்தின் பேரில் இடம்பெயர்வது தன்னார்வ இடப்பெயர்வாகும். பெரும்பாலான இடப்பெயர்வுகள் தன்னார்வ இடப்பெயர்வாகும்.

6. **கட்டாய இடப்பெயர்வு (Involuntary Migration):** கட்டாய இடம்பெயர்வில் இடம்பெயர்பவர் எந்த முடிவும் எடுப்பதில்லை. இது அடிமைத்தனத்தின் விளைவாக ஏற்படுதிறது. 1519க்கும் 1867க்கும் இடைப்பட்ட காலத்தில் 11 மில்லியன் ஆப்பிரிக்க அடிமைகள் அமெரிக்காவிற்கு அழைத்து வரப்பட்டதாக கணக்கிடப்பட்டுள்ளது. 1860ல் கிட்டதட்ட 3 மில்லியன் அடிமைகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருந்தனர். ராணுவத்தில் கட்டாய ஆள் சேர்ப்பின் காரணமாக அகதிகளானவர்கள். இடம்பெயர்ந்தோரின் குழந்தைகள், விவாகரத்து அல்லது கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்ட பிரிவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோர் கட்டாய இடப்பெயர்வில் உட்படுகின்றனர்.

**அறிவு புலப்பெயர்ச்சி:**

அறிவு புலப்பெயர்ச்சி என்பது தேர்தெடுக்கப்பட்ட கல்வி சார் இடம்பெயர்வோடு தொடர்புடையதாகும். சில நாடுகள் தங்கள் மக்கள் தொகையில் உயர் கல்விக் கற்றோரை இழக்க நேரிடுகிறது. இது இப்பிரிவினரைப் பெறக்கூடிய நாடுகளுக்கு சாதகமாகவும் அனுப்பும நாடுகளுக்கு பாதகமாகவும் உள்ளது.

**அறிவு புலப்பெயர்ச்சியைப் பெறும் நாடுகள்:** தங்களது பொருளாதாரத்தை முன்னேற்ற உதவும் மிகவும் தகுதிவாய்ந்த தொழிரலாளர்களை இந்நாடுகள் பெறுகின்றன. இது அறிவியல் தொழில் நுட்பம் போன்ற முக்கியத் துறைகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகிறது. இப்பிரிவினருக்கு கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக இந்நாடுகள் செலவிடவேண்டியதில்லை. எடுத்துகாட்டாக, முனைவர் பட்டம் பெற்ற 30 சதவிகித மெக்சிக்கோ மக்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ளனர்.

**பிறந்த நாடு:** கல்வி மற்றும் சுகாதார செலவுகள் இப்பிரிவினரின் சொந்த நாட்டிற்கு திரும்பி செலுத்தப்படுவதில்லை. இந்நாடு எதிர்கால தலைவர்களையும் திறமைசாலிகளையும் இழந்துவிடுகின்றன. 15 முதல் 40 சதவிகித பட்டதாரிகள் கனடாவிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு செல்கின்றார்கள். இந்நிகழ்வு பொருளாதார வளர்ச்சியில் நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்நாடுகளுக்கு பணம் பெறும் வாய்ப்புள்ளது. அறிவு புலப்பெயர்ச்சி மூலம் குடிபெயர்ந்தவர்கள் தங்களது திறமைகளை சொந்த நாட்டில் பயன்படுத்த முடிவதில்லை. அதற்கான வளங்களும் தொழில்நுட்பங்களும் அங்கு காணப்படுவதில்லை. குறிப்பிட்ட தொழிலாளர் சந்தையும் போதிய அளவில் பெரிதாக இல்லை.

**குடி பெர்தலுக்கான காரணங்கள்:**

குடிபெயர்தலுக்கான காரணிகளை உந்துக் கராணி (Push Factor) மற்றும் இழுவைக் காரணி (Pull Factor) என இருவகைப்படுத்தலாம். கட்டயமாக மக்களைக் குடிபெயர செய்வது அல்லது மக்களை தன்பால் ஈர்ப்பது அகிய இரண்டும் முறையே உந்துக் காரணி மற்றும் இழுவைக் காரணி எனப்டும்.

உந்துப் காரணி என்பது கட்டாயக் காரணியாகும். இது ஒருவர் எந்து நாட்டிலிருந்து வெளியேறுகிறாரோ அந்நாட்டோடு தொடர்புடையது. இழுவைக் காரணி என்பது ஒருவர் எந்த நாட்டிற்கு இடம்பெயர்கிறாரோ அந்நாட்டு தொடர்புடையது. இழுவைக் காரணி என்பது ஒருவர் எந்த நாட்டிற்கு இடம்பெயர்கிறாரோ அந்நாட்டோடு தொடர்புடையது. பொதுவாக ஓரிடத்தின் சாதகமான சூழ்நிலையே மக்களை அவ்விடத்திற்கு ஈர்க்கிறது. பொதுவாக உந்து மற்றும் இழுவைக் காரணிகள் ஒரு காந்தத்தின் வடமுனை மற்றும் தென் முனைப்போல கருதப்படுகின்றன.

**உந்தும் காரணிகள்**: போதிய அளவு வேலையில்லாமை குறைவான வாய்ப்புகள், பாலைவனமாக்கள், பஞ்சம்/வறட்சி, அரசியல் அச்சுறுத்தல், அட்க்கு முறை, குறைந்து மருந்துவ வசதி, செல்ல இழப்பு, இயற்க்கை சீற்றங்கள், மரண அச்சுறுத்தல்கள், அடிமைத்தனம், மாசடைதல், வீட்டுவசதிக் குறைவு, நில உரிமையாளர்கள் கொடுமைப்படுத்துவது, கோரிக்கைக்களை நிறைவேற்ற தேவையான வாய்ப்புகள் குறைவு.

**இழுக்கு காரணிகள்**: வேலைவாய்ப்புகள், சிறந்த வாழ்க்கை நிலை, அரசியல் மற்றும் மத சுதந்திரம், பொழுதுபோக்கு, கல்வி, போதிய மருத்துவ வசதி, பாதுகாப்பு, குடும்ப பிணைப்புகள், தொழிற்சாலை, கோரிக்கைகளை நிறைவேற்ற தேவையான வாய்ப்புகள்.

**அதீத மக்கள் தொகை:**

மக்கள்தொகையானது ஒரு சுற்றுச்சூழலின் தாங்கும் சக்தியை விட அதிகமாகக் காணப்படும் நிலையை அதீத மக்கள் தொகை எனலாம். அதீத மக்கள்தொகை கொண்ட சூழ்நிலையில் மக்கள் தொகையானது உயிர் வாழத் தேவையான முக்கியக் கூறுகளான போக்குவரத்து, நீர், வீடு, உணவு மற்றும் சமூக வசதிகளைவிட அதிகமாக காணப்படுகிறது. இது தொடர்ந்து கூற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு காரணமாவதோடு வாழ்க்கைத் தரத்தையும் மோசமாக்குகிறது அல்லது மக்கள் பிரிந்து செல்வதற்கும் காரணமாகிறது.

குடிவரவு, இறப்பு விகிதத்தில் சரிவு, மருத்துவ கண்டுபிடிப்புகள், மற்றும் பிறப்பு விகிதம் அதிகர்த்தல் ஆகியக் காரணிகளால் மக்கள் தொகை அதிகரித்து மிகையான மக்கள்தொகைக்கு வழிவகுக்கிறது.

**அதீத மக்கள்தொகையால் ஏற்படும் விளைவுகள்:**
அதீத மக்கள்தொகையால் சுற்றுச்சூழலில் ஏற்படும் விளைவுகளாவன.

**1. இயற்கை வளங்கள் தீர்ந்துபோதல்:**

மக்கள்தொகை அதிகரித்து கொண்டே போவதால் வற்றிவிடும் வளங்களான விளைநிலங்கள், பவளப்பாறைகள், நன்னீர், படிம எரிபொருள் மற்றும் காடுகள் போன்றவை தீவிரமாக குறைந்துபொண்டே வருகின்றன. இது முக்கியமான வாழ்க்கை நிலையை நிலைநிறுத்த வளங்களின் மீதான போட்டித் தேவையை அதிகரிப்பதோடு நம்பமுடியாத அளவுக்கு வாழ்க்கை தரத்தை சரிவடையச் செய்கிறது.

**2. அதிகரித்து வரும் வாழிட இழப்பு:**

ஈர நிலங்கள், வனயிரினங்கள், மழைக்காடுகள், பவளப்பாறைகள், நீர் வாழ் உயிரினங்கள், புல்வெளிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுச் சூழல் அமைப்பின் அதிகரித்துவரும் இழப்பு மிகையான மக்கள்தொகையால் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, மொத்த நிலப்பிப்பில் மழைக்காடுகள் உண்மையில் 14 சதவிகிதமாக இருந்தன. ஆனால் இன்று அவை வெறும் 6 சதவிகிதம் மட்டுமே உள்ளன. தாவரங்களின் அழிவு, மரம் வெட்டுதல், மற்றும் காடுகளின் அழிவு ஆகியவற்றின் தற்போதைய சதவிகிதத்தைப் பாரக்ககும்போது இன்னும் நாற்பது ஆண்டுகளில் மழைக்காடுகள் இன்னும் குறைக்கூடும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். 1980 களிலிருந்து அமிலத்தன்மையாதல், உலக வெப்பமயமாதல், மற்றும் கூற்றுச் சூழல் மாசுபாடு போன்றவற்றால் 30 சதவிகித பவளப்பாறைகள் காணாமல் போய்விட்டான. மேலும் பாதிக்குமேற்பட்ட உண்மையான ஈர நிலங்களும் இழந்துபோயவிட்டான.

**3. அதிகரித்துவரும் காலநிலை மாற்றம் மற்றும் உலக வெப்பமயமாதல்:**

அதிகரித்து வரும் மக்கள்தொகைக்கேற்ப வாகனங்களும் தொழிற்சாலைகளும் அதிகரித்து வருகின்றன. அதிக மக்கள்தொகையானது சக்தி வளங்களான நிலக்கரி, வறகு ஆகியவற்றின் பயன்பாட்டை அதிகரித்து வருவதோடு பசுமை இல்லவாயு வெளியீட்டையும் அதிகரிக்கிறது. எனவே வளிமண்டலத்தில் மனிதனால் உருவாக்கப்பட்ட பசுமை இல்ல வாயுக்கள் குவிக்கப்படுவதாலும் கரியமில வாயு படிவதாலும் புவியானது தொடர்ந்து உலகவெப்பமயமாதலையும் காலநிலைமாற்றத்தையும் சந்தித்து வருகிறது. காலநிலை மாற்றமும் உலக வெப்பமயமாதலும் தீவிர பசி, வறட்சி, வெள்ளம் மற்றும் வாழிட இழப்பு ஏற்பட காரணமாகின்றன.

**4. உயிரினப்பன்மை இழப்பு:**

எல்லைப்புற காடுகளின் ஆக்கிரமிப்பு, இயற்கையான கூற்றுச்சூழல் அமைப்பின் அழிவு போன்றவற்றிற்கு அதிக மக்கள்தொகையே காரணமாக அமைந்துள்ளது. இதனால் உயிரினங்கள் பெருமளவு அழிக்கப்படுகின்றன. சில அச்சுறுத்தப்பட்ட உயிரினங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் வேளையில் சில உயிரினங்கள் முழுவதுமாக அழிந்துவிட்டன. இதற்கு காரணம் மனித நடவடிக்கைகளான நீர் அமிலமயமாதல், இயற்க்கை வளங்களை சுரண்டுதல், மாசுபடுத்துதல், அளவுக்கு அதிகமாக மீன் பிடித்தல், வேட்டையாடுதல், பலதரப்பட்ட உயிரினங்களின் வாழ்வுக்குத் தேவையான இயற்க்கை அமைப்புகளை அழித்தல் போன்றவையாகும்.

**5. நன்னீர் அளவு குறைதல்:**

மிகையான மக்கள் தொகையின் தொய்வில்லா தன்மையானது உலகின் பெரும்பாலான நன்னீர் அமைப்புகளை அழித்துள்ளது. நன்னீர் ஆதாரங்களான ஏரிகள், ஓடைகள், ஆறுகள், மற்றும் நிலத்தடி நீர் ஆகியவை பெருமளவு மாசடைந்துள்ளன. நீர் வளங்களைப் பற்றிய உலகக் கண்ணோட்டத்தின் படி அதிக மக்கள் தொகையின் காரணமாக ஏற்படும் இச்செயல்கள் புவிக்கோளத்தின் நன்னீரில் 1 சதவிகித அளவு மட்டுடே மனிதப் பயன்பாட்டிற்கு கிடைக்கிறது. நீரின் தேவை நீரின் தேவை நீர் கிடைக்கும் அளவைவிட அதிகமாக இருப்பதால் அதிக மக்கள் தொகையுள்ள நாடுகளில், நீர் பாதிப்பு மோசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. நன்னீர் சூழலமைப்புகளில் உயிர்வாழும் மில்லியன் கணக்கான மீன் வகைகள் அழியும் தருவாயில் உள்ளன. இவ்வாறு மக்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்போது தரமான நன்னீர் கிடைப்பதிலும் இடையூறு அதிகரிக்கிறது.

**6. குறைவான ஆயட்காரம் மற்றும் குறைந்த வாழ்க்கைத் தரம்:**

அதிக மக்கள் தொகை வாழ்க்கைத் தரத்தை தாழ்த்துகிறது. ஏனென்றால் இது முக்கிய வளங்களின் மீது அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. மேலும் இது தரமான உணவு, நீர், சக்தி, உடல்நலம், பாதுகாப்பு மற்றும் இருப்பிடம் ஆகியவை தொடர்ந்து கிடைப்பதில் சிக்கலை அதிகரிக்கிறது. இதன் விளைவாக ஏழைகள் மேலும் ஏழைகள் ஆவதோடு உயிர் வாழ ஏழ்மையான வாழ்க்கை நிலைகளையே தேர்ந்தெடுக்கிறார்கள்.

இறுதியில் இது குறைந்த ஆயுட்காலத்திற்கு வழிவகுக்கிறது. பற்றாக்குறை மற்றும் தரமற்ற உணவுகளை உண்ணவேண்டிய நிலையில் உள்ள ஏழை மக்களைக் கொண்ட தெற்காசிய மற்றும் ஆப்பிரிக்காவின் துணை சகாரா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது.

**7. அதிகரிக்கும் வேலைவாய்ப்பின்மை, குற்றங்களின் விகிதம் மற்றும் வன்முறை:**

அதிக மக்கள் தொகைக் கொண்ட நாடுகளில் வேலை தேடுபவரின் எண்ணிக்கையைவிட கிடைக்கும் வேலைவாய்ப்பு குறைவாகவே காணப்படுகிறது. இது வேலையின்மை அதிகரிக்க காரணமாகிறது. இதன் விளைவாக வேலையின்மை குற்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது. உணவு, தரமான வாழ்க்கை நிலை மற்றும் செல்வத்தை அடையவும் அடிப்படை வளங்களை அடையவும் களவு செய்வோர். போதைப் பொருள் விற்போர், மற்றும் போராளிக் குழுக்கள் போன்றோர் பயன்படுத்தப் படுகின்றனர். குறைந்த அளவே கிடைக்கும் வளங்களுக்கு மக்கள் போட்டியிடும்போது வன்முறைக்ளும் போராட்டங்களும் தோன்றுகின்றன.

**8. அதிகரிக்கும் தீவிர வேளாண்மை:**

மக்கள் தொகை வளர்ச்சியால் அதிக மக்களுக்குத் தேவையான உணவளிக்கும் வகையில் வேளான் முறைகள் உருவெடுத்துள்ளன. இருப்பினும் தீவிர வேளாண்முறைகள் உள்ளூர் சூழலமைப்புகளையும் நிலத்தையும் சேதப்படுத்துகிறது. இது எதிர்காலத்தில் சிக்கலை உருவாக்கும்.

**அதீத மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:**

அதீத மக்கள்தொகையைக் கட்டுபடுத்தும் சில தனித்துவமான தீர்வுகள் பின்வருமாறு:

1. **விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஏற்படுத்துதல்:**
   சமூக மற்றும் முக்கிய ஊடகங்களை பயன்படுத்தி உலகில் வாழும் மக்களுக்கு அதிக மக்கள்தொகையினால் ஏற்படும் நெருக்கடிகள் பற்றிய உண்மை மற்றும் அதனை உடனடியாகத் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தெளிவாகக் கூறவேண்டும்.

2. **குழந்தைத் தத்தெடுப்பதை ஊக்கப்படுத்துதல்:**
குடும்ப கட்டுப்பாட்டிற்கு தத்தெடுத்தல் ஒரு தீர்வாக கருதப்படுகிறது. இக்கருத்து குறிப்பாக சமூக அக்கறை உள்ளவர்களிடம் காணப்படுகிறது. குடும்பத்தைத் தொடங்கவேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும் மக்கள்தொகை அதிகரித்து விடக்கூடாது என்ற அக்கறையுள்ள மக்களிடம் இன்று தத்தெடுப்பு என்பது நடைமுறைத் தீர்வாக உள்ளது.

3. **ஒரு குடும்பம் ஒரு குழந்தை என்ற நோக்கம்:**
புள்ளி விவரப்படி ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான ஆயரக்கணக்கான மக்கள் இவ்வுலகில் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றார்கள். இது ஒரு நிலையற்ற விகிதத்தில் போய்க் கொண்டிருக்கிறது. எனவே ஒரு குடும்பம் ஒரு குழந்தை என்ற நோக்கத்தை நடைமுறைப் படுத்தவேண்டியது இக்கால கட்டத்தில் இன்றியமையாதது.

4. **தேசிய பாதுகாப்பு பிரச்சனை:**
அதிக மக்கள் தொபை வளர்ச்சியை தேசிய பாதுகாப்புப் பிரச்சனையாக கருதவேண்டும். உணவுப்பாதுகாப்பின்மை மற்றும் கால நிலை மாற்றம் போன்று கட்டுபாடற்ற மற்றும் துரிதமான மக்கள் தொகை வளர்ச்சி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு ஒரு நிலையற்ற தன்மையை உருவாக்குகிறது.

5. **சமூக நெறிமுறைகளில் மாற்றம்:**
சில கணவன் - மனைவியர் குழந்தை வேண்டாமென முடிவெடுக்கும் போது அதை நாம் மதிக்கவேண்டும். இவ்வகையில் நாம் அதிக மக்கள்தொகைப் பிரச்சனையை கட்டுபடுத்தமுடியும்.

6. **வரிச்சலுகைகள் அளித்தல்:**
அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடுகள் வரிவிலக்கு சம்பந்தபட்ட பல்வேறு விதிமுறைகளையும் கொள்கைகளையும் கொண்டுவரலாம். எடுத்துபாட்டாக ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் கொண்ட தம்பதியரின் வருமானத்தில் சில பகுதிகளுக்கு வரிவிக்கு அளிக்கலாம் அல்லது குறைந்த வரி வசூலிக்கலாம்.

APOLLO STUDY CENTRE

# நகரமயமாதல்

நகரமயமாதல் என்பது கிராமப்புறத்திலிருந்து நகரக் குடியிருப்புகளை நோக்கி மக்கள் இடம் பெயர்ந்து நகர மக்களின் சதவிகிதம் படிப்படியாக அதிகரித்து மாறும் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றிகொள்வது போன்றவற்றைக் குறிப்பதாகும். மையப் பகுதிகளில் வசித்து பணிபுரியும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் நகரங்களும் மற்றும் மாநகரங்களும் பெரிய அளவில் உருவாகும் ஒரு செயல் முறையே நகரமயமாதல் ஆகும். நகரமயமாதலும் மற்றும் நகரவளர்ச்சியும் மாறி மாறி பயன்படுத்தப்பட்டாலும் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுத்தப் பட வேண்டும். நகரம் என வரையறுக்கப்பட்ட பகுதியில் வாழும் மொத்த தேசிய மக்களின் சதவிகிதடே நகரமயமாதலாகும். மாறாக, நகர வளர்ச்சி என்பது நகரம் என வரையறுக்கப்பட்ட பகுதியில் வசிக்கும் மக்களின் அறுதி எண்ணிக்கையாகும். 2008ஆம் ஆண்டு இறுதியில் உலக மக்கள் தொகையில் பாதிக்கு மேல் நகரப் பகுதியில் வசிப்பார்கள் என ஐநா சபை மதிப்பிட்டுள்ளது. 2050ஆம் வருடத்திற்குள் 64 சதவிகித வளரும் நாடுகளும் 86 சதவிகித வளர்ந்த நாடுகளும் 86 சதவிகித வளர்ந்த நாடுகளும் நகரமயமாக்கப்படும் என கணிக்கப்படுள்ளது.

சுதந்திரத்திற்கு பிறகு கலப்புப் பொருளாதாரத்தை ஏற்குக் கொண்ட பிறகே இந்தியாவில் நகரமயமாதல் துரிதப்படுத்தப்ட்டது. கலப்புப் பொருளாதாரம் தனியார் துறை வளர்ச்சிக்கு வித்திட்டது. இந்தியாவில் நகரமயமாதல் அதிவேகமாக நடைபெறுகிறது.

1901 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நகரப்பகுதியில் வசிப்போர் 11.4 சதவிகிதமாக இருந்தனர். இது 28.53 சதவிகிதமாக 2001ல் உயர்ந்து 30 சதவிகிதத்தை கடந்து 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 31.16 சதவிகிதத்தில் உள்ளது.

**நகர்ப்புற விளிம்பு:**

நகர்ப்புற விளிம்பு என்பது நன்கு அறியப்பட்ட நகர்புறப் பயன்பாடுகள் காணப்படும் நிலத்திற்கும், வேளாண் தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்திற்குமிடையில் உள்ள மாற்றம் (Transition) நிகழும் பகுதியாகும். இப்பகுதியில் கிராம மற்றும் நகர நிலப் பயன்பாடுகள் கலந்திருப்பதோடு கிராம நிலப்பயன்பாடு நகர நிலப்பயன்பாடாகவும் மாறி வருகிறது. நகர வளிம்பானது குடியிருப்புகள் மற்றும் வர்த்தக மையங்களைக் கொண்டு ஒரு முறையான மாநகரம் போன்று தோற்றமளித்தாலும், ஒரு மாநகரத்திற்கு தேவையான சேவைகளான குழாய் நீர் விநியோகம், கழிவுநீர் மற்றும் குப்பை அகற்றும் வசதிகள் போன்றவை இருக்காது. முக்கிய மாநகரத்துதோடு அதன் தொடர்ச்சியான நகராட்சி நகரங்கள் மற்றும் முழுவதும் நகரமயமான வருவாய் கிராமங்கள் ஆகியவை நகர விளிம்பில் அடங்கும்.

**நகர்ப்புற விரிவாக்கம் அல்லது புறநகர் விரிவாக்கம்:**

நகர்ப்புற விரிவாக்கம் அல்லது புறநகர் விரிவாக்கம் என்பது மத்திய நகர்ப்புறப் பகுதிகளிலிருந்து அடர்த்தி குறைந்த ஒரே ஒரு நிலப்பயன்பாடு கொண்ட மற்றும் பொதுவாக மோட்டார் வாகனத்தை மட்டும் சார்ந்த குழுக்கள் வாழும் பகுதியில் மக்கள் தொகை விரிவாக்கம் நடைபெறுவதை விவரிக்கிறது. இச்செயல்முறை புறநகர் விரிவாக்கம் என்றும் அழைக்கப்படும். நகமயமாதலின் ஒரு வடிவத்தை விளக்க முற்படுவதோடு நகர்பபுற விரிவாக்கம் என்ற சொல் வளர்ச்சியின் காரணமாக ஏற்படும் சமூக, சுற்றுச்சூழல் விளைவுகளை விளக்குகிறது. இது போன்ற இயக்கங்களையும், நிகழ்வுகளையும் விளக்க 'நகர்ப்புறமயமாக்கல் (Peri Urbani Sation) என்ற சொல் ஐரோப்பாக் கண்டத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனாலும் ஐரோப்பிய சுற்றுச் சூழல் நிறுவனம் தற்போது நகர்ப்புற விரிவாக்கம் என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகிறது. விரிவாக்கம் என்பதில் எவற்றை சேர்ப்பது மற்றும் அவற்றை எவ்வாறு எண்களால் கணக்கிடுவது என்பதில் கருத்து வேறுபாடுள்ளது. எடுத்துகாட்டாக ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு ஏக்கருக்கு சராசரியாக எத்தனை குடியிருப்புப் பகுதிகள் உள்ளன என்பதை வைத்து மட்டுமே சில வர்ணனையாளர்கள் விரிவாக்கத்தை அளவிடுகின்றனர் மற்றும் சிலர் விரிவாக்கத்தைப் பரவலாக்கலுடன் (Decentralization) தொடர்புபடுத்துகின்றனர். (ஒரு

தெளிவான மையமின்ற மக்கள் தொகை பரவியிருத்தல்), தொடர்ச்சியின்மை (தவளைப் பாய்ச்சல் வளர்ச்சி) பயன்பாடுகளை வகைப்படுத்துதல் போன்றவை.

**நகர்ப்புற விரிவாக்கத்துக்கான காரணங்கள்:**

நகர்ப்புற விரிவாக்கம் பல காரணிகளால் ஏற்படுகின்றன. அவையாவன:

1. **குறைவான நில வீதங்கள்:** குறைந்த விலையில் நிரமும், வீடுகளும் புறநகர்ப் பகுதிகளில் கிடைக்கின்றன. நகர்ப்புற வளர்ச்சி மையங்கள் மக்களை அங்கு தங்கவிடாமல் செய்வதால் மக்கள் வெளியேற விரும்புகின்றனர்.

2. **வாழ்க்கைத்தரம் உயர்தல்:** வாழ்க்கைத் தரமும் சராசரி குடும்ப வருமானமும் உயர்ந்து இருப்பதால் மக்கள் தொலை தூரத்திலுள்ள பணியிடங்களுக்கு செல்லவும், வீட்டுக்குத் திரும்பி வரவும் தேவையான பணத்தை செலவிடும் திறன் பெற்றவர்களாக உள்ளனர்.

3. **நகர்புறத் திட்டமின்மை:** குறைவான போக்குவரத்து நெரிசல் மற்றும் அமைதியான சூழல் ஆகியவற்றை மக்கள் விரும்புவதால் அவர்கள் விளிம்பை நோக்கி நகருகிறார்கள். கட்டுக்கடங்காத வளர்ச்சி, மரங்களை வெட்டுதல், பசுமைப் பரப்பு இழப்பு, நீண்ட போக்குவரத்து நெரிசல்கள், மோசமான உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை மக்களைப் புதிய இடங்களுக்குச் செல்ல கட்டாயப்படுத்துகின்றன.

4. **குறைவான வீட்டு வரி வீதங்கள்:** மாநகரங்களில் வழக்கமாக சொத்துவரிகள் அதிகமாக இருப்பதால் இதைத் தவிர்க்க மக்கள் புறநகர் பகுதிகளில் வாழ முற்படுகின்றனர். ஏனெனில் அங்கு வரிகள் குறைவு.

5. **மக்கள்தொகை வளர்ச்சி அதிகரிப்பு:** விரிவாக்கத்திற்கு மற்றொரு காரணம் மக்கள் தொகை வளர்ச்சி அதிகரிப்பாகும். ஒரு மாநகரத்தின் மக்கள்தொகை அதன் தாங்கும் திறனைவிட அதிகமாக உள்ளதால் அங்கு வாழும் உள்ளூர் சமூகங்கள் மாநகரின் மையத்திலிருந்து மேலும் மேலும் தூரமாகச் செல்கின்றன.

6. **நுகர்வோரின் விருப்பங்கள்:** அதிக வருவாய் பெறும் வகுப்பிலுள்ள மக்கள் பெரிய வீடுகள், அதிக எண்ணிக்கையில் மற்றும் பெரிய புல் தரைகள் ஆகியவற்றை அதிகம் விரும்புகின்றனர். மிகுந்த மக்கள் தொகை கொண்ட மாநகரங்களில் இத்தகைய வசதிகள் இல்லாததால் நகர்பபுற விரிவாக்கம் ஏற்படக் காரணமாகிறது. மக்களின் விருப்பத்திற்கேற்ப எங்கு வீடு கிடைக்கிறதோ அத்தகைய குறைந்த மக்கள் அடர்த்தி கொண்ட குடியிருப்புப் பகுதிகளையே மக்கள் பொதுவாகத் தேடிச் செல்கின்றனர்.

**நகரமயமாதலால் ஏற்படும் பிரச்சனைகள்:**

சீனாவிற்கு அடுத்தபடியாக உலகிலேயே இராண்டவது அதிக நகர்ப்புற மக்கள் கொண்ட நாடு இந்தியாவாகும். இந்தியாவில் நகர்ப்புற மக்கள் தொகையானது (மொத்த மக்கள் தொகையில் சுமார் 28%) கிட்டதட்ட அமெரிக்க ஐக்கிய நாட்டின் மொத்த மக்கள் தொகைக்குச் சமமானதாகும். நகர்ப்புற வளர்ச்சி விகிதம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பெரிய எண்ணிக்கையில் மக்கள் மிகப்பெரிய மற்றும் பெரிய நகரங்களுக்கு (Metropolitian) வருவதால் நகர்ப்புற இந்தியாவின் மக்கள் தொகை வருடத்திற்கு 5 சதவீதத்திற்கும் மேலாக அதிகரிக்கிறது. மக்கள் தொகையின் இந்த பிரம்மாண்டமான வளர்ச்சி பல சமூகப் பொருளாதார சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது.

**நகர்பபுற இந்தியாவில் காணப்படும் சில முக்கியப் பிரச்சனைகள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.**

**1. இடம் மற்றும் குடியிருப்பு வசதி பற்றாக்குறை:**

இயற்க்கை மற்றும் புவியியல் தடைகளால் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்குத் தேவையான அதிக இடம் எளிதில் கிடைப்பதில்லை. இப்பற்றாக்குறை காரணமாக நிலத்தின் விலை அதிகரிப்பதுடன், அலுவலகம் மற்றும் குடியிறுப்புகளின் வாடகை அதிகரிக்கிறது. மக்களால் அதிக வாடகை கொடுக்க முடியாததால் நகரக் குடிசைகளின் தேவையற்ற வளர்ச்சி ஏற்படுகிறது.

ஒரு மதிப்பீட்டின்படி இந்திய நகரங்களில் வருடத்திற்கு சுமார் 2 மில்லியன் வீடுகளின் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் குறைந்த வருவாயுள்ள மக்கள் குழுக்கள் நகரக் குடிசைகளிலும், நடைபாதைகளிலும் வாழும் நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர். இந்தியாவின் பெரிய நகரங்களில் நகரக் குடிசைகள் மற்றும் நடைபாதைகளில் வாழ்பவர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**2. சமூக அடிப்படை வசதிகளின் பற்றாக்குறை:**

இந்தியாவின் பெரும்பான்மையான மாநகரங்களில் வளர்ச்சி காணப்படுகிறது. ஆனால் நகரமயமாதல் நடைபெறவில்லை. உண்மையில், மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள வேளையில் உட்கட்டமைப்பு வசதிகளும், குடிசை வசதிகளும் போதுமானதாக இல்லை. நகர்ப்புற இடங்களில் மக்கள் குவிந்துள்ளதால் சமூக அடிப்படை வசதிகளான வீடு, மின்சாரம், குடிநீர், போக்குவரத்து, சுகாதாரம், கழிவு அகற்றுதல், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்றவை அதிக அழுத்தத்திற்கு ஆளாகின்றன.

**3. வேலையின்மை:**

வேலையின்மை என்பது கட்டாயமாக வேலையற்று இருப்பதாகும். இந்தியாவில் வருடத்திற்கு 3 சதவீதத்திற்கும் அதிகமான நகர்ப்புற வேலையின்மை படிப்படியாக உயர்ந்து வருகிறது. ஒரு மதிப்பீட்டின்படி சுமார் 25% நகர்ப்புறத் தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கின்றனர். அதிக அளவு வேலையின்மை மற்றும் தகுதிக்குக் குறைவான வேலை போன்றவை குற்ற விகிதம் அதிகரிக்கக் காரணமாகியுள்ளது.

**4. போக்குவரத்து பிரச்சனை:**

போக்குவரத்து சிக்கல்கள் மற்றும் போக்குவரத்து நெரிசல் ஆகியவை இந்திய மாநகரங்களின் முக்கியப் பிரச்சழனயாகும். ஒரு நகரம் பெரியதாக வளர வளர அதன் செயல்பாடுகளும் மிக முக்கியமானவை. தொழிலாளிகளுக்கும் பயணிகளுக்கும் அதிக போக்குவரத்து வசதிகள் தேவை. எதிர்பாராதவிதமாக, பெரிய நகரங்களில் குறிப்பாகப் பழைய நகரங்களில் சாலைகள் குறுகலாக காணப்படுகின்றன. எனவே பயணிகளின் அதிகரித்து வரும் தேவையை சமாளிக்க முடியவில்லை. தனியார் வாகனங்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக போக்குவரத்து நெரிசல், தாமாம், எரிச்சல் மற்றும் பதற்றம் போன்றலை ஏற்படுகிறது. சாலைகளை அகலப்படுத்தாமல், சாலைகளின் தரத்தை மேம்படுத்தாமல் வாகனங்களின் எண்ணிக்கையைத் தற்போதுள்ள வீதத்தில் அதிகரிக்க அனுமதித்தால் முக்கிய மாநகரங்களில் உள்ள போக்குவரத்து அமைப்பு முழுவதும் சரிவடையும்.

**5. எரிசக்தி நெருக்கடி:**

எரிசக்தி நெருக்கடி தொழிற்சாலைப் பொருட்களின் உற்பத்தியையும் விநியோகத்தையும் பாதிக்கிறது. உண்மையில் எரிசக்தியானது தொழில் வளர்ச்சி, போக்குவரத்து திறன் மற்றும் மனித வசதியைச் சார்ந்துள்ளது. பெருநகரங்கள், மில்லியன் மற்றுமு் முதல் நிலை நகரங்கள்

ஆகியவற்றில் உச்சகட்ட மின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதற்கேற்றவாறு எரிசக்தியின் அளிப்பு தேவையை பூர்த்தி செய்யும் நிலையில் இல்லை.

**6. நீர் அளிப்பு பற்றாக்குறை:**

மனித வாழ்க்கையின் முதல் மற்றும் முன்னணித் தேவை நீர். உண்மையில் நீரே வாழ்க்கை, மனிதன் நீர் இல்லாமல் வாழ முடியாது. கொல்கத்தாவில் சராசரி தனிநபரின் நீர் நுகர்வு 250 லிட்டர், மும்பையில் 175 லிட்டர், டில்லியில் 20 லிட்டல் மட்டுமே, ஆனால் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இது 1200 லிட்டர், சிக்காகோவில் 1100 லிட்டர் ஆகும்.

இந்தியாவில் நகர்ப்புறப் பகுதிகளில் கடுமையான நீர்ப் பற்றாக்குறை உள்ளது என்பதை சென்னை, ஹைதராபாத், ஜெய்ப்பூர், ஜோத்பூர், நாக்பூர், சிம்லா, சோலன், சூரத், உதய்பூர், வதோதரா போன்ற நகரங்களில் நாளொன்றுக்கு ஒன்று முதல் இரண்டு மணி நேரமே நீர் வழங்கப்படுகிறது என்ற உண்மையிலிருந்து அறிந்துகொள்ளலாம். தேசிய தலைநகச் புதுடெல்லியும் நீர் அளிப்பு நாளொன்றுக்கு சுமார் 4 மணி என்று முறைப்படுத்தியுள்ளது.

**7. சுற்றுச் சூழல் மாசுபடுதல்:**

சுற்றுச்சூழல் மாசுபடுதலானது அனைத்து மில்லியன் மற்றும் பெரு நகரங்களில் தீவிரப் பிரச்சினையாகும். வாகனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் வீடுகளிலிருந்து வெளியேறும் புகையினால் காற்று மாசுபடுவதுபோல நீர் மற்றும் ஒலி மாசடைதாலும் அதற்கிணையாக தீவிரமான ஒன்றாகும். குப்பை சேகரிக்கும் இடங்களின் பற்றாக்குறை கிராம-நகர விளிம்பை சுகாதாரமற்றதாக ஆக்குவதுடன் மக்கள் உடல் நலத்திற்குப் பாதகமாகவும் ஆகிறது. குப்பை அகற்றும் பிரச்சனை (அபாயகரமான பிளாஸ்டிக், உலோகம் மற்றும் பொட்டலம் கட்டும் பொருட்கள்) இந்தியாவில் பெரும்பாலான மாநகரங்களிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் தீவிலமான பிரச்சினையாக உள்ளது. எதிர்பாராதவிதமாக பெருமளவில் குப்பைகள் ஆறுகளிலோ அவற்றின் கரைகளிலோ கொட்டப்படுகின்றன. மும்பை, கொல்கத்தா மற்றும் சென்னை போன்ற மாநகரங்களில் குப்பைகளின் பெரும்பகுதி தொடர்ந்து கடலில் கொட்டப்படுகின்றன.

**8. குற்றம் அதிகரித்தல்:**

அதிகரிக்கும் நகர்பபுறக் குற்றங்கள் நவீன நகரங்களின் அமைதிறைக் குரைக்கின்றன. சமூகவியலாளர்கள் கூற்றுப்படி வேலையின்மை நகர்ப்புற பகுதிகளில் குற்றங்களுக்கு முக்கிய காரணமாகும். வேலையில்லாத இளைஞர்கள் கடத்தல், பணம் பறித்தல், குழந்தை கடத்தல், கொலை, வழிப்பறி செய்தல் (பாக்கெட் பிக்கிங்), கற்பழித்தல் கொள்ளையடித்தல் மற்றும் திருடுதல் போன்ற குற்றங்களில் ஈடுபடுகின்றனர். நகரக் குடிசைகள் வேலையில்லாத குற்றவாளிகளால் நிறைந்திருக்கின்றன. இவர்கள் காலப்போக்கில் குற்றத் தொழிலையே வழக்கமாகத் கொண்டவர்களாக மாறுகின்றனர். பொருள் கலாச்சாரம், வளர்ந்து வரும் நுகர்வுத்தன்மை சுயநலம், கடினமாக போட்டி, ஆடம்பரமாக செலவு செய்யும் பழக்கம், அதிகரித்து வரும் சமூகப் பொருளாதார வேற்றுமைகள், அதிகரித்து வரும் வேலையின்மை மற்றும் தனிமை ஆகியவை இப்பிரச்சனைக்குச் சில முக்கியக் காரணங்களாகும்.

**நகர்ப்புற ஒருங்கிணைப்பு:**

நகர்ப்புற ஒருங்கிணைப்பில் ஒரு மைய நகரமோ அல்லது ஒருங்கிணைப்பில் அங்கம் வகிக்கும் நகரங்களில் குறைந்து ஒன்றாவது அங்கீகரிக்கப்பட்ட நகரமாக இருக்க வேண்டும். மேலும் ஒருங்கிணைப்பிருள்ள அனைத்து நகரங்களின் மொத்த மக்கள் 20,000க்கும் குறையாமல் (1991கணக்கீடு) இருக்க வேண்டும் என்று 2001ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி முடிவெடுக்கப்பட்டது.

நகர்பபுற ஒருங்கிணைப்பு என்பது தொடர்ச்சியான நகர்பபுற பரவலாகும். ஒரு நகரம் அல்லது அதனுடன் இணைந்த நகரத்தின் வெளிப்புற வளர்ச்சி (OGS – Out Growths) அல்லது 2 அல்லது அதற்கு மேல் வெளிப்படையாகத் தெரியும் (Physical) தொடர் நகரங்களின் தொகுப்பு மற்றும் அந்நகரங்களோடு இணைந்த நகரத்தின் வெளிப்புற வளர்ச்சியே நகரப்புற ஒருங்கிணைப்பாகும். வெளப்புற வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகள் இரயில்வே குடியிருப்புகள்,

பல்கலைக்கழக வளாகங்கள், துறைமுகப் பகுதி, இராணுவ முகாம்கள் போன்றவையாகும். இவை அங்கீகரிக்கப்பட்ட நகரம் அல்லது மாநகரத்திற்கருகில் வந்திருந்தாலும், ஒரு கிராமம் அல்லது மாநகரத்திற்கருகில் வந்திருந்தாலும், ஒரு கிராமம் அல்லது ஒரு நகரம் அல்லது மாநகரத்தோடு தொடர்ச்சியாக வந்த கிராமங்கள் இவற்றின் வருவாய் எல்லைக்குள் அடங்கியவை. இந்த இரண்டு அடிப்படைக் காரணிகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், கீழ்க்காணும் வேறுபட்ட சூழ்நிலைகள்தான் நகர்ப்புற ஒருங்கிணைப்பு ஏற்படக் காரணமாய் இருக்கலாம்.

i. தொடர்ச்சியான வெளிப்புற வளர்ச்சி கொண்ட ஒரு மாநகரம் அல்லது நகரம்.
ii. வெளிப்புற வளர்ச்சி கொண்ட அல்லது வெளிப்புற வளர்ச்சி இல்லாத ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இணைந்த நகரங்கள்.
iii. தொடர்ச்சியான பரவலை ஏற்படுத்தக்கூடிய ஒரு மாநகரம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இணைந்த நகரங்கள் மற்றும் அதனோடு கூடிய வெளிப்புற வளர்ச்சிகள் அனைத்தும்.

**நிலையான நகர்ப்புற பகுதி:**

1971 மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக ஒரு புதிய கருத்து உருவாக்கப்பட்டது. இது சில நகர்ப்புறத் தகவர்களை அட்டவணைப் படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இதுவே நிலையான நகரப்புறக் பகுதியாகும்.

**நிலையான நகர்பபுற பகுதியின் முக்கிய அம்சங்கள்:**

i. குறைந்தது 50,000 மக்கள் தொகை கொண்ட முக்கிய நகரமாக இருத்தல் வேண்டும்.
ii. நகர்ப்புற மற்றும் கிராமப்புற நிர்வாகக் குழுக்களைக் கொண்ட தொடர் பகுதிகள் முக்கிய நகரரத்தோடு நெருக்கமான, பரஸ்பர, சமூக பொருளாதாரத் தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.
iii. இருபது அல்லது முப்பது 2 அல்லது 3 பத்தாண்டுகளில் இந்த முழுப்பகுதியும் நகரமயமாகலாம்.

நகரமயமாக்கப்பட்டப் பகுதிக்குத் தேவையான ஒப்பீட்டு தகவல்கள் தொடர்ச்சியாக முப்பது ஆண்டுகளுக்கு வழங்கப்படும் பொழுதுதான் நிலையான நகர்ப்புற பகுதியைப் பற்றி ஒரு சரியான கருத்து கிடைக்கும். இந்த தெளிவற்ற "நிலையான நகர்ப்புறப் பகுதி" என்ற மாற்றுக் கருத்து 1961 கணக்கெடுப்பில் உருவானது. நகரக்குழுக்கள் சுயேச்சையான (Independent) நகரப் பகுதிகளைக் கொண்டிருந்தன. இந்த நகரப் பகுதிகளைக் கொண்டிருந்தன. இந்த நகரக் குழுக்களுக்கான தகவல்கள் ஒரு கணக்கெடுப்பிலிருந்து மற்றொரு கணக்கெடுப்பிற்கு ஒப்பிட முடியாதவாறு இருந்தது. ஏனெனில் நகரங்களின் எல்லைவைகள் மாறிவிட்டன. இடையிலிருந்த பகுதிகள் கணக்கெடுப்பிலிருந்து விடுபட்டுப் போயின. 1968ஆம் ஆண்டு சர்வதேச புவியியல் சங்கத்தின் கருத்தரங்கு ஒன்றில் இக்கருத்து விமர்சனத்துக்குள்ளானது. எனவே நிலையான நகர்ப்புறப் பகுதி என்ற கருத்து உருவாக்கப்பட்டு 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிலையான நகர்ப்புறப்பகுதி பற்றிய தகவல்கள் தொடர்ந்து 2 அல்லது 3 கணக்கெடுப்புகளில் கிடைத்தால் நகர்ப்புற மையக் கருத்துக்களைச் சுற்றிக் காணப்படும் நகரமயமாதல் பற்றிக் தெரிந்து கொள்ளத் தேவையான அர்த்தமுள்ள விளக்கம் கிடைக்கும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

உலகமாநகரம் (Ecumeno polis) என்பது (இகுமினோ என்பது உலகத்தையும் போலீஸ் என்பது மாநகரத்தையும் குறிக்கும்) உலக முழுமையும் தன்னுள் அடக்கிய ஒரே மாநகரமாகும். எதிர்காலத்தில் இது ஏற்பட வாய்ப்புள்ளது.

**நகர்புறக் குடியிருப்பு வகைப்பாட்டிற்கான அடிப்படை:**

நகர்ப்புறப் பகுதியின் வரையறையானது நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. நகர்புறக் குடியிருப்புகளை வகைப்படுத்த சில பொதுவான அடிப்படைகளான மக்கட்தொகையளவு, தொழில் அமைப்பு மற்றும் நிர்வாக அமைப்பு ஆகும்.

**மக்கள்தொகையளவு:**

இந்தியாவில் மக்கள் தொகை அளவு, ஒரு ச.கி. மீட்டருக்கு 400 பேர் என்ற மக்களடர்த்தி, விவசாயமற்ற தொழில் செய்வோரின் பங்கு ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**தொழில் அமைப்பு:**

இந்தியாவில் 50% பொருளாதார உற்பத்தித் திறன் கொண்ட மக்கள் விவசாயமற்ற தொழில்களில் ஈடுபடுதல்.

**நிர்வாக அமைப்பு:**

இந்தியாவில் நகராட்சி, இராணுவக் குடியிருப்பு அல்லது அறிவிக்கப்பட்டப் பகுதிக்குழு ஆகியவை எந்த அளவில் இருந்தாலும் அவை நகர்ப்புறம் என்று வரையறுக்கப்படுகிறது.

**நகர்ப்புறக் குடியிருப்புகளின் வகைப்பாடு:**

நகர்ப்புறக் குடியிருப்பின் செயர்பாடுகளைப் பொறுத்து நகரங்கள் நிர்வாக நகரங்கள், வணிக நகரங்கள், கலாச்சார நகரங்கள், பொழுதுபோக்கு நகரங்கள் மற்றும் தொழில்துறை நகரங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிர்வாக நோக்த்திற்காக அல்லது நிர்வாகச் செயல்பாட்டிற்காக நிறுவப்பட்ட குடியிருப்புகள் நிர்வாக நகரங்கள் எனப்படுகின்றன. எ.கா. வாஷிங்டன், புதுடெல்லி, கான்பெரா, பாரிஸ், பீஜிங், அடிஸ் அபாபா மற்றும் லண்டன்.

வர்த்தக வாய்ப்புகளை எளிதாக்கும் குடியிருப்புகள் வணிக மற்றும் வர்த்தக நகரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆக்ரா, லாகூர், பாக்தாத் போன்ற முக்கிய போக்குவரத்து முனையங்கள் மான்செஸ்டர் மற்றும் செயின்ட் லூயிஸ் போன்ற உள்நாட்டு மையங்கள், வின்னிபெக் மற்றும் கான்சாஸ் மாநகரம் போன்ற வேளாண் சந்த நகரங்கள், பிராங்க்பர்ட் (Frankfurt) மற்றும் ஆம்ஸ்டர்டாம் போன்ற வங்கி மற்றும் நிதி மையங்கள் ஆகும்.

மத ஈடுபாடு காரணமாக நிறுவப்பட்ட குடியிருப்புகள் கலாச்சார அல்லது மத நகரங்கள் என்றழைக்கப்படுகின்றன. எ.கா.ஜெருசலேம், மெக்கா, ஜகந்நாத் பூரி, மதுரை மற்றும் வாரணாசி போன்றவை.

பொழுதுபோக்கு நோக்கத்திற்காக நிறுவப்பட்ட நகரங்கள் பொழுதுபோக்கு நகரங்கள் எனப்படும். எ.கா.மியாமி (அமெரிக்க ஐக்கிய நாடுகள்), பனாஜி (இந்தியா) போன்றவை. தொழில்துறை வளர்ச்சி காரணமாக நிறுவப்பட்ட நகரங்கள் தொழில்துறை நகரங்கள் என அழைக்கப்படுகின்றன. எ.கா.பிட்ஸ்பர்க் (அமெரிக்க ஐக்கிய நாடுகள்) ஜாம்ஷெட்பூர் (இந்தியா) போன்றவை.

# இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு

**அறிமுகம்:**


உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை ஒவ்வொரு மனிதருக்கும் அடிப்படைத் தேவைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். தற்போதைய உலகில் அந்தப் பட்டியலில் வேலைவாய்ப்பு என்ற ஒற்றையும் சேர்க்கப்பட வேண்டியது முக்கியம். இவ்வுலகில் வாழ்வதற்காக வருவாய் ஈட்ட நம் அனைவருக்கும் வேலை அவசியம். பொருளியல் செயல்பாடுகளில் மேல்நிலையில் அலுவலர்களாகவும் மற்றும் கீழ்நிலையில் தொழிலாளர்களாகவும் பங்குபெறுவோர் ஊழியர் எனப்படுவர். இந்த ஊழியர்களைப் பணியமர்த்தி, அவர்களின் பணிக்கு ஏற்ப ஊதியம் தருவோரை, பணியமர்த்துவோர் என்று குறிப்பிடப்படுவர்.

உழைப்பாளர் குழு என்பது நாட்டு மக்களில் வேலையில் இருப்போரும், கூடவே வேலை செய்யும் திறன் பெற்ற நபர்களும் ஆவர். உழைப்பாளர் குழுவைக் கணக்கிடுவதில் 15 முதல் 60 வயது வரையிலும் உள்ளவர்களை நாம் எடுத்துக் கொள்கிறோம். 15 வயதுக்குக் குறைந்தவர்கள் குழந்தைகளாகக் கருதப்படுகின்றனர். 60 வயதைக் கடந்தவர்கள், உற்பத்தி சார்ந்த வேலையை மேற்கொள்வதற்கு உடல் ரீதியாகத் தகுதியானவர்கள் அல்ல என்பதால் அவர்கள் உடல் உழைப்பைச் செய்ய முடியாது என விலக்கப்படுகின்றனர். மக்கள் தொகையில் பெரும்பகுதி குழந்தைகளும் வயது முதிர்ந்தவர்களும் இருந்தால், உழைப்பாளர் குழுவின் எண்ணிக்கைக் குறைவாக இருக்கும். இதனால் நாட்டு முன்னேற்றம் மெதுவாக நடைபெறும். மேலும், குறைந்த உழைப்பாளர்கள் குழுவானது, உழைப்பாளர் அல்லாத பெரிய குழுக்களுக்குச் சிறிய தேசிய உற்பத்தியிலிருந்து உணவளித்துப் பராமரிக்க வேண்டியிருக்கும்.

**இந்தியாவில் வேலைவாய்ப்பு அமைப்பு:**

இந்தியாவில் வேலைவாய்ப்பின் தன்மையானது பல பரிமாணங்களைக் கொண்டது. சிலருக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கும். ஒரு சிலருக்கு ஓராண்டில் சில மாதங்களுக்கே வேலை கிடைக்கும்.

முதன்மைத் துறை அல்லது விவசாயத் துறை, இரண்டாம் துறை அல்லது தொழில் துறை, மூன்றாம் துறை சார்புத் துறை அல்லது சேவைத் துறை எனப் பொருளியல் வருவாய் ஈட்டும் துறைகள் மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.



பொருளியல் அமைப்பின் வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையை வேலைவாய்ப்பு அமைப்பு குறிக்கிறது. வேலைப் வாய்ப்பு முறைகள் நாட்டுக்கு நாடு மாறுகின்ற போதிலும் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் உழைப்பாளர் குழ பெரும்பகுதி முதன்மைத் தொழிலிலும் சிறிய குழுக்கள் இரண்டாம், மூன்றாம் நிலைத் தொழில்களிலும் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். நன்கு வளர்ந்த நாடுகளில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள உழைப்பாளர் குழுவின் பங்கு சிறியதாகவும், தொழில் மற்றும் சேவை துறைகளில் ஈடுபட்டிருக்கும் உழைப்பாளர் குழுவின் பங்கு பெரிதாகவும் இருக்கும்.

இந்திய வளர்ச்சிக் கொள்கையின் ஒரு முக்கியமான கூறாக வேலைவாய்ப்பு எப்போதுமே இடம் பெற்றுள்ளது.

1972 – 73 ஆம் ஆண்டுகளில் தொடங்கி கடந்த நான்கு பாத்தாண்டுகளில் வேலை வாய்ப்பு வளர்ச்சி, சராசரியாக 2% அளவுக்கு உயர்ந்துள்ளது.


| |
|---|
| இடைக்கால வரலாற்றுக் காலத்தில் இந்தியாவின் டெல்லி சுல்தான் பெரோஸ் ஷா துக்ளக், வேலைவாய்ப்பின்மைச் சிக்கலைத் தீர்ப்பதற்காக “வேலைவாய்ப்பு அலுவலகத்தை” அமைத்தார். |

**வேலைவாய்ப்பின் வகைகள்:**

**ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள்:**

பதிவு செய்யப்பட்டதும், அரசாங்க விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்றுவதும், ஊழியர்களையும் ஊழியர் சங்கங்களையும் கொண்டுள்ள துறை ஒழுங்கமைக்கப்பட்டத் துறை எனப்படும். இந்தியாவில் வங்கிகள், ரயில்வே, காப்பீடு, உற்பத்தித் உற்பத்தி தொழிற்சாலைகள், மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களைக் கொண்டு செயல்படும் துறைகள் ஒழுங்கமைக்கப்பட்டத் துறைகள் என கூறலாம். இந்தத் துறைகள், சட்டத்திலுள்ள குறிப்பிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் படி செயல்படுகிறது. இந்த ஊழியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு உண்டு என்பதோடு அமைப்பு ரீதியாக ஒழுங்கமைக்கப்படாத துறையில் இருப்பவரைக் காட்டிலும் அதிக ஊதியம் பெறுகின்றனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட துறையில் நல்ல ஊதியம், நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரம், ஊதியத்துடன் கூடிய விடுமுறை, மருத்துவ உதவித்தொகை மற்றும் காப்பீடு போன்றவை வழங்கப்படும்.




ஆதாரம் : NSSO


**ஒழுங்கமைக்கப்படாத துறைகள்:**

அமைப்பு ரீதியாக ஒழுங்கமைக்கப்படாத துறைகள் என்பது வீட்டு உபயோகப் பொருள்கள், சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்றவற்றைக் கூறலாம். இதற்கு விதிகளும் ஒழுங்குமுறைகளும் இருந்தாலும் அவை பின்பற்றப்படுவதில்லை. இவற்றில் வேலை செய்வோருக்குக் குறைந்த கூலி கொடுக்கப்படுவதோடு பல நேரங்களில் தொடர்ச்சியாக வேலையும் இருக்காது. பெரும்பாலும் அவர்களுக்குக் ஊதியத்துடன் விடுப்பு, விடுமுறை நாட்கள், மருத்துவ விடுப்பு போன்றவை இருக்காது. வேலை உத்தரவாதம் கிடையாது. வேலையில்லாத போது அவர்கள் தொழில் கூடங்களிலிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள். தெருக்களில் விற்பனை செய்வோர், பழுதுகள் சரி பார்ப்போர், சிறிய அளவிலான தொழில் செய்வதில் ஈடுபட்டுள்ள ஏராளமான எண்ணிக்கையிலான மக்களை இந்தத் துறை உள்ளடக்கியுள்ளது.

அமைப்பு ரீதியாக ஒழுங்கமைக்கப்படாத துறையில் வேலைவாய்ப்பு வரையறைகள் நிலையானதாக, ஒழுங்குபடுத்தப்பட்டதாக இல்லை. தொழிலாளர்களுக்குச் சிறப்பு ஆதாயங்களோ வேலை நிரந்தரமோ கிடையாது. இந்த நிறுவனங்கள் அரசாங்கத்தில் பதிவு பெற்றவை அல்ல.

**பொது மக்கள் துறையும் தனியார் துறையும்:**

சொத்துகளின் உரிமையாளரையும், சேவைகள் அளிப்பதற்குப் பொறுப்பானவரையும், அடிப்படையாகக் கொண்டு, பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படையில் பொதுத்துறை மற்றும் தனியார் துறை என வகைப்படுத்தப்பட்டுள்ளன.




**பொதுத்துறை மற்றும் தனியார் துறைக்கான வேறுபாடுகள்:**

| வ.எண் | பொதுத் துறை | தனியார் துறை |
|---|---|---|
| 1. | சேவை நோக்கம் கொண்டது | இலாப நோக்கம் கொண்டது |
| 2. | சொத்துக்கள் அரசாங்கத்துக்குச் சொந்தம் | சொத்துக்கள் தனி நபர்களுக்குச் சொந்தம் |
| 3. | ஊதியம் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றது. | ஊதியம் உரிமையாளரால் வழங்கப்படுகின்றன |

**எடுத்துக்காட்டுகள்:**

**பொதுத்துறை நிறுவனங்கள்:**

- நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்
- இந்திய உருக்கு ஆணையம்
- பாரத தொலைபேசி நிறுவனம்

**தனியார் துறை நிறுவனங்கள்:**

- டிவிஎஸ் மோட்டார் நிறுவனம்
- அசோக் லேலண்ட்
- டாடா இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை

**தற்போதைய வேலைவாய்ப்பு போக்கு:**

சமீப ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அமைப்பில் ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளதோடு இது பணியமர்த்துவோர், அவர்களின் ஊழியர்களிடையே அதிக நெகிழ்ச்சியோடு பணிபுரியும் முறையை வளர்த்தெடுக்க உதவியது. தற்கால வேலைவாய்ப்பு போக்குகளாவன.

1. அதிகரித்துவரும் சுய-வேலைவாய்ப்பு

APP OLD STUDY CENTRE

2. நிறுவனங்கள் ஒரு சில நிரந்தர ஊழியர்களையே பயன்படுத்துல் மற்றும் குறுகிய கால ஒப்பந்தப் பணிகளைத் தருவதும் ஆகும்.
3. பகுதி நேர வேலைவாய்ப்பில் ஒரு வளர்ச்சி இருந்து வருகிறது. மக்களின் வாழ்க்கை முறையே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

**தமிழகத்தில் வேலைவாய்ப்புப் போக்குகள்:**

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் தமிழகத்தில் விவசாயமே அதிகம் பேருக்கு வேலையளித்துக் கொண்டிருக்கிறது இதற்குக் காரணம், விவசாயமல்லாத துறைகள், உழைப்பாளர்கள் குழு தொழில்களை மாற்றி கொள்வதற்குப் போதுமான அளவு வேலைவாய்ப்பை உருவாக்கவில்லை. தமிழ் நாட்டின் வேலைவாய்ப்பு வளர்ச்சியின் பெரும்பகுதி, குறைந்த வருமானங்களை அளிக்கின்ற அமைப்பு ரீதியாக ஒழுங்கமைக்கப்படாத முறைசாரா துறைகளின் பங்களிப்பாகவே உள்ளது.


**இருவேல்பட்டுவில் வேலைவாய்ப்பு: ஒரு கள ஆய்வு:**

வேலைவாய்ப்பு நிலவரங்களில் ஏற்படும் மாற்றத்தைத் தேசிய அல்லது மாநில அளவில் மட்டும் தான் புரிந்து கொள்ள முடியும் என்றில்லை, கிராமத்தை ஆய்வு செய்வதிலிருந்தும் புரிந்துகொள்ளலாம். இருவேல்பட்டு என்பது தமிழ்நாட்டில், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமமாகும். இந்தக் கிராமம் 100 ஆண்டுகளுக்கும் அதிகமாக அறிஞர்கள் பலராலும் ஆய்வு செய்யப்பட்டு வந்துள்ளது. இந்த கிராமம் ஸ்லேட்டர் கிராமம் என்றும் கூறப்படும், ஏனெனில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வந்த கில்பர்ட் ஸ்லேட்டர் என்பவர் முதன் முதலில் தனது மாணவர்களுடன் கள ஆய்வு செய்வதற்காக இந்த கிராமத்திற்கு 1916 ஆம் ஆண்டு சென்றார். காலப் போக்கில் பல ஆய்வாளர்கள் கிராமத்தவர்களின் வேலை குறித்து கணக்காய்வு செய்து, கிராமத்திலுள்ள ஒவ்வொருவர் குறித்தும் மேலும் பல விவரங்களைச் சேகரித்துள்ளனர்.

இந்தக் கிராம வளர்ச்சியின் காரணம் கிராம மக்களிடையே ஆரம்ப சுகாதார நலம், பள்ளிகள் அமைத்தது, பொது விநியோக அமைப்பு ஆகியவற்றின் மீது சமூகப் பாதுகாப்பு விழிப்புணர்வை அரசாங்கம் அவர்களுக்கு ஏற்படுத்தியது காரணமாகும். இந்தக் கிராமம் பல மாறுதல்களுக்கு உட்பட்டுள்ள போதிலம் இன்னமும் அவர்களின் வேலைவாய்ப்புக்கு முக்கியமாக விவசாயத்தையே சார்ந்துள்ளது. பின்வரும் அட்டவணையைப் பாருங்கள். 1981 ஆம் ஆண்டில் 100 குடும்பங்களில் 24 குடும்பங்கள் விவசாயமல்லாத வேலைகளில் ஈடுபட்டிருந்ததைக் காணலாம். 2008 ஆம் ஆண்டில் விவசாயமல்லாத வேலைகளில் இருந்த குடும்பங்களின் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது. 1981 – 2008 காலத்தில் விவசாயத்தில் - விவசாயக் கூலிகளாகவும், பயிரிடுவோராகவும் - ஈடுபட்டிருந்த குடும்பங்களின் விகிதம் குறைந்துள்ளது. எனவே விவசாயம் அல்லாத தொழிலில் ஈடுபடுபவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை காணலாம்.

**இருவேல்பட்டுவில் இருந்த குடும்பங்களின் வேலை விவரங்கள் (சதவீதத்தில்)**

| தொழில் | குடும்பங்கள் % | |
|---|---|---|
| | 1981 | 2008 |
| பயிரிடுவோர் | 42 | 33 |
| விவசாயக் கூலிகள் | 32 | 26 |
| விவசாயமல்லாத தொழிலாளர்கள் | 24 | 41 |
| மொத்த குடும்பங்கள் | 100 | 100 |


1981
24%
42%
34%
2008
41%
33%
26%
பயிரிடுவோர்
விவசாயக் கூலிகள்
விவசாயமல்லாத தொழிலாளர்கள்

# வேலையின்மை

## வேலையின்மையின் வகைககள் (Types of unemployment):

வேலையின்மை என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத்தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் தகுந்த வேலையில்லாத சூழ்நிலை வேலையின்மை ஆகும்.

இந்தியாவில் வேலையின்மை பிரச்சனையைச் சமாளிக்க கொள்கைகள் உருவாக்கும் போது வேலையின்மையின் வகைகளையும் தன்மைகளையும் அறிய வேண்டும். இந்திய கிராமப்புறங்களில் வேலையின்மையும் குறைவான வேலைவாய்ப்பும் (Underemployment) காணப்படுகின்றன கிராமங்களில் மறைமுக வேலையின்மை மற்றும் பருவகால வேலையின்மை நிலவுகிறது. நகர்புறங்களில் பிறழ்ச்சி வேலையின்மை, அமைப்புசார் வேலையின்மை மற்றும் திறந்த வேலையின்மை நிலவுகிறது. நகர்மயமாதல் காரணமாக கிராமப்புற வேலையாட்கள் நகர்ப்புறங்களை நோக்கி செல்கின்றனர். இவ்வாறு கிராமபுற மக்கள் நகர்ந்து செல்வதால் நகர்புறங்களில் வேலையின்மை அதிகரிக்கிறது.

## வேலையின்மையின் வகைகள்:

வளர்ந்த நாடுகளில் வேலையின்மை என்பது தற்காலிகமாகவோ அல்லது பிறழ்ச்சியாகவோ இருக்கலாம். ஆனால் வளர்கின்ற நாடுகளில் மூலதன உருவாக்கம் குறைவாக இருப்பதால் அமைப்புசார்ந்த வேலையின்மை அதிகமாக இருக்கும். கீழ்கண்டவை வேலையின்மையின் வகைகள் ஆகும்.




## வாணிபச் சூழல் வேலையின்மை (Cyclical Unemployment):

கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சுழல் வேலையின்மை (Cyclical Unemployment) என்று பெயர். வாணிப சூழலின் பின்னிறக்க பகுதியில், உற்பத்தி மற்றும் வருமானம் குறைந்து வேலையின்மை அதிகரிக்கும். இது போதுமான அளவு விளைவுத் தேவை இல்லாத போது நிகழ்வதாகும். அரசு முதலீட்டை அதிகரிப்பதன் மூலமும், விரிவான பணவியல் கொள்கைகளைக் கடைப்பிடித்தும் இந்த சுழல் வேலையின்மையைக் குறைக்கலாம்.

### பருவகால வேலையின்மை (Seasonal Unemployment):

ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். விவசாயம் மற்றம் விவசாயம் சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி) போன்றவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும். இத்தகைய தொழில்களில் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் வேலைவாய்ப்பு இருக்கும். மற்ற பருவங்களில் வேலையிருக்காது. எனவே அவற்றை நம்பி செயல்படும், வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகளிலும் வேலையின்மை நிலை நிலவும். மக்களின் தேவை கூடுவதாலும் குறைவதாலும் பருவகால வேலையின்மை தோன்றும், உதாரணம், ஐஸ்கீரிம், விடுமுறைகால சுற்றுலாவின் தேவை குறைவதாலும் வேலைவாய்ப்பு குறையலாம்.

### தற்காலிக அல்லது உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை (Temporary Unemployment or Frictional unemployment)

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது. உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது. வேலையை இழந்து புதிய வேலை தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர்.

### கற்றோர் வேலையின்மை (Educated Unemployment):

சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலைகிடைப்பதும் இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர். இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர். தவறான கல்வி முறை, வேலைக்கான திறன் பற்றாக்குறை அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல், இலகுவான வேலையை மட்டுமே விரும்புதல் போன்ற காரணங்களால் பட்டம் பெற்றவர்களின் வேலையின்மை கூடுகிறது.

### தொழில் நுட்ப வேலையின்மை (Technical Unemployment):

புதிய தொழில்நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். புதியன கண்டுபிடித்தலும் புதிய கருத்துக்களும் வேலைவாய்ப்பினை உருவாக்கும். ஆனால் உழைப்பை சேமிக்கின்ற புதிய கண்டுபிடிப்புகள் தொழில்நுட்ப வேலையின்மையை உருவாக்கும்.

### அமைப்புசார் வேலையின்மை (Structural Unemployment):

சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் அமைப்புசார் வேலையின்மை உருவாகிறது. ஒரு பொருளுக்கான தேவை குறைதல் (Eg. Type Machine, Taperecordeas, Radios, Camera etc) அல்லது பிற பொருள்களின் தேவை அதிகரித்தல் இடு பொருட்கள் இன்மை, முதலீடு பற்றாக்குறை ஆகியவையும் இவ்வகை வேலையின்மைக்கு காரணமாகிறது. உதாரணமாக, கைபேசியின் தேவை அதிகரித்ததால், கேமராவின் தேவை மற்றும் டேப் ரெக்கார்டர்களின் தேவை இருக்கின்றனர்.

### மறைமுக வேலையின்மை: (Disguised Unemployment):

தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மையாகும். (உதாரணம் - விவசாயத்துறை). இவ்வேலைகளில் சிலர் வேலையைவிட்டு விலகினாலும்.

உற்பத்தி பாதிக்காது. உற்பத்தியில் அவர்களின் பங்கு குறைவாக இருக்கும். வேலையில்லாததாலேயே, தெரிந்தும் அதிகமானோர் ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பார்கள். இத்தகைய வேலையின்மையால் உழைப்பாளரின் இறுதிநிலை உற்பத்திதிறன் பூஜ்யமாகவோ, குறைவாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருக்கும்.

APPOLLO STUDY CENTRE

# ஊரக வேலையின்மை:

**வேலையின்மை:**
என்பது நடைமுறையிலுள்ள ஊதிய விகிதத்தில், தனி நபரால் வேலை செய்ய விருப்பப்பட்டும் கிடைக்கப் பெறாத நிலையாகும். இதனால் மனிதவளம் மிகவும் வீணாகிறது மற்றும் குறைவாக பயன்படுத்தப்படுகிறது. வேலையின்மை நிலவுகின்ற வரை சமூக பிரச்சினைகளை தடுக்க முடியாது. பொருளாதாரம் முன்னேற்ற இலச்சினை அடைய முடியாது.

| |
|---|
| பணிக்கான படிப்பு (Jobs study) என்ற ஆய்விற்காக பீட்டர் டயமண்ட், டேல் மார்டின்கன் மற்றும் கிறிஸ்டோர் பிசாரிட்ஸ் ஆகிய பொருளாதார அறிஞர்கள் 2010 – ம் ஆண்டிற்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசினை பகிர்ந்து கொண்டனர் இவர்கள் உருவாக்கிய முறைக்கு அல்லது கோட்பாட்டிற்கு DMP முறை எனப்படும். பொருளாதார கொள்கைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் எப்படி வேலையின்மை, வேலைக்கான காலியிடங்கள் மற்றும் கூலி ஆகியவற்றை பாதிக்கிறது என அறிந்துகெள்ள DMP முறை உதவுகிறது. |

2016, அக்டோபர் 4, நிலவரப்படி, ஊரக வேலையின்மை 7.8 சதவீதமாகும். இது நகர்ப்பற வேலையின்மையை (10.1%) விட குறைவு ஆகும். இந்திய மொத்த வேலையின்மை 8.5% ஆகும்.

**ஊரக வேலையின்மை என்பது மூன்று வகைப்படும்:**

1. வெளிப்படையான வேலையின்மை
2. மறைமுக வேலையின்மை அல்லது குறை வேலையுடைமை
3. பருவகால வேலையின்மை

**வெளிப்படையான வேலையின்மை:**
என்பது வேலைக்குத் தயாராக இருந்தும் எந்த வேலையும் கிடைக்காமல் வேலையில்லாத நிலையில் இருப்பது ஆகும். விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் ஊரக கைவினைஞர்கள் மற்றும் கற்றவர்கள் ஆகியோர் இப்பிரிவைச் சார்ந்தவர்கள்.

**மறைமுக வேலையின்மையில்**
தகுதிக்கு குறைந்த வேலையில் ஈடுபட்டுள்ளவர்களை அடையாளம் காண்பது கடினம். உபரியான வேலையாட்கள் நியமிக்கப்பட்டுதல், மறைமுக வேலையின்மைக்குக் காரணமாகும். வேலையிலிருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தியின் அளவு குறையாது. ஏனென்றால் அவர்களின் இறுதிநிலை உற்பத்தித் திறன் ஒன்றுமில்லை. இதுவே மறைமுக வேலையின்மை அல்லது குறைவேலையுடைமை எனப்படும். சிறு மற்றும் குறு விவசாயிகள், கால்நடை வளர்ப்பவர்கள் மற்றும் கிராமப்புற கைவினைஞர்கள் ஆகியோரிடையே குறைவேலையுடைமை காணப்படுகிறது. இவ்வகை வேலையின்மை நகர்புறத்தை விட, ஊரக பகுதிகளிலேயே அதிக மோசமாக காணப்படுகிறது. ஊரக பகுதிகளில் மறைமுக வேலையின்மை 25 முதல் 30 விழுக்காடு வரை காணப்படுகிறது.

**பருவகால வேலையின்மையில்** :

இயற்கை சூழல் பொறுத்து ஒரு குறிப்பிட்ட பருவ காலத்தில் ஊடக மக்கள் வேலைவாய்ப்பினை பெறுகிறார்கள். எஞ்சியுள்ள காலகட்டத்தில் வேலையின்றியோ அல்லது பகுதி நேர வேலையிலோ ஈடுபட்டுள்ளனர். உழுதல், விதைத்தல், களை எடுத்தல் மற்றும் அறுவடை செய்தல் போன்ற பருவங்களில் வேலைக்கு ஆள் பற்றாக்குறை நிலவுகிறது. ஆண்டின் பிற பருவங்களில் ஆட்களுக்கு வேலை கிடைப்பதில்லை. ஒரு விவசாயி வருடத்திற்கு ஒரு பயிரை மட்டும் பயிரிடும் போது, கிட்டத்தட்ட 5 முதல் 7 மாதங்கள் வேலையின்றி தவிக்கும் பரிதாபமான சூழலுக்கு தள்ளப்படுகிறார்.

வோளாண் தொழிலாளர் விசாரனைக்குழு அறிக்கையின் படி, 84 சதவீத வேளாண் தொழிலாளர்கள் குறை வேலையுடமையில் உள்ளனர். அவர்கள் சராசரியாக ஆண்டுக்கு 82 நாட்கள் வேலையின்றி உள்ளனர்.

**ஊரக வேலையின்மைக்கான காரணங்கள்:**

இந்தியாவில் ஊரக வேலையின்மைக்கான பல்வேறு காரணங்களை விவாதிக்கலாம்.

1. **திறன்மேம்பாட்டு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் இன்மை:**

   ஊரகப்பகுதிகளில் வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பதற்கு அரசு போதிய பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்காமல் இருப்பதே முக்கிய காரணமாகும்.

2. **வேளாண்மை பருவகாலம் சர்ந்தது:**
   வேளாண் செயல்பாடுகள் பருவகால மாற்றங்களான இயற்கை மற்றும் மழையளவு ஆகியவற்றை சார்ந்துள்ளது. பருவகாலம் அற்ற நேரங்களில் உழைப்பிற்கான தேவை மிகவும் குறைவாக உள்ளது. எனவே வேளாண் சாரா வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

3. **துணை தொழில்களின் மை:**
   போதிய முதலீட்டு நிதிவசதி மற்றும் அங்காடி வசதிகள் இல்லாததால், ஊரக மக்கள் கோழி வளர்ப்பு, கயிறு திரித்தல் மற்றும் பன்றி வளர்த்தல் போன்ற துணைத்தொழில்களை மேற்கொள்ள இயலவில்லை. இவை ஊரக வேலைவாய்ப்பு மற்றும் குடும்ப வருமானத்தைக் குறைக்கிறது. ஊரக மக்களுக்கு தேவையான நிதிவசதியை அரசு ஏற்படுத்தித்தர வேண்டும். முறையான அமைப்புகளிடமிருந்து பணத்தை கடனாக பெற முடியாதால் உள்ளூரில் அதிகவட்டிக்கு பணம் கடன் பெறுகின்றனர்.

4. **வேளாண்மையை இயந்திரமயமாக்கல்:**
   வேளாண் தொழிலாளர்கள் வேலைக்காக நிலக்கிழார்களையே முழுமையாக நம்பியுள்ளனர். வேளாண் செயல்பாடுகளான உழுதல், நீர்பாய்ச்சுதல், அறுவடை செய்தல், கதிர் அடித்தல் போன்றவற்றில் இயந்திரங்களை பயன்படுத்துவதால் வேளாண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு குறைகிறது.

5. **மூலதன செறிவு தொழில்நுட்பம்:**
   நகர்புறங்களில் விரிவடைந்து வரும் தனியார் தொழில் துறை மூலதன செறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதால், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியவில்லை. அரசாங்கம், தொழில் நிறுவனங்களை நிறுவுவதன் மூலம் உபரி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும்.
6. **கல்விமுறையில் உள்ள குறைபாடுகள்:**

   தற்போதைய கல்வி முறை ஊரக வேலையின்மை பிரச்சனையை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. சமீப ஆண்டுகளில் பட்டதாரிகளை உருவாக்கும் கல்வி நிலையங்கள் ஏராளம். மேலும் மாணவர்களும் பட்டம் பெறுவதை மட்டுமே விரும்புகின்றனர். அவர்கள் தமது திறமைகளை வளர்த்துக்கொள்ள விரும்பவில்லை. திறன் அடிப்படையில் பட்டங்கள் வழங்கப்பட வேண்டும். வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் திறமைகளை வளர்த்துக்கொள்ள போதிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**ஊரக வேலையின்மைக்கான தீர்வுகள்:**

நாட்டில் ஊரக வேலையின்மையை குறைப்பதற்கு பல்வேறு நிலைகளில் ஒருங்கிணைந்த முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். சில தீர்வுகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

1. **துணை தொழில்கள்:**
பருவகால வேலையின்மையை தவிர்க்க ஊரக மக்களை, துணை தொழில்களை தொடங்குவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். கடன் வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும். உற்பத்தி செய்த பண்டங்களை சந்தைபடுத்துவதற்கான வசதிகளையும் செய்து தர வேண்டும்.

2. **ஊரக வேலைத்திட்டம்:**
சாலைவசதி, வடிகால்கள், கால்வாய்கள் தோண்டும் பணிகள் போன்ற ஊரக சமுதாய ஆக்கப்பணிகள் செய்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை திட்டமிட்டு வேளாண் பருவகாலம் அல்லாத நேரங்களில் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வேலையற்றவர்களுக்கு ஆக்கப்பூர்வமான வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம்.

3. **நீர்ப்பாசன வசதிகள்**:

போதிய மழையாளவு இல்லாததால் நீர்ப்பாசன வசதியினை பயன்படுத்தி பலவகை பயிர்களை பயிர் செய்யும் முறையினை கையாள வேண்டும். தீவிர பயிர்சாகுபடி முறைகளை அதிகரிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கான தேவை அதிகரிக்கும்.

4. **ஊரக தொழில் மயமாக்கல்**:

வேலைவாய்ப்பினை உருவாக்க ஊரக பகுதிகளில் புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும். இது புதிய துறைகளில் வேலைவாய்ப்பினையும் மற்றும் ஊரக மக்களின் அணுகுமுறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளின் ஈடுபடவேண்டும். தனியார்துறைக்கு இத்தகைய பொறுப்புகள் ஏதும் இல்லை.

5. **தொழில்நுட்ப கல்வி:**

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், வேலை வாய்ப்பு சார்ந்த படிப்புகளை உருவாக்கி அதன் மூலம் கற்ற இளைஞர்களை சுயமாக தொழில் துவக்க வழிவகை செய்ய வேண்டும்.

# ஊரக தொழிற்சாலைகள்

ஊரக பகுதிகளில், ஊரக மக்களால் நடத்தப்படும் அனைத்து தொழிற்சாலைகளும் ஊரக தொழிற்சாலைகள் ஆகும். உள்ளூரில் கிடைக்கும் கச்சாப் பொருட்கள், திறன்கள் மற்றும் சிறிய அளவிலான முதலீடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இத்தொழிற்சாலைகள் அமைகின்றன. ஊரக தொழிற்சாலைகள் பலவகைப்படும். அவை

1. குடிசைத்தொழில்கள்
2. ஊரக தொழில்கள்
3. சிறு தொழில்கள்
4. குறுந்தொழில்கள் மற்றும்
5. வேளாண் சார்ந்த தொழில்கள்

**குடிசைத் தொழில்கள்:**

பொதுவாக குடிசைத் தொழில்கள் விவசாயத்தையே சார்ந்துள்ளன. இதன் மூலம் ஊரக மக்கள் முழு நேர மற்றும் பகுதிநேர வேலைவாய்ப்பினை பெறுகிறார்கள்.

**குடிசைத் தொழில்களின் முக்கிய சிறப்பியல்கள்**

1. கைவினை தொழிலாளர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் வீட்டிலேயே குடும்ப வருமானத்திற்காக பொருட்களை தயாரிக்கின்றனர். வேறு ஒரு நிரந்தர பணியினை செய்து கொண்டே குடிசைத் தொழிலை மேற்கொள்பவர்களும் உள்ளனர்.

2. குடிசைத்தொழிலில் உழைக்க வெளியிலிருந்து நபர்களை அமர்த்துவதில்லை. பொதுவாக குடும்ப உறுப்பினர்களே தேவையான உழைப்பினை தருகின்றனர்.

3. குடிசைத்தொழில்கள் பாரம்பரியமானது மற்றும் பரம்பரைபரம்பரையாகவும் செய்துவரும் தொழிலாகும்.

4. மின்சாரத்தின் உபயோகமின்றி தயாரிக்கப்படுகின்றன அல்லது குறைந்த அளவு மின்சாரம் உபயோகப்படுத்தப்படுகின்றது.

5. வழக்கமாக உள்ளூர் சந்தையிலேயே பொருட்கள் விற்கப்படுகின்றன. பொதுவாக பிற தொழிற்சாலைக்களுக்கு தேவையான உதிரிபாகங்களை வழங்குகின்றன.

பாய், கயிறு திரித்தல் மற்றும் கூரை முடைதல் ஆகியன உதாரணங்களாகும். இந்தியாவின் முதன்மை குடிசைத் தொழிலாக விளங்குபவை கைத்தறி, நெசவு (பருத்தி, பட்டு, சணல் முதலியன) மட்பாண்டம் செய்தல், சலவை சோப்பு தயாரித்தல், சங்கு தொழில், கைகளால் காகிதம் தயாரித்தல், கொம்பு பொத்தான், முத்துச் சிப்பி பொத்தான், வீட்டு உபயோகக் கருவிகள் செய்தல், பீட்டு மற்றும் சாவி தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

**கிராமத் தொழிற்சாலைகள்:**

கிராமத் தொழிற்சாலைகள் இயற்கை பராம்பரியமானது மற்றும் உள்ளூர் மூலப் பொருள்களை சார்ந்தது. அவை உள்ளூர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. கிராமத் தொழிற்சாலைகளுக்கு எடுத்துக்காட்டு சர்க்கரை மற்றும் வெல்லம் தயாரித்தல், பிரம்பு மற்றும் மூங்கில் கூடை செய்தல், காலணி தயாரித்தல் மட்பாண்டங்கள் மற்றும் தோல் பதனிடுதல் முதலியன. இவை அனைத்தும் குடிசைத் தொழில்கள் போன்றே அமைந்துள்ளன.

**சிறுதொழில்கள் (SSIs):**

நகர்புற மையங்களுக்கு அருகிலேயே பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ளன. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அங்காடிகளுக்கு பண்டங்களை உற்பத்தி செய்கின்றன.

சிறுதொழில் நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டு: விளையாட்டு உபகரணங்கள் தயாரித்தல், சோப்பு தயாரித்தல், மின் விசிறி தயாரித்தல், காலணிகள் தயாரித்தல், தையல் இயந்திரங்கள் மற்றும் தைத்தறி நெசவு உற்பத்தி முதலியன ஆகும்.

SSIs என்பது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) ஆகும். குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிச் சட்டம் 20065-ன் படி இவை வகைப்படுத்தப்படுகின்றன. இச்சட்டத்தின்படி உற்பத்தி தொழிற்சாலைகள் முதலீட்டின் அடிப்படையிலும், சேவை சார்ந்த தொழிற்சாலைகள் கருவிகள் மீதான முதலீட்டின் அடிப்படையிலும் பிரிக்கப்படுகின்றன.

**வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள்:**

வேளாண் உற்பத்தி பண்டங்களை நுகர்வுக்குரிய பொருட்களாக மாற்றுகின்ற பணியில் வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகள் ஈடுபடுகின்றன. வேளாண் சார்ந்த தொழில்கள் குடிசைத்தொழில், சிறுதொழில் மற்றும் ஆலைத்தொழிலாகவும் உள்ளன. நிரந்தர பணியில் அதிக அளவு பணியாளர்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிவதால் அதனருகிலேயே குடியேற்றங்கள் பெருகுகின்றன. எ.கா. ஐவுளி தொழிற்சாலை, சர்க்கரை ஆலை, காகித ஆலை, தாவர எண்ணெய் ஆலை, தேயிலை மற்றும் காபி தொழிற்சாலைகள்.

# ஊரக கடன்சுமை

ஊரக கடன்சுமை என்பது கிராம மக்கள் குறிப்பிட்ட காலத்தில் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இயலாமல் கடனின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்லும் நிலையைக் குறிக்கும். இந்தியாவின் நிதி கட்டமைப்பு பலவீனமாக இருப்பதனால் உதவி தேவைப்படும் விவசாயிகள், நிலமற்ற விவசாயிகள் மற்றும் வேளாண் கூலி தொழிலாளர்களின் கடன்சுமை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனால் குறைந்த வாழ்க்கைத் தரம், குறைந்த உற்பத்தித் திறன், தற்கொலைகள் போன்ற தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

வேளாண்மை செய்யவும், வேளாண்மை இல்லாத காலங்களில் குடும்ப செலவிற்காகவும், கருவிகள் வாங்குவதற்காகவும், குடும்பவிழா கொண்டாட்டங்கள், மதுபான நுகர்வு மற்றும் மருத்துவச் செலவு போன்ற காரணங்களுக்காகவும் வரம்பின்றி விவசாயிகள் கடன் பெறுகின்றனர். வருமானம் குறைவாக உள்ளதால் அவர்கள் பெற்ற கடன்களையும், வட்டியையும் திருப்பி செலுத்த இயலாத நிலையில் கிராம மக்கள் உள்ளனர்.

| |
|---|
| ”இந்தியாவில் 2015 ஆம் ஆண்டு சமூக பொருளாதார மற்றும் சாதி ரீதியான கணக்கீட்டடின்படி, 73% மக்கள் ஊரக பகுதிகளில் வசிக்கின்றனர். இதில் 18.5% மக்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், 11% மக்கள் பழங்குடியினர். |

தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பு (NSSO, 2002 – 2003) புள்ளிவிவரப்படி 30% ஏழைகள் மட்டுமே அரசுடமை வங்கிகளில் கடன் பெறுகின்றனர். அகில இந்திய கடன் மற்றும் முதலீட்டு ஆயிவு (AIDIS 2002) – ன் படி 1991 – ல் 66.3% ஆக இருந்த அமைப்புக் கடன் 2002-ல் 57.1% ஆக குறைந்தது. இந்தக் குறைவு அமைப்புசாரா கடன்களின் அதிகரிப்பை காட்டுகிறது (RBI 2006)

**ஊரக கடன் சுமைகளின் இயல்புகள்:**

இந்தியாவில் ஏறக்குறைய 4ல் 3 பகுதி ஊரக குடும்பங்கள் கடனில் மூழ்கி உள்ளனர். சிறு விவசாயிகளுக்கு கடன் சுமை அதிகம். விவசாய தொழிலாளர்கள் மற்ற தொழிலாளர்களைக் காட்டிலும் மிகுந்த கடனாளிகளாக உள்ளனர். பெரும்பாலான கடன்கள் குறுகிய கால கடன்கள் மற்றும் உற்பத்தி இயல்பற்றவை. அதிக வட்டிக்கு கடன் வாங்குபவர்களின் சதவிகிதமே அதிகமாக உள்ளது. பெரும்பான்மையான கிராம மக்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்தும், அதிக வட்டிக்கு பணம் கொடுப்பவர்களிடமிருந்தும் கடன் பெறுகிறார்கள்.

**ஊரக கடன்களுக்கான காரணங்கள்:**

ஊரக கடன்களுக்கான காரணங்கள் பின்வருமாறு

1. **விவசாயிகளின் ஏழ்மை நிலை:**

   வறுமைகொடும் சூழலானது நுகர்விற்காகவும், விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்காகவும் மற்றும் குடும்பவிழாக்களுக்காவும் விவசாயிகளை கடன் பெறத் தூண்டுகிறது. ஏழ்மை நிலை, கடன் மற்றும் கடனுக்கான அதிக வட்டி முதலியன விவசாயிகளைக் கடன் கொடுப்பவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறது.

2. **பருவமழை பொய்த்தல்**:

   அடிக்கடி பருவமழை பொய்த்துப் போவது விவசாயிகளுக்கு சாபமாக அமைகிறது. இயற்கை பொய்த்துப் போவதால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். ஆதலால் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இயலாமல் அவதிப்படுகின்றனர். விவசாயம் எப்போது சிறக்கும், கடன்களை அடைக்கலாமென அவர்களால் கணிக்க முடியவில்லை.

3. **வழக்குகள்:**

நிலங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் அதற்காக செலவிட அதிக கடன் பெறுகிறார்கள். அவர்களின் கல்வியறிவின்மையாலும் அறியாமையாலும் வழக்குகள் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு அவர்கள் சேமிப்பு மற்றும் சொத்துக்கள் அழிக்கப்படுகிறது.

4. **வட்டிக்கு கடன் தருவோர் மற்றும் அதிக வட்டி வீதம்:**

உள்ளூரில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் அதிக வட்டி வசூலித்தல் மற்றும் அசலுடன் வட்டியைச் சேர்த்து அதிகரித்தக்கொண்டே செல்வதால் விவசாயிகள் கடனிலேயே மூழ்கும் நிலை உள்ளது.

**ஊரக கடன்களை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

ஊரக கடன்களைத் தீர்ப்பதற்கு பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை வட்டிக்கு கடன் கொடுப்பவர்களை ஒழுங்குபடுத்துதல், ஊரக வங்கிகளை மேம்படுத்துதல், வட்டார ஊரக வங்கிகள் (RRBs) தொடங்குதல், நுண்கடன்கள் வழங்குதல், சுய உதவிக் குழுக்களை அமைத்தல் (SHGs), தொடக்க கூட்டுறவு வங்கிகள் மற்றும் நில வங்கிகள் தொடங்குதல், பயிர் கடன் வழங்குதல், முன்னோடி வங்கித்திட்டங்கள், சிறிய அலகு முன்னேற்ற மற்றும் மறு நிதியளிப்பு முகவர் வங்கி (MUDRA) தொடங்குதல், துணை தொழில்களை உருவாக்குதல், விவசாயம் சாரா தொழில்களை உருவாக்குதல், திறன் மேம்பாடு பயிற்சிகள் அளித்தல், இருப்பினும் ஏழைகள் மற்றும் சுய உதவிக்குழுவினருக்கு வட்டி வீதங்கள் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் வசதிமிக்கவர்களுக்கு கிடைப்பதைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. எடுத்துக்காட்டாக மகிழ்வுந்துக்கான கடனைவிட கல்விக்கடன் வட்டி அதிகமாக உள்ளது.

**வட்டார ஊரக வங்கிகள் (RRBs):**

இந்திய அரசாங்கம் 1975 ஆம் ஆண்டு ஊரக வங்கிகளின் செயல்பாடுகள் குறித்து ஆராய, ஊரக வங்கிகளில் பணிபுரிந்தவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி, வட்டார ஊரக வங்கிகள் (Regional Rurual Banks) செயல்படுத்தப்பட்டன. சிறு மற்றும் குறு விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள், கிராம கைவினைஞர்கள் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு கடன் மற்றும் பிற உதவிகளை வழங்குவதன் மூலம் ஊரகப் பொருளாதாரம் மேம்பாடு அடைய வட்டார ஊரக வங்கிகள் பரிந்துரைக்கப்பட்டன. மத்திய மாநில அரசுகள் மற்றும் வணிக வங்கிகளின் கூட்டு முயற்சியால் உருவானதே வட்டார ஊரக வங்கிகள் ஆகும். தற்போது இந்தியாவில் 64 வட்டார ஊரக வங்கிகள் உள்ளன. பொருளாதாரத்தில் நலிவடைந்தோருக்கு மட்டுமே RRBs – கடன் வழங்குகிறது. மற்றும் வங்கியின் வட்டி வீதமானது கூட்டுறவு சங்கங்களின் வட்டி வீதத்தைப் போல் இருக்கும்.

## குறுநிதி (Micro Finance):

குறுநிதி என்பது குறுகடன்களைக் குறிக்கும். இந்த நிதிச்சேவையானது கடன்கள், சேமிப்புகள். தொழில் முனைவோர்க்கான காப்பீடு வசதிகள், பாரம்பரிய மூலதன ஆதாரம் இல்லாத சிறு தொழில் முனைவோர் ஆகியோர்க்கு வங்கி அல்லது முதலீட்டாளர் போல செயல்படுவதாகும். சிறுதொழில்புரிவோருக்கு தேவையான நிதியை சிறுதொழில்புரிவோருக்கு தேவையான நிதியை வழங்கி அவர்களை தொழில் அல்லது வணிகத்தில் முதலீடு செய்யவைப்பதே இதன் நோக்கமாகும்.

குறு நிதியானது குறுங்கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இதில் சிறிய, இலாப நோக்கமில்லாத நிறுவனங்களிலிருந்து பெரிய வங்கிகள் வரை அடங்கும். அரசு சாராத நிறுவனங்கள் (NGOs) இவ்வகைக் கடன் வழங்குவதில் முன்னோடியாக விளங்குகின்றன. இந்தியாவில் இந்த குறுங்கடன் வழங்கும் முறைகள் கடந்த 20 வருடங்களாக அதிக வளர்ச்சியடைந்துள்ளன. இந்தியாவில் 2009 ஆம் ஆண்டில் குறு கடன் வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 150 ஆக இருந்தது.

**சுய உதவிக் குழுக்கள்:**

"சுயஉதவிக்குழு" என்பது ஓரே மாதிரியான சமூக பொருளாதாரப் பின்னணி கொண்ட 20 பெண்கள் வரை (சராசரியாக 14 பேர்) கொண்ட தன்னிச்சையான அமைப்பு ஆகும். இவற்றின் உறுப்பினர்கள் சுயஉதவி மற்றும் பரஸ்பர உதவி மூலம் பொதுவான பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள முயல்கின்றனர். சுயஉதவிக் குழுக்கள் உறுப்பினர்களின் சிறு சேமிப்பை அதிகரிக்க உதவுகின்றன. அவர்கள் மாதந்தோறும் சிறுதொகையான ரூ 10 முதல் ரூ 50 ரூபாய் வரை வங்கியில் சேமிக்கின்றனர். தொடர்ந்து இவ்வாறு 6 மாதங்கள் சேமித்த பிறகு சிறிய தொகைகளாக குழுவிலுள்ள தேவைப்படும் உறுப்பினர்களுக்கு வட்டிக்கு வழங்குகின்றனர். செயல்பாடுகளை வைத்து சுயஉதவிக் குழுக்கள் வங்கி இணைப்பு திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள் (SBLP). இது 1992 ல் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், ஊரக ஏழை மக்களை இணைப்பதற்கும் மற்றும் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும், செயல்பாடுகளை திட்டமிடுவதற்கும், உள்கட்டமைப்பு வசதியை உருவாக்குவதற்கும், தொழில்நுட்ப வசதி, கடன் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகிய அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும் உருவாக்கப்பட்ட நல்ல திட்டமாகும்.

> 2009 – 10 ஆம் ஆண்டின்படி 1.59 மில்லியன் புதிய சுய உதவிக் குழுக்கள் இக்கடன் பெறும் வசதியோடு இணைக்கப்பட்டன. மற்றும் வங்கிகள் மூலம் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 14,453 கோடி கடனாக வழங்கப்பட்டது. 2010 மார்ச் முடிவில் 6.95 மில்லியன் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் சேமிப்பு கணக்கை வைத்திருந்தனர்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, வங்கிக் கடன் மற்றும் அரசாங்க மானியம் வழங்கி வருவாய் ஆதாரங்களை பெருக்கி, பயனாளிகளை ஏழ்மை கோட்டிற்கு மேல் முன்னேற்றமடைய செய்வதாகும். NABARD வங்கியின் கணக்கீட்டின்படி 2.2 மில்லியன் சுய உதவிக் குழுக்கள் இந்தியாவில் உள்ளன. அதில் 33 மில்லியன் உறுப்பினர்கள் வங்கி இணைப்புத் திட்டத்தின் கீழ் வங்கிக் கடன் பெற்றுள்ளனர். SHGs வங்கி இணைப்புத் திட்டம் தொடக்கம் முதலே சில மாநிலங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, தென் மாநிலங்களான ஆந்திரபிரதேசம், தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

வங்கிகள் அதிக நிதியினை திரட்ட சுயஉதவிக் குழுக்கள் உதவின. வங்கிகள் வாகன கடனுக்கான வட்டி வீதத்தை விட சுயஉதவிக் குழுக்கான வட்டி வீதம் அதிகமாக உள்ளது.

> NABARD ன் SHG வங்கி இணைப்பு திட்டத்தின்படி உறுப்பினர்கள் கடனை சரியாக திருப்பி செலுத்திய பதிவை வைத்திருக்கும் சுய உதவிக் குழுக்கள் வங்கியில் கடன் பெற இயலும். 2005- 2006 ஆண்டில் தென் மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகியவை வெற்றிகரமாக செயல்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 60மூ சுய உதவிக் குழுக்கள் வங்கு இணைப்பு கடன் வசதியை பெற்றுள்ளன. (தருணா மற்றும் யாதவ், 2016)

**சுய உதவிக் குழுக்களின் முக்கிய இயல்புகள்:**

1. சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்கள். குழுவினரிடையே உள்ள புரிந்துணர்வின் அடிப்படையில் உறுப்பினர்களை சுயமாகத் தெர்ந்தெடுக்கின்றனர்.

2. பெரும்பாலான சுயஉதவிக் குழுக்கள் 10 முதல் 20 பெண் உறுப்பினர்களைக் கொண்டவை.

3. SHGs தமக்கென்று வடிவமைக்கப்பட்டச் சட்டங்களையும், விதிமுறைகளையும் கொண்டுள்ளன. தொடர்ச்சியாக கூட்டம் நடத்துதல் மற்றும் முறையாக பதிவேடுகளைப் பராமரித்தல், சேமிப்பு மற்றும் கடன் வழங்குதல் ஆகிய ஒழுங்கினை அவை கடைபிடிக்கின்றன.

4. SHG – க்கள் முழு பங்கேற்பினை அளித்து, அனைவரும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதுடன் தங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்கின்றனர்.

**சிறிய அலகு முன்னேற்றம் மற்றும் மறுநிதியளிக்கும் முகவர் வங்கி (MUDRA):**
இது ஒரு பொதுத்துறை சார்ந்த நிதி நிறுவனம் ஆகும். இது சிறு, குறு நிதி நிறுவனங்களுக்கும், வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கும் மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் (MSMEs) கடன் வழங்குகிறது. இது ஏப்ரல் 8, 2015 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

**முத்ரா வங்கியின் முதன்மை நோக்கங்கள்:**

1. குறுங்கடன் வாங்குபவரையும், பெறுபவரையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் குறுங்கடன் வழங்குவதில் நிலைத்த தன்மையை ஏற்படுத்தல்.

2. சிறு தொழில் புரிபவர்கள், சில்லறை வியாபாரிகள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்கு கடன் வழங்கும் சிறு நிதி நிறுவனங்களுக்கு, மேலும் நிதி மற்றும் கடன் வசதியை ஏற்படுத்தி தருதல்.

3. அனைத்து சிறு நிதி வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அதன் செயல்பாடுகளை தரம் நிர்ணயம் செய்தல் மற்றும் முறையான ஒப்புதல் வழங்குதல்.

4. சிறு தொழில்களை மேற்கொள்வதற்கு வழங்கப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் வழங்குவதற்காக கடன் உத்திரவாத திட்டம் (CGS) ஆரம்பித்தல்.

5. கடன் வழங்குதல், கடன் பெறுதல் மற்றும் பகிர்ந்தளிக்கப்படும் மூலதனத்தை மேற்பார்வையிடல் ஆகியவற்றுக்கு பொருத்தமான தொழில்நுட்ப உதவிகளை அறிமுகப்படுத்துதல்.

**ஊரக நலம் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம்:**

சிறந்த வாழ்வினை வாழ்வதற்கு உடல்நலம் மிக முக்கியம்.

இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான ஏழை மக்கள் வாழ்வாதாரத்திற்காகவும், உடல் நலத்திற்காகவும், நம்பிக்கையற்றுப் போராடி தோற்று வருகின்றனர். இந்திய ஊரகப் பகுதி மக்கள் பல்வேறு தொற்று நோய்களான பெரியம்மை, காலரா, மலேரியா, டைபாய்டு, டெங்கு, சிக்கன்குன்யா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். போதிய மருத்துவ வசதியின்மை, அறியாமை மற்றும் ஏழ்மை நிலையே இதற்கு காரணம் ஆகும். தங்கள்

மக்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் வழங்குதலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலும் மற்றும் மக்களின் உடல்நலத்தை மேம்படுத்துதலுமே அரசின் முதன்மையான கடமையாகும் என்று இந்திய அரசியலமைப்பு தெளிவாக வலியுறுத்துகிறது.

இந்த அரசியலமைப்பின் வழிகாட்டுதலை நிறைவேற்றுவதற்காக ஊட்டச்சத்தினை மேம்படுத்துவதற்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவற்றில், இணை உணவு வழங்கும் திட்டங்களான மதிய உணவு திட்டம், செய்தித்தாள் மற்றும் தொலைக்காட்சி வாயிலாக ஊட்டச்சத்து கல்வி, உணவில் அயோடின் உப்பினை சேர்ப்பதை வலியுறுத்தல் போன்றவை ஆகும். இந்தியாவைவிட இலங்கை உடல் நலதரத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்தியாவை பொறுத்தவரையில் கேரளா மாநிலம் தமிழ்நாட்டை விட சிறப்பாக உள்ளது.

**தேசிய ஊரக நல அமைப்பு:**

தேசிய ஊரக நல அமைப்பு (NRHM) 12, ஏப்ரல் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நலிவடைந்த ஊரக மக்களுக்காக குறைந்த விலையில் எளிதில் பெறக்கூடிய தரமான ஆரோக்கிய வசதிகளை ஏற்படுத்தி தருவது இதன் நோக்கம். உடல் நலத்தை தீர்மானிக்கும் காரணிகளான குடிநீர், சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்து சமூக மற்றும் பாலின சமுத்துவம் சமூகத்தைப் பரவலாக்கப்பட, நல விநியோக முறையை ஏற்படுத்துவதே இந்த அமைப்பின் மிக முக்கியமான நோக்கமாகும்.

இனப்பெருக்கம், தாய்மைப்பேறு, சிசு மற்றும் குழந்தை மற்றும் வளர் இளம் பருவத்தினரின் (RMNCH+A) நலனுக்காக பல்வேறு பணிகளை NRHM மேற்கொள்கிறது. மகப்பேறு மற்றும் குழந்தை நலன் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்குகிறது.

**ஊரக உள்கட்டமைப்பு:**
**ஊரக வீட்டுவசதி**

வீடு என்பது ஒவ்வொரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகும். சிறந்த வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும். இப்பொழுது அனைவரும் தனிக் குடும்பமாக வசிக்க முனைவதால் வீட்டுமனை, வீடுகள் பெறுவதில் பிரச்சனைகள் அதிகரிக்கின்றது. வீடுகளை ஏற்படுத்தி தருவது என்பது வீட்டினை வழங்குவது மட்டுமின்றி முறையான குடிநீர் வசதி, நல்ல சுகாதார வசதி, முறைப்படி கழிவுகளை அப்புறப்படுத்தும் வழி வகைகள் போன்றவற்றையும் ஏற்படுத்தித்தருவதாகும்.

மனை பெறுவதில் உள்ள பிரச்சனைகளை தீர்க்க குறைந்த செலவு தொழில்நுட்பத்தில் வீடு கட்டுவது, போதுமான வீட்டுக் கடன் வசதியை ஏற்படுத்தித் தருவது, மற்றும் ஊரக பகுதியிலுள்ள நிலமற்ற தொழிலாளர்களுக்கு வீட்டு மனையை அளிப்பது போன்ற வழிமுறைகளின் மூலம் வீட்டுமனை பெறுவதில் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்கலாம்.

**ஊரக அங்காடி:**

ஊரகப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை வாங்கவோ அல்லது விற்கவோ ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பு ஊரக அங்காடியாகும். நகர்ப்புறம் மற்றும் இதர பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட இதர பொருட்கள் ஆகியவற்றை வாங்கவும் ஊரக அங்காடிகள் பயன்படுகின்றன.

விவசாயிகளிடம் பேரம் பேசும் ஆற்றல் குறைவு. இடைத்தரகர்கள், அங்காடி அமைப்பில் காணப்படும் குறைபாடுகள், சேமிப்பு கிடங்கு வசதிகள் பற்றாக்குறை, போக்குவரத்து வசதிகள் குறைவு, பண்டங்களை தரம் பிரித்தல் இன்மை, வேளாண் சார்ந்த தகவல் பற்றாக்குறை மற்றும் மோசமான அங்காடி அமைப்பு முறைகள் முதலியன ஊரக அங்காடியில் காணப்படும் குறைபாடுகளாகும்.

NSSO புள்ளி விவரத்தின் படி 38 சதவீத குடும்பங்கள் ஓர் அறையையே வீடாகக் கொண்டும் மற்றொரு 36 சதவீத குடும்பங்கள் இரண்டு அறைகள் கொண்ட வீட்டிலும் வாழ்கின்றனர்.

இந்தியாவின் ஊரக சாலை பகுதி 26.50 இலட்சம் கி.மீ ஆகும். இதில் 13.5 சதவீதம் பகுதிகளில் மட்டுமே சாலைகள் போடப்பட்டுள்ளன.

இந்தியாவின் சாலை தொடர்பு வசதி அமைப்புகள் உலகிலேயே பெரிய அமைப்புகளுள் ஒன்றாகும். 1950 – 51ல் 4 இலட்சம் கி.மீட்டர் நீளமாக இருந்த இந்தியச் சாலைகளின் நீளம் தற்போது 2018 – ல் 34 இலட்சம் கி.மீட்டர் ஆகும்.

**ஊரக சாலைகள்:**

போக்குவரத்து முறைகளில் சாலை போக்குவரத்து மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஊரக பொருளாதாரத்தில் ஊரக சாலைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஊரக பகுதிகளில் நன்கு அமைக்கப்பட்ட சாலைகள், தொலைதூர கிராமங்களை பிற நகர்புற மையங்களோடு இணைப்பதற்கும், வேளாண் இடுபொருட்களின் போக்குவரத்து செலவைக் குறைப்பதற்கும், ஊரக உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் உதவுகின்றன.

ஊரக விவசாயிகளின் உற்பத்தியை நகர்ப்புற அங்காடிகளில் சந்தைப்படுத்துவதற்கும், தொலைதூர அங்காடிகளுக்கு செல்வதற்கும், பிற பணிகளை பயன்படுத்திக் கொள்வதற்கும் உதவுகிறது.

**ஊரக மின்மயமாக்கல்:**

ஊரக மின்மயமாக்குதல் என்பது ஊரக பகுதிகளுக்கு மின் வசதியை ஏற்படுத்தித்தருவதாகும்.

**ஊரக மின்மயமாக்குதலின் முக்கிய நோக்கங்கள்:**

வேளாண் செயல்பாடுகளுக்கு மின் வசதியை அளிப்பதன் மூலம் வேளாண் உற்பத்தித் திறனை பெருக்குவது பயிரிடும் நிலப்பரப்பை அதிகரிப்பது, ஊரக தொழிற்சாலைகளை மேம்படுத்துவது மற்றும் ஊரக பகுதிகளுக்கு மின்வசதியை ஏற்படுத்துதல் ஆகியன ஆகும். வேளாண் உற்பத்தியை அதிகப்படுத்த இந்தியாவின் பல மாநிலங்களில் மின்வசதி இலவசமாக வழங்கப்படுகிறது மற்றும் ஊரக பகுதிகளில் மின் கட்டண வீதம் மிகக் குறைவாக உள்ளது.

2017 மார்ச் முடிவில் இந்தியாவின் 99.25 சதவீதம் கிராமங்கள் முழுமையாக மின் தொடர்பைப் பெற்றிருந்தன. 31.03.2017 ன் படி கீழ்க்கண்ட 20 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் முழுமையான அதாவது 100 சதவீத மின்வசதி அடையப்பட்டுள்ளது அவை சண்டிகர், டெல்லி, ஹரியானா, ஹிமாச்சலம் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் டாமன் மற்றும் டையூ, தாத்ரா மற்றும் நாகர் ஹவேளி, கோவா, குஜராத், மாஹாராஷ்டிரா, ஆந்திரபிரதேசம். கேரளா, லட்சத்தீவு, புதுச்சேரி, தமிழ்நாடு, தெலுங்கானா, அந்தோமான் நிக்கோபர் தீவுகள், சிக்கிம் மற்றும் திரிபுரா ஆகியவை ஆகும்.

இந்தியாவில் ஊரக பகுதிகளில் மின்மயமாக்கிகளைப் பாதிக்கும் காரணிகள்:

1. **நிதிப் பற்றாக்குறை:**
   மின்சாரம் உற்பத்திக்கும் அதனை விநியோகிப்பதற்கும் அதிக செலவு ஏற்படுகிறது இதற்கான நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவு.

2. **மாநிலங்களுக்குகிடையேயுள்ள பிரச்சனைகள்:**

   மின் திட்டங்களை நிர்வகிப்பதில் மாநிலங்களுக்குகிடையே பிரச்சனைகள் நிலவுவதால் மின்சார விநியோகம் பாதிக்கப்படுகிறது.

3. **சீரற்ற நிலப்பரப்பு:**
   கிராமப்புற பகுதிகள் சமமற்று இருப்பதால் (குண்டுகள், மலைகள்) முறையான மின் இணைப்பு வழங்வது கடினமாகவும், புதிதாத மின் இணைப்பு கம்பிகள் அமைப்பதற்கு கடினமாகவும் அதிக செலவும் ஆகிறது.

4. **மின் அனுப்புகையில் ஏற்படும் இழப்பு:**
   ஊரக பகுதிகளுக்கு மின் அனுப்புகையில் ஏற்படும் இழப்பானது 25 சதவீதம் ஆகும்.

5. **மின் திருட்டு:**

   வசதி படைத்த மக்கள் முறையற்ற வழிகளில் மின்சாரத்தைப் பயன்படுத்துதல் வேறு பயன்பாட்டுக்கு மாற்றுதல் போன்றவைகள் ஊரக பகுதிகளில் மின்மயமாக்குதலுக்கு தடையாக உள்ளன.

**ஊரக முன்னேற்றத்திற்கான தேவைகள்:**

**ஸ்லேட்டரின் கிராமங்கள்:**
கிரில்பெர்ட் ஸ்லேட்டர் என்பவர் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் முதல் பொருளாதார பேராசிரியர். இவர் தனது மாணவர்களைக் கொண்டு சில கிராமங்களை ஆய்வு செய்தார். வடமலைபுரம் (ராமநாதபுரம்), கங்கை கொண்டான் (திருநெல்வேலி), பாலக்குறிச்சி (தஞ்சாவூர்) மற்றும் துசி (வட ஆற்காடு) ஆகிய தமிழ்நாட்டில் உள்ள சில கிராமங்களை ஆய்வு செய்து 1918-ஆம் ஆண்டு சில தென்னிந்திய கிராமங்கள் என்ற புத்தகத்தை வெளியிட்டார். இதனை தொடர்ந்து பல்வேறு ஆராய்ச்சி குழுவினரும் இதனை 1930, 1950 மற்றும் 1960-ஆம் ஆண்டுகளில் ஆய்வு செய்தனர். இதில் இரண்டு கிராமங்கள் மட்டும் 21-ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய கால கட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டதாகும். இந்த மறு ஆய்வில் முக்கியமான வரலாற்றுப் பதிவுகள் காணப்படுகின்றன. இந்த கிராமங்களை ஆய்வு செய்யும் பிற ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது. மற்றும் பிற்கால ஆராய்ச்சியாளர்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறது. இந்த ஆய்வின் மூலம் ஊரக பகுதிகளில் ஏற்படும் மாற்றங்களை பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

1. ஊரக உண்மை வருமானம் உருவாக்கும் முயற்சிகள் தேவை. வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருமானம் உண்டாக்குதல், உரக தொழில்மயமாக்குதல், உடல்நல மற்றும் ஊட்டச்சத்து கல்வி வசதி, வீட்டு வசதி மற்றும் பல்வேறு மக்கள் நல பணிகளை மேற்கொள்வதற்கு முயற்சிகள் தேவை.

2. அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக தேவைத் திட்டங்கள் மேம்படுத்துவதற்கு முதலீடுகளை அதிகரிக்க செய்தல் வேண்டும்.

3. தற்போதுள்ள பிரச்சனையை தீர்க்க ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்களை தீட்டுவதுடன் அதன் மூலம் நிலையான வளர்ச்சியினை பெறுவதற்கும் வழிவகுக்க வேண்டும்.

4. வளர்ச்சி திட்டங்களை வகுக்கும் போது ஊரக பகுதி மக்களின் பிரச்சனைகளை பற்றி அறிந்த நபர்களையோ அல்லது தலைவர்களையோ மற்றும் தொலை நோக்கு பார்வையுள்ள சிந்தனையாளர்களையோ கலந்தாலோசிக்க வேண்டும்.

# ஊரக பொருளாதாரம்

**முன்னுரை:**

ஊரக பொருளாதாரம் பொருளாதார கொள்கைகளை பயன்படுத்தி, ஊரக பகுதிகளை வளர்ச்சியடையச் செய்வதைக் குறிக்கிறது. ஊரக பகுதி என்பது நகரங்கள் மற்றும் மாநகரங்களுக்கு வெளியே அமைந்துள்ள பகுதி ஆகும். இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊரக பகுதிகளுக்கு அடிப்படை அலகாக அமைவது வருவாய் கிராமம் ஆகும். ஊரக பொருளாதாரம் என்பது கிராமங்களையும், ஊரக சமுதாயம் என்பது கிராமங்களில் வாழும் மக்களையும் குறிக்கும். ஊரக பகுதிகளில் பல பிரச்சனைகள் உள்ளன. அவை வேளாண்மையில் பின் தங்கிய நிலை, குறைந்த வருமானம், குறைவான வேலைவாய்ப்புகள், வறுமை, குறைந்த உள்கட்டமைப்பு வசதிகள், குறைவான எழுத்தறிவு, குறைவான தொழிலாளர் உற்பத்தித்திறன், வேளாண் பொருட்களுக்கு குறைந்த விலை, கடன்கள் ஆகியவை சிலவாகும். உபரி தொழிலாளர்கள், அதிக மக்கள் தொகை, அதிக அளவு இடப்பெயர்ச்சி, இயற்கை மற்றும் இயற்கை வளங்களை அதிகமாக சார்ந்திருத்தல் ஆகியனவாகும். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, இந்தியாவில் 6,40,867 கிராமங்கள் உள்ளன. 121 கோடியாக உள்ள மொத்த மக்கள் தொகையில் 68.84 சதவீத மக்கள் ஊரகங்களில் வசிக்கின்றனர்.

**ஊரக பொருளாதாரத்தின் இயல்புகள்:**
**ஊரக பொருளாதாரத்தின் முக்கிய பண்புகளாவன:**

1. **ஊரகம் ஒரு நிறுவனம்:**

   கிராமம் என்பது முதன்மை நிறுவனமாக செயல்பட்டு, ஊரக சமுதாயத்தின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. ஊரக மக்கள் அங்கு வசிக்கும் பிறருடன் தம் மக்கள் என்று ஒருவருக்கொருவர் உணர்வு பூர்வமாகவும், ஒற்றுமையுடனும் இருப்பர்.

2. **வேளாண்மையை சார்ந்திருத்தல்:**
   ஊரக பொருளாதாரம் இயற்கையையும், வேளாண் நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது. வேளாண்மை மற்றும் அதனை சார்ந்த செயல்களே ஊரக மக்களின் முக்கிய தொழிலாகும்.

3. **ஊரக மக்களின் வாழ்க்கை முறை:**

   ஊரக மக்களின் வாழ்க்கை முறை மிக எளிமையானது. பொது பணிகளான கல்வி, வீட்டு வசதி, உடல் நலம் மற்றும் சுகாதாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, வங்கி செயல்பாடு, சாலைகள் மற்றும் அங்காடி வசதிகள் குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருக்கிறது. ஊரக மக்கள் மூடநம்பிக்கைகள் மற்றும் பாரம்பரிய கலாச்சார நடைமுறைகளை சார்ந்துள்ளனர். ஊரக பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத்தரம் ஏழ்மை நிலையிலும், பரிதாபகரமாகவும், உள்ளது. ஊரக மக்கள் உற்பத்தி முறைகளிலும், சமூக அமைப்பிலும். அரசியல் சூழலிலும் நலிவடைந்த மற்றும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். சமீப ஆண்டுகளில் மது அருந்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

4. **மக்கள் தொகை அடர்த்தி:**

   ஒரு சதுர கி.மீ நிலப்பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கை மக்கள் தொகை அடர்த்தி மிகவும் குறைவாகவும், வீடுகள் கிராமம் முழுக்க பரவிக் காணப்படுகின்றன.

5. **வேலைவாய்ப்பு:**

   வேலையின்மை, பருவகால வேலையின்மை மற்றும் குறை வேலையுடைமை ஆகியன கிராமப்புறங்களில் நிலவுகின்றன. வேலையின்மை என்பது தொழிலாளர்கள் வேலை செய்ய தகுதியும் விருப்பமும் இருந்தும் வேலை கிடைக்காமல் இருப்பது ஆகும். குறை

வேலையுடைமை என்பது மறைமுக வேலையின்மையைக் குறிக்கும். தேவைக்கு அதிகமாக மிகுதியான தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது மறைமுக வேலையின்மை. மறைமுக வேலையின்மை என்பது தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டாலும் உற்பத்தியளவு அதிகரிக்காத நிலையை குறிக்கும். இவ்விரண்டு சூழ்நிலைகளும் பொதுவாக கிராமப்புறங்களில் நிலவுகிறது.

6. **வறுமை:**
வறுமை என்பது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றை பூர்த்தி செய்ய முடியாத நிலையாகும். 2011 – 12 ன் மதிப்பீட்டின்படி ஊரகப் பகுதிகளில் சுமார் 22 கோடி மக்கள் ஏழையாகவும், வறுமைக் கோட்டிற்கு கீழும் வசிக்கின்றனர்.

7. **கடன் சுமைகள்:**
ஊரக மக்களின் அதிக கடன் சுமைக்கான காரணங்கள் வறுமையும், குறைவேலையுடைமையும், விவசாய நிலம் சார்ந்த மற்றும் நிலம் சாரா வேலைவாய்ப்புகளில் தேக்க நிலை, குறை ஊதிய வேலை, பருவகால உற்பத்தி, குறைந்த அங்காடி வசதிகள் போன்றவைகளாகும். புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் சர் மால்கம் டார்லிங் (1925) கூற்றுப்படி, ”ஓர் இந்திய உழவன் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறந்து அவன் சந்ததிக்கும் கடனையே விட்டுச் செல்கின்றான்”. முறையான கடன் வசதிகள் கிராமப் பகுதிகளில் கிடைக்காததால் அவர்கள் வட்டிக்கு பணம் தரும் உள்ளூர்வாசிகளை சார்ந்துள்ளனர். வட்டிக்குப் பணம் தருபவர்கள் கடன் பெற்ற கிராமங்களை அட்டையாக உறிஞ்சிவிடுகின்றனர். எனவே, கிராம மக்களை கடனில் மூழ்கி தற்கொலைக்கு ஆளாகின்றனர்.

8. **ஊரக வருமானம்:**
ஊரக பொருளாதாரம் ஊரக மக்களுக்கு போதுமான வருமானத்தை ஈட்டித்தரும் வேலைவாய்ப்புகளையோ, சுய வேலைவாய்ப்பு வாய்ப்புகளையோ தர இயலவில்லை. பெரும்பாலான தொழிலாளர்களும் மற்றும் திறமை வாய்ந்தவர்களும் மிகவும் குறை வேலையுடையவர்களாக இருக்கிறார்கள் இவர்கள் வருமானத்தை பெருக்குவதற்கான வாய்ப்பு குறைவு.

9. **சார்ந்திருத்தல்:**
ஊரகப்பகுதிகளில் வசிப்பவர்கள் நகரத்தில் வேலை செய்யும் தமது குடும்ப நபர்களின் வருவாய் மற்றும் சமூக நிதி உதவிகளையும் பெருமளவு சார்ந்துள்ளனர்.

10. **இரட்டைத் தன்மை:**
எதிரிடையான இரண்டு அம்சங்கள் நிலவுவதே இரட்டைத் தன்மை ஆகும். வளர்ந்த மற்றும் பின் தங்கிய நிலை அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத நிலை, பாரம்பரிய மற்றும் நவீன நிலை, ஒழுங்கு படுத்தப்பட்ட மற்றும் ஒழுங்கு படுத்தப்படா நிலை, ஏழை மற்றும் பணக்காரர், திறமைமிக்கவர் மற்றும் திறமையற்றவர் போன்ற முரண்பாடான சூழல்கள் ஊரக பகுதிகளில் நிலவுகின்றன.

11. **ஏற்றத்தாழ்வு:**

ஊரக பகுதிகளில் வருமானம், சொத்து மற்றும் செல்வம் ஆகியவற்றின் பகிர்வு ஊரக மக்களிடையே ஏற்றத்தாழ்வுடன் காணப்படுகிறது. சமூக, பொருளாதார அரசியல் மற்றும் வரலாற்றுக் காரணங்களினால் ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. நிலக்கிழார்களும் நில உரிமையாளர்களும் கிராமப்புற நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். நிலம், கால்நடை மற்றும் பிற சொத்துக்கள் சிலரிடம் மட்டுமே உள்ளது.

12. **குடிப்பெயர்ச்சி:**

ஊரக மக்கள் தமது வாழ்வாதாரத்திற்காக வேலை தேடி கிராமங்களிலிருந்து நகர்புறத்திற்கு இடம் பெயரும் சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இந்த நிலை நகரங்கள்

பெருகுவதற்குக் காரணமாகின்றன. பகைமை மற்றும் அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாமை, கிராம மக்களை நகர்புறத்திற்கு இடம் பெயர வைக்கிறது. ஒருபுறம் கிராமங்கள் காலியாகவும் மறுபுறம் நகரங்கள் நெரிசலாகவும் உள்ளன. இதையே ”இரட்டை நஞ்சாக்கல்” என சுமாசர் (Schumacher) குறிப்பிடுகிறார். தற்போதைய வளர்ச்சி வகை முறை அபாயகரமானது என்று அவரின் “சிறியது அழகு“ என்ற நூலில் விளக்குகிறார்.

**ஊரக மேம்பாடு : பொருள்:**

ஊரக மேம்பாடு என்பது ஊரக மக்களின் சமூக நலம் மற்றும் வாழும் சூழ்நிலையை மேம்படுத்துதல், போன்ற ஒட்டு மொத்த முன்னேற்றத்தைக் குறிப்பதாகும். உலக வங்கியின் கூற்றுப்படி, ”ஊரக மேம்பாடு என்பது குறிப்பிட்ட ஊரக மக்களின் பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கை முறையை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட உத்தி” ஆகும். சுருக்கமாக ஊரக வளர்ச்சி என்பது ஊரக பகுதிகள், ஊரக மக்கள், ஊரக வாழ்க்கை ஆகியவற்றை மேம்படுத்தும் முறையாகும்.

**ஊரக மேம்பாட்டிற்கான தேவை:**

இந்திய பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த மற்றும் முன்னேற்றத்திற்கு ஊரக மேம்பாடு என்பது மிக இன்றியமையாத ஒன்றாகும். அதற்கான காரணங்கள் பின்வருமாறு.

1. பெரும்பான்மையான மக்கள் கிராமபுறங்களில் வசிக்கின்றனர். அவர்களின் முன்னேற்றம் மற்றும் பங்களிப்பு நாட்டின் கட்டமைப்பு நடவடிக்கைகளில் துணை நிற்கின்றன. ஊரக பகுதியின் முன்னேற்றம் இன்றி நாட்டின் முன்னேற்றம் அமையாது.

2. நகர்புறத்திற்கு தேவையான குடிநீர், பால், உணவு மற்றும் கச்சா பொருட்கள் கிராமப்புறத்தில் இருந்து அளிக்கப்படுகின்றன. ஆகவே கிராமபுறங்களின் பின்தங்கிய நிலைமை நாட்டின் ஒட்டு மொத்த முன்னேற்றத்தை அடைவதற்கும் தடையாக அமைகிறது.

3. ஊரக மக்களுக்கு முறையான கல்வி, மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகளை அளிப்பதன் மூலம் நகர்புறங்களில் காணப்படும் பிச்சையெடுத்தல், குப்பை பொறுக்குதல், சாலையோர குடிசைவாசிகள் போன்ற மக்களின் பல்வேறு பிரச்சனைகளை தீர்க்கலாம்.

4. வேளாண்மை மற்றும் அதன் சார்புடைய தொழில்களை முன்னேற்றுவதன் மூலம், ஊரக பகுதிகளில் இலாபகரமான வேலைவாய்ப்புகளையும், ஒட்டுமொத்த உணவு உற்பத்தியையும் பெருக்க இயலும்.

5. கிராமங்களை முன்னேற்றுவதன் மூலம், வேலைவாய்ப்பை தேடி திறமைசாலிகள் இடம்பெயர்தல் மற்றும் கிராமங்களில் இருந்து நகர்புற பகுதிகளுக்கு குடிப்பெயர்ச்சி ஆகியவற்றை தடுக்கலாம்.

6. ஊரக பகுதிகளை முன்னேற்றுவதன் மூலம் பயன்படுத்தாத மற்றும் குறைவாக பயன்படுத்தி வரும் இயற்கை வளங்களை முழுமையாக பயன்படுத்த இயலும்.

7. கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு இடையேயுள்ள வேறுபாட்டினை குறைக்க முடியும். கிராமப்புறங்களில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை கிராமப்புறங்களில் ஏற்படுத்த வேண்டும். இதற்காக முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் - அவர்கள் ீருசுயு என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

8. மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI), மகளிர் வல்லமைக் குறியீடு (WEI), பாலின வேறுபாட்டுக் குறியீடு (GDI), இயல் தர வாழ்க்கைக் குறியீடு (PQLI), மொத்த தேசிய மகிழ்ச்சிக் குறியீடு (GNHI) போன்ற பொருளாதாரக் குறியீடுகளை மேம்படுத்துவதன் மூலம் உலக அரங்கில் இந்தியாவின் நிலையை மேம்படுத்த இயலும்.

**ஊரக பொருளாதாரத்தில் உள்ள பிரச்சனைகள்:**

ஊரக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பின்வருமாறு:

1. மக்கள் சார்ந்தவை
2. வேளாண்மை சார்ந்தவை
3. உள்கட்டமைப்பு வசதிகள் சார்ந்தவை
4. பொருளாதாரம் சார்ந்தவை
5. சமூக மற்றும் கலாச்சாரம் சார்ந்தவை
6. தலைமை சார்ந்தவை
7. நிர்வாகம் சார்ந்தவை

1. **மக்கள் தொடர்புடைய பிரச்சினை:**
எழுத்தறிவின்மை, போதிய தொழில்நுட்ப அறிவின்மை, நம்பிக்கை குறைவு, பற்றுகள் மற்றும் நம்பிக்கைகள் இவற்றை சார்ந்து வாழ்க்கைத்தரம் அமைதல் ஆகியன ஊரக மக்களின் பிரச்சினைகள்.

2. **வேளாண்மை சார்ந்த பிரச்சனைகள்:**
வேளாண்மை சார்ந்த பிரச்சனைகள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியது.
    1. எதிர்பார்த்த அளவில் விழிப்புணர்வு, வேளாண் அறிவு, திறன் மற்றும் மனப்போக்கு போன்றவை இன்மை
    2. உள்ளீடுகள் கிடைக்கப்பெறாமை
    3. அங்காடிப்படுத்தும் வசதிகள் குறைவு
    4. பற்றாக்குறையான பணியாளர்கள் மற்றும் சேவைகள்
    5. பன்முக திறன் கொண்ட பணியாளர்கள் இன்மை
    6. நிலங்கள் துண்டாடப்பட்டு சிறிது சிறிதாக இருத்தல்
    7. சிறு நிலங்கள் மற்றும் சிறு சிறு துண்டுகளாக்கப்பட்ட நிலவுடைமைகள்
    8. ஊரக பகுதிகளில் தங்கி பணியாற்றுவதற்கு போதுமான உள்ளகட்டமைப்பு வசதிகள் இன்மை
    9. பழமையான தொழில்நுட்ப முறைகள் மற்றும் நவீன தொழில் நுட்பங்களை குறைவாக பயன்படுத்துதல்
    10. குறைவான அரசு முதலீடு மற்றும் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருட்களுக்கு விலையை நிர்ணயம் செய்ய இயலாமை.

3. **உள்கட்டமைப்பு சார்ந்த பிரச்சனைகள்:**

ஊரக பகுதிகளில் உள் கட்டமைப்பு வசதிகளான நீர், மின்சாரம், போக்குவரத்து, கல்வி நிறுவனங்கள், தகவல் தொடர்பு, மருத்துவ வசதி, வேலைவாய்ப்பு, பண்டக சேமிப்பு வசதி, வங்கி மற்றும் காப்பீடு போன்ற வசதிகள் போதுமானதாக இல்லை.

4. **பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள்:**
அதிகச் செலவு பிடிக்கும் தொழில் நுட்பங்கள் மற்றும் உள்ளீடுகளை பயன்படுத்த இயலாமை, நலிவடைந்த ஊடக தொழிற்சாலைகள், குறைவான வருமானம், கடன் சுமை, நிலவுடைமை மற்றும் சொத்துகளில் உள்ள ஏற்றத்தாழ்வு ஆகியவை ஊரக பகுதிகளில் காணப்படும் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளாக உள்ளது.

5. **தலைமை சார்ந்த பிரச்சனைகள்:**
ஊரக பகுதிகளில் தலைமை தொடர்பான பிரச்சனைகள் உள்ளன. அவை: தகுதியற்ற மற்றும் செயல்படாத நபர்கள் தலைமை பொறுப்பை வகிப்பது, சுய விருப்புடன் செயல்படும் தலைவர்கள், நடுவுநிலைமை அற்ற தலைவர்கள், குறைந்த பேர சக்தி ஆற்றல் மற்றும் திறமையை மறுத்தல் மற்றும் அரசியல் தலைவர்களின் தலையீடு.

6. **நிர்வாகம் சார்ந்த பிரச்சனைகள்:**

அரசியல் தலையீடு, ஊக்கமின்மை, ஆர்வமின்மை, குறைந்த கூலி, வரவு செலவுகளை சரிவர முறையாக பயன்படுத்தாமை, மேலாண்மையின்மை, ஊரக வளர்ச்சி திட்டங்களை மேற்பார்வையிடுவதற்கு சரியான கண்காணிப்பு இன்மை மற்றும் நடைமுறைபடுத்தாமை ஆகியவை ஊரக பகுதிகளில் காணப்படும் நிர்வாகச் சிக்கல்கள் ஆகும்.

கிராமப்புற வறுமை, கிராமப்புற வேலையின்மை கிராமப்புற தொழிற்சாலைகள், சிறு நிதி, ஊரக நலம் மற்றும் சுகாதாரம் மற்றும் ஊரக உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பிரச்சனைகள் விரிவான விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## ஊரக வறுமை:

கிராமங்களில் காணப்படும் வறுமையை ஊரக வறுமை எனலாம். இந்தியாவில் வறுமை என்பது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான வருமானத்தை ஈட்ட முடியாத நிலையாகும். வறுமை கோடு என்பது மக்களின் வருமானம் அல்லது நுகர்வு நிலையை பொறுத்து வறுமை கோட்டிற்கு மேல் மற்றும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் என அனுமானிக்கும் கோடு ஆகும். பரிந்துரைக்கப்பட்ட ஊட்டச் சத்து உணவு எடுத்துக் கொள்ளுதல் அளவு அடிப்படையில் கிராமங்களில் வாழும் மக்கள் நாள் ஒன்றுக்கு 2,400 கலோரி அளவு மற்றும் அதற்குக் குறைவாக எடுத்துக்கொள்வர்கள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் ஆவர். திட்டக்குழுவின் கணக்கீட்டின்படி 2009 – 2010-ல் ஊரக பகுதியில் வறுமையில் உள்ள மக்கள் சதவீதம் 54.10 சதவீதம் இருந்தது. 2009 – 10-ல் மொத்த வறுமை சதவீதம் 33.80.

ஊரக பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரிடையே வறுமை மிகுந்து காணப்படுகிறது. 2005-ஆம் ஆண்டில் இப்பிரிவினரில் 80 சதவீதம் பேர் ஊரக வறுமையில் இருந்தனர். இது மொத்த ஊரக மக்களின் பங்கினைக் காட்டிலும் குறைவாகும். இந்தியாவில் 2015 – ஆம் ஆண்டில் 80 கோடி மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர்.

அவர்களில் கால்பகுதி கிராமமக்கள் (22 கோடி மக்கள்) வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கின்றனர். உலக ஏழை மக்களின் தொகையில் 22% இந்தியாவில் உள்ளனர். மக்கட்தொகை வளர்ச்சிவீதத்தைக் காட்டிலும் ஏழைகளின் அளவு வீதத்தை குறைப்பதில் வெற்றி பெற்றுள்ளோம்.

**ஊரக வறுமைக்கான காரணங்கள்:**

ஊரக வறுமையை தீர்மானிக்கும் பல்வேறு காரணங்கள்

1. **நிலங்கள் சரியாக பிரிக்கப்படாமை:**

   ஊரக நிலப் பகுதிகள் ஒரு சிலரிடமே குவிந்து காணப்படுகிறது. பெரும்பான்மை கிராம மக்கள் தங்கள் குடும்ப தேவைகளுக்காக அந்நிலங்களில் கூலிக்கு வேலை செய்கின்றனர்.

2. **பண்ணை சாராத தொழில்களில் வேலைவாய்ப்பின்மை:**
   அதிகரிக்கும் உழைப்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பண்ணை சாராத தொழில்கள் வளரவில்லை. மிகுதியான தொழிலாளர்கள் ஊரகப்பகுதிகளில் உள்ளபடியால் குறைவான கூலியையே பெறுகின்றனர். இது வறுமைக்கு வழி வகுக்கிறது.

3. **பொதுத்துறைகளில் முதலீடு இன்மை:**
   மனித வளத்தை மேம்படுத்துவதற்கான முதலீடு நமது நாட்டில் மிகக் குறைவாக உள்ளதால், வறுமைக்கு அடிப்படையான காரணமாக உள்ளது.

4. **பணவீக்கம்:**
   பொருட்களின் விலை அதிகரிப்பதால் ஊரக மக்களின் வாங்கும் சக்தி குறைந்து ஊரக வறுமைக்கு வழிவகுத்தது.

5. **குறைந்த உற்பத்தித் திறன்:**

   ஊரக தொழிலாளர்கள் மற்றும் பண்ணைகளின் குறைந்த ஊற்பத்தித்திறன், வறுகைக்கு காரணமாக அமைந்தது.

6. **வளர்ச்சியின் நன்மைகளில் உள்ள சமனற்ற நிலை:**

   பொருளாதார வளர்ச்சியினால் ஏற்படும் நன்மைகளை நகர்புற பணக்காரர்களே அனுபவிப்பதால், சொத்துக்கள் அவர்களிடமே குவிந்து உள்ளன. குறைபாடுள்ள

பொருளாதார அமைப்புகள் மற்றும் கொள்கைகளால், வளர்ச்சியின் நன்மைகள் ஏழை மக்களை சென்றடைவது இல்லை. அதை போல ஏழை மக்களின் பங்களிப்பையையும் சரியாகக் கணக்கிடப்படவில்லை.

7. **குறைந்த பொருளாதார வளர்ச்சி வீதம்:**

இந்திய பொருளாதார வளர்ச்சி பணக்காரர்களுக்கு சாதகமாகவே உள்ளது. நாடு அடைந்த வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் நன்மைகள் ஏழை மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

8. **பெரிய தொழிற்சாலைகளுக்கே முக்கியத்துவம்:**
இந்தியாவில் பெரிய தொழிற்சாலைகளில் செய்யப்படும் அதிக முதலீடு நகர்புறத்தின் நடுத்தர மற்றும் உயர் வருமான பிரிவினரின் தேவைகளையே பூர்த்தி செய்கிறது. இந்த தெழிற்சாலைகள் இயந்திரங்களையே அதிகமாக பயன்படுத்துவதால் வேலைவாய்ப்பு உருவாக்கம் குறைவாகவே உள்ளது. ஆதலால் கிராமப்புற மக்கள் வேலைவாய்ப்பினை பெற முடியாத நிலையிலும், வறுமையிலிருந்து மீள முடியாமலும் உள்ளனர்.

9. **சமூக குறைபாடுகள்:** சமுதாயத்தில் நிலவும் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவை ஆக்கமற்ற உற்பத்தி செலவை அதிகரிக்கிறது.

10. **ஊரக வறுமையை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

ஊரக வேலையின்மையும், ஊரக வறுமையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதால் வேலைவாய்ப்பினை ஊருவாக்குதல் மூலமாக வறுமையை ஒழிக்கலாம். வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் காலத்திற்கு ஏற்ப நடைமுறைப்படுத்தல், தொகுக்கப்படுதல் மற்றும் விரிவாக்கம் செய்தல் ஆகியன நடைபெறுகின்றன. ஆனாலும், வேலையின்மை, பிச்சையெடுத்தல், குப்பை பொறுக்குதல் மற்றும் குடிசைகளில் வாழ்வோர் போன்ற நிலைகள் தொடர்கிறது. வேலை வாய்ப்பின்றி ஏழை மக்களின் வறுமையை ஒழிக்க முடியாது.

| **வறுமை ஒழிப்புத் திட்டங்கள்** | |
|---|---|
| **திட்டங்கள்** | **தொடங்கப்பட்ட ஆண்டு** |
| 20 அம்ச திட்டம் | 1975 |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் (IRDP) | 1976 |
| ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சி (TRYSEM) | 1979 |
| வேலைக்கு உணவுத்திட்டம் (FWP) | 1977 |
| தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NREP) | 1980 |
| ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் (RLEGP) | 1983 |
| ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் (JRY) | 1989 |
| மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் (MGNREGS) | 2006 |

| **திட்டங்கள்** | **தொடங்கப்பட்ட ஆண்டு** |
|---|---|
| பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் சதக் யோஜனா (PMAGSY) | 2010 |
| பாரத் நிர்மான் யோஜனா | 2005 |
| இந்திரா ஆவாஸ் யோஜனா | 1985 - 1986 |

| | |
|---|---|
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறுசீரமைப்பு திட்டம் (JNNURM) | 2005 |
| ராஜீவ் ஆவாஸ் யோஜனா (RAY) | 2009 |
| தேசிய ஊரக நலத்திட்டம் | 2005 |
| தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் | 2011 |
| தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் | 2013 |

APOLLO STUDY CENTRE

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டம் 2006'ன்படி இவை இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**A. உற்பத்தித் தொழில் நிறுவனங்கள்:**

தொழில்துறையின் நிறுவனங்கள் (அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951ன்படி முதல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொழிற்துறை தொடர்பான உற்பத்தி அல்லது உற்பத்திப் பொருட்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களைக் குறிக்கின்றன. இவை இயந்திரம் மற்றும் தளவாடங்களில் செய்யப்படும் முதலீடுகளின் உச்ச வரம்பின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டிறுக்கிறது.

**B. சேவை தொழில் நிறுவனங்கள்:**

சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் பணிச்சேவை சார்ந்த நிறுவனங்களாகும்.

| |
|---|
| உற்பத்தி தொழில் நிறுவனங்கள்/இயந்திரம் மற்றும் உற்பத்தி தொழில் ஆலைகளின் முதலீடுகளின் உச்சவரம்பு, சேவை தொழில் நிறுவனங்கள்/உபகரணங்களின் முதலீடுகளின் உச்சவரம்பு, சேவை தொழில் நிறுவனங்கள்/உபகரணங்களின் முதலீடுகளின் உச்சவரம்பு கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. |

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு மற்றும் முக்கியத்தவம்:**

**1. அதிக வேலை வாய்ப்புகள்:**

பெரிய வர்த்தக நிறுவனங்களை காட்டிலும் இந்நிறுமங்கள் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றன. இத்தகைய நிறுமங்கள் பெரும்பாலும் உள்ளூரில் கிடைக்கும் உழைப்பாற்றலை நம்பி இரப்பதால் நாட்டில் உள்ள ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகிறது.

**2. குறைந்த உற்பத்தி செலவு:**

இம்மாதிரியான நிறுமங்களை நடத்தப் பயிற்சி பெற்ற அல்லது அதிக ஆற்றல் படைத்த தொழிலாளர்களோ அல்லது தொழில் கல்வி பயின்ற உழைப்பாளர்களோ தேவைப்படுவதில்லை. இந்நிறுமங்கள் குறைந்த ஊதியத்தில் பணியாளர்களை நியமிப்பதால், உற்பத்தி செலவுகள் வெகுவாக குறைகிறது. இதன் விளைவாக பெரிய அளவிலான நிறுவனங்களை விட, இவற்றால் குறைந்த செலவில் உற்பத்தியை மேற்கொள்ள முடிகிறது.

**3. குறைந்த முதலீடு:**

இவற்றைத் தொடங்குவதற்குப் பேரளவு முதல் தேவைப்படுவதில்லை. இவைகளின் உரிமையாளர்கள் உள்ளூரில் இருப்பதால் தனக்கு அருகாமையில் உள்ள உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். கைவினை பொருட்கள் மற்றும் பாரம்பரியக் குடும்பத் தொழில்களை ஊக்குவிப்பதில், இந்த நிறுமங்கள் பெருமளவு உதவுகின்றன. இந்த நிறுவனங்கள் சிற்றூர் மற்றும் பேரூரில் உள்ள உள்ளூர் தொழில்முனைவோர் மற்றும் சுயதொழில் செய்பவர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றன.

| **நிறுவன வகை** | **உற்பத்தி தொழில் நிறுவனங்கள்** | **சேவை தொழில் நிறுவனங்கள்** |
|---|---|---|
| | (இயந்திரம் மற்றும் உற்பத்தி ஆலைகளின் முதலீடுகளின் உச்சவரம்பு | (உபகரணங்களின் முதலீடுகளின் உச்சவரம்பு) |
| குறு நிறுவனம் | ₹25 இலட்சத்திற்குள் | ₹10 இலட்சத்திற்குள் |

| | | |
|---|---|---|
| | ₹25 இலட்சத்துக்கு மேல் ₹5 கோடிக்கு மிகாமல் | ₹10 இலட்சத்துக்கு மேல் ₹2 கோடிக்கு மிகாமல். |
| நடுத்தர நிறுவனம் | ₹5 கோடிக்கு மேல் ₹10 கோடிக்கு மிகாமல். | ₹2 கோடிக்கு மேல் ₹5 கோடிக்கு மிகாமல் |

**4. விரைந்து முடிவெடுத்தல்:**

இவற்றின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொழில் படிப்பு பயின்ற மேலாளர்களைப் பணியமர்த்த வேண்டிய அவசியம் இல்லை. பெரும்பாலும் இந்த நிறுவனங்களை அவற்றின் உரிமையாளர்களே நிர்வாகம் செய்கின்றனர். எனவே சிறந்த முடிவுகளை விரைந்து எடுப்பது சாத்தியமாகிறது.

**5. பங்களிப்பு உதவி:**

பெரிய உற்பத்தி தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் மற்றும் பிற பொருட்களைத் தயாரித்து கொடுத்து பேரளவு உற்பத்திக்கு துணை புரிவதில் இவை முக்கியப் பங்காற்றுகின்றன.

**6. சமுதாயத்தில் பொருளாதார சமநிலையை உருவாக்குதல்:**

வருமானம் மற்றும் வளங்கள் ஒரு சிலரிடம் குவிவதைத் தடுத்து அவற்றைப் பரவலாக்குவதன் மூலம் சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைவதில் இவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருப்போரையும், இலாபம் மிகுந்த தொழில் துறையில் பங்கு பெறச் செய்வதன் மூலம் சீரான பொருளாதாரப் பகிர்வுக்கு வழிவகை செய்கிறது.

**7. அனைத்துப் பகுதிகளிலும் சமமான வளர்ச்சி:**

இந்நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம், இந்தியாவில் தொழில் ரீதியாக பின்தங்கியுள்ள பகுதிகளை வளர்ச்சி அடையச் செய்யலாம். இதன் மூலம் நாடு முழுவதும், சீரான தொழில் வளர்ச்சியை பெற இயலும். இவை உள்ளூர்களிலேயே வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தருவதால், சிற்றூர் மற்றும் பேரூர்களில் வசிக்கும் மக்கள், நகர்ப்புறம் நோக்கி வேலைக்காக இடம் பெயர்வது தடுக்கப்படுகிறது.

இத்துறையானது தொழில் முனைவோர்களை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றன. இது சமுதாயத்தில் சுய வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம் சுயசார்பை ஊக்குவிக்கிறது. இதன் மூலம் தனிநபர் வருமானம் வெகுவாக உயர்ந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கிறது.

**8. சுயவேலைவாய்ப்பு உருவாக்கி, சுயசார்வை மேம்படுத்தல்:**

இத்துறையானது தொழில் முனைவோர்களை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றன. இது சமுதாயத்தில் சுய வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம் சுயசர்பை ஊக்குவிக்கிறது. இதன் மூலம் தனிநபர் வருமானம் வெகுவாக உயர்ந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கிறது.

**9. உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு அதிகப் பங்களிப்பு:**

நாட்டின் மொத்த உற்பத்தி திறனில் 45 சதவீதமும் மற்றும் ஏற்றமதியில் 40 சதவீதமும், இந்த நிறுவனங்களின் பங்காக உள்ளது. இவ்வகை நிறுமங்கள் உலகின் பல்வேறு நாடுகளின் அந்நியச் செலாவணியை ஈட்ட மிகவும் உதவுகின்றன.

**இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு:**

மொத்த உள்நாட்டு உற்பத்தி 8 சதவீதமும், நாட்டின் உற்பத்தி திறனில் 45 சதவீதமும் மற்றும் ஏற்றுமதியில் 40 சதவீதமும் இந்த நிறுவனங்களின் பங்காக உள்ளது. 6000க்கு மேற்பட்ட பொருட்களை இவை உற்பத்தி செய்கின்றன. 3.6 கோடி நிறுவனங்கள் வாயிலாக, 8-கோடி நபர்களுக்கு இவை வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

**தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்:**

தமிழ் நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஏறத்தாழ அனைத்துப் பிரிவுகளிலும், பல்வேறு விதமான பொருட்களைத் தயாரிக்கின்றன. இவற்றில் முன்னிற்பவை ஜவுளி, மின்னணு பொருட்கள், பொறியியல் பொருட்கள், தானியங்கி உதவிப் பொருட்கள், தோல் பொருட்கள், இரசாயனம், நெகிழி(பிளாஸ்டிக்) பொருட்கள், ஆயத்த ஆடைகள், மற்றும் ஆபரணங்கள் முதலானவை, தமிழ் நாட்டில் இத்துறையில் 12.94 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, சுமார் 81 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

**புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம்:**

கல்வி கற்ற இளைஞர்கள் மற்றும் முதல் தலைமுறை தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் 2013’ என்ற திட்டத்தை தமிழக அரசால் துவக்கி வைக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், படித்த இளைஞர்களுக்குத் தொழில் தொடங்கத் திட்டங்கள் தயாரித்தல், புதிய தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல், தொழில் தொடங்கத் திட்டங்கள் தயாரித்தல், புதிய தொழில் முயற்சிகள் மேற்கொள்ள நிதி நிறுவனங்களின் நிதியுதவி பெற உதவுதல் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுடன் வணிகத் தொடர்பு அமைத்துத் தருதல் ஆகிய உதவிகளை அளித்து வருகிறது.

**குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள்:**

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குப் பல வங்கிகளும் மற்றும் நிதி நிறுவனங்களும் நிதி உதவி வழங்கி வருகின்றன. அவையாவன

a. **வணிக வங்கிகள்:**

i. பொதுத்துறை வங்கிகள் (எ.கா) பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி.

ii. தனியார் துறை வங்கிகள் (எ.கா) ஐசிஐசிஐ, ஆக்சிஸ் வங்கி, சிட்டி யூனியன் பாங்க், எச்டிஎப்சி, கரூர் வைஸ்யா பாங்க், தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி.

b. **தனியார் துறை வங்கிகள்**

(எ.கா) பாண்டியன் கிராம வங்கி, பல்லவன் கிராம வங்கி, வள்ளலார் கிராம வங்கி.

c. **கூட்டுறவு வங்கிகள்:**

(எ.கா) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி (TNSC bank), மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்.

d. **குறும நிதி நிறுவனங்கள்:**

(எ.கா) முத்ரா வங்கி

**e. வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள்:**

(எ.கா) தேசியச் சிறுதொழில் கழகம் லிமிடெட்(NSIC) இந்தியச் சிறு தொழில் மேம்பாட்டு வங்கி(SIDBI)

**குறுந்தொழில் பிரிவுகள் வளர்ச்சி மற்றும் மறுநிதி அளிப்பு முகமை:**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிதித்தேவைகளை பூர்த்தி செய்யவும், புதிய தொழில் தொடங்குபவர்கள் சந்திக்கும் நிதி பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், ₹.20 ஆயிரம் கோடி முதலீட்டுடனும், ₹.3 ஆயிரம் கோடி கடன் உத்திரவாத நிதியுடனும் மத்திய அரசால் 'குறுந்தொழில் பிரிவுகள் வளர்ச்சி மற்றும் மறுநிதி அளிப்பு முகமை' (முத்ரா வங்கி) தொடங்கப்பட்டது.

குறுந்தொழில் முனைவோர் தங்களின் புதிய தொழிலைத்தொடங்கவும், தொழிலை மேம்படுத்தும் நிலையில் நிதி நாடுவோர், தொழிலை மேம்படுத்தும் நிலையில் நிதி நாடுவோர், தொழிலை அடுத்த வளர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்வோர், தங்களின் தொழிலை விரிவு படுத்திக் கொள்ளவும் முத்ரா வங்கி கடன்களை வழங்குகிறது.

**சுய உதவிக் குழுக்கள்:**

கிராமப்புற வளர்ச்சி இந்தியாவின் முன்னேற்றத்தின் பிராதானத் தூண்களில் ஒன்றாகும். இந்தியா சுதந்திரமடைந்து 70-ஆண்டுகளுக்குப் பின்னரும், பல கிராமங்கள் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களில் பின்தங்கியுள்ளது. 2011மக்கள் தொகை கணக்கெடுப்பில், இந்தியாவில் கிராமப்புறத்தில் 33.8 சதவீத மக்களும் நகர்ப்புறத்தில் 20.09 சதவீத மக்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் வறுமையை எதிர்த்துக் போராடும் ஒரு இயக்கமாக சுய உதவிக்குழு உருவாகி உள்ளது. இது ஒற்றுமையின் முக்கியத்துவதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. சுய உதவி குழுவை சில பொது இலக்குகளை அடைய உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு எனலாம்.

சுய உதவிக்குழு என்பது ஒரு சிறிய முறைசாரா தன்னார்வச் சங்கம் ஆகும். உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பொருளாதார உதவி செய்து கொள்ளவும், ஒருமைப்பாடு மற்றும் கூட்டுப் பொறுப்பு ஆகிய பண்புகளைப் பெறவும் இக்குழுக்கள் உதவுகின்றன. சேமிப்பைத் திரட்டி, அதன் மூலம் கடன் வசதிகளை நல்குவதும் இக்குழுக்களின முக்கிய நோக்கங்களாகும்.

தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD)யின் கூற்றுப்படி "சுய உதவிக்குழு என்பது ஒரே வகையான சமூகப் பொருளாதார நிலையில் உள்ள கிராமப்புற ஏழைகளின் ஒருங்கிணைந்த குழு ஆகும். பொது நிதியை உருவாக்க, அவர்கள் கூட்டாக இணைந்து, தங்களால் இயன்ற சிறு தொகையினைத் தொடர்ந்து முறையாகச் சேமித்து, அந்நிதியை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக அல்லது அவசர கடன் தேவைக்காக உறுப்பினர்களுக்கு வழங்க ஒப்பு கொண்டு இயங்கும் ஒரு அமைப்பாகும்.

**சுய உதவிக் குழுவின் நோக்கங்கள்:**

1. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது.
2. முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை மீட்டல்.
3. பெண்களின் திறமையை உருவாக்கி ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் அவர்களை ஈடுபடச் செய்வது.
4. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களின் மனங்களில் சேமிப்பு பழக்கத்தை உருவாக்குதல்
5. பெண்களிடம் தொழில் முனைவோருக்கான திறமைகளை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்.

6. கடன் வட்டம் அல்லது சுழல்நிதி மற்றும் சுழற்சி கடன் ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
7. உறுப்பினர்களின் குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்துதல்.
8. எதிர்காலப் பொருளாதார அதிகார மேலாண்மைக்கான திறமையை வளர்த்தல் மற்றும் கடன் தொடர்புக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
9. உறுப்பினர்கள் தங்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்கு, அவர்களாகவே தீர்வு காண்பதற்கான விழிப்புணர்வுப் பயிற்சியினை அளித்தல்.
10. குழு உறுப்பினர்களின் பொதுவான விருப்பங்களை அறிந்து, குழு நடவடிக்கைகளை முடிவு செய்தல். திறமையான மற்றும் சிக்கலான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.
11. உறுப்பினர்கள் எதிர்கொல்லும் அனைத்துச் சமூகப் பொருளாதாரத் தடைகளையும் வெற்றியுடன் எதிர்கொள்ள அவர்களைத் தயார்படுத்துதல்.
12. வாழ்க்கை சுழற்சியில் எல்லா நிலைகளிலும் பெண்களுக்கான மனித உரிமைகளை உறுதி செய்தல்.

**சாதனையாளர் வெற்றிக் கதை**

பட்டர்பிளை காந்திமதி அப்ளையன்சஸ் லிமிடெட் என்ற நிறுமம் முதன்முதலில் திரு.முருகேசன் மற்றம் அவரது 5 மகன்கள் மூலம் ரூ.700 மூலதனத்துடன் துவங்கப்பட்டது. 1971ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும், இந்நிறுவனத் தயாரிப்புகள் சிறந்த தரம் வாய்ந்த வர்த்தகக் குறியீடாக அங்கீகரிக்கப்படும் நிலைக்கு வளர்ந்துள்ளன. எப்போதும் விலையை விட, தரத்திற்காகப் பொருட்கள் விற்பனையாகும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர்.

அவர்கள் வெற்றி அடையக் கடின உழைப்பு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அவர்களது பல தயாரிப்புகள் புதுமையானது மட்டுமல்லாமல், நவீன அம்சங்களைக் கொண்டவையாகும்.

எரிபொருள் சேமிப்பு இன்றியமையாத தேவையாகக் கருதப்படும் இந்தக் காலகட்டத்தில், மற்ற நிறுவனத் தயாரிப்புகளுடன் ஒப்பிடுகையில், இவர்கள் தயாரிக்கும் சமையல் எரிவாயு அடுப்புகளானது சிக்கலான எரிபொருள் செயல்திறன் கொண்டவை. இந்தியத் தரநிர்ணய ஆணையம் இவர்களுடைய சமையல் எரிவாயு அடுப்புகளுக்கு “GREEN LABEL” என்று புதிய அங்கீகாரக் குறியீட்டை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நிறுவனம் அதன் தயாரிப்புகளை ஜப்பான், கனடா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஏற்றமதி செய்துள்ளது. இதே காலகட்டத்தில் ஏற்றுமதி ரூ.89 லட்சத்திலிருந்து ரூ.5.76 கோடியாக அதிகரித்துள்ளது,

அவர்களது முயற்சிகள் மற்றும் சிறந்த செயல்திறனை அங்கீகரிக்கும் விதமாக, மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான அமைச்சகம், தரமான தயாரிப்புக்கான தேசிய விருது 2010 முதல் பரிசு (சமையல் எரிவாயு அடுப்பு மற்றும் பிற உபகரணங்கள் தயாரிப்புக்காக) வழங்கி அவர்களைக் கௌரவப்படுத்தியது.

**சுய உதவிக்குழுவின் சிறப்பம்சங்கள்:**

1. “முதலில் சேமிப்பு பிறகு கடன்” என்பது ஒவ்வொரு குழு உறுப்பினரின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.
2. சுய உதவிக்குழு ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.
3. சுய உதவிக்குழு என்பது 10 முதல் 20 உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.
4. குழுக்களைப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.
5. அரசியல் சார்பு இல்லாத, தாமாகவே சேர்ந்து உருவாக்கிய ஜனநாயகக் கலாச்சாரத்தைக் கொண்டது இந்தக் குழுக்கள்

6. ஒவ்வொரு குழுவிலும் ஒரு குடும்பத்திலிருந்து ஒரு நபர் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க முடியும்.
7. ஆண்கள் மட்டுமோ, அல்லது பெண்கள் மட்டுமோ உறுப்பினர்களாக இருக்கும் வகையில் குழு அமைக்கப்பட வேண்டும்.
8. சுய உதவிக்குழு கூட்டமானது, ஓய்வு நேரங்களில் மட்டும் வாரம் ஒரு முறை கூட்டப்பட வேண்டும். அதிக பங்களிப்பிற்கு அனைவரும் வருகை தருதல் வேண்டும் என்பது கட்டாயமாகும்.
9. குழுக்கள் தங்களுக்குள் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும். நிதி பரிமாற்ற நடவடிக்கைகளில் அவை கூட்டுப்பொறுப்பு ஏற்க வேண்டும்.
10. ஒவ்வொரு குழுவும், தன் உறுப்பினர்கள் தங்களின் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள ஒரு வாய்ப்பை ஏற்பத்திக் கொடுக்கிறது.

**சுய உதவிக்குழுவின் செயல்பாடுகள்:**

1. உறுப்பினர்களின் முடிவு எடுக்கும் திறனை மேம்படுத்துகிறது.
2. உறுப்பினர்களுக்கு எழுத்தறிவு குறித்த பொது விழிப்புணர்வு அதிகரிக்கிறது.
3. வசதியற்றோருக்கு நிதிப் பரிமாற்றங்களில் திறன் பெற வாய்ப்பு அளிக்கிறது.
4. சரியான கணக்குகளை உறுதிப்படுத்தப் பல ஏடுகளும், பதிவேடுகளும் பராமரிக்கப்படுதல்.
5. தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் தேவையான பயிற்சி அளித்தல்.
6. ஆண்டுதோறும் தகுதிபெற்ற தணிக்கையாளரிடம் ஆண்டுத் தணிக்கையாகக் கணக்குகளைச் சமர்ப்பித்தல்.
7. குழு உறுப்பினர்களுக்கு அனுமதிக்கக்கூடிய கடன் தொகையைத் தீர்மாணித்தல்.

**வங்கி கடன் இணைப்பு முறை (கடன் வழங்கும் வழிமுறைகள்)**

சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க மூன்று வெவ்வேறு முறைகள் உள்ளன. முதலாவது முறையில் வங்கிகள் சுய உதவிக்குழுக்களுக்கு, நேரடியாக கடன் வழங்குகின்றன. இரண்டாவது முறையில் வங்கிகள் அரசு சாரா அமைப்புகள் (NGO) மூலம் சுய உதவிக் குழுக்களில் உள்ள சிறு தொழில்முனைவோருக்குக் கடன் வழங்குகின்றன. இரண்டாவது முறையில் வங்கிகள் அரசு சாரா அமைப்புகளைச் செயலாக்குநராகக் கொண்டு வங்கிகள் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் அளிக்கின்றன. இந்த மூன்று முறைகளில் அரசு சாரா நிறுவனங்களைச் செயலாக்குநராகக் கொண்டு நேரடியாகக் கடன் அளிக்கும் முறையே பரவலாகப் பின்பற்றப்படுகிறது.

**இந்தியாவில் சுய உதவிக் குழுக்கள்:**

டிசம்பர்-2017ன் படி இந்தியாவில் 45,67,090 சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இந்தச் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 5,02,65,933 ஆகும். அடிப்படை அல்லது தொடக்க நிலையில் மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்துவதில், சுய உதவிக்குழுவின் முக்கியத்துவத்தை அறிந்து, இந்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்கள் இவற்றுக்கான முறையான அங்கீகாரம் அளித்துள்ளன.

| | தமிழ்நாடு |
|---|---|
| சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 3,11,663 |
| சுய உதவிக்குழுக்களில் உள்ள மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை | 35,76,693 |
| சுய உதவிக் குழுக்களின் மொத்தச் சேமிப்பு | ₹ 186814.79 லட்சம் |
| சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் குறு நிறுவனங்களின் எண்ணிக்கை | 9754 |

| | |
|---|---|
| சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் குறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை | ₹ 40182 லட்சம் |

**தமிழ்நாட்டில் சுய உதவிக்குழுவின் தொடக்கம், வளர்ச்சி:**

பெண்களின் சமுதாய, பொருளாதார மேம்பாட்டிற்காகவும், ஊரகப் பெண்களின் திறனை மேம்படுத்தும் நோக்குடன், தமிழ்நாட்டில் 1983ல் தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக்கழகம் (வரையறுக்கப்பட்டது) என்ற நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு 1989 செப்டம்பரில் விவசாய முன்னேற்றத்திற்கான உலக நிதியத்தின் (International Fund for Agricultural Development) உதவியோடு தர்மபுரி மாவட்டத்தில் சுய உதவிக்குழுக்களை துவங்கி வைத்தது. இத்திட்டத்தின் வெற்றியினால் ‘‘மகளிர் திட்டம்’’ என்ற திட்டம், 1997-98ல் மாநில அரசின் நிதி உதவியோடு, பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது, இந்தச் சுய உதவிக்குழு மிகச் சக்தி வாய்ந்த இயக்கமாக செயல்பட்டு, இன்று மாநிலத்தில் பல வசதியற்ற மகளிரின் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் திட்டமாக செயல்பட்டு வருகிறது.

APPOLO STUDY CENTRE

# சுயதொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு

தொழில் முனைவு என்ற சொல் ஒரு புதிய தொழில் வினையை மேற்கொள்வதைக் குறிக்கும். இச்சொல் ஊதியம் நாடி பணிசெய்வதைக் குறிக்காது. பெற்ற கல்வியை வைத்து தொழில் செய்வது தொழில் முனைவு என்பதிலிருந்து வேறுபட்டது. தொழில் முனைவு என்பது ஒரு அமைப்பை தோற்றுவிப்பதில் முடியும் செயலை குறிக்கிறது.

**தொழில் முனைவு: பொருள் கருத்து மற்றும் இலக்கணம்.**

பொருளின் உற்பத்தி காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம் போன்றவற்றுடன் தொழில் முனைவும் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது. இது போன்று ஒருநாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அச்சாணியாக விளங்கும் தொழில்முனைவை பல்வேறு நபர்கள் மேற்கொள்ளாமல் ஏதோ பணிதேடி சொற்ப வருமானத்திற்கு தன் வாழ்வையே செலவு செய்வது நமது உழைப்புக்கேற்ப ஊதியம் ஈட்டுவது ஒரு தனிமனித சுதந்திரத்தின் வெளிப்பாடாகும். இது தவிர்த்து நிரந்தர வருமானத்திற்காக தனிமனித சுதந்திரத்தை அடகு வைப்பது வேதனைக்குரிய செயலாக விளங்குகிறது. சிலர் தொழில் முனைவு என்பதை ஏதோ பிறவியிலேயே ஒரு மனிதனுக்கு கடவுள் கொடுத்து அனுப்பும் ஆற்றல் என்றும் எல்லோருக்கும் அந்த ஆற்றல் வருவதில்லை என வாதம் செய்தும் பல தொழில் முதலாளிகளுக்கு அடிமைபட்டு வாழ்வை கழித்து செத்து மடிகின்றனர்.

இந்த வாதத்தை ஏற்று ஒரு நாடு பல்வேறு தொழில் முனைவோர்கள் பிறந்து தொழில் செய்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் வரை காத்துகிடக்க முடியாது. தொழில் முனைவின் அரும்பயனைப் பற்றி மக்கள் மனதில் ஒரு சாதகமான கருத்தை விதைக்க வேண்டும். தொழில் முனைவின் சிறப்பை உணரச் செய்து பல நபர்களை தொழில் முனைவிற்கு அழைக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது. தோழில் முனைவோன் என சொல்லடா பலருக்கு பணி கொடுத்து தலைநிமிர்ந்து நில்லடா என் முழங்கி தொழில்முனைவிற்கு செல்வோம். அரசும் பல்வேறு நிறுவனங்களும் தொழில் முனைவை நம் நாட்டில் வளர்த்திட நாளொருபொழுதும் பொழுதொரு எனவே தொழில் முனைவு தத்துவத்தை பரப்பி மக்களை பணிசார் அடிமை மனப்பான்மையிலிருந்து விடுவித்து தொழில்முனைவோர் இயக்கத்தை உருவாக்கலாம்.

## தொழில் முனைவு – பொருள் concept of entrepreneur

தொழில் முனைவு என்ற சொல் பிரஞ்சு மொழி சொல். அம்மொழியில் இன்னிசை கச்சேரியை அல்லது மனமகிழ் கேளிக்கை நிகழ்வுகளை நடத்துபவரை செயல் முனைவோர்கள் என் அழைத்தனர். ஆக்ஸ்போர்டு அகராதி (1897) இன்னிசை கச்சேரி சடத்துபவரை செயல்முனைவோர் என பொருள்படுத்தின. ஆனால் 16ம் நூற்றாண்டில் செயல் முனைவோர் என்ற சொல் இராணுவ தாக்குதலில் முன்னின்று தாக்குதல் நடத்தும்

நபரை குறிக்க பயன்படுத்தப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டில் பொறியியல் கட்டிடம் கட்டுதல் அதை பலப்படுத்தப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தொழில்முனைதல் என்ற சொல்லை பொருளாதார துறையில் பயன்படுத்த துவக்கினர். அதைத் தொடர்ந்து இச்சொல் மிகவும் பிரபலமானது. இந்நிலையில் தொழில்முனைவு என்பது பற்றி பல அறிஞர்கள் மற்றும் வல்லுநர்கள் கருத்து தெரிவிக்க இச்சொல் பல்வேறு இதர கருத்து தோன்றுவதற்கு வித்தாக அமைந்தது என்றால் மிகையாகாது. அதனடிப்படையில் தொழில்முனைவோரை இடர் ஏற்பாளர், தொழில் அமைப்பாளர் அல்லது புதினம் புரிவோர் என பல பதங்கிளல் விவரிக்கின்றனர்.

**தொழில் முனைவோர் இடர் ஏற்பாளர் என்ற கருத்துரை**

ரிச்சர்டு சேன்டில்யன் என்ற ஈரானிய அறிஞர் தொழில் முனைவோர் என்பவர் தான் துவங்கிய அல்லது முனைந்த தொழிலில் இயற்கையாக பின்னி பிணைந்துள்ள இடரை தாங்கும் இடர் தாங்கி என வருணிக்கின்றார். அவரின் கருத்துப்படி பொருளாதார காரணிகளான நிலம், உழைப்பு மற்றும் மூலதனம் போன்ற காரணிகளை தொழில் முனைவோர் ஒருங்கிணைந்து செயலில் இறங்குகிறார். ஆப்போது கிடைக்கும் வருமானம் உறுதியானது அல்லது திட்டவட்டமானது. ஆனால் தொழில் முனைவோரைப் பொறுத்தவரை, இவை மூன்றையும் ஒன்றாக கலந்து தயாரிக்கு் பொருளை சந்தையில் ஒரு குறிப்பிட்ட விலையில் விற்று தனக்கு இலாபம் பார்ப்பது நிச்சயமற்ற நிகழ்வாக உள்ளது. உற்பத்தி செய்த பொருளை சந்தையில் வாடிக்கையாளர்கள் அல்லது நுகர்வோர்கள் முழுமையாக வாங்கி விடுவார்கள் என அறுதியிட்டு கூறமுடியாது. எனவே இடரைமுதுகில் சுமந்து வினையை துவக்கி நடத்தி வரும், உன்னதமான மனிதனே தொழில் முனைவோன் என ரிச்சர்டு சேன்டில்யன் கருதுகிறார். அவர் ஏற்கும் இடரை எவராலும் ஈடுசெய்ய முடியாது அல்லது அதற்கு ஊதியமிடலாகாது என முழங்குகிறார். இவரின் கூற்றுப்படி யாராலும் ஈடுசெய்ய முடியாத அல்லது ஊதியம் வழங்கமுாயாத இடரை தாங்கும் இடர்தாங்கி தொழில் முனைவோர் என உரைக்கிறார்.

**ii) தொழில் முனைவோன் ஒரு ஏற்பாட்டாளர்**
**(அ) அமைப்பாளர் Entrepreneur as an organiser**

ஜின் பேப்டைஸ் என்ற அறிஞரின் பார்வையில் தொழில் முனைபவர் ஒரு அமைப்பாளராக தென்படுகிறார். அவர் ஒரு அமைப்பாளராக தென்படுகிறார். ஆவர் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வது எவ்வளவு என்கிறார். தொழில் முனைவோர் நிலம், கட்டிடம், தொழில்நுட்பம், மூலதனம் பணியாளர்கள் மற்றும் பல்வேறு வசதிகளை ஒன்றிணைத்து தொழிலை படைப்பவன் என கருத்துரைக்கிறார். இந்த முயற்சியில் அவர் எதிர் கொள்ளும் தடைகள் எதிர்பாராத போக்குகள் மனத்துயரம் போன்றவற்றை சொல்லிமாளாது என்கிறார். எனவே தொழில் முனைபவர் ஓர் நல்ல அமைப்பாளர் என வறையருக்கிறார்.

**iii) தொழில் முனைபவர் ஒரு புதுமைபித்தன் entrepreneur as an innovator**

1934ஆம் ஆண்டில் வாழ்ந்த ஹீம் பீட்டர் தொழில் முனைபவரை புதின படைப்பாளி என அழைத்தார். அவரின் கருத்துப்படி தொழில்முனைபவர் ஒரு படைப்பாளியாக சீரான முறையில் ஏதேனும் ஒரு புதுமையை புகுத்த வேண்டியது அவசியமாகிறது என்**கிறார்.**

- பொருளில் புதிய தொழில் நுட்பத்தை புகுத்துவது
- புதிய இடங்களில் கச்சா பொருள்களை வாங்குவது
- இதுவரை இடம்பெறாத சந்தையில் நுழைவது
- முற்றுரிமையை தகர்க்க புதிய அமைப்பு முறையை கொணர்வது
- புதிய சிறப்புத்தன்மையை பொருளில் புதியதாக சேர்ப்பது

இவரின் கண்ணோட்டத்தில் புதுமை படைப்பவனே தொழில் முனைபவன் என்கிறார்.

மேற்குரிய மூன்று கருத்துக்களிலிருந்து தொழில் முனைபவரை பல அறிஞர்கள் பல நிலைப்பாடுகளில் பார்க்கின்றனர் அதாவது இடர் தாங்கி, அமைப்பாளன் மற்றும் புதுமைபித்தன் என மேற்கூறிய அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர்.

**வரைவிலக்கணம்**

J.A ஹீம் பிட்டர் தொழில் முனைவோரை புதுமை படைப்பாளி என்கிறார். எவனொருவன் பலரும் செய்யாத ஒரு செயலை மேற்கொள்ள முன்வருகிறானோ அவனே புதுமை படைப்பாளி என்கிறார். தோழில் முனைரோர் என்பவர் ஒரு புதிய சேர்க்கைளை கண்டறிபவர் அல்லது புதிய நிறுவனத்தை உருவாக்குபவர் என்றிகிறார்.

A.H. கோல் என்பவர் தொழில் முனைவோர் என்பர் தனிப்பட்ட முறையிலோ அல்லது பல நபர்கள் ஒன்று இணைந்தோ பொருளை உற்பத்தி செயது அதனை பகிர்ந்தளிக்கும் நோக்குடன் ஒரு செயவை துவக்கி, அதனை முறையாக பராமரித்து இலாபம் ஈட்டுவது தொழில் முனைவு என்கிறார்.

மேரி கவுட்லர் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டாக ஒன்றிணைந்தோ ஏதோ ஒரு வகையில் புதுமை புகுத்தியோ அல்லது பொருளில் சிறப்பை கூட்டியோ மக்களுக்குத் தேவையான பொருளை உற்பத்தி செய்து அதன் மூலம் மதிப்பை பெற்று வளர்த்து வரும் உன்னதமான முயற்சியை மேற்கொள்பவர் தொழில் முனைவோர் என் கூறுகிறார்.

**தொழில் முனைபவரின் சிறப்பியல்புகள்**

1. **தொழில் துணிகர உணர்வு**

   தொழில் முனைபவர் தான் மேற்கொண்ட தொழிலில் ஏற்படும் வரும் இடர்களை துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும். வினையை நடத்திவரும்போது ஏற்படும் இயற்கையான ஏமாற்றங்கள் அல்லது தோல்விகள் அவரின் ஆர்வத்தை சிதைக்கா வண்ணம் துணிவுடன் செயல்படுவோர் ஆவார்.

2. **தன்னம்பிக்கை**

   தன்னம்பிக்கை ஒரு மனிதனுக்கு அழகு ஏற்படத்துகிறது. எதிர்மறை உணர்வுகளான அசௌகரியங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள் மற்றும் தொல்லைகள் தொழில் முனைபவரது மன உறுதியை குலைக்க கூடாது. எது நடந்தாலும் இந்த வினையை கைவிடேன். வெற்றி ஒன்றே இலக்கு என தொழில் முனைபவர் தொழில் வினையில் பயணிக்கவேண்டும்.

3. **நெகிழ்வு தன்மை**

   மாறும் சூழ்நிலைகட்கு ஏற்ப தொழில் முனைபவன் தன் முடிவை அல்லது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ளும் நெகிழ்வு தன்மையை கடைப்பிடிக்கவேண்டும். நெகிழ்வு தன்மை அற்றவர்கள் தொழில் முனைவில் வெற்றி காண்பது இயலாத ஒன்றாதும்

4. **புதுமை புகுத்தல்**

   தொழில் முனைபவர் புதுமை படைப்பாளராக இருந்திட வேண்டும். ஏதேனும் ஒரு புதுமையைப் புகுத்தி சந்தையில் நிரந்தரமான இடத்தை பிடிக்க வேண்டும் புதுமை என்பது புத்தம்புதிய பொருளாகவோ, புதுமை பண்புகளை பொருளில் நுழைப்பதோ, புதிய சந்தையை உருவாக்குவதோ, புதிய கச்சா பொருளை கொண்டு பொருளை உற்பத்தி செய்வதோ, புதிய உற்பத்தி முறையை கையாள்வதோ மற்றும் புதிய நுட்பத்தை மேற்கொள்வது. ஆனால் புதுமை என்ற தன்மை இருக்க வேண்டும்.

## 5. வளத்தை திரட்டுபவர்

தான் மேற்கொண்ட செயலை செயலாக்கிட தொழில் முனைபவர் புலனாகக்கூடிய மற்றும் புலனாகாத உட்பொருட்களையும் ஒன்றிணைப்பவர் ஆவார். தொழிலை துவக்கிட இடு பொருளை வாங்குதல், மனித வளத்தை திரட்டுதல், நிதியை புரட்டுதல், தொழில் நுட்பத்தை நிறுவுதல், போன்ற நடவடிக்கைகளை நாட்டின் மூலை முடுக்குகளுக்கு சென்று சேரும் வகையில் பொருளை உற்பத்தி செய்து சந்தையிடுகைக்கு கொண்டு சேர்க்கும் செயலை செய்பவர் ஆவார். சுருங்கக் கூறின் வளம் திரட்டுநர் ஆவார்.

## 6. கடின உழைப்பு

தொழில் முனைபவர் தான் மேற்கொண்ட செயலியின் நோக்கத்தை அடைய அரும்பாடு படவேண்டும். தொல்லைகள், இடர்கள், அசௌகரியங்கள், இன்னல்கள் மற்றும் ஏமாற்றங்கள் என அவ்வப்போத ஏற்படும் இடர்களை தளராமல் மேற்கொள்ளுதல். துலைவிதியின் மீது பழிபோடுவதோ அல்லது பிறவற்றின் மீது பழி சுமத்தி சுகம் காண்பவராகவோ இருக்கக் கூடாது. தன்னம்பிக்கை மற்றும் முயற்சி உடையவராக இருத்தல் வேண்டும். என்ன இடையூறு வந்தாலும் அதனை போராடி வெல்பவராக இருத்தல் வேண்டும்.

## 7. தலைமையத்துவம்

தன்னுடன் வினையில் ஈடுபட்டு வரும் ஊழியர்களிடம் கனிவு, பரிவு மற்றும் நட்புடன் பழகவேண்டும். தொழில்முனைவோர் ஓர் முன்மாதிரியாக செயல்படவேண்டும். பிறர் சோர்வு காணும்போது தனது கனிவான வார்த்தைகள் அவர்களின் ஆர்வத்தை மீண்டும் எழுச் செய்ய வேண்டும். சொல்வதை செய்தல் வேண்டும். செய்வதை சொல்லவேண்டும் என்ற உணர்வினை உடையவராக இருத்தல் வேண்டும்.

## 8. தொலைநோக்கு பார்வை

தொழில் முனைபவர் ஒரு நல்ல முன் கணிப்பாளராக இருத்தல் வேண்டும். தற்போதைய சூழ்நிலை எவ்வளவு காலம் தொடரும், எதிர்காலத்தில் என்னென்னமாற்றங்கள் ஏற்படும் என முன்கூட்டியே சிந்திக்கவேண்டும். நுகர்வோர்களின் ஆதரவு பொருளாதார சூழ்நிலையின் மாற்றம், தொழில் நுட்ப மாற்றம் மற்றும் போட்டி சூழ்நிலை பற்றி சிந்திக்க வேண்டும். அதற்கு ஏற்றவாறு திட்டங்கள் வகுக்க வேண்டும்.

## 9. பகுப்பாய்த் திறன்

தொழில் முனைபவர் பாரபட்சமின்றி விருப்பு வெறுப்புகளை தவிர்த்து சமநிலையில் முழு மனதுடன் மேற்கொள்ள வேண்டும். அவசர நிலையில் எடுக்கும் முடிவுகள் இலக்கை அடைய வழிவகுக்காது. எனவே எந்த ஒரு முடிவை மேற்கொண்டாலும் சம்மந்தப்பட்ட காரணிகளை சீர்தூக்கி பகுத்தாய்ந்து ஒரு தெள்ளிய முடிவை மேற்கொள்ள வேண்டும். எனவே ஓர் நல்ல பகுத்தறிபவராக தொழில்முனைவோர் இருத்தல் வேண்டும்.

## 10. முடிவு எடுக்கும் திறன்

எந்த தொழில் துவங்கலாம்: என்ன உற்பத்தி செய்வது: எங்கு தொழில் துவங்குவது, யாரை பதவியில் அமர்த்துவது: கையாலும் தொழில் நுட்பம். எந்த அளவு பொருட்களை உற்பத்தி செய்வது, எங்கே விற்பனை செய்வது, எவ்வாறு தரத்தை கூட்டுவது, போட்டியை எதிர்கொள்வது, விலை வைப்பது, நிரணயம் செய்தல் மற்றும், விளம்பரம் செய்வது போன்ற பல தரப்பட்ட முடிவுகளை நிதானமாக, மேற்கொள்ளுதல் மிகவும் சிறந்தது. விரைவான முடிவை சில அவசர விவேகமற்ற முடிவாக அது ஏற்படக்கூடாது. முடிவு

எடுக்கும் போது பலதரப்பட்ட காரணிகளை சீர்தூக்கி அலசி ஆராய்ந்து மேற்கொள்ளல் வேண்டும்.

**தொழில் முனைவின் முக்கியத்துவம்**




தொழில் முனைவு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெறும் பங்கு வகிக்கின்றது. கீழ்குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் தொழில் முனைவின் அவசியத்தை உணர்த்துகின்றன.

1. **புதுமை படைத்தல்**

தொழில் முனைவும் புதுமை புகுத்துதல் ஆகிய இரண்டும் மிகவும் நெருக்கமான ஒன்றாகும் தொழில் முனைவு இல்லையேல் புதுமைக்கு வழி இல்லை. புதுமை புகுத்துவதன் மூலம் தொழில் முனைவோர்கள் நாட்டின் மேம்பாட்டிற்கு பெரும் பங்கு வகுக்கின்றனர். புதுமை எந்த வடிவத்திலும் இருக்கலாம் - புதிய பொருள்: புதிய நுட்பமுறை, புதிய உற்பத்தி முறை புதிய கச்சாப் பொருள், புதுமை மேற்கொள்வதன் மூலம் நடைமுறையில் இருக்கும் பொருட்களில் சேர்த்தல் புதிய பொருளை அறிமுகம் செய்தல், புதுமை படைத்தல் ஒரு நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்தியை கூட்டுவதுடன் நாட்டு வருமானத்தையும் வெகுவாக உயர்த்துகிறது.

2. **நாட்டின் மொத்த பொருள் உற்பத்திக்கு பங்களித்தல்**

தொழில் முனைவு நாட்டின் ஒட்டுமொத்த பொருள் உற்பத்திக்கும் மற்றும் நாட்டின் மொத்த வருமானத்தை அதிகரிப்பதற்கும் அதிக பங்கு வகிக்கிறது. வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி, போன்ற நாடுகள் தொழில் முனைவு மேம்பாட்டால் அன்நாட்டின் ஒட்டுமொத்த பொருள் உற்பத்தியிலும், தனிநபர் வருமான முன்னேற்றத்திற்கும் மற்றும் நாட்டின் தேசிய வருவாயை அதிகரிப்பதிலும் வெற்றி கண்டுள்ளன.

### 3. சீரான வட்டார வளர்ச்சி

அரசு பல்வேறு சலுகைகள், வரிவிலக்குகள் மற்றும் மானியங்கள் அளிப்பதன் மூலம் நாட்டின் தொழில் ரீதியாக பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சி அடைந்து வருகின்றது. மேற்கண்ட சலுகைகளின் மூலம் பலர் பின்தங்கிய பகுதிகளில் தொழில் முனைவு செயலை மேற்கொள்கின்றனர். இதனால் தொழில் வளர்ச்சி ஏற்பட்டு, புவியியல் ரீதியான மக்கள், நகர்பறங்களை நோக்கி வேலை தேடி செல்லும் அவல நிலையை தவிர்த்திட வழிவகை செய்கின்றது.

## 4. ஏற்றுமதி முன்னேற்றம்

நாட்டின் ஏற்றுமதி வளர்ச்சிக்கு தொழில் முனைவு ஒரு கருவியாக விளங்குகிறது. ஏற்றுமதி வாய்ப்பு உள்ள பொருட்களை தயாரிக்க முன்வரும் தொழில் முனைவோர்க்கு சிறப்பு வசதிகள், சலுகைகள், மானியங்கள். வரிவிலக்குகள் போன்ற சலுகைகள், தருவதன் மூலமாக ஏற்றுமதி வாய்ப்புள்ள பொருட்களை உள்நாட்டில் தயாரிக்க வழிவகை உள்ளன. இதனால் உள்நாட்டின் அந்நிய செலாவணி இருப்பு அதிகரிக்க வழி வகுக்கிறது. இந்த சாதகமான அந்திய செலாவணி இருப்பின் மூலம் செலுத்து நிலை இருப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தை சரிசெய்ய வழிவகுக்கிறது.

### 5. ஊள்ளார்ந்த வளப் பயன்பாடு

நாடு முழுவதும் தொழில் முனைவை அதிகரிப்பதின் மூலம் நாடு முழுவதும் பயன்படுத்தப்படாமல் உள்ள வளங்கள் பயன்பாட்டுக்கு உள்ளாகின்றன. நாடு முழுவதும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களை பரவலாக உருவாக்குவதன் மூலம் பலத்தரப்பட்ட வளங்கள், இயல் மற்றும் மனித வளங்களை முழுமையாக. உற்பத்தியில் ஈடுபடுத்த முடிகிறது. ஒரு நாட்டில் தொழில் இன்னமையால் அந்நாட்டு வளங்கள் பயனற்று விடுகிறது.

### 6. பொருளாதார சக்தி குவிதலை தவிர்த்தல்

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிலை ஒரு நாட்டில் ஏற்படுத்துவதன் மூலம், அந்நாட்டு செல்வங்கள் ஒரு சிலரிடம் துவிந்து இருப்பதை தவிர்க்க முடிகிறது. புரவலான தொழில் வளர்ச்சியின் மூலம் பொருளாதார ஏற்ற தாழ்வுகள் களையப்படுகின்றன. இதனால் மக்களிடையே வருமானம் சீராக பகிரப்படுகிறது.

## 7. வாழ்க்கைத்தர உயர்ச்சி


நாடுமுழுவதும் தொழில் முனைவு ஏற்படுத்துவதற்கு உரிய ஆதரவு நடவடிக்கைகள் அதிகரிப்பதன் மூலம் பெருக்குவதனால் பல சிறு, குறு நடுத்தர தொழில் உரிமையாளர்கள் பெருகி வருகின்றனர். அவர்களிடம் பணிபுரியும் ஏராளமான ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் அவர்களின் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் பெற்று வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்திக் கொள்ள முயல்கின்றனர். இவர்கள் வாங்கும் ஆடம்பர மற்றும் அத்தியாவசிய பொருட்களால் நாட்டின் வருமானம் ஒட்டுமொத்த பொருள் உற்பத்தி பெருகி நாட்டின் வருமானம் உயர்ந்து சேமிப்பு அதிகரித்து நாடுதழுவிய அளவில் வளர்ச்சி அடைகிறது என்றால் அது மிகையாகாது. எனவே தொழில் முனைவின் மூலம் வாழ்க்கை தரத்தை உயர்த்தி ஏற்றதாழ்வு அற்ற சமூகத்தை உருவாக்க வழிவகை செய்கிறது.

**தொழில் முனைவோர், அக தொழில் அல்லது செயல்முனைவோர் மற்றும் மேலாளர்- ஒப்பீடு.**

**அகச்செயல் முனைவோர்**

அகத்தொழில் முனைவர் அல்லது செயல் முனைவோர் என்பவர் நிறுமத் தொழில் முனைவோரைப் போன்றே செயல்படுவர். அதாவது ஒரு தொழில் முனைவோர் ஆரம்பித்த தொழிலில் பணிபுரியும் ஒரு நபர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள செயல் திட்டத்தில் அல்லது தமக்கு வழங்கப்பட்ட பணியில் தனது ஆற்றலை பயன்படுத்தி தனது புதிய எண்ணங்களை நிறுவனத்தின் வளங்களைக் கொண்டு செயல்படுத்துபவர். அதாவது நிருமத்திற்குள் உள்புறம் செயல்முனைவோராக திகழ்கிறார்.

## 23.06 தொழில் முனைவோரின் பணிகள் (Entrepreneurial Functions)




### 1. தொழில் முனைவோரின் தோற்றுவிப்பு பணிகள்

i) எந்தெந்த தொழிலில் நுழைந்தால் என்னென்ன வாய்ப்புகள் கிட்டும் என எப்போதும் சிந்திக்க வேண்டும். தொழில் துவங்கும் எண்ணம் சுயமாகவோ அல்லது பிறர் மூலமாகவோ அரும்பலாம். சிலசமயங்களில் தொழில் முனைவோர் தனது அனுபவத்தின் மூலமோ படித்த படிப்பின் வாயிலாகவோ, பெற்ற பயிற்சியின் வழியாகவோ, சந்தையில் ஆய்வு நடத்தியோ நல்ல நல்ல தொழில் முனைவு வாய்ப்புகளை கண்டறிய முடியும். எனவே எந்த செயல் வினை பலனளிக்கும் என சீராய்ந்து ஒன்றை தெரிவு செய்வது முதல் பணியாகும்.

### ii) தொழிலின் நோக்கத்தினை தீர்மானித்தல்

தான் நுழைந்த தொழிலின் தன்மை, மற்றும் தொழிலின் வகை அதாவது உற்பத்தி செயலா அல்லது வணிகச் செயலா என்பதை மனதில் வைத்தும், தொழிலினை செயலாக்க தேர்வு செய்யப்பட்ட தொழில் நிறுமத்தின் நோக்கத்தினை தீர்மானிக்க வேண்டும்.

### iii) ஆழ்ந்த பகுப்பாய்வு

தொழில் முனைபவர் உற்பத்தி செய்ய அல்லது விற்பனை செய்ய விரும்பும் பொருளினை பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொள்ளவேண்டும். உத்தேசித்த பொருளின் சந்தை வாய்ப்பு அதாவது தேவை எப்படி உள்ளது, அந்த பொருளை வெற்றிகரமாக உற்பத்தி செய்ய முடியுமா என்று தீவரமாக ஆய்வில் இறங்க வேண்டும். உற்பத்தி செய்ய உத்தேசித்துள்ள பொருளை தயாரிக்க தேவைப்படும் இடு பொருட்கள் எங்கு கிடைக்கும், அதன் விலைகள் என்ன அதனை எந்த சொற்பகர்வுகளால் பெறுவது எனவும் ஆய்வு நடத்திட வேண்டும்.

## iv) தொழில் நிறுமத்தின் அமைப்பு முறையினை தேர்வு செய்வது

தொழில் முனைவோர் தான் துவங்க விரும்பும் வினையினை செயல்படுத்த பொருத்தமான தொழில் அமைப்பு முறையை தீர்மானிக்க வேண்டும். அதாவது தனியாள் வணிகமா, கூட்டாண்மை வியாபார நிறுமமா அல்லது கூட்டுறவு அமைப்பா என்பதை முடிவு செய்திடல் வேண்டும். மேற்கூறிய அமைப்புகளில் எதனை தேர்ந்தெடுப்பது என்பதை பல காரணிகள் தீர்மானிக்கின்றன. அவைகள் ஆவன: உற்பத்தி உத்தேசித்து பொருளின் தன்மை. முதலீட்டின் அளவு, நிலைத்தன்மை போன்றவைகளாகும்.

## V) தொழில் துவங்கும் சடங்குமுறைகள்

பொருத்தமான தொழிலின் அமைப்பு முறையை தேர்ந்தெடுத்த பின்பு, அந்த அமைப்பு முறையை ஏற்படுத்த சடங்கு முறைகள் உள்ளன. துனியாள் வியாபாரமாக இருப்பின், சடங்கு முறை ஒன்றும் பெரியதாக இல்லை. கூட்டாண்மை தொழில் அமைய கூட்டாண்மை பத்திரம் தயாரித்து அதனை பதிவு செய்திட வேண்டும். ஆனால் கூட்டு பங்கு நிறுமமோ அல்லது கூட்டுறவு நிறுமத்தையோ ஏற்படுத்த சட்ட சடங்குகள் ஏராளம் உள்ளன. ஆவை அனைத்தையும் நிறைவேற்றி தோற்றுவிக்கும் தொழில் முனைவோர் வினையை தொடங்க வேண்டும்.

## Vi) தொழில் திட்டம் தயாரித்த செயல்

தொழில் முனைபவர் வியாபார திட்டத்தினை தயாரிக்க வேண்டும். இந்த திட்டத்தின் மூலமே தான் மேற்கொள்ள இருக்கும் வினையின் நோக்கங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் எய்த முடியும். இந்த தொழில் திட்டம் ஒரு செயல் ஆவணமாகும். இந்த ஆவணத்தில் தொழில் முனைவோரை பற்றிய விவரங்கள், தொழிலின் அமைவிடம், நிலம் மற்றும் கட்டிட தேவைகள், நிறுவ வேண்டிய இயந்திரங்கள், பொறிகள், முடிவற்ற பொருட்களை, தயாரிக்க தேவைப்படும் உள்ளீட்டுப் பொருட்கள் வினையை செயலாக்கத் தேவைப்படும் மனித சக்தி, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வசதி, நடைமுதலின் அளவு சமநிலை புள்ளி, செயல் திட்டத்தினை செயலாக்கும் கால அளவு, போன்ற விவரங்கள் இந்த ஆவணத்தில் இடம் பெறவேண்டும்.

## vii) நிதி திரட்டுவது

வினையை செயலாக்க தேவைப்படும் நிலைநிதி மற்றும் நடைமுதல் நிதிகளின் அளவை தீர்மானிக்கவேண்டும். நிலை நிதியினை பொறுத்துவரை சொந்த சேமிப்பிலிருந்தோ நண்பர்கள் வட்டாரத்தில் இருந்தோ, நிதி நிறுமங்களிடமிருந்து பங்கு வெளியீட்டின் மூலமே, கடன் பத்திர வெளியீட்டின் மூலமோ, பந்தக் கடன் பெறுவது வாயிலாக சொத்துக்கள் அடமானம் செய்வதன் மூலமோ, பத்திரங்கள் அடகு வைப்பதன் மூலமோ நடைமுதலை பெறுவது குறித்துத் தீர்க்கமான முடிவு மேற்கொள்ள வேண்டும். ஆக நிலைமுதல் மற்றும் நடைமுதலை பெறும் முல ஆதாரங்களை அடையாளம் காணவேண்டும்.

## viii) கருவிகலன்கள் மற்றும் கச்சா பொருட்கள் பெறுதல்

பொருளைத் தயாரிக்க உதவும் கருவி கலன்கள் மற்றும் தொழில் நுட்பம் எங்கு கிடைக்கும் என ஆயவேண்டும். அவ்வாறே பொருளைத் தயாரிக்கத் தேவைப்படும் உள்ளீட்டு பொருட்கள் பெறுவது குறித்துத் திட்டமிட வேண்டும். கருவிகள் பொருட்கள் எங்கு கிடைக்கிறது என்ன விலையில் கிடைக்கிறது யார் யார் எல்லாம் உற்பத்தி செய்கின்றனர், பல்வேறு தயபரிப்பாளர்களின் சொற்பகர்வுகள் என்னென்ன என்பதை அக்கு வேறு ஆணிவேறாக அலச வேண்டும்.

II. மேலாண்மைப் பணிகள் Managerial Functions




### 1. திட்டம் தீட்டல்

மேற்கொண்ட தொழில் வினை தன்னுடைய இறுதி இலக்கினை நோக்கிச் செவ்வனே பயணிக்க நோக்கங்கள், இலக்குகள், தொலை நோக்கு செயல்முறைகள், காலத்திட்டம் எண்குறித் திட்டம் நிகழ்வுத்திட்டம் போன்றவற்றை வகுக்க வேண்டும்.

### 2. அமைப்பு பணி

தொழில் முனைவோர் தொழில் திட்டத்தினை அரங்கேற்ற தேவைப்படும் தொழில் அமைப்பினைத் தேர்வு செய்தல், அதன் அக கட்டமைப்பு முறையை வடிவமைத்தல், துறைகளை உருவாக்குதல், அதிகார ஒப்புடைவு செய்தல், அதிகார மையமாக்குதல் அல்லது பரவலாக்குதல், மேற்பார்வை வீச்செல்லையை முடிவுசெய்தல் தேவைப்படம் பணியர்களைப் பணி அமர்த்தல் அவர்களிடையே உறவு முறைகளை ஏற்படுத்தி பொறுப்பாக்குதல் போன்ற அலுவலக நடைமுறைகளைச் செயல்படுத்த வேண்டும்.

### 3. கட்டளை இடல்

கட்டளை இடல் பணியைப் பொறுத்த வரை தொழில் முனைவோர் தன்னிடம் பணிபுரியும் ஊழியர்களை வழிநடத்திச் செல்லவேண்டும். வினையின் நோக்கினை எய்திட ஊழியர்களுக்குச் செயல் ஊக்கம் தரவேண்டும். கட்டளைகள் மற்றும் இலக்குகளை அடைய முறையான செய்தி மற்றும் தகவல் ஓட்டத்தை அமைப்பிற்குள் ஏற்படுத்த வேண்டும். அனைத்துப் பணியார்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணியார்களும் தங்களுக்கு வேண்டும். அனைத்துப் பணியார்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற அவர்களுக்கு ஏற்ற தலைமையை நல்கவேண்டும்.

### 4. கட்டுப்பாடு காத்தல்

தொழில் முனைவோர் தன்னுடைய ஊழியர்களின் பணி செயல்பாட்டை மதிப்பிட மற்றும் அனைத்துப் பணிகளும் செவ்வனே அரங்கேறுகிறதா என உறுதி செய்ய தேவையான கட்டுப்பாட்டு முறையினைப் புகுத்தல் வேண்டும். நிறும கட்டுப்பாடு காத்தலைப் பொறுத்தமட்டில், இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் உள் அடங்கும் அவையாவது:

1. தர இலக்கை நிர்ணயித்தல்
2. உண்மையான செயல் அளவை மதிப்பிடல்
3. செய்த செயலை இலக்குடன் ஒப்பு நோக்குதல்
4. இலக்கோடு செயல்பாடு ஒத்து இருந்தால் மனநிறைவு அடைதல்.

5. சரி செய் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
6. இலக்கும் செய்தசெயல் அளவும் வேறுபட்டால் ஏன் இலக்குகள் எட்டப்படவில்லை என்ற காரண காரியத்தை அலசுதல்.

அதன் மூலம் இலக்கை அடைய வகை செய்தல். நிறுமத்தின் செயல்திறனை அளவிட பல்வேறு கட்டுப்பாட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவைகளாவன அகசீராய்வு, அகத்தணிக்கை, நிர்வாக தகவல் தொடர்பு முறை, செலவுக்கட்டுப்பாடு, நிதிசார் கருவிகள், தரக்கபட்டுபாடுமுறை, எண்குறித்திட்டமுறை போன்ற இன்ன பிற நுட்பங்களும் கையாளப்படுகின்றன.

### 5. ஒருங்கிணைப்பு

பலதரப்பட்ட துறைகளின் தனிப்பட்ட செயல்பாடுகளை ஒன்றுபடுத்தி அவற்றை நிறும இலக்குகளை நோக்கி திருப்பிடும் செயலுக்கு ஒருங்கிணைப்பு என்று பெயர். இதனை மகாபாரதத்தில் கிருட்டிணன் ஓட்டிய பலகுதிரைகளை இழுக்கும் இரதத்துடன் ஒப்பிடலாம். ஒவ்வொரு குதிரையும் ஒரு துறை கிருட்டிணன் கடவுள் தான் தொழில் உரிமையாளர் சாலையில் நேராக பயணிப்பது தான் இலக்கு என வைத்துக் கொள்வோணம். அனைத்து குதிரைகளையும் ஒரே சீராக ஓட்ட வேண்டும். அப்போதே இரதம் இயங்கும். அதுதான் ஒருங்கிணைப்பு.

### வணிகப்பணிகள்

### 1. உற்பத்தி அல்லது தயாரிப்பு பணி:

உற்பத்தி பணியை பொறுத்தவரை தொழில் முனைவோர் எந்த இடத்தில் தொழிலை நிறுவுவது: தொழிலை நிறுவிய இடத்தின் உள் அமைப்பு எப்படி இருக்கவேண்டும்: என்னப்பொருளை தயாரிக்க வேண்டும். எந்த அளவு உற்பத்தி பொருட்கள் இருக்கவேண்டும், போன்ற உற்பத்தி தொடர்பான பணிகளை முடிவு செய்து செயலில் இறங்கவெண்டும். இது மட்டுமின்றி உற்பத்தி திட்டமிடல், கட்டுப்பாடு, பராமரிப்பு, பழுதுநீக்குதல், கொள்முதல் சரக்கு இருப்பு வைத்தல், பொருட்களை உற்பத்தி கூடங்களில் கையாளுதல் போன்ற உற்பத்தியுடன் நெருங்கிய தொடர்புடைய துணை மற்றும் இணைப் பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

### 2. சந்தையிடுகை

சந்தையிடுகை என்ற சொல் பொருள் உற்பத்திக்கு முன்பே தொடங்கி பொருளை உற்பத்தி செய்த பின் வாடிக்கையாளர் வசம் கொண்டு சேர்க்கும் வரையிலான ஒட்டு மொத்த நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய சொல். விற்பனை என்ற சொல் சந்தையிடுகை பணியின் ஒரு முக்கிய அங்கம். விற்பனை செய்வதே சந்தை இடுகை என நினைத்து விடக்கூடாது. சந்தையிடுகை பணியில் தொழில் முனைவோர் செய்யவேண்டிய பணிகளாவன: பொருட்களைப்பறிறிய வாடிக்கையாளரின் சுவை மற்றும் மன ஓட்டத்தை அறிதல், பொருளை திட்டமிடல், பொருளை உருவாக்குதல், பொருளை உருவாக்கி நிலைப்படுத்தல் விலைவைத்தல் கட்டுமம் செய்தல், பண்டகக்காப்பில் இருப்பு வைத்தல், பொருளை பகிர்தல் பொருளின் விற்பனையை கூட்ட விற்பனையை பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளால், விளம்பரம் செய்தல், பொருளை விற்க விற்பாண்மையரை அமர்த்தல் போன்ற பல பணிகளை தொழில் முனைவோர் செய்யவேண்டும் சேர்க்க வேண்டுமோ அதற்கு தக்கபடி சந்தை கலவையை தேர்ந்தெடுக்க வேண்டும். சந்தை கலவை மற்றும் பருப்பொருள் விநியோகம் இவைகளை உள்ளடக்கும். சேவைப் பொருள் சந்தையை பொறுத்தவரை மேற்கூறிய சந்தை கலவை உறுப்புகளுடன் மக்கள் செயல்முறை உணர்வு முறை இந்த மூன்றையும் சேர்த்துக்கொண்டு சேவை சந்தை கலவையை உருவாக்க வேண்டும்.

## 3. கணக்கியல் பணி

கணக்கியல் பணி என்பது கணக்கு வழக்கு பார்க்கும் பணி அதாவது ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் மேற்கொண்ட தொழில் முயற்சியில் இலாபம் வந்தள்ளதா அல்லது நட்டம் வந்துள்ளதா எனவும் குறிப்பிட்ட நாளில் முனைந்த தொழிலின் நிதி நிலை எப்படி உள்ளது அதாவது வைப்பு சொத்துக்களின் மதிப்பு என்ன: பொறுப்புகளின் மதிப்பு எண் மூலதனம் எவ்வளவு கூடியுள்ளது அல்லது குறைந்துள்ளது. பிறருக்கு தரவேண்டிய பொறுப்புகள் இலாப நட்டக கணக்கு தயாரிக்கும் பணியையும் தொழில் முனைவோர் மேற்கொள்ள வேண்டும் இதுமட்டுமன்றி ரொக்க நடமாட்டம் மற்றும் நிதி நடமாட்டம் அறிக்கைகள் தயாரித்து ரொக்க மற்றும் நிதியூட்டத்தை கண்காணிக்க வேண்டும்

## 4. நதிசார் பணி

நிதிசார் பணியை பொறுத்தவரை தொழில்முனைவோர் நிதியூட்டும் மறையினை முடிவு செய்யவேண்டும். மூலதன கட்டமைப்பை முடிவு செய்யவெண்டும். நிதி போக்குவரத்தை கண்காணிக்க வேண்டும். நடைமுறை முதலை சரியாக நிர்வகிக்க வேண்டும். பங்காதாயக் கொள்கை வகுக்க வேண்டும். நிதியை சரியான வழிகளில் முதலீடு செய்யும் முதலீட்டு திட்டத்தை உருவாக்க வேண்டும். ஏட்டுக் கடனை நிர்வகிக்க வேண்டும்.

## 5. மனிதவள பணிகள்

தொழில் முனைவோர் தான் மேற்கொண்டுள்ள வினையை செயல்படுத்த எவ்வளவு மனித சக்தி தேவைப்படும் என திட்டம் தயாரிக்கவேண்டும். இரண்டாவதாக எம்மாதிரியான மனிதவளம் அதாவது தொழில் நுட்ப மனிதவளம் மற்றும் பொதுவான மனிதவளம், எவ்வளவு தேவை என நிர்ணயித்து அவர்களை நிறுமத்தின நிர்வாக கட்டமைப்பில் பல்வேறு மட்டங்களில் பணியில் அமர்த்த வேண்டும். இதற்கென பின்வரும் பணிகளில் ஈடுபடவேண்டும். தகுதியான நபர்களை கண்டறிந்து அவர்களை விண்ணப்பிக்க தூண்டுவேண்டும் தகுதி பெற்ற பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வு செய்த பணியாளர்களுக்கு பணிகளை அறிமுகம் செய்ய வேண்டும். அறிமுகம் செய்யவேண்டும் அறிமுகம் செய்தவர்களை காலவாரியாக பயிற்சிக்கு உட்படுத்த வேண்டும். சரியான ஊதியம் வழங்க வேண்டும் ஊழியர்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஊழியர்களின் நல்வாழ்வு திட்டங்களை கொண்டு வரவேண்டும். ஊழியர்களின் செயல்திறமையை மதிப்பிட்டு அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கவேண்டும். தவறு இழைக்கும் ஊழியர்களை ஒழுங்குபடுத்த வேண்டும் திறமையற்ற மற்றும் பயனற்ற ஊழியர்களையும், ஊழல் செய்தவர்களையும் வெளியேற்றவேண்டும்.

## நமது சிந்தனைக்கு

தாங்கள் படிப்பை முடித்த பின்பு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளை மனதில் கொண்டு எம்மாதிரி ஈடுபடலை தேர்வு செய்வீர்கள்:

| பரிமாணம் | ஊதியத் தொழில் | சுயதொழில் |
|---|---|---|
| வருவாய் | ஆரம்ப கட்டங்களில் நம்பத்தகுந்த மற்றும் அநேகமாக உயர்ந்த வருமானம், ஆனால் பதவி உயர்வு வாய்ப்புகளால் வரையறுக்கப்படுகிறது | பொருளாதார நிலைமைகள் மற்றும் தொழிலதிபரின் முயற்சிகளைப் பொறுத்து வருமான ஏற்ற இறக்கம் |
| வேலை நேரங்கள் | நிலையான வேலை நேரங்கள் | வேலை நேரத்தைத் தேர்ந்தெடுப்பதில் முழுமையான சுதந்திரம். |
| வேலை பாதுகாப்பு | பொதுத்துறை நியமனங்கள் தொடர்பான பதவி நிலைகள் நிலையானது தனியார் துறை நியமனங்களில் முழுமையான நிலையற்ற வேலை. | வணிகம் இயங்கும் வரை நிலையான வேலை |
| நிதி ஆபத்து | ஊதியம் பெறும் வேலைகளில் நிதி ஆபத்து இல்லை | தொடர்ச்சியான இழப்பு காரணமாக முதலீட்டை இழப்பதற்கான ஆபத்து அதிகமாக உள்ளது. |
| தனிப்பட்ட திருப்தி | ஒரு பணியாளர் வேலை திருப்தி பெறலாம். பணியாளரின் முயற்சிகளால் முதலாளிகள் அதிக பயன் அடைந்து விடுவர் | உரிமையாளர் தனிப்பட்ட திருப்தி உணர்வு பெறுகிறார்.<br>வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உரிமையாளரால் எடுக்கப்பட்ட முயற்சிகள் நேரடியாக அவருக்கு வெகுமதி அளிக்கின்றன. |
| பொறுப்பு | ஒரு ஊழியர் நிறுவன ஏணியில் நகரும்போது பொறுப்பின் அளவு அதிகரிக்கிறது. | பொறுப்பின் அளவு பல்வேறு பங்குதாரர்களுக்கு எப்பொழுதும் அதிகமாக உள்ளது. |

# தொழில் முனைவோருக்கான அரசின் திட்டங்கள்

**தொழில் முனைவில் புதுமை புகுத்துவதில் இந்தியாவின் உதவி**

நாட்டின் புதுமை புகுத்துதல் மற்றும் தொழில் முனைவை வளர்ப்பதற்காக பல முயற்சிகளை இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்டு, அதற்காக தொழிற்கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தியுள்ளது. வேலை உருவாக்கம் என்பது இந்தியா எதிர்கொள்ளும் முன்னணி சவாலாகவும் உள்ளது. ஒரு குறிப்பிட்ட தனிச்சிறப்பு மற்றும் தனித்துவமான மக்கள் தொகை நலனுடன் இருப்பது இந்தியாவிற்கு நன்மை பயக்கிறது. எனினும், புதுமைப்படுழுத்தவும், தொழில் முனைவோர்களை மேம்படுத்தவும், தேசிய மற்றும் உலக நலனுக்காக வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் மகத்தான ஆற்றல் கொண்டுள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் புதிய கண்டபிடிப்புகளை வளர்ப்பதற்கான புதிய திட்டங்களும், வாய்ப்புகளும் இந்திய அரசால், அதாவது விவசாயம், இரசாயன மற்றும் உரங்கள், நிதி, வர்த்தகம் மற்றும் தொழில் தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம், பெருநிறுவன அலுவல்கள், கலாச்சாரம், உணவ பதப்படுத்துதல், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் போன்றவையாகும்.

நிதி உதவி, காப்பீடு, மானியம், பயிற்சி, தொழில் தொடங்க ஆரம்பநிலை தொழில்நுட்பம், வணிக கடன்கள் மற்றும் சிறப்பு ஊக்கம் போன்றவற்றை புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க தொழில் முனைவோருக்கு வழங்கப்படுகிறது.

**தொழில் முனைவை மேம்படுத்துதல் மற்றும் புதுமை புனைதலக்கான இந்தியாவின் முயற்சிகள்:**

### 1. ஸ்டாட்டப் இந்தியா Startup India:

தொடக்க நிலையில் உள்ள தொழில்கட்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் அவற்றை வளர்க்கும் திட்டத்தினை 2016ம் ஆண்டு சனவரியில் துவங்கியது. துவக்கக் காலம் முதலே பல தொழில் முனைவோர்கள் பலதரப்பட்ட தொழில் வினைகளை துவக்கி வெற்றி கண்டனர். நிதிகளின் நிதி (Fund of Fund) என்ற நிதியின் மூலம் தொடக்க நிலை தொழில் வினைகளுக்கு நிதி வசதி செய்து தரப்பட்டு வருகிறது.

### 2. இந்தியாவில் தயாரிப்பு திட்டம் Make in India

இத்திட்டத்தின் மூலம் இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற உதவி செய்யப்படுகிறது. இத்திட்டம் 2014 செப்டம்பர் திங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பங்கேற்று இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற இந்திய குடிமகன்கள், வியாபார தலைவர்கள், கூட்டாளிகளாக விழையும் நபர்கள், உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. தற்பொழுது இதன் விளைவாக அன்னிய முதலீடு, புதுமை புகுத்தல், திறன் வளர்ச்சி, அறிவுசார் சொத்து பாதுகாப்பு, உற்பத்தி, கட்டமைப்பு மேம்பாடு போன்ற வளர்ச்சிசார் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு முழுவீச்சில் செயல்பட்டு வருகிறது.

### 3. அடல் புதுமை புகுத்தல் திட்டம் Atal Innovation Mission (AIM)

பன்னாட்டு தரத்திற்கு இணக்கமான முறையில் புதுமையான பொருட்களை வடிவமைப்பது மற்றும் தொழில் முனைவை முழுவீச்சில் ஊக்குவித்து அதை வளர்ப்பது என்ற முதன்மையான நோக்குடன் அடல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில்நுட்பம் அறியப் பெற்ற திட்டங்களுக்கே அதிக முன்னுரிமை தரப்படுகிறது.

**4. பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு support to Training and Employment Programme for Women (STEP)**

ஊரகப் பகுதியில் உள்ள மகளிருக்கு முறைசார் பயிற்சியை நல்கும் நோக்குடன் மகளிர் மற்றும் சிறார் அமைச்சகம் இத்திட்டத்தை செயல்படுத்தியது. தொழில்முறை மற்றும் ஆற்றல் மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் திட்ட குழுவும் இணைந்து இதுவரையில் இதுக்குறித்து நடைமுறையில் இருந்த 30 ஆண்டுகால வழிகாட்டல் நெறிமுறைகளை தற்கால தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்தும் இத்திட்டத்தின் மூலம் வேளாண்துறை, பழ வேளாண்மை, உணவு பதப்படுத்துதல், சுற்றுலா, பாரம்பரிய கைவினைக் கலைகள், விருந்தோம்பல், கணினி மற்றும் தகவல் தொடர்பு துறை போன்ற துறைகளில் துவங்கப்படும் மகளிர் தொழில் முனைவோருக்கு பயிற்சி நல்கப்படுகிறது.

**5. ஜன்தன்-ஆதார்-மொபைல் Jan-Dhan-Aadhar-Mobile(JAM)**

இத்திட்டத்தின் மூலம் பல அரசுத் திட்டங்களில் பயன் பெற்று வரும் பயனாளிகளுக்கு சேரவேண்டிய மானியத்தை சம்பந்தப்பட்ட துறை நேராக அவர்களுக்கு வழங்கும் நோக்கத்தில் பயனாளிகளை கட்டாயமாக வங்கிகளில் கணக்கு ஆரம்பிக்க கட்டாயப்படுத்தப்பட்டு அனைவர் பெயரிலும் வங்கிக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் பயனாளிகளுக்கு செல்ல வேண்டிய மானியத்தை சுரண்டி வந்த இடைத்தரகர்கள் அறவே அகற்றப்பட்டனர். இத்திட்டத்தின் மூலம் பயனாளிகள் மானியத் தொகையைப் பயன்படுத்தி தங்களின் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள முடிகிறது.

**6. இலக்குமுறை இந்தியா (OR) டிஜிட்டல் இந்தியா DIGITAL INDIA**

இத்திட்டத்தின் மூலம் அனைத்து அரசின் சேவைகளும் பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் இந்திய பொருளாதாரம் மின்னணு பொருளாதாரமாக மாறி வருகிறது. உலகெங்கும் கிடைக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை மக்கள் மின்னணு முறையில் பெற வகை செய்திடும் அறிவு பொருளாதாரமாக இந்திய பொருளாதாரம் மாறி வருகிறது என்றால் மிகையாகாது.

**7. ஸ்டாண்ட் அப் இந்தியா Stand-up India**

இத்திட்டத்தின் மூலம் பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மகளிருக்கு நிறுமக் கடன் வழங்கி, அவர்களும் வளர்ந்து வரும் இந்திய பொருளாதாரத்தின் பலனை பெற்று அனுபவிக்க வகை செய்யும் நோக்கத்தோடு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் துவங்கப்படம் உற்பத்தி, சேவை மற்றும் வியாபார வினைகட்கு ரூபாய் 10 லட்சம் முதல் ரூபாய் ஒரு கோடி அளவிற்கு ஒவ்வொரு மகளிர் தொழில் முனைவோருக்கு தரப்படுகிறது. மகளிர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

**8. வணிகம் சார்ந்த தொழில்முறை உதவி மற்றும் வளர்ச்சித்திட்டம் Trade Related Entrepreneurship Assistance and Development (TREAD)**

அரசு சாரா அமைப்புகளின் பதிவு செய்து கொண்ட நலிவுற்ற மகளிருக்கு கடன் தரும் உன்னதமான திட்டம் இத்திட்டம். இத்திட்டத்தின் மூலம், பொருளாதார ரீதியாக நலிவுற்ற மகளிர் கடன் உதவிமட்டுமின்றி, பயிற்சி ஆலோசனை பெறவும் முடியும். குறிப்பாக, வேளாண் சாரா திட்டங்களுக்கு இந்த திட்டத்தில் உதவி வழங்கப்படுகிறது.

**9. பிரதான் மந்திரி குஷால் விகாஸ் திட்டம் Mandri Kaushal Vikas Yojana (PMKVY)**

இத்திட்டத்தின் கீழ் தேசிய திறன் வளர்ச்சி மற்றும் தொழில்துறை அமைச்சக தொழில் சார்ந்த திறமை ஆற்றல் மற்றும் திறனை மேம்படுத்த பயிற்சி அளிக்கின்றது. பயிற்சி பெற்ற

பின்பு பயனாளிகள் சுயமாக தொழில் துவங்கி தங்களை மேம்படுத்திக் கொள்ள இத்திட்டம் உதவுகிறது.

### 10. தேசிய திறன் அபிவிருத்தி குறிக்கோள் National Skill Development Mission (NSDM)

இத்திட்டம் 2015ஆம் அண்டு ஜூலைத் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு தொழில் சார்ந்த ஆற்றல்களில் பயிற்சி தரப்படுவதுடன் உடனடியாக மற்றும் தரமான முடிவுகளை எடுக்க பயிற்சி தரப்படுகிறது. பொருளாதாரத்தில் உள்ள அனைத்து துறைகளிலும் பயிற்சி அளித்து இந்தியாவை ஒரு ஆற்றல் வங்கியாக மாற்றுவது இதன் லட்சியமாகும்.

### 11. விஞ்ஞான அடிப்படையில் அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்தி Science for Equity Empowerment and Development (SEED)

களப் பணியாளர்கள் மற்றும் செயலூக்கம் அளிக்கப்பட்ட அறிவியல் ஆராய்ச்சியாளர்களால் கிராமப்புறங்களில் ஆரம்பிக்க சமூக பொருளாதார நோக்கம் கொண்ட செயல்திட்டம் ஆகும். இத்திட்டத்தில் கீழ் நாட்டிலுள்ள நலிவுற்ற பிரிவு மக்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் பலன்களை கிடைக்கச் செய்து சமத்துவம் பெறுவது இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். ஒரு மணி நேரம்

### பிற குறிப்பிட்ட தொழில்முனைவுத் திட்டங்கள் Other Specific Entrepreneurship Schemes

இந்தியாவில் பாரம்பரிய பண்பாட்டை ஆதரிக்கவும், வலுப்படுத்தவும், கடந்த சில ஆண்டுகளில் அரசு பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

**அவைகள் பின்வருமாறு.**

### 1. திருத்தப்பட்ட சிறப்பு ஊக்கத்தொகுப்பு திட்டம் Modigied Special Incentive Package Scheme (M-SIPS)

இந்த திட்டமானது சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு (SEZ) 20 சதவீதம் மூலதன மானியமும் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலம் அல்லாத (Non SEZ) இடத்திற்கு 25 சதவீதம் மானியத்தையும் பின்வரும் உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்குகின்றது. அவை இணையத்தளங்கள், வானூர்தி, வானூர்தி மற்றும் பாதுகாப்பு, வாகன, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இல்லாத, இணைய தொழில்நுட்பம், நுண் தொழில்நுட்பம் (யேழெ வுநஉாழெடழபல) போன்றவை ஆகும்.

### 2. திருத்தப்பட்ட புதுமை புகுத்துதல் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் New Gen Innovation and Entrepreneurship Development Centre (New Gen IEDC)

இத்திட்டத்தின் மூலம் ₹.25 இலட்சம் வரை இரசாயன, மென்பொருள் தொழில்நுட்பம், உடல்நலம் மற்றும் உயிர் அறிவியல், வானியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு, விவசாயம், முதன்மை செயற்கை நுண்ணறிவு, கணினி, தொலைநோக்கு பார்வை, கட்டுமானம் வடிவமைப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அல்லாத, பசுமை தொழில்நுட்பம், நுண் தொழில்நுட்பம், இணையம் சார்ந்த பொருள் உற்பத்தி, நுண் தொழில்நுட்பம், உணவு மற்றும் பானங்கள், செல்லப்பிராணிகள் மற்றும் விலங்குகள், ஜவுளி மற்றும் ஆலை போன்ற தொழில்களுக்கு நிதி உதவி தரப்படுகிறது.

### 3. பால்பண்ணை தொழில் முனைவு மேம்பாட்டுத் திட்டம் Diary Entrepreneurship Development Scheme

பால் பண்ணைத் தொழில் முனைவு மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம் விவசாயம், செல்லப் பிராணிகள் மற்றும் விலங்குகள், சிறிய பால் பண்ணைகளை உருவாக்கும் செயல் திட்டங்களும் மற்றும் அதற்கு கருவிகளை வாங்க நிதி வசதி தரப்படுகிறது.

### 4. ஒற்றை புள்ளி பதிவு திட்டம் Single Point Registration Scheme (SPRS)

இத்திட்டத்தில் அடிப்படை பணம் வைப்பிற்கு செலுத்துதலில் (Earnest Money Deposit (EMD). இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இது நுண் மற்றும் சிறிய நிறுவனங்களுக்கான ஒரு பெரிய திட்டமாகும். இந்தத்திட்டத்தின் கீழ் ஒப்பந்தம் புள்ளி வெளியீடு இலவசமாக வழங்கப்படுகிறது.

### 5. அடல் இன்புவேஷன் சென்டர்ஸ் Atal Incubation centres (AIC)

நாட்டில் புதுமை புகுதல் கலாச்சாரத்தை பரப்பிடவும் மற்றும் பரவலாக தொழில் முறையை வளர்க்கும் நோக்குடன் திட்டக் குழுவில் அடல் புதுமை மையம் என்ற பிரிவை 2016ம் ஆண்டு உருவாக்கப்பட்டு இதன் மூலம் நம் நாட்டில் உற்பத்தி, மக்கள் நல்வாழ்வு, போக்குவரத்து, தண்ணீர், வேளாண்மை, கட்டுமானம் போன்ற துறைகளில் துவங்கப்படும் செயல்திட்டங்களை பேணிகாத்து வளர்க்கும் பணியை இந்த பிரிவு செய்து வருகிறது.

## தொழில் முனைவோர் துறையை மேம்படுத்துவதில் உள்ள படி நிலைகள் Steps in Promoting an Entrepreneurial Venture

### 1. பொருள் தேர்வு எதிர்பார்ப்பு Selection of the Product

திறன், உள்நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு தயாரிப்பு ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம். அவர்/அவள் ஒரு அடையாளக்குறியீடு, புதிய தயாரிப்பு ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் அல்லது ஏற்கனவே உற்பத்தி செய்துகொண்டு இருக்கும் பொருட்களின் தன்மையை அதாவது கூடுதல் வசதிகள், இட வசதிகள், எளிதான செயல்திறன், விலையை குறைக்க போன்றவற்றிற்கும் இருக்கும் திட்டத்தின் பொருளாதார நம்பகத்தன்மையை தொழில்முனைவோர் ஏற்படுத்த வேண்டும்.

### 2. உரிமையின் வடிவத்தை தேர்வு செய்தல் Selection of form of ownership

குடும்பம், உரிமை, கூட்டாண்மை, தனியார் வரம்புக்குட்பட்ட நிறுவனம் ஆகியவற்றிற்கான தொழில்முறை அமைப்பு நிறுவனத்தை தேர்வு செய்ய வேண்டும். குடும்பத்தின் உரிமைகள் மற்றும் கூட்டாண்மை வடிவங்கள் ஆகியவை நிறுவன நிதியுதவி, நிர்வாக மற்றும் தொழில்நுட்ப திறன்கள் மற்றும் வணிக அனுபவங்களை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் நிறுவனத்தின் மீது ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டைத் கையாளுவதற்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும்.

### 3. இடத் தேர்வு Selection of Site

தொழில் முனைவோர் தனது முயற்சியைத் தக்கவைப்பதற்கு பொருத்தமான தொழில் இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். அதன் அவருக்கு இடத்தை தேர்வு செய்ய நான்கு வாய்ப்புகள் உள்ளன. அவை பின்வருமாறு:

அ. மாநில தொழிற்துறை கழகங்களான சிறு தொழிற்துறை மேம்பாட்டு சிற தொழிற்துறை மேம்பாட்டு சிறு தொழிற்துறை மேம்பாட்டு கழகம் (Small Industries Development Corporation SIDCO), தமிழ்நாடு மாநில தொழிற்துறை மேம்பாட்டு கழகம் (State Industrial Promotion Corporation of Tamilnadu Limited(SIPCOT) MMDA, தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியம் (Tamil nadu Housing Board (TNHB) மற்றும் தொழிற்துறை இயக்குநரகம் போன்றவை தொழில் முனைவோருக்கு இடத்தை அளிக்கலாம்.

ஆ. தொழிற்சாலை கொட்டகையை கட்ட மாநில தொழிற்துறை மேம்பாட்டு முகமைத்துவத்தால் தொழில்முனைவோருக்கு செய்யலாம்.

இ. தனியார் நிலமேம்பாட்டாளரால் உருவாக்கப்பட்ட நிலத்தில் தொழில்முனைவோர் தொடங்க முடியும்.

ஈ. தொழில் முனைவோர் தனியார் நிலத்தை வாங்கி அதை தொழில்துறை பயன்பாட்டிற்காக உருவாக்கலாம்.

இடத்தை தேர்ந்தெடுப்பதில் பின்வரும் விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அ) சொந்த ஊருக்கு அருகில்
ஆ) அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஊக்கங்கள்
இ) சந்தைக்கு அருகில்
ஈ) தொழிலாளர் மற்றும் மூலப்பொருட்கள் கிடைக்கும் தன்மை
உ) உள்கட்டமைப்பு வசதிகள்

## 4. மூலதன கட்டமைப்பை தீர்மானித்தல் Deciding Capital Structure

இந்த துணிகர நிதிக்கு நிதியளிப்பதற்கான ஆதாரத்தை தொழில் முனைவோர் தீர்மானிக்க வேண்டும். அவர்/அவள் சொந்த சேமிப்பு இருப்பு, நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து கடன், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து காலக்கடன்களை திரட்ட முடியும்.

## 5. உற்பத்தியை கையகப்படுத்துதல் என்பதை அறிதல் Acquisition of Manufacturing Know-how

தொழிற்துறை ஆய்வு கூடங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழிற்துறை மேம்பாட்டுப் பிரிவுகள் மற்றும் தனிப்பட்ட ஆலோசகர்களிடமிருந்து உற்பத்தியை எவ்வாறு செய்ய முடியும் என்பதனை அறியலாம். சில நேரங்களில், பிரதான அலகுகள் மூலம் அல்லது ஆலை மற்றும் இயந்திரங்களை அளிப்பவர்களிமிருந்தும் இந்த வசதிகளை பெறமுடியும். தவிர வெளிநாட்டு தொழில்நுட்ப ஒத்துழைப்பு மூலமும் பெற முடியும்.

## 6. திட்ட அறிக்கை தாயாரித்தல் Preparation of Project Report

கால கடன் வழங்கும் நிறுவனங்களின், கடன் விண்ணப்பப் படிவில் வடிவமைக்கப்பட்ட வடிவமைப்பின்படி திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். ஒரு தொழில் முனைவோர் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனம் அல்லது தணிக்கையாளர்கள் அல்லது ஆலோசகர்கள் அல்லது மேம்பாட்டு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையைப் பெற முடியும். இந்த அறிக்கை நிதியியல், தொழில்நுட்ப முடிவு, உழைப்பு மற்றும் மூலப்பொருட்களின் ஆதாரங்கள், சந்தை திறன் மற்றும் இலாபத்தன்மை போன்ற அம்சங்களை உள்ளடக்கியது. திட்ட அறிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்கியது.

### அ) தொழில்நுட்பம் சார்ந்த சாத்தியத்தன்மை Technical Feasibility

தயாரிப்பு விவரக்குறிப்பின் விளக்கம்
மூலப்பொருட்கள் கிடைக்கும் தன்மை

உற்பத்தி நடைமுறை
தரகட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
நீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் தகவல்தொடர்பு வசதிகள் கிடைக்கும் தன்மை

### ஆ) பொருளாதார நம்பகத்தன்மை Economic viablility

இது முக்கியமாக உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை, இயந்திரங்கள் நிறுவப்பட்ட திறன், சந்தை பங்கு, எதிர்பார்க்கப்பட்ட வருவாய் மற்றும் பொருத்தமான விலை கட்டமைப்பு ஆகியவற்றின் தேவைகளை உள்ளடக்கியது.

### இ) நிதிசார்ந்த நம்பகத்தன்மை Financial viability

இது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியது.
நிலம் மற்றும் கட்டிடம், ஆலை மற்றும் இயந்திரம் போன்ற திரும்ப திரும்ப நிகழாச் செலவுகள்.
கூலி, சம்பளம், மற்றும் மேல்நிலை செலவு போன்ற திரும்ப திரும்ப நிகழும் செலவுகள்

உற்பத்திக்கு சாத்தியமான செலவு

எதிர்பார்க்கப்பட்ட விற்பனையில் இலாபம்.

### ஈ) நிர்வாகத் திறமை Managerial Competency

தொழில் முனைவோர் திட்ட அறிக்கையில் துணிகரத்தை நிர்வகிப்பதற்கான பொறி முறையைக் கொண்டிருக்க வேண்டும். சிறிய அளவிலான முயற்சிகளின் விஷயத்தில், உரிமையாளர்கள் அல்லது பங்குதாரர்கள் மேலாண்மையான நடவடிக்கைகளை கவனித்து கொள்ளலாம். அதே நேரத்தில் நிறுவன நிர்வாக அமைப்புகளின் நிர்வாகத்தில் பல்வேறு நிர்வாக மேலாண்மையில் பல்வேறு நிர்வாக நிலைகளை நிர்வகிப்பதற்காக நிர்வாக அதிகாரிகளின் குழுவை கொண்டு வர வேண்டும். நிறுவனத்தை செயல்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த நிறுவன கட்டமைப்பு விவரங்களை அவர் வழங்க வேண்டும்.

### 7. தற்காலிகமான பதிவ சான்றிதழ் (Provisional Registration Certificate)

தொழில் முனைவோர் தற்காலிக பதிவு சான்றிதழ் விண்ணப்பிக்க வேண்டும். தொழில் முனைவோர் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஒரு வருட காலத்திற்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை புதுப்பிக்கும் அடிப்படையில் தரப்படும். தொழில் முனைவோர் நீட்டிப்புக் காலத்திற்கு பிறகும் உற்பத்தியைத் தொடங்க முடியாவிட்டால், மேலும் நீட்டிப்பு வழங்கப்படமாட்டாது.

### 8. நிரந்தர பதிவு சான்றிதழ் Permanent Registration Certificate

உற்பத்தியை ஆரம்பித்தவுடன் அல்லது உற்பத்தியைத் தொடங்கத் தயாராகிவிட்டால் நிரந்தர பதிவு சான்றிதழை பெற தகுதியுடையவர்கள் ஆவார்.

### 9. சட்டப்பூர்வ உரிமம் Statutory Licence

தொழில்முனைவோர் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து நகராட்சி உரிமம் பெற வேண்டும். பிறகு, தொழில்முனைவோர் உற்பத்தி அலகை மத்திய மற்றும் விற்பனை வரித்துறையுடன் பதிவு செய்ய வேண்டும். ஒரு அலகு தொழிற்சாலை சட்டத்தின் விதிமுறைகளுக்குள் வந்தால், அவர்/அவள் அதை தொழிற்சாலை கண்காணிப்பாளரிடம் பதிவு செய்ய வேண்டும் அல்லது அந்த அலகு. கடைகள் மற்றும் ஸ்தாபனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்.

## 10. நிதி ஏற்பாடு Arrangement of Finance

தொழில் முனைவோருக்கு இரண்டு விதமான நிதி தேவைப்படுகிறது. அவை நீண்ட கால நிதி மற்றும் குறுகிய கால நிதியாகும். நிலையான சொத்துக்களை பெறுவதற்கு நீண்டகால நிதி தேவையும். நடைமுறை மூலதனத்திற்கு குறுகிய காலநிதி தேவையும் தேவைப்படுகிறது. தொழில் முனைவோர் நிதி நிறுவனங்களால் பரிந்துரைக்கப்பட்ட தொடக்க மூலதனத்தை (Seed Capital) கொண்டு வர வேண்டும்.

APPOLO STUDY CENTRE

# தமிழக அரசின் தொழில் முனைவோருக்காக திட்டங்கள்:

| திட்டங்கள் | துறைகள் | நோக்கங்கள் | உதவின் அளவு |
|---|---|---|---|
| வேலையில்லா வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் | தமிழ் நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தமிழக அரசுத் துறை | வேலையின்மை அகற்றுதல், சொந்த ஊரிலேயே சுய தொழிலில் ஈடுபட தூண்டுதல். நகர்ப்புறம் நோக்கி இடம் பெயர்வதை தடுக்க | ரூபாய் ஒரு இலட்சம் முதல் பத்து இலட்சம் வரை பல்வேறு சொறபகர்வுகளுடன் வழங்கப்படும் நிதி உதவி |
| தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் | தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் லிமிடெட் | பொருளாதாரம் மற்றும் சமூக நிலையில் பின் தங்கிய நபர்களை சுயதொழில் துவங்கி வருமானம் ஈட்டி கண்ணியமாக வாழ ஆர்வமூட்டுதல் | ரூபாய் 50,000 முதல் ரூபாய் 5,00,000 வரை பல்வேறு சொறபகர்வுகளுடன் வழங்கப்படும் நிதிஉதவி |
| புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் துணிவு வளர்ச்சி திட்டம் | தமிழக அரசு தொழில் மற்றும் வணிக இயக்ககம் | இளைஞர்கள் மற்றும் படித்த தொழில் முனைவோருக்கு மானியம் மற்றும் நிதிவசதி அளித்து புதிய தொழில் புதிய தொழிலை துவக்க வாய்ப்பு அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்கல்வி பயின்ற இளைஞர்களை ஈர்ப்பதற்கான திட்டம். | செயல்திட்ட மதிப்பில் 25% மிகாமல் அல்லது ரூ.25 இலட்சம் வரையிலான தொகைக்கு தேவை திட்டம் (NEEDS Scheme) கீழ் மானியம் வழங்கப்படுகிறது. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சமர்ப்பிக்கப்படும் செயல்திட்டங்களுக்கு ரூபாய் 25 வரை மானியம் வழங்கப்படும். |
| தமிழக பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் | பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையர் நலத்துறை | பொருளாதார ரீதியாக மற்றும் நிதி ரீதியாக | ரூபாய் 15,000 முதல் 3,00,000 வரை பல்வேறு கொறபகர்வுகளுடன் வழங்கப்படும் நிதி உதவி |
| தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி லிமிடெட் | நிதி இடைநிலையர்கள் | தொழில் வினை துவங்க பின் தங்கிய மற்றும் இதர வகுப்பினர்களுக்கு | பல்வேறு தொழில் வினைகளுக்கு நெறிப்படி நிதி வழங்குதல். |

| | | | |
|---|---|---|---|
| | | TABCEDCO வங்கியுடன் இணைந்து நிதி உதவி அளித்தல் | |
| ஆதி திராவிடர் நல இயக்ககம் | வேளாண்மைத்துறை | பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கை போன்ற தொழில்முனைவோருக்கு கூடுதல் முதல் மானியம் வழங்குதல் | பல்வேறு தொழில் வினைகளுக்கு நெறிப்படி நிதி வழங்குதல். |

APOLLO STUDY CENTRE

## துணிகர முதலீட்டு நிதி: (venture capital fund)

துணிகர முதலீட்டு நிதியகம் அறிமுகமில்லாத, அபாயகரமான, இளம் மற்றும் சிறிய தொழில்களின் புதிய தொழில் முயற்சிகள் தொடங்கக் குறிப்பாகத் தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் அறிவு சார்ந்த தொழில்களுக்கான மூலதனத்தை வழங்குகின்றன. பாரத ஸ்டேட் பாங்க், கனரா வங்கி போன்ற பல வணிக வங்கிகள் துணிகர முதலீட்டு நிதிக்காகத் துணை நிறுவனங்களை அமைத்துள்ளன.

### துணிகர நிதி நிறுவனம் (venture fund institutions)

துணிகர மூலதன நிதி என்பது சாதாரண நிதியில் ஒரு பகுதி ஆகும். இது புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பிற்கு நிதி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும். துணிகர மூலதனம் என்பது தொழில்நுட்ப திட்டங்களை வணிகமயமாக்குவதற்கு தேவையான நிதியினை அளிக்கிறது. பல சிறப்புமிக்க நிதி நிறுவனங்கள், துணிகர மூலதன நிதி முலமே உச்சநிலையை அடைந்துள்ளது. ஆவை ICICI ன் ஆபத்து மூலதனம் IDBI ன் துணிகர நிதி, SIDIBI ன் தொழிலநுட்ப வளர்ச்சி, இந்திய கட்டமைப்பு நிறுவனம் (TDICT) மற்றும் பல.

APOLLO STUDY CENTRE

# கூட்டுறவு அமைப்பு (cooperative organization)

**பொருள் மற்றும் இலக்கணம்**

கூட்டுறவு என்பது ஒரு வணிக நிறுவனமாகும். அது அதன் தயாரிப்புகள், பொருட்கள் அல்லது சேவைகளைப் பயன்படுத்தும் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படும் அமைப்பாகும். கூட்டுறவு உறுப்பினர்களின் வகைகள் மற்றும் உறுப்பினர்களின் அளவு ஆகியவற்றில் வேறுபாடு இருந்தாலும், உறுப்பினர்கள் குறிப்பிட்ட குறிக்கோள்களைச் சந்திக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்ட மற்றும் அங்கத்தினர்களின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு கூட்டுறவு நிறுவனமும் கட்டமைக்கப்படுகின்றன.

உறுப்பினர்களால் உறுப்பினர்களுக்காக தாங்களாகவே இணைந்து நடத்தப்படும் வணிக அமைப்பே கூட்டுறவாகும். இதில் லாபத்தை விட சேவைகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். கூட்டுறவுகளில் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளில் செங்குத்து ஒருங்கிணைப்பை அடைய ஒருங்கிணைந்த (கிடைமட்ட ஒருங்கிணைப்பு) தனிநபர்களால் கூட்டுறவு நிறுவனங்கள் உருவாகின்றன. சமுதாயத்தின் குறைந்த சக்தி வாய்ந்த உறுப்பினர்களின் நலன்களை ஊக்குவிப்பதற்காக கூட்டுறவு நிறுவனங்கள் பயன்பட்டன. விவசாயிகள், தயாரிப்பாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோர் தனித்தனியாகச் சம்பாதிக்கும் அளவிற்கு அதிகமானவற்றைச் சாதிக்க முடியும் என்று கண்டனர்.

முனித வரலாறு முழுவதும் பரஸ்பர நன்மைக்காக மக்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்திருந்தாலும், தொழில்துறை புரட்சியின் போது கூட்டுறவு அமைப்பு வணிக அமைப்பைத் தொடங்கியது. முதலில் கூட்டுறவு இயக்கம் 1844 ஆம் ஆண்டு ராபர்ட் ஓவன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலாந்தில் 28 நெசவாளர் உறுப்பினர்களைக் கொண்ட நுகர்வோர் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கி "ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டி" என்று அவர் அழைத்தார். இது படிப்படியாக கடன், விவசாயம், சந்தைப்படுத்துதல், செயலாக்கம், வீட்டுவசதி, போக்குவரத்து, காப்பீடு மீன் வளர்ப்பு, கோழிப்பண்ணை, பால், பாசனம் முதலியவற்றில் உலகளவில் படிப்படியாக வளர்ந்தது. கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய நோக்கம் ஒத்துழைப்புடன் வர்த்தக பொது நலன்களைப் பின்பற்றுவதன் மூலம் இலாபமானது ஒரு முக்கிய நோக்கமல்ல. சேலையே இதன் பிரதான நோக்கமாகும்.

**கூட்டுறவுச் சங்கத்தின் எடுத்துக்காட்டுகள்**

- இந்தியாவின் காபி ஹவுஸ் (ரெஸ்டாரெண்ட)
- மதர் டெய்ரி (ஆவின்)
- ஸ்ரீ மகிலா கிரியா உத்யோக் விஜஜத் பாபட்
- இந்திய விவசாயிகள் உரங்கள் கூட்டுறவு லிமிடெட் (IFFCO)
- இந்திய விமான நிறுவனம் (சரக்கு) (C.G.H.S.LTD)
- கோ ஆப்டெக்ஸ்

**கூட்டுறவின் பொள்கைகள்**

1. **தன்னார்வ மற்றும் உறுப்பினராவதற்குத் தடையில்லா வாய்ப்பு**

கூட்டுறவு என்பது தன்னார்வ அமைப்புகளாகும். ஆதன் சேவைகளைப் பாலினம், சமூக, இன, அரசியல் அல்லது மத பாகுபாடு இல்லாமல் அனைவரும் பெற்றுப் பயன் அடையலாம்.

2. **மக்களாட்சி முறையில் உறுப்பினர் கட்டுபாடு**

கூட்டுறவு மக்களாட்சி முறையில் அதன் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. உறுப்பினர்கள் கூட்டுறவின் சேவைகளைப் பயன்படத்துபவர்களாகவோ, கொள்கைகளை அமைப்பதிலும், முடிவுகளை எடுப்பதிலும் தீவிரமாக தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்.

3. **உறுப்பினர்களின் பொருளாதார பங்களிப்பு**

உறுப்பினர்கள் கூட்டுறவு மூலதனத்தை சமமாக, ஜனநாயக முறையில் பங்களித்து கட்டுப்படுத்துகின்றனர். இந்த நன்மைகள் உறுப்பினர்கள் மூலதனத்தில் முதலீடு செய்வதை விட ஒத்துழைப்புடன் நடத்தும் வியாபார விகிதத்தில் இருக்கும்.

4. **தன்னாட்சி மற்றும் சுதந்திரம்**

கூட்டுறவு நிறுவனங்கள் தங்கள் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படும் தன்னாட்சி, சுய உதவி அமைப்புகள் ஆகும். கூட்டுறவு நிறுவனங்கள் மற்ற அமைப்புகளுடன் ஒப்பந்தங்களில் நுழைந்தால் அல்லது மூல ஆதாரங்களிலிருந்து மூலதனத்தை உயர்த்தினால், உறுப்பினர்கள் ஜனநாயகக் கட்டுப்பாட்டை உறுதிசெய்வதோடு, கூட்டுறவுச் சுயாட்சியைத் தக்கவைத்துக்கொள்வதன் அடிப்படையில் இது செய்யப்படுகிறது.

5. **கல்வி, பயிற்சி, மற்றும் தகவல்**

உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கல்வி மற்றும் பயிற்சியளிப்பை கூட்டுறவில் வழங்குகிறார்கள். அதனால் அவர்கள் கூட்டுறவு அபிவிருத்திக்கு திறம்பட பங்களிக்க முடியும். மேலும் அவர்கள் கூட்டுறவுகளின் இயல்பு மற்றும் நன்மைகளைப் பற்றி பொது மக்களுக்குத் தெரிவிக்கின்றனர்.

6. **கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு**

கூட்டுறவு உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர்களை மிகவும் திறமையாகவும், உள்ளூர், தேசிய பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புகள் மூலம் ஒன்றாக இணைந்து கூட்டுறவு இயக்கத்தை பலப்படுத்தவும் செய்கின்றனர்.

7. **சமூகத்திற்கான கவலை**

கூட்டுறவில் உறுப்பினர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது, உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளும் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் சமூகங்களின் நிலையான அபிவிருத்திக்காக கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

**கூட்டுறவின் சிறப்பியல்புகள்**

1. **தன்னார்வ உறுப்பினர் சேர்க்கை**

கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினராகச் சேர்வயுது கட்டாயம் அல்ல. சங்கங்களில் எவரும் தானாக முன்வந்து உறுப்பினர் ஆகலாம். எப்போது வேண்டுமானாலும் உறுப்பினர் தகுதியில் இருந்து விலகிக்கொள்ளலாம்.

### 2. சம உரிமைகள்

கூட்டுறவில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு மட்டுமே உண்டு. அவர் எத்தனை பங்குகள் வாங்கினாலும் ஒரு வாக்கு மட்டுமே செலுத்த முடியும். எனவே அனைவரும் நிர்வாகத்தில் சமபங்கு எடுக்க சங்கங்கள் வாய்ப்பு அளிக்கின்றன.

### 3. மக்களாட்சி

கூட்டுறவுகளில் மக்களாட்சி முறையில் முடிவுகள் எடுக்கப்படுகறது. முடிவுகளில் பெருமபான்மை இருந்தால் இறுதி முடிவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

### 4. நேர்மை

நேர்மை என்பது கூட்டுறவின் அடிப்படைக் கொள்கை. கூட்டுறவில் உறுப்பினர்கள் நேர்மையாக இருக்க வேண்டும் சுயநலமிகளுக்கு சங்கத்தில் இடமில்லை.

### 5. பரஸ்பர நம்பிக்கை

கூட்டுறவுச் சங்கத்தின் அடித்தளம் பரஸ்பர நம்பிக்கை. கூட்டுறவுகளில் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுக்குள் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் அவர்கள் அனைவரும் ஒரு குழுவாக அணிவகுக்க வேண்டும். அதுவே அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவும்.

### 6. நல்வாழ்வு எனும் முக்கிய குறிக்கோள்

உறுப்பினர்கட்குச் சீரிய முறையில் சிறந்த சேவை புரிய வேண்டும் என்பதே பிரதான நோக்கமாக இருக்க வேண்டும் என கூட்டுறவுகள் செயல்படுகின்றன.

### 7. பணம் செலுத்துதல்

இச்சங்கங்களில் கடன் நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளது. எல்லா வியாபாரமும் ரொக்கத்தன்மை அடிப்படையில் நடத்தப்படுகிறது.

### 8. சிக்கனம்

கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் சிக்கன கொள்கை கொண்டிருக்க வேண்டும். அவர்கள் கூட்டுறவுகளின் மூலதனத்தைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது மற்றும் எப்போதும் கூட்டுறவின் நலன்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

### 9. இலாப பகிர்வு

கூட்டுறவுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி சங்கங்களின் இலாபம் பகிரப்பட வேண்டும். இலாபத்தின் ஒரு பங்கை காப்பில் (Reserve) ல் வைக்க வேண்டும். இலாபத்தில் 10 விழுக்காட்டினை உறுப்பினர்களின் சேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.

### 10. சுய சேவை

சங்கங்களின் செயல்களை உறுப்பினர்களே கவனிக்கின்றனர். எல்லா உறுப்பினர்களும் உரிமையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள். எனவே அவர்கள் அனைவரும் ஒருவருக்காக, ஒவ்வொருவரும் அனைவருக்காக என்ற மகத்தான கூட்டுறவு கொள்கையின் அடிப்படையில் செயல்படுகின்றன.

**கூட்டுறவுச் சங்கங்களின் நன்மைகளும் குறைபாடுகளும்**

**நன்மைகள்**

1. **தன்னார்வு நிறுமம்**

கூட்டுறவுச் சங்கங்களில் யார்வேண்டுமானாலும் உறுப்பினர் ஆகலாம். பொதுவான நோக்கமுள்ள எவரும் இதன் உறுப்பினராகலாம். உறுப்பினர் தொகையும் மிகவும் குறைவாக இருப்பதனால், பொருளாதார ரீதியாக பின்தங்கியவர் முதல் முன்னேறியவர் வரை யாரும் உறுப்பினராக ஆக முடியும். எவரும் சங்கத்தை விட்டு எப்போதும் வெளியேற தடை இல்லை. உறுப்பினர்கள் தன்னார்வத்துடன் முன் வந்து சங்கத்தினை அமைத்திட வேண்டும்.

2. **எளிமையான தோற்றுவிப்பு**

குறைந்தபட்சம் இளவர் அல்லாத 25 உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கத்தினை ஆரம்பிக்கலாம். சுங்கத்தை ஆரம்பிக்க சட்ட சடங்குகள் அதிகம் இல்லை.

3. **மக்களாட்சி**

கூட்டுறவுச் சங்கங்கள் 'ஒருநபர் ஒருவாக்கு' என்ற கோட்பாட்டில் இயங்கி வரும் நிறுமமாகும். உறுப்பினர் எவ்வளவு பங்கு வைத்திருந்தாலும் ஒருவாக்கு மட்டுமே செலுத்த முடியும். எனவே பொருளாதார அடிப்படையில் கூட்டுறவு நிர்வாகத்தை நடத்துவதில் அனைவரும் பொதுவானவர்களே.

4. **சமத்துவ அடிப்படையில் இலாபத்தை பகிர்தல்**

கூட்டுறவுச் சங்கங்கள் ஈட்டும் உபரி சமத்துவமாக அனைவர்க்கும் பங்கிட்டு தரப்படுகிறது. இதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து உறுப்பினர்களும் பயன்பெறுவர். ஈட்டும் உபரியில் 10 விழுக்காட்டை சங்கம் செயல்பட்டு வரும் பகுதி மக்களின் நலனுக்கு செலவிட வேண்டும்.

5. **வரையறுக்கப்பட்ட பொறுப்பு**

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்த நபர்களின் பொறுப்புகள் அவர்கள் வாங்கிய பங்கு முதலுடன் அடங்கி விடுகிறது. கூட்டுறவுச் சங்கங்களை கலைக்கும் போது அந்நிறுவனத்தின் நிதி பொறுப்புகளைத் தீர்க்க உறுப்பினர்களின் சொந்த சொத்துக்களை ஈடுபடுத்த முடியாது. எனவே உறுப்பினர்களின் பொறுப்பு அளவுடையது.

6. **சட்ட உரு**

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினால் வழங்கப்பட்ட தனித்தன்மை கொண்டது. எனவே உறுப்பினர்களின் இறப்பு, துறப்பு. நொடிப்பு, மனநிலை சமனின்மை, திறனிழப்பு போன்ற நிகழ்வுகள் சங்கங்களின் ஆயுளை பாதிப்பதில்லை.

7. **பொது நலன்**

கூட்டுறவுச் சங்கங்கள் சுய உதவி மற்றும் ஒருவருக்கொருவர் உதவி புரிதல் என்ற கோட்பாட்டில் ஆரம்பிக்கப்படுவதால், சங்க உறுப்பினர்கள் பொது நலனை எட்ட அனைவரும் பங்களிக்கின்றனர்.

### 8. சிறப்பான நிர்வாகம்

கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இயங்குவதாலும் அங்கு வசிக்கும் மனிதர்களால் ஆரம்பிக்கப்படுவதாலும், உறுப்பினர்கள் அனைவரம் ஒன்றுக்குள் ஒன்றாக பழகி, நிறுமத்தை அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டுழைப்பில் நடத்தி வருகின்றனர். எனவே அதன் நிர்வாகம் சிறப்பாக செயல்படுகிறது.

### 9. அரசின் ஆதரவு

அரசும் கூட்டுறவு நிறுமங்களை வளர்த்து விட பல்வேறு ஆதரவுகளை நல்கி வருகின்றன. சலுகை வட்டியில் கடன், மானியம் மற்றும் அரசு நிறுமங்களின் தேவையை கூட்டுறவுச் சங்கங்களிடம் வாங்குதல் போன்ற செய்கைகளின் மூலம் நல்லாதரவை வழங்கி வருகின்றன.

### 10. இடைநிலையரைத் தவிர்த்தல்

கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக தயாரிப்பாளர் அல்லது உற்பத்தியாளரிடம் தேவைப்படும் பொருட்களை கொள்முதல் செய்வதால், நுகர்வோர்கட்கு பொருட்களை குறைவான விலையில் விற்பனை செய்கின்றன. இதனால் இடைநிலையர் குறுக்கீடு என்ற பேச்சுக்கே கூட்டுறவு தத்துவத்தில் இடமில்லை. இடைநிலையரை அகற்றி பெறப்படும் இலாபத்தை பபங்கிட்டு தருவதுதான் கூட்டுறவின் தத்துவமாகும்.

### 11. வரிச்சலுகை

அரசும் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்க பலவகை வரிச்சலுகைகளை வழங்கி வருகின்றது.

### 12. ஊரகக் கடன்

சிற்றூர்களில் வசித்து வரும் மக்களில் பெரும்பாலானோர் உள்ளூர் கந்துவட்டிக்காரர் மற்றும் நாட்டு வங்கியர்களின் பிடியில் சிக்கி தவிப்பதை கூட்டுறவுச் சங்கங்கள் மீட்டு வருகின்றன. இயற்கையின் சீற்றத்தினால் வாடும் வேளாண்மையினரையும் கடன் தள்ளுபடியின் மூலமும், வட்டி தள்ளுபடி மூலமும் கடன் தவணைகளை நீட்டித்து தருவதன் மூலமும் காத்து வருகின்றன.

## குறைபாடுகள்

### 1. அளவான நிதி ஆதாரங்கள்

கூட்டுறவுச் சங்க நிறுமங்களின் நிதி ஆதாரம் பிற அமைப்புகளைக் காட்டிலும் குறைவு. உறுப்பினர் கட்டணம் குறைவு. மேலும் உறுப்பினர்களின் பங்கு முதல் குறைவாக இருப்பதால், கூட்டுறவுச் சங்கங்களினால் பெரும் முதல் திரட்டி பேரளவு வியாபாரத்தில் ஈடுபட முடிவதில்லை. மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களின் செயல்பாட்டை குறிப்பிட்ட அளவிற்கு மேல் விரிவாக்க முடியாமல் தவித்து வருகின்றன.

### 2. அரசின் நிதி ஆதாரங்களை பெரிதும் நம்பியிருத்தல்

கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் தங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள முடியாமல் அரசின் நிதி ஆதரவை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலையில் அவைகள் செயல்பட்டு வருகின்றன. எனவே கூட்டுறவு நிறுமங்கள் தங்களின் செயல்பாடுகளை விரிவாக்க முடிவதில்லை.

### 3. அரசால் துவங்கப்பட்ட சங்கங்கள்

மேற்கத்திய நாடுகளில் கூட்டுறவு அமைப்புகள் ஏழை எளியவர்களால் தானாக முன் வந்து துவக்கப்பட்ட நிறுமங்கள். ஆனால் இந்தியாவில் பெரும்பாலான சங்கங்கள் அரசின் வற்புறுத்தலால் துவக்கப்பட்ட சங்கங்கள் என கூறப்படுகின்றன. எனவே இங்குள்ள சங்க உறுப்பினர்களின் பங்கெடுப்பு தானாக முன் வந்தது இல்லை என்றும் கூறப்படுகிறது. இப்படி திணிக்கப்பட்ட சங்கங்கள் மக்கள் ஆதரவின்றி நொடித்துப் போக வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்புள்ளது.

### 4. ஊரக பகுதி செல்வந்த உறுப்பினர்களின் பலனுக்காக செயல்படுதல்

கூட்டுறவுச் சங்கங்களில் யார் வேண்டுமானாலும் உறுப்பினராக ஆகலாம் என்ற வாய்ப்பு இருப்பதால் உள்ளூரில் உள்ள செல்வந்தர்கள் மற்றும் சில இடைநிலையர்கள் உறுப்பினர்கள் என்ற வேடமணிந்து நிர்வாகக் குழுவின் முக்கிய பதவிகளைப் பெற்று, வேண்டுமென்று நய வஞ்சகமாக கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தை சீர் குலைத்து சங்கங்களை மூடிவிடும் நிலைக்குத் தள்ளிவிடுகின்றனர் எனக் கூறப்படுகிறது. பெரும் செலவந்தர்களாக உள்ள வேளாண் குடியினரின் சங்கங்களை நன்றாக தங்களின் சுயநலத்திற்குப் பயன்படுததித் தங்களைப் பொருளாதார ரீதியாக வளப்படுத்திக் கொள்கின்றனர். சிறு மற்றும் குறு வேளாண்மையாளர்களால் உபரியாக பொருளை உற்பத்தி செய்து சங்கத்திந்கு அளிக்க முடியாதவர்கட்டு கூட்டுறவுச் சங்கங்களினால் யாதொரு பயனும் விளைவதில்லை என்றால் மிகையாகாது.

### 5. உள்ளூர் கடனாளர்களின் பிடியில் இருந்து மக்களை மீட்க முடியாமை

கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்கட்கு உற்பத்தி நடவடிக்கைகட்கு மட்டுமே கடன் வழங்குகின்றன. அவர்களின் சொந்த அல்லது குடும்ப செலவிற்கு கடன் தருவதில்லை. இந்நிலையில் அவர்கள் உள்ளூர் கடனாளர்களிடம் தொடர்ந்து கடன் அடிமைகளாக தொடரும் அவல நிலை ஏற்படுகிநது. எனவே கூட்டுறவுச் சங்கங்கள் சாதாரண ஏழை எளிவர்களைக் கடனாளர்களிடமிருந்து மீட்டு விட்டதாக கூறிக் கொள்ள முடியாது.

### 6. நிர்வாக வல்லுநர்களை பணி அமர்த்த முடியாமை

கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாக குழுவினால் மேலாண்மை செய்யப்படுகிறது. இந்த நிர்வாக குழு உறுப்பினர்கள் தேவையான கல்வித் தகுதியை அனுபவமோ அல்லது ஆற்றலோ இல்லாது இருக்கும் நிலையில், சங்க நிர்வாகம் சிறப்பாக நடத்த முடிவதில்லை. மேலும் கூட்டுறவுச் சங்கங்களால் தொழில் படிப்பு படித்த அல்லது பட்டயம் பெற்ற நிர்வாகிகளை அமர்த்தி நிர்வாகத்தை தொழில் ரீதியான சிறப்பாக நடத்த போதிய நிதி ஆதாரங்கள் இல்லை. எனவே கூட்டுறவ அமைப்புகள் தங்களின் தலையாய நோக்கங்களை சிறப்பாக அடைய முடிவதில்லை.

### 7. தன்னிச்சையாக செயல்பட முடியாமை

கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் பிடியில் அல்லது மேற்பார்வையில் இயங்கி வருவதனால், அரசின் கட்டுப்பாட்டு விதி முறைகள் குறுக்கீடுகள் சங்கங்களை தன்னிச்சையாக செயல்பட அனுமதிப்பதில்லை. அவற்றின் தன்னாட்சி உரிமை முடக்கப்படுகிறது.

### 8. நாணயமற்ற நிர்வாக உறுப்பினர்கள்

நிர்வாக குழுவில் இருப்பவர்கள் நாணயத் தன்மை குன்றியவரகளாக இருக்க நேர்ந்தால் சங்கங்களின் நிதியை கையாடல் செய்து சங்கங்களை பாதாளக் குழியில் தள்ளிப் புதைக்கும் வாய்ப்பு உள்ளது.

**9. தேர்ச்சி பெற்ற வல்லுநர்களை அமர்த்த முடியாமை மற்றும் புதிய நுட்பங்களை புகுத்த முடியாமை**

கூட்டுறவு அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் குறைவாக இருப்பதால், அவர்களால் நன்றாகப் படித்து பட்டம் அல்லது பட்டயம் பெற்ற மனித சக்தியை சங்கங்கிளின் பதவிகளில் அமர்த்த முடிவதில்லை. சங்கங்களினால் புதிய தொழில் நுணுக்கங்களைப் புகுத்த முடிவதில்லை. எனவே பல சங்கங்கள் இன்னும் பழைய பாரம்பரிய முறையில் செயல்பட்டு வருகின்றன. இந்திலையில் அவர்களால் புதியதாக முளைத்த நிறுவனங்களோடு சமமாகப் போட்டியிட முடிவதில்லை. இதனாலும் பல சங்கங்கள் போட்டியிட முடிவதில்லை. இதனாலும் பல சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன.

**10. இரகசியம் காக்க முடியாமை**

கூட்டுறவுச் சங்கங்களால் இரகசியத் தன்மையைக் காக்க முடிவதில்லை. சங்கங்களின் செயல்பாடுகள் இலாபம், சொத்து பொறுப்பு நிலைமகள், வாராக்கடன் முதலீடுகள் போன்ற அனைத்தையும் பகிரங்கமாக அறிக்கை மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவித்து விவாதிக்க வேண்டிய கடமை உள்ளது. மேலும் சங்கங்களின் அறிக்கைகள் கணக்குகளை கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் கால வாரியாக தாக்கல் செய்ய வேண்டும். எனவே மந்தனமாக செய்திகளை வைத்திருத்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் தனியார் நிறுமங்கள் பல இரகசிய செயல் மூலம் தில்லு முல்லு செய்து அதிக இலாபம் ஈட்டி வருகின்றன. இப்படிப்பட்ட இரகசிய செயல்பாடுகள் தில்லுமுல்லுகள் கூட்டுறவு அமைப்புகளில் செய்வது இயலாத காரியம்.

**11. உறுப்பினர்களின் உட்போரினால் சங்கங்களின் செயல்திறன் மங்குதல்**

உறுப்பினர்களிடையே ஏற்படும் மனக்கசப்புகள் வேறுபாடுகள், கருத்து மோதல், காழ்ப்புணர்ச்சி, போட்டி. பொறாமைகள் சங்கங்களின் செயல்பாட்டை முடக்கும் தன்மை கொண்டவை.


**12. பேரளவு வியாபாரத்தில் ஈடுபட முடியாமை**

ஆனைத்துத் துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்களை ஈடுபடுத்த முடியாது. அவர்களது நோக்கம் சில துறைகளில் மட்டுமே இருக்கும். கூட்டுறவுச் சங்கங்களின் குறைவான நிதி ஆதாரங்களினால் பேரளவு தொழில்களை துவங்க முடிவதில்லை.

**கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்**

**அ. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்**

நுகர்வோர் கூட்டுறவை நுகர்வோர்கள் ஆரம்பிக்கின்றனர் இந்த சங்கங்கள் மற்ற சில்லறை வணிகர்களைப் போல ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு இயங்காமல். மக்களுக்குத் தரமானப் பொருட்களை, சிறந்த விலையில் வழங்குவதை பிரதான நோக்கமாகக் கொண்டு




இயங்கி வரும் சங்கங்களாகும். கூட்டுறவுச் சிறப்பங்காடியை மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மளிகை சங்கங்கள் போன்ற சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவின் ஒரு வடிவம். கடன் ஒன்றியங்கள் வங்கிகளின் சேவையையும் செய்து வருகின்றன. கடன் ஒன்றியத்தில் 90 மில்லியன் உறுப்பினர்கள் உள்ளனர்கள். அவற்றின் சொத்து பல மடங்கில் பெருகி ஒரு வலுவான அமைப்பாக இந்தியாவில் வேரூன்றி உள்ளது என்றால் மிகையாகாது. பொது விரியோகத் திட்டத்தையும் இவை செயல்படத்தி வருகின்றன.




**ஆ. உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப் படுகிறது. உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒரு மைய இடத்திற்கு வந்து உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடலாம் அல்லது அவரவர் இருப்பிடத்தில் உற்பத்தி செய்து முடிவுற்ற பொருளை சங்கத்திடம் ஒப்படைக்கலாம். இவ்வகை உற்பத்தி சங்கங்கள் செலவை குறைத்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மையமாகத் திரட்டி ஒட்டு மொத்தமாக சந்தை இடுகின்றன. கூட்டுறவு நெசவாளர்கள் சங்கம், கூட்டுறவு தீப்பெட்டி தயாரிப்பாளர் சங்கம், தச்சு தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்திற்கு உதாரணமாக விளங்குகின்றன.

**இ. கூட்டுறவுச் சந்தையிடு சங்கங்கள்**

கூட்டுறவுச் சந்தையிடு சங்கம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மொத்தமாகத் திரட்டி அவைகளைச் சந்தையிடும் நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம். இச்சங்கங்கள் முடிவுற்ற பொருட்களைத் தரம் பிரிப்பது, பண்டகத்தில் வைத்துக் காப்பது, விளம்பரம் செய்வது, கட்டுவது, பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் சங்கமாகும். பொருள் தேவைப்படும் இடம் மிக தூரத்தில் இருப்பினும் அங்கு பொருளை அனுப்பி அங்கு பொருளுக்கு சந்தையை சிறந்த விலையில் வழங்குகின்றன. இந்த சங்கம் இல்லாத நிலையில் பல்வேறு வேளாண்மையினால் சிறு உற்பத்தியாளர்கள் கைவினைஞர்கள் போன்றோர்கள் இடை நிலையர்களிடம் அடிமாட்டு விலையில் பொருளை விற்று நலிந்து போயிருப்பார்கள். அவர்களை எல்லாம் கைதூக்கி விடும் சங்கங்களே சந்தையிடு சங்கம் என்றால் மிகையாகாது.

**ஈ. கூட்டுறவு கடன் சங்கங்கள்**

உறுப்பினர்கட்கு குறுகியகால கடன் வழங்குதல் தேர்ச்சி பெற்ற சங்கம் கடன் சங்கம் ஆகும். வேளாண்மையினர், கைவினைஞர்கள், தொழில் புரிபவர்கள, ஊதியம் ஈட்டுகிறவர்கள் போன்றோர்க்கு கடனளிக்கும் உன்னத பணியை கடன் சங்கங்கள் நல்கி வருகின்றன. வங்கிகளிடம் இருந்து கடன் பெறமுடியாமல் உள்நாட்டு நபர்களிடமிருந்து அதிக வட்டியில் கடன் வாங்கி சீரழியும் பலரை குறைவான வட்டியில் கடன் ஈந்து அவர்களை இடைநிலையர் பிடியிலிருந்து மீட்டுவரும் உன்னதமான சங்கம் கடன் சங்கங்கள். சுரண்டலை ஒழிப்பது, சிக்கனத்தை வளர்ப்பது என்பதே கடன் சங்கங்களின் தாரக மந்திரம். குடன் சங்கங்கள் வேளாண் கடன் சங்கமாகவோ அல்லது வேளாண் சாரா சங்கமாகவோ இருக்கலாம்.

**உ. வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்**

உறுப்பினர்கட்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத் தரும் சங்கங்களே வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் எனப்படுகின்றன. சொந்தமாக வீடு கட்ட விழையும் அன்பர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடுகட்ட கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுகின்றனர். இச்சங்கங்கள் உறுப்பினர்கட்கு சுமார் 10 முதல் 20 ஆண்டு கால தவணையில் வீட்டு கடன் ஈந்து அவர்களை சொந்த வீடு கட்டிக் கொள்ள உதவுகின்றன. சில வீட்டு சங்கங்கள் மொத்தமாக காலிநிலங்களை வாங்கி, வீடுகட்டி உறுப்பினர்கட்கு வாடகைக்கு வீடுகளை விடவும் செய்கின்றன. வாடகைக்கு குடி இருக்கும் நபர் அந்த வீட்டில் முழு மதிப்பையும் செலுத்தி உரிமையாளராக ஆகவும் முடியும்.

**ஊ. உழவர் கூட்டுறவுச் சங்கங்கள்**

உள்ளூரில் இருக்கும் வேளாண் குடிகள் தங்களின் நிலங்களை தனித்தனியே பயிரிடுவதற்கு பதிலாக அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து தங்களின் நிலங்களை ஒன்றாகத் திரட்டி பேரளவில் விவசாயம் செய்ய உதவும் சங்கமே கூட்டுறவு உழவு சங்கம் எனப்படும். அனைத்து விவசாயிகள் நிலத்தை ஒன்று திரட்டி சங்கமாக செயல்பட்டாலும் அவர்களின் நில உரிமை பாதிக்கப்படாது. அவர்கள் அனைவரும் சங்கம் அமைத்து அவர்களே நிர்வாகக் குழுவை தேர்ந்தெடுத்து உழவு சங்கத்தை நிர்வகிக்க வேண்டும். கூட்டாகப் பயிரிட வேண்டும். நிர்வாகக் குழு சந்தையின் தேவைக்கு ஏற்ப தட்ப வெப்ப நிலையை ஒட்டி எந்த பயிர் செய்வது எந்த அளவில் செய்வது என முடிவு செய்யும். நிலத்தை பங்காக கொடுத்த விவசாயிகட்கு வாடகையும் அவர்கள் கூட்டாக திரட்டிய நிலத்தில் உழைத்ததற்கு கூலியும் பெறுவார்கள். இம்முறையில் பேரளவில் பயிர் செய்வது விவசாயிகள் பலன் பெறலாம். இம்முறை இரஷ்யாவில் மிகவும் வெற்றி கண்டது.

# சமயச்சார்பின்மை

இந்தியா பல்வேறு நம்பிக்கைகளை சமமாக போற்றி மதிக்கப்படும் இடமாக இரப்பதோடு ஒரே தேசியக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கும். - **ஜவஹர்லால் நேரு**

**அறிமுகம்:**

இந்தியா பல சமய மற்றும் கலாச்சார, பண்பாட்டு நம்பிக்கைகள் கொண்ட நாடாகும். இது இந்து, சமணம், புத்தம் மற்றும் சீக்கியம் ஆகிய நான்கு பெரும் சமயங்களின் பிறப்பிடமாகும். நமது நாட்டில் பல்வேறு சமயங்கள் மற்றும் நம்பிக்கைகள் கொண்ட மக்கள் நீண்டகாலமாக அமைதியுடன் வாழ்கின்றனர். நவீன தேசிய நாடகள் அனைத்தும் பல சமயங்களைக் கொண்டிருப்பதால் அனைத்து சமயங்களையும் சகித்துக்கொள்ளும் தன்மை அவசியமானதாகும். சமயச்சார்பின்மையின் நோக்கமானது சமய நம்பிக்கை கொண்டவர்களும் மற்றும் எந்த சமயத்தையும் சாராதவர்களும் அமைதியுடன் இணக்கமாக வாழ்வதற்கான சமூகத்தை உருவாக்குவது என்பதாகும்.

இராஜாராம் மோகன்ராய், சர் சையது அகமதுகான், இரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி மற்றும் B.R.அம்பேத்கார் போன்ற குறிப்பிடத்தக்க பெரும் மரியாதைக்குரிய தனிநபர்கள் இந்தியச் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் சமயச்சார்பின்மையை நிலை நாட்ட பங்களித்துள்ளனர். இந்தியா போன்ற பல்வேறு சமய பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்கு சமயச்சார்பின்மை என்பது மதிப்புமிக்க ஒன்றாகும்.

**சமயச்சார்பின்மை எதனைக் குறிக்கிறது?**

சமயச்சார்பின்மை என்பது பிற மதங்களின் மீது சகிப்புத்தன்மையான அணுகுமுறை மற்றும் வெவ்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்த குடிமக்களுடன் அமைதியாக இணங்கி வாழும் ஒரு மனப்பாங்கு ஆகும். இது அனைத்து சமய சமூகங்களுடனும் அரசு கொண்டுள்ள நடுநிலைத்தன்மை மற்றும் சமத்துவக் கொள்கையாகும்.

சமயச்சார்பின்மை என்பது அரசையும் மதத்தையும் தனித்தனியாக பிரிக்கும் கோட்பாடு ஆகும். பரந்த அளவில் கூறுவதென்றால் அரசானது சமய விவகாரங்களிலோ அல்லது சமயமானது அரசின் நடவடிக்கைகளிலோ தலையிடாது இருத்தலாகும். இதன் பொருள் ஒவ்வொரு குடிமகனும் தனது மனசாட்சியின்படி சுதந்திரமாக அவரது நம்பிக்கையை பரப்புதல், பின்பற்றுதல் மற்றும் சமயத்தின் மீது இருக்கும் நம்பிக்கையை வெளியிடுதல், மாற்றிக்கொள்ளுதல் அல்லது இல்லாமல் இருத்தல் என்பதாகும்.

> சமயச்சார்பின்மை என்ற சொல் லத்தீன் வார்த்தையான செகுலம்(ளுயநஉரடரஅ) என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் காலம் (an age) அல்லது உள்ளுணர்வு காலம் (the spirit of an age) ஆகும்.
>
> ஆங்கிலேய பத்திரிக்கை எழுத்தாளரான ஜார்ஜ் ஜேக்கப் ஹோல்யோக் என்பவர் Secularism என்ற பதத்தை உருவாக்கினார்.

தனிநபர்கள் இந்தியச் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் சமயச்சார்பின்மையை நிலை நாட்ட பங்களித்துள்ளனர். இந்தியா போன்ற பல்வேறு சமய பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்கு சமயச்சார்பின்மை என்பது மதிப்புமிக்க ஒன்றாகும்.

**சமயச்சார்பின்மை எதனைக் குறிக்கிறது?**

சமயச்சார்பின்மை என்பது பிற மதங்களின் மீது சகிப்புத்தன்மையான அணுகுமுறை மற்றும் வெவ்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்த குடிமக்களுடன் அமைதியாக இணங்கி வாழும் ஒரு

மனப்பாங்கு ஆகும். இது அனைத்து சமய சமூகங்களுடனும் அரசு கொண்டுள்ள நடுநிலைத்தன்மை மற்றும் சமத்துவக் கொள்கையாகும்.

சமயச்சார்பின்மை என்பது அரசையும் மதத்தையும் தனித்தனியாக பிரிக்கும் கோட்பாடு ஆகும். பரந்த அளவில் கூறுவதென்றால் அரசானது சமய விவகாரங்களிலோ அல்லது சமயமானது அரசின் நடவடிக்கைகளிலோ தலையிடாது இருத்தலாகும். இதன் பொருள் ஒவ்வொரு குடிமகனும் தனது மனசாட்சியின்படி சுதந்திரமாக அவரது நம்பிக்கையை பரப்புதல், பின்பற்றுதல் மற்றும் சமயத்தின்மீது இருக்கும் நம்பிக்கையை வெளியிடுதல், மாற்றிக்கொள்ளுதல் அல்லது இல்லாமல் இருத்தல் என்பதாகும்.

**ஆத்திகம்:** கடவுள் அல்லது கடவுள்கள் மீது நம்பிக்கையற்றிருத்தல்.
**சமயச்சார்பின்மை:** அரசோ, சமயமோ ஒன்று மற்றொன்றின் விவகாரங்களில் தலையிடாதிருத்தல்.

**சமயச்சார்பின்மையின் நோக்கங்கள்:**

- ஒரு சமயம் சார்ந்த குழு மற்றொரு சமயக் குழுவின் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.
- ஒரு சமயத்தைச் சார்ந்த சில உறுப்பினர்கள் அதே சமயத்தைச் சார்ந்த மற்ற உறுப்பினர்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.
- அரசானது எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் பின்பற்ற வலியுறுத்தாமல் இருப்பது அல்லது தனி நபர்களின் சமய சுதந்திரத்தில் தலையிடாமல் இருப்பது.

‘‘சமயம் நமக்குப் பகைமையைப் போதிக்கவில்லை: நாம் அனைவரும் இந்தியர்கள் மற்றும் இந்தியா நமது வீடு’’ என்ற கவிஞர் இக்பாலின் எளிய வாக்கியம் சமயச்சார்பின்மை கருத்தை விளக்குகிறது.

**அசோகரின் 12வது பாறை அரசாணை:**

அரசானது எந்த ஒரு மதத்தைச் சார்ந்த பிரிவினருக்கும் எதிராக குற்றம் சாட்டாது என்று கி.மு (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டிலேயே அறிவித்த முதல் பேரரசர் அசோகர் ஆவார். தனது 12வது பாறை அரசாணையில் அனைத்து மதப்பிரிவினருடன் சகிப்பு தன்மையோடு மட்டுமல்லாமல் அவர்கள் மீது மிகுந்த மரியாதைக்குரிய மனநிலையை வளர்த்துக்கொள்ளவும் தன் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**சமயச்சார்பற்ற நாட்டின் பண்புகள்:**

**சுதந்திர கோட்பாடு** – எந்த சமயத்தையும் பின்பற்ற அரசு அனுமதியளித்தல்.
**சமத்துவக் கோட்பாடு** – அரசு எந்த ஒரு சமயத்திற்கும் மற்றவற்றிற்கு மேலாக முன்னுரிமை அளிக்காதிருத்தல்.
**நடுநிலைமைக் கோட்பாடு** – சமய விவகாரங்களில் அரசு நடுநிலைமை கொண்டிருத்தல்.
சமயச்சார்பற்ற நாடு என்பது ஒரு நாடு எந்தவொரு சமயத்தையும் அதிகாரப்பூர்வமாக ஊக்குவிக்காமல் ஒவ்வொரு சமயத்தையும் சமமாக நடத்துதல் என்பதாகும். ஒவ்வொரு குடிமகனுக்கும் சமமான உரிமையை அளிப்பதோடு மட்டுமல்லாமல் சமய நம்பிக்கையை சுதந்திரமாக வெளிப்படுத்துதல், பின்பற்றுதல் மற்றும் பரப்பும் உரிமையையும் வழங்குகிறது. அரசாங்கம் அனைத்து சமயங்கள் தொடர்பாகவும் நடுநிலைமையை கொண்டிருப்பதோடு எவ்வித பாகுபாடும் காட்டுவதில்லை. சமயச்சார்பற்ற ஒரு நாட்டில் எவருக்கும் தனிப்பட்ட முறையில் சலுகை அளிப்பதில்லை என்பதோடு சமய நடைமுறைகள் மற்றும் நம்பிக்கைகள் அடிப்படையில் அரசு பாகுபாடு காட்டுவதில்லை. அனைத்து குடிமக்களும் எவ்வித சமய நம்பிக்கை கொண்டிருந்தாலும் அரசுப் பணியில் நுழைய தகுதி வாய்ந்தவர்கள் ஆவர். கல்விக் கூடங்களில் முற்றிலும் சமய போதனைகள் இருத்தல் கூடாது என்பதோடு எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கும் ஆதரவாக எந்த வரிகளும் வசூலிப்பதில்லை.

**சமயச்சார்பின்மையின் முக்கியத்துவம்:**

இந்தியாவில் அனைத்து சமயங்களையும் சமமாக நடத்த வேண்டம் என்பதன் அடிப்படையிலேயே சமயச்சார்பின்மை கோட்பாடு படிப்படியாகத் தோன்றியது. பல்வேறு சமயக் கோட்பாடகளைக் கொண்டுள்ள மக்களிடையே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை பராமரிக்க நமக்கு சமயச்சார்பற்ற நாடு அவசியமாகும். அது சமஉரிமைகளையும் வழங்கும் மக்களாட்சியின் ஒரு பகுதி ஆகும்.

| |
|---|
| முகலாய பேரரசர் அக்பர் மதசகிப்புத் தன்மை கொள்கையைப் பின்பற்றினார். அவருடைய தீன்-இலாஹி (தெய்வீக நம்பிக்கை) மற்றும் சுல்-இ-குல் (அனைத்து சமயத்தினரிடையே அமைதி மற்றும் நல்லிணக்கம்) ஆகியவை அவரின் சமயசகிப்புத் தன்மையை எடுத்தியம்புகிறது. |

**அரசியலமைப்பும் சமயச்சார்பின்மையும்:**

சமயச்சார்பின்மை என்பது அரசியலமைப்பின் ஒரு அங்கமாகும். நமது அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் அனைத்து மக்களும் அவர்களது சமயத்தை பின்பற்ற சுதந்திரம் பெற்றிருந்தால் மட்டுமே வலிமையான மற்றும் ஒற்றுமையான நாட்டை உருவாக்க இயலும் என்பதை உணர்ந்திருந்தனர். எனவே சமயச்சார்பின்மை இந்தியாவில் மக்களாட்சி வளர்ச்சிக்கான அடிப்படைக் கொள்கைளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை. பின்னர் 1976ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 42வது சட்டத் திருத்தத்தின் மூலம் முகவுரையில் சமயச்சார்பற்ற என்ற சொல் சேர்க்கப்பட்டது. (இந்தியா ஒரு இறையான்மை வாய்ந்த, சமதர்ம, சமயச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு) நமது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கமானது தேசிய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் தனி மனித மாண்புடனும் கண்ணியத்துடனும் ஊக்குவிப்பதாகும்.

நாட்டிற்கான தனி சமயம் எதுவும் இந்தியாவில் இல்லை. அரசானது எந்தவொரு சமயத்தையும் ஏற்படுத்தவோ ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு சிறப்பு ஆதரவினையோ அளிப்பதில்லை. இந்திய அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரம் நாட்டு குடிமக்கள் மட்டுமன்றி இந்தியாவில் வாழும் வெளிநாட்டவருக்கும் வழங்கப்படுகிறது. இது 1954ல் நடைபெற்ற பம்பாய் மாநிலம் - ரத்திலால் வழக்கில் மேன்மைமிக்க உச்சநீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

கஜுராஹோவில் காணப்படும் 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்து கோவிலில், வழக்கமான சிகரத்திற்குப் பதிலாக இந்து பாணியிலான கோபுரம், சமண விதானம், புத்த ஸ்தூபி மற்றும் இஸ்லாமிய பாணியிலான குவிமாடம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

**இந்திய அரசியலமைப்பு பின்வரும் தனிச் சிறப்புக் கூறுகளைக் கொண்டுள்ளது.**

அ. அரசானது எந்த ஒரு சமயத்தாலும் தன்னை அடையாளம் காணாது அல்லது சமயத்தால் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும்.

ஆ. ஒவ்வொரும் அவரது விருப்பத்திற்கேற்ப எந்த ஒரு சமயத்தைப் பின்பற்றும் உரிமையை அரசு உறுதிசெய்கிறது.

இ. எந்த சமயத்திற்கும் அரசு முன்னுரிமை சலுகை அமைப்பதில்லை.

ஈ. எந்த ஒரு நபருக்கும் அவரது சமய நம்பிக்கையின் காரணமாக அரசு எவ்வித பாகுபாடும் காட்டாது.

உ. இது இந்திய மக்களிடையே சகோதரத்துவத்தை உருவாக்குவதோடு தனிமனித மாண்பிற்கும் நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கும் உறுதியளிக்கிறது.

| |
|---|
| சமயச்சார்பற்ற இந்திய நாடானது அனைத்து சமய விழாக்களுக்கும் பொது விடுமுறை அளிக்கிறது. |

**அரசியலமைப்பு பிரிவுகளின் அடித்தளம்.**

**பிரிவு 15:** சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதை தடை செய்கிறது.

**பிரிவு 16:** பொது வேலை வாய்ப்பில் சமமான வாய்ப்பளித்தல்.

**பிரிவு 25(1):** எந்த ஒரு சமயத்தினை எற்கவும் பின்பற்றவும் பரப்பவும் உரிமை வழங்குகிறது.

**பிரிவு 26:** சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம்.

**பிரிவு 27:** எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தையும் ஆதரிக்க அரசானது எந்தவொரு குடிமகனையும் வரி செலுத்துமாறு வற்புறுத்தக் கூடாது.

**பிரிவு 28:** சில கல்வி நிறுவனங்களில் மதம் சார்ந்து நடைபெறும் சமய போதனைகள் அல்லது சமய வழிபாடு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருக்கும் உரிமை.

**பிரிவு 29(2):** அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பாகுபாடு காட்ட தடை.

**நமக்கு ஏன் சமச்சார்பற்ற கல்வி தேவை?**

கல்வியில் சமயச்சார்பின்மை என்பது பொதுக்கல்வியை அனைத்து சமய ஆதிக்கத்திலிருந்தும் விடுவிப்பதாகும். வருங்கால குடிமக்களாகிய குழந்தைகள் சமய தொடர்பில்லாமல் அவர்களின் பண்பு நலன் மற்றும் தார்மீக நடத்தை ஆகியவற்றை மேம்படுத்தும் வகையிலான கல்வியையே பெற வேண்டும்.

**சமயச்சார்பற்ற கல்வி கீழ்க்காணும் நோக்கங்களுக்காக தேவைப்படுகிறது.**

- குறுகிய மனப்பான்மையை போக்குவதற்கும், சக்திவாய்ந்த ஆற்றல் மற்றும் அறிவான நோக்கத்தினை உருவாக்குவதற்கும்
- தார்மீக மற்றும் மனிதநேய பார்வையை உருவாக்குவதற்கும்
- இளைஞர்களை நல்ல குடிமக்களுக்காக பயிற்சியளிப்பதற்கும்
- சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் கூட்டுறவு வாழ்க்கை போன்ற மக்களாட்சியின் மதிப்புகளை பலப்படுத்துவதற்கும்
- வாழ்க்கை குறித்த பரந்த பார்வையை அளிப்பதற்கும்
- பிறரை பாராட்டுதல் மற்றும் மற்றவர் நிலையிலிருந்து புரிந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்ப்பதற்கும்
- அன்பு, சகிப்புத்தன்மை, ஒத்துழைப்பு சமத்துவம் மற்றும் இரக்க உணர்வை வளர்ப்பதற்கும்
- பொருள் முதல்வாத கொள்கை மற்றும் ஆன்மீக கொள்கையை ஒருங்கிணைக்கவும் தேவைப்படுகிறது.

**முடிவுரை:**

இந்தியா ஒரு சமயச்சார்பற்ற நாடு என்பதோடு சமய மேலோக்கத்தைக் தடுக்க பல்வேறு வழிகளில் செயல்படுகிறது. சமயச்சார்பின்மை சந்தேகத்திற்கிடமின்றி ஒவ்வொரு குடிமகனும் வாழ்க்கையின் மிகச்சிறந்த பேறான சுதந்திரம், மகிழ்ச்சி ஆகியவற்றை அனுபவிக்க உதவுகிறது. இந்திய அரசியலமைப்பு சமயச்சார்பற்ற கொள்கைகளை அடிப்படையாக கொண்ட அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது, இது மக்களாட்சியின் ஒளிரும் சாதனையாகும்.

சமயச்சார்பின்மை நம்மை நாகரிகப் பண்புடன் வாழ அனுமதிக்கிறது. இது மக்கள் பிற சமயத்தை மதிக்க வலியுறுத்துகிறது. இது மக்களின் சமய நம்பிக்கையைப் பொறுத்தவரை சம உரிமையை வழங்குகிறது. இது இந்தியா போன்ற நாட்டிற்கு விரும்பத்தக்க ஒன்றாகும்.

APOLLO STUDY CENTRE

# மேம்பாட்டு குறியீடுகள்

**வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் என்பதன் பொருள்:**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது பொதுவாக அந்நாட்டின் வருமானத்தால் அளவிடப்பட்டாலும், அது மொத்த உள்நாட்டு உற்பத்தியாலேயே (GDP) குறிப்பிடப்படுகிறது. ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில். அதாவது ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பைக் குறிக்கும்.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பது பொதுவாக அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியால் மட்டும்ட குறிப்பிடப்படுவதன்றி, அந்நாட்டு மக்களின் உயர்ந்த வாழ்க்கைத்தரம் அல்லது மக்களின் நல்வாழ்வையும் உள்ளடக்கியதாகும். ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தின் அளவீடுகள் என்பது மனிதவள மேம்பாட்டுக் குறியீடு (HDI) வாழ்க்கைத் தரக்குறியீடு (PQLI) மொத்த நாட்டு மகிழ்ச்சிக் குறியீடு (GNHI) ஆகியவற்றைப் பொறுத்தது.

**மொத்த நாட்டு மகிழ்ச்சிக் குறியீடு (GNHI):**
"மொத்த நாட்டு மகிழச்சி" என்ற தொடர் 1972 ஆம் ஆண்டு பூடான் நாட்டின் நான்காவது மன்னரான ஜிக்மே-சிங்யே-வாங்சுக் என்பவரால் உருவாக்கப்பட்டது. இது நிலைத்த முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கலாச்சார மேம்பாடு, சிறந்த நிர்வாகம்

வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே உலக நாடுகள் வளர்ந்த மற்றும் வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. வளர்ந்த பொருளாதார நாடுகள் என்பவை தொழில்மயமான, வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதுமான நாடுகளைக் குறிக்கும். (எ.கா) அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜப்பான். வளர்ந்த நாடுகள் என்பவை முழுமையாக பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகள் என்று குறிப்பிடப்படுகின்றன. மாறாக தன் வளங்களான நிலம், சுரங்கங்கள், உழைப்பாளர்கள் ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்தாத நாடுகளை அதாவது குறைந்த தலா வருவாய் கொண்ட நாடுகளை வளர்ந்து கொண்டிருக்கிற நாடுகள் என்று அழைக்கிறோம். (எ.கா) ஆப்பிரிக்கா, பங்களாதேஷ், மியான்மர், பாகிஸ்தான், இந்தோனேசியா, இந்நாடுகளை முன்னேனேற்றமடையாத வளர்ச்சி குன்றிய, பின்தங்கிய மற்றும் மூன்றாம் உலக நாடுகள் என்றும் அழைக்கலாம்.

# உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

**உணவு பாதுகாப்பு:**

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு உணவு பாதுகாப்பினைப் பின்வருமாறு வரையறுக்கிறது.

“எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையை கொண்டிருக்கும் போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவு பாதுகாப்பு இருக்கிறது”(FAO,2009)

இந்த விரிவான வரையறை உணவு சத்துமிக்கதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதோடு, அது பாதுகாப்புமிக்க ஊட்டச்சத்தினைப் பெற வேறு சில அம்சங்கள் தேவைப்படுவதையும் உணர்த்துகின்றன.

பிரபல விவசாய விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனின் கருத்துப்படி, “சரிவிகித உணவு, பாதுகாப்பான குடிநீர், சுற்றுச்சூழல் சுகாதாரம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் ஆரம்பக் கல்வி ஆகியவற்றிற்கான உடல், பொருளாதார மற்றும் சமூக அணுகல்” என்பது ஊட்டச்சத்து பாதுகாப்பாகும்.

**உணவின் அடிப்படைக் கூறுகள் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு**

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகளை உள்ளடக்குவதற்காக இந்த சொல் விரிவுபடுத்தப்பட்டது. அவை கிடைத்தல், அணுகல் மற்றும் உறிஞ்சுதல் ஆகும்.

1. உணவு கிடைத்தல் என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும். இது உள்நாட்டு உற்பத்தி, இருப்பு மற்றும் இறக்குமதியில் மாற்றங்கள் பற்றிய ஒரு செயல்பாடாகும்.
2. உணவுக்கான அணுகல் என்பது முதன்மையாக வாங்கும் திறன் பற்றிய கூற்றாகும். எனவே, ஈட்டுதலுக்கான திறன்கள் மற்றும் வேலை வாய்ப்புகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. திறன்களும், வாய்ப்புகளும் ஒருவரின் சொத்துகள் மற்றும் கல்வியுடன் தொடர்புடையது.
3. உணவினை உறிஞ்சுதல் என்பது உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும். ஊட்டச்சத்து. அறிவு, நடைமுறைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் நிலைகள் போன்ற பல காரணிகள் உணவு மற்றும் சுகாதார நிலையை திறம்பட உயிரியல் தீதியாக முழுஈடுபாட்டுடன் அனுமதிக்கிறது.

**உணவு தானியங்களின் கிடைத்தல் மற்றும் அணுகல்:**

ஒரு நாட்டில் உள்ள மக்களுக்கான உணவுப்பாதுகாப்பு என்பது கிடைக்கும் உணவின் அளவைப் பொறுத்தது மட்டுமல்லாமல், உணவை வாங்க/அணுக மற்றும் தாங்குவதற்கான மக்களின் திறனையும் சார்ந்துள்ளது. பொருத்தமான ஆரோக்கியமான சூழலில், பிற சிக்கல்களைப் போலவே, மக்களின் உணளவு பாதுகாப்பும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி செயல்முறையுடன் தொடர்புடையது. சுதந்திரத்திற்கு பிறகு, இந்தியா ஒரு திட்டமிட்ட வளர்ச்சிக்கான மாதிரியைக் தேர்வு செய்தது.

விவசாயத்தில் ஆரம்பத்தில் கவனம் செலுத்திய பின்னர். தொழில் மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இந்தியாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான வறட்சி, உணவு தானியங்களின் இறக்குமதியைச் சார்ந்திருக்க தள்ளப்பட்டது. இருப்பினும், அப்பொழுது இருந்த அந்நிய செலாவணி இருப்பு, திறந்த சந்தைதக் கொள்முதல் மற்றும் தானியங்களின் இறக்குமதிக்கு அனுமதிக்கவில்லை. பணக்கார நாடுகளிலிருந்து உணவு தானியங்களை சலுகை

விலையில் இந்தியா கோர வேண்டியிருந்தது. 1960-களின் முற்பகுதியில் அமெரிக்கா தனது பொதுச் சட்டம் 480(பி.எல்.480) திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு உதவி வழங்கியது. இந்த நிலைமை பிரபலமாக 'கப்பலுக்கு வாயில்' இருப்பு (ship to Mouth) என்று அழைக்கப்பட்டது.

ஒரு பெரிய மக்கள் தொகையைக் கொண்ட பசியுடன் வளர்ந்து வரும் ஒரு நாடு புரட்சிக்கான சாத்தியமான தேர்வாளராக கருதப்பட்டது. அமெரிக்கா நிர்வாகம் ∴போர்டு அறக்கட்டளை போன்ற மனிதநேய அமைப்புகள் உணவு உற்பத்தியை அதிகரிக்க கோதுமை மற்றும் அரிசியின் உயர் ரக விளைச்சல் வகைகளுக்கான (High Yielding Varieties) திட்டத்தை வகுத்து அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டம் நீர்ப்பாசனம் உறுதி செய்யப்பட்ட இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. திட்டங்களின் முடிவுகள் உறுதி செயயப்பட்டதால், அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டது.

இவ்வாறு, பசுமைப்புரட்சி நாட்டில் தோன்றி உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது. உயர் ரக விதைகளான (HYV) அரிசி மற்றும் கோதுமை உணவு தானியங்கள் பயிரிடப்பட்ட பகுதியில் உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது. மேலும் முக்கிய தானிய பயிர்களின் விளைச்சலும் அதிகரித்தது. 1950களின் முற்பகுதியில் உணவு தானியங்களின் உற்பத்தி பரப்பளவு 98-மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமாக இருந்தது. நாடு 54-மில்லயன் டன் உணவு தானியங்களை மட்டுமே உற்பத்தி செய்து கொண்டிருந்தது. அப்போது சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 547கிலோ உணவு தானியங்கள் கிடைத்தன. உணவு நிலையை சீர் செய்ய ஏறத்தாழ 65-ஆண்டுகள் ஆனது. உணவு தானிய சாகுபடியின் பரப்பளவு 122-மில்லியன் ஹெக்டேருக்கு 547-கிலோ உணவு தானியங்கள் கிடைத்தன. உணவு நிலையை சீர் செய்ய ஏறத்தாழ 65-ஆண்டுகள் ஆனது. உணவு தானிய சாகுபடியின் பரப்பளவு 122-மில்லியன் ஹெக்டேராக வளர்ந்து உற்பத்தி ஐந்து மடங்காக அதிகரித்தது. சுதந்திர காலத்திற்கும் தற்போதைக்கும் இடையில் உணவு தானியங்களின் விளைச்சல் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.

உணவு தானிய உற்பத்தியில் இந்த வளர்ச்சி ஒரு தொகுப்பாக செயல்படுத்தப்பட்ட HYV திட்டத்தால் சாத்தியமானது. ஏற்புத்தன்மையுடைய உரங்கள் அதிக விளைச்சல் தரும் அரிசி மற்றும் கோதுமைகளை அறிமுகப்படுத்துவதைத் தவிர, மானிய விலையில் ரசாயன உரங்கள் கிடைப்பதை உறுதி செய்தது. கூட்டுறவு வங்கிகள் மற்றம் கூட்டறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு மலிவான பண்ணைக் கடன் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு "உலகளாவிய பொது வழங்கல் முறை"யை (Universal PDS) ஏற்றுக் கொண்டது. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் "இலக்கு பொது வழங்கல் முறை" (Targeted PDS) செயல்பாட்டில் இருந்தது. உலகளாவிய பொது வழங்கல் முறையின் கீழ் குடும்ப வழங்கல் அட்டை பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படுகிறது. ஆனால் இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவு கோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு உரிமைகள் வழங்கப்படுகிறது. மீதமுள்ளவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கு மானியம் அளிக்கின்றன. மானியத்தின் நிலை மற்றும் அளவு மாநிலங்களுக்கு இடையே வேறுபடுகிறது. அதைத் தொடர்ந்து தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் (National Food Security Act) இந்திய நாடாளுமன்றத்தால் 2013இல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் 50% நகர்ப்புற குடும்பங்களையும் மற்றும் 75% கிராமப்புற குடும்பங்களையும் உள்ளடக்கியதாகும். இந்த குடும்பங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுகோலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமைக் குடும்பங்கள் (priority Households) என அழைக்கப்படுகின்றன. இந்த நாட்டின் முன்னுரிமை குடும்பங்களுக்கு தற்பொழுது பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும். உணவினைப் பெறும் உரிமை உண்டு. மத்திய அரசினால் அரிசியை கிலோவிற்கு ரூ.3 என்ற விகிதத்திலும், கோதுமையை கிலோவிற்கு ரூ.2 என்ற விகிதத்திலும், தினை கிலோவிற்கு ரூ.1 என்ற விகிதத்திலும் NFSA கீழ் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு தொடர்ந்து உலகளாவிய பொது வழங்கல் முறையைக் கொண்டுள்ளது மற்றும் அனைத்து அட்டைதாரர்களுக்கும் இலவசமாக அரிசியை வழங்குகிறது.

**தமிழ் நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்:**

இந்தியாவில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் துவங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், நவம்பர்-1, 2016 அன்று இச்சட்டம் இந்தியாவிலேயே கடைசி மாநிலமாக தமிழ் நாட்டில் துவங்கப்பட்டது. அக்டோபர்-27 அன்று வெளியிடப்பட்ட அரசாங்க உத்தரவில், இச்சட்டத்தை அமல்படுத்தும்போது, அது அதன் விதிகளை மாற்றியமைக்கும் என்று அரசு குறிப்பிட்டது.

**பயோ மெட்ரிக் குடும்ப அட்டை (Bio Metric Smart Family Cards)**

தற்போதுள்ள குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக ஸ்மார்ட் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. தேசிய மக்கள் தொகையின் கீழ் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் இயக்குநரின் தனித்துவமான அடையாள எண்ணை(UIN) வெளியிடுவதற்கு 10 விரல்கள் கைரேகை, இரண்டு கருவிழிகள் மற்றும் முகப்பதிவு செய்தல் ஆகியவற்றின் மூலம் பதிவேட்டில் பதிவிடப்படுகிறது. பயோ மெட்ரிக் பதிவு செயல்முறையை முடித்த பின்னர், இந்த தரவு பயோ மெட்ரிக் ஸ்மார்ட் குடும்ப அட்டைகளை வழங்க முன்மொழியப்பட்டது. இதன் நன்மை என்னவென்றால், இது தனிப்பட்ட அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், உறுப்பினர்களின் தரவு நகல் மற்றும் போலி அட்டைகளை அகற்றலாம்.

**உணவு பாதுகாப்பில் நுகர்வோர் கூட்டுறவின் பங்கு:**

பொதுவான மக்களுக்கு பொறுப்பான விலையில் தரமான பொருட்களை வழங்குவதில் நுகர்வோர் கூட்டுறவு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் மூன்று அடுக்கு அமைப்புகளில் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை, முதன்மை நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், மத்திய நுகர்வோர் கூட்டுறவுகடைகள் மாநில அளவிலான நுகர்வோர் கூட்டமைப்புகள் ஆகும். கிராமப்புறங்களில் நுகர்வோர் பொருட்களை வழங்குவதில் 50,000க்கும் மேற்பட்ட கிராம அளவிலான சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. சுகாதாரம், காப்பீடு, வீட்டுவசதி போன்ற பல வகையான நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன. இந்தியாவில் உணவு பாதுகாப்பில் இந்த திட்டம் முக்கியப் பங்கினை வகிக்கிறது. உதாரணமாக, தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளில், சுமார் 94% கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

பற்றாக்குறைப் பகுதிகளில் வழங்குவதற்காக தாங்கியிருப்பு செய்யப்படுகிறது. உணவு தானியங்கள், சமூகத்தின் ஏழ்மையான பிரிவினருக்கு சந்தை விலையை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. அவ்விலை வெளியீட்டு விலை என்று அழைக்கப்படுகிறது. பாதகமான வானிலை அல்லது பேரழிவுக் காலங்களில் உணவு பற்றாக்குறைப் பிரச்சினையை தீர்க்க இது உதவுகிறது.

**தாங்கியிருப்பு(Buffer Stock)**

தாங்கியிருப்பு என்பது உணவு தானியங்களான கோதுமை மற்றும் அரிசி, இந்திய உணவுக் கழகத்தின் (Food Corporation of India) மூலம் அரசாங்கத்தால் வாங்கப்படுகிறது. உபரி உற்பத்தி இருக்கும் மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து கோதுமை மற்றும் அரிசியை FCI வாங்குகிறது. விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட விலை வழங்கப்படுகிறது. இந்த விலை குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum Support Price) என்று அழைக்கப்படுகிறது. இந்த பயிர்களின் உற்பத்தியை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக விதைப்பு பருவத்திற்கு முன்னர் ஒவ்வொரு ஆண்டும் MSP அரசாங்கத்தால் அறிவிக்கப்படுகிறது. வாங்கிய உணவு தானியங்கள் களஞ்சியங்களில் சேமிக்கப்படுகின்றன.

**நியாய விலைக் கடைகள்: (Fair Price Shops)**

தற்போது 33,222 நியாய விலைக் கடைகள் 1.98 கோடி குடும்பங்களுக்கு சேவை புரிகிறது. 33.222 நியாய விலைக் கடைகளில் 31,232 கடைகள் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படுகின்றன. 596 கடைகள் பெண்கள் சுய உதவி குழுக்களால் நடத்தப்படுகின்றன. பொது வழங்கல் முறைக்கு அணுகலை மேம்படுத்த, நியாய விலைக் கடைகள் வாழ்விடங்களுக்கு அருகிலேயா அமைந்திருப்பது அவசியம். அதன்படி, எந்தவொரு அட்டைதாரரும் 1.5 கி.மீக்கு மேல் நடந்து செல்லாத வகையில் புதிய நியாய விலை கடைகளைத் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வாங்குதிறன்:**

வாங்கும் திறன் என்பது ஒரு அலகு பணம் வாங்கக் கூடிய பொருட்கள் அல்லது சேவைகளின் அளவின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் நாணயத்தின் மதிப்பு விலை ஏறும் போது வாங்கும் திறன் குறைகிறது. மாறாக, இது நேர் மாறனது.

**வாங்கு திறனைப் பாதிக்கும் காரணிகள்:**

1. **அதிக மக்கள் தொகை:**

இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1000க்கும் 1.7ஆக உள்ளது. அதிக மக்கள் தொகை அதிக தேவைக்கு வழி வகுக்கிறது. ஆனால் அளிப்பு தேவைக்கு வழி வகுக்கிறது. ஆனால் அளிப்பு தேவைக்கு சமமாக இல்லை. எனவே, சாதரண விலை நிலை, அதிகமாக இருக்கும். எனவே, இது குறிப்பாக கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியை பாதிக்கிறது.

2. **அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்தல்:**

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலையான வளர்ச்சியும், இந்தியாவில் பொருளாதாரத்தில் வளர்ச்சி வாய்ப்புகளும் இருந்த போதிலும், அத்தியாவசிய பொருட்களின் விலையில் நிலையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. விலைகளின் தொடர்ச்சியான உயர்வு வாங்கும் சக்தியை சுரண்டி, ஏழை மக்களை மோசமாகப் பாதிக்கிறது. 2015-16 ஆம் ஆண்டில் சராசரியாக 2% பணவீக்கத்தினால், பருப்பு வகைகளின் விலை சுமார் 40% உயர்ந்தது.

3. **பொருட்களுக்கான தேவை:**

பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் போது, பொருட்களின் விலையும் அதிகரிக்கிறது. அதனால் வாங்கும் சக்தி பாதிக்கப்படுகிறது.

4. **பொருட்களின் விலை நாணய மதிப்பைப் பாதிக்கிறது:**

விலை அதிகரிக்கும் போது, வாங்கும் திறன் குறைந்து இறுதியாக நாணயத்தின் மதிப்பு குறைகிறது. மாறாக, இது நேர்மாறானது.

5. **பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு:**

பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு குறையும் பொழுது, பொருட்களின் விலை அதிகரிக்கிறது ஆகையால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

6. **வறுமை மற்றும் சமத்துவமின்மை:**

இந்திய பொருளாதாரத்தில் ஒரு மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு உள்ளது. 10% இந்தியர்களுக்கு சொந்தமான வருமானம் மற்றும் சொத்துக்களின் விகிதம் அதிகரித்து வருகிறது.

இது சமுதாயத்தில் வறுமை நிலையை அதிகரிக்க வழி வகுக்கிறது. பொதுவாக வறுமையாலும் மற்றும் செல்வத்தின் சமமற்ற வழங்குதலாலும் பொதுவாக வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

வாங்கும் சக்தி பொருளாதாரத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கிறது. நுகர்வோர் பொருட்கள் வாங்குவது முதல் முதலீட்டாளர்கள் வரை மற்றும் பங்கு விலைகள் ஒரு நாட்டின் பொருளாதார செழிப்பு வரை பாதிக்கிறது. எனவே, ஒரு நாட்டின் அரசாங்கம் நாணயத்தின் வாங்கும் சக்தியைப் பாதுகாக்க மற்றும் பொருளாதாரத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க கொள்கைகளையும், ஒழுங்கு முறைகளையும் ஏற்படுத்த உதவுகிறது. நுகர்வோர் விலை குறியீட்டு எண் என்பது வாங்கும் சக்தியைக் கண்காணிப்பதற்கான ஒரு முறையாகும்.

**வாங்கும் சக்தி சமனிலை (Purchasing Power party)**

வாங்கும் சக்தி சமனிலை(PPP) என்பது வாங்கும் சக்தி தொடர்பான ஒரு கருத்தாகும். வாங்கும் சக்தி சமநிலை என்பது ஒரு பொருளாதாரக் கோட்பாடாகும். இது ஒரு பொருளின் விலையுடன் சரி செய்யப்பட வேண்டிய தொகையை மதிப்பிடுகிறது. இரு நாடுகளின் மாற்று விகிதங்கள் கொடுக்கப்பட்டால், ஒவ்வொரு நாணயத்தின் வாங்கும் சக்தியுடனும் பரிமாற்றம் பொருந்த வேண்டும்.

நாடுகளின் வருமான நிலைகள் மற்றம் வாழ்க்கைச் செலவு தொடர்பான பிற தொடர்புடைய பொரளாதாரத் தரவு அல்லது பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சாத்தியமான விகிதங்களை ஒப்பிடுவதற்கு வாங்கும் சக்தி சமநிலையை பயன்படுத்தப்படலாம். சமீபத்தில் வாங்கும் சக்தி சமநிலையின் அடிப்படையில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது. சீனா மிகப்பெரிய பொருளாதாரமாக மாறி, அமெரிக்காவை இண்டாவது இடத்திற்கு தள்ளியுள்ளது.

**இந்தியாவின் விவசாயக் கொள்கை:**

விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட புதிய விவசாயக் கொள்கை 2018-ல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. இந்தக் கொள்கை பெரும்பாலான கரிம மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை நீக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அறிவித்தது.

கரிம அல்லது பதப்படுத்தப்பட்ட விவசாயப் பொருட்களுக்கு ஏற்றுமதி வரி, ஏற்றுமதி தடை மற்றும் ஒதுக்கீடு கட்டுப்பாடு போன்ற எந்தவொரு ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளின் கீழும் இருக்காது என்ற உறுதி மொழியே முக்கிய காரணமாகும்.

ஒரு நாட்டின் விவசாயக் கொள்கை பெரும்பாலும் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும், ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் விவசாயிகளின் வருமான நிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அரசாங்கத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை விவசாயத்துறையின் அனைத்து வட்டங்களிலும், விரிவான வளாச்சிக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான குறிக்கோள்கள் பின்வருமாறு:**

**வறுமையின் பல பரிமாணத்தின் இயல்பு:**

ஒரு விரிவான வடிவத்தினை உருவாக்க பல பரிமாண வறுமை நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகிறது. யார் ஏழை, அவர்கள் எப்படி ஏழை, அவர்கள் அனுபவிக்கும் தீமைகளின் வீச்சு ஆகியவற்றை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். அத்துடன் வறுமையின் தலைப்பின் கீழ், ஒரு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு துணைக்குழு மக்களிடையேயும் காணப்படும் வறுமையின் அளவினை பல பரிமாண நடவடிக்கைகளினால் வெளிப்படுத்தி உடைக்க முடியும்.

பல பரிமாண வறுமை குறியீடு (MPI) ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (United Nations Development Programme) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு (oxford Poverty and human Development Initiative) ஆகியவற்றால் 2010ஆம்

ஆண்டு தொடங்கப்பட்டது. பல பரிமாண வறுமை குறியீட்டின் அடிப்படை தத்துவமும், முக்கியத்துவமும் என்னவென்றால், வறுமை என்பது ஒற்றை பரிமாணமல்ல, அது பல பரிமாணத்தினைக் கொண்டது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.

உடல் நலம், கல்வி, வாழ்க்கைத் தரம், வருமானம் அதிகாரமளித்தல், பணியின் தரம் மற்றும் வன்முறையினால் அச்சுறுத்தல் போன்ற ஏழை மக்களின் அனுபவத்தை இழக்கும் பல காரணிகளால் பல பரிமாண வறுமை உருவாகிறது.

**இந்தியாவின் பல பரிமாண வறுமை குறியீடு 2018:**

ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு (OPHI) ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பல பரிமாண வறுமைக் குறியீடு 2018 அறிக்கை, இந்தியாவைப் பற்றி பின்வருமாறு கூர்ந்து உருவாகியுள்ளது.

1. இந்தியா தனது வறுமை விகிதத்தை 10ஆண்டுகளில் 55% லிருந்து 28% ஆக வெகுவாக குறைந்துள்ளது. 2005-2006 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டிற்கு இடையில் 271மில்லியன் மக்களை வறுமையிலிருந்து விடுவித்தனர்.
2. இந்தியாவில் 2015-2016 ஆம் ஆண்டில் 364 மில்லியன் ஏழை மக்கள் இருந்தனர். இது எந்த ஒரு நாட்டிற்கும் மிகப்பெரியதாகும். இருப்பினும் 2005-2006ஆம் ஆண்டில் 635 மில்லியனாக இருந்ததை குறைத்துள்ளது.
3. 2015-2016ஆம் ஆண்டில் பல பரிமாண வறுமை குறியீடு ஏழைகளாக இருந்த 364 மில்லியன் மக்களில், 156 மில்லியன் குழந்தைகளாகும். 2005-2006 ஆம் ஆண்டில் இந்தியாவில் 292 மில்லியன் ஏழைக் குழந்தைகள் இருந்தனர். இது 47% குறைவு அல்லது பல பரிமாண வறுமையில் வளர்ந்து வரும் 136 மில்லியன் குறைவான குழந்தைகளை குறிக்கிறது.
4. பழங்குடியினரைச் சேர்ந்த 80% மக்கள் 2005-2006 ஆம் ஆண்டில் ஏழைகளாக இருந்தனர், அவர்களில் 2015-2016 ஆம் ஆண்டில் 50% பேர் இன்னும் ஏழைகளாகவே உள்ளனர்.
5. 2015-2016 ஆம் ஆண்டில் வறுமையால் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மிக ஏழ்மையான மாநிலமாக பீகார் இருந்தது.
6. பீகார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய நான்கு ஏழ்மையான மாநிலங்கள் இன்னும் 196 மில்லியன் பல பரிமாண வறுமை குறியீடுள்ள ஏழை மக்களைக் கொண்டுள்ளன. இது இந்தியாவில் உள்ள அனைத்து பல பரிமாண வறுமை குறியீடுள்ள ஏழை மக்களில் பாதிக்கும் மேலானதாகும்.
7. 2006ஆம் ஆண்டில் கேரளா மிகக் குறைந்த ஏழ்மை வட்டாரங்களில் ஒன்றாக இருந்தது. அது பல பரிமாண வறுமை குறியீட்டை சுமார் 92% குறைத்துள்ளது.

**தமிழ்நாட்டின் பல பரிமாண வறுமை குறியீடு அறிக்கை-2018**

கடந்த பத்து ஆண்டுகளாக, வறுமைக் குறைப்பில் தமிழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை உயர் வறுமை மாவட்டங்கள் (வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தொகையில் 40%க்கும் அதிகமானோர்), மிதமான ஏழை மாவட்டங்கள்(30% முதல் 40% வரை) மற்றும் குறைந்த அளவிலான வறுமை மாவட்டங்கள் (30%க்கும் குறைவு) ஆகும்.

1994க்குப் பிறகு, தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வறுமை படிப்படியாகக் குறைந்துள்ளது, மற்றும் இந்தியாவில் அதன் மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது சிறிய ஏழ்மைப் பங்கினைக் கொண்டுள்ளது. 2005-க்குப் பிறகு, இந்தியாவில் பல மாநிலங்களை விட வறுமைக் குறைப்பு தமிழ்நாட்டில் வேகமாக உள்ளது. 2014-2017 வரையிலான காலங்களில்

வறுமை ஒழிப்புத் திட்டங்களில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. தற்போது, இந்திய அரசு வறுமையை ஒழிக்க பல கொள்கைகளையும், திட்டங்களையும் செயல்படுத்துகிறது.

இந்த கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்ந்து இருந்தால் மாநிலத்தின் வறுமையை முற்றிலுமாக ஒழிக்கலாம். எதிர்காலத்தில் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாதிரி மாநிலமாக மாற வாய்ப்புள்ளது.

### தமிழ்நாட்டின் அதிக மற்றும் குறைவான MPI மாவட்டங்கள்

| வ.எண் | அதிக மாவட்டங்கள் | தரம் | குறைவான மாவட்டங்கள் | தரம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | தர்மபுரி | 32 |
| 2 | சென்னை | 2 | பெரம்பலூர் | 31 |
| 3 | கடலூர் | 3 | இராமநாதபுரம் | 30 |
| 4 | கோயம்புத்தூர் | 4 | விருதுநகர் | 29 |
| 5 | நாகப்பட்டினம் | 5 | அரியலூர் | 28 |

**ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலை:**

உணவு பாதுகாப்பில் ஊட்டச்சத்தும் பாதுகாப்பும் அடங்கும் என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டோம். நமது நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்தாலும், மக்களின் ஊட்டச்சத்து நிலையில் அந்த அளவிலான முன்னேற்றங்களை அடையவில்லை. 2015-2016ஆம் ஆண்டில், 27% கிராமப்புறப் பெண்களும் மற்றும் 16% நகர்ப்புற பெண்களும் (15-49 வயதுக்குட்பட்டவர்கள்) ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்கள் அல்லது நீண்ட கால ஆற்றல் குறைபாடு என தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பினால் கண்டறியப்பட்டது.

இந்தியாவில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற இனப்பெருக்க வயதுக் குழுவில் (15-49 வயது) பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் 2015-2016 ஆம் ஆண்டில் இரத்தசோகைக்கு ஆளானார்கள். குழந்தைகளைப் பொறுத்தவரை கிராமப்புறங்களில் 60% மற்றும் 56% நகர்ப்புற குழந்தைகள் (6-59மாதங்கள்) 2015-2016 ஆம் ஆண்டில் இரத்த சோகை உடையவர்கள் எனப் கருதப்பட்டனர். கிராமப்புறங்களில் சுமார் 41% மற்றும் 31% குழந்தைகள் குன்றியிருக்கின்றனர். அதாவது அவர்களின் வயதுக்கு ஏற்ப தேவையான உயரத்தை கொண்டிருக்கவில்லை. ஊட்டச்சத்தின் குறைபாட்டினால் மற்றொருக் குறியீடாக குழந்தைகளிடையே வயது தொடர்பான எடையை விட ''எடை குறைவாக'' உள்ளனர். இந்தியாவில் 2015-2016ஆம் ஆண்டில் சுமார் 20% குழந்தைகள் (6-59 மாத வயதுக்குட்பட்டவர்கள்) எடைக் குறைவாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு நமது உணவு உற்பத்தியில் தன்னிறைவை எட்டியிருந்தாலும், நாம் அனைவருக்குமான உணவு பாதுகாப்பு என்ற நிலையை இன்னும் அடையவில்லை.

**ஊட்டச்சத்து மீதான தமிழ்நாடு அர்ப்பணிப்பு:**

இந்தியாவில் பசி என்ற ஒன்று மட்டுமே அரசியல் முன்னுரிமைக்கு போதுமானதாக இல்லை என்பதனை நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்த்தியாசென் உற்றுநோக்கியுள்ளார். சுகாதாரத்திற்கான பொதுச்செலவு மிகவும் குறைவு, குழந்தை ஊட்டச்சத்து போன்ற திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்படாமல் உள்ளது. ''ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலம்'' என்ற நிலையை அடைவது போன்ற குறிக்கோள்களை அமைப்பதன் மூலம் இந்த பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கான அரசியல் விருப்பத்தையும், அர்பணிப்பையும் அவர் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் மட்டுமே காண்கிறார்.

**தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தின் நிலை:**

மனித ஆரோக்கியத்திலும், நல்வாழ்விலும் ஊட்டச்சத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. தேசிய அளவில் அதிக பொருளாதார வளர்ச்சி இருந்த போதிலும், மக்கள்தொகையின் ஊட்டச்சத்து அளவுகள் போன்ற மனித வளர்ச்சி குறிகாட்டிகளில் மேம்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு மெதுவாக உள்ளன. ஏராளமான இந்திய குழந்தைகள் வளர்ச்சி குன்றியிருக்கிறார்கள். கணிசமான எண்ணிக்கையிலான இந்திய குழந்தைகள் மற்றும் பெண்கள் எடைகுறைவாகவும், இரத்த சோகை மற்றும் நுண்ணோட்டச் சத்து குறைபாடுகளாலும் பாதிக்கப்படுகின்றனர். இந்தப் பிரச்சனைகளை நீக்குவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு சுகாதார மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களான ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் (integrated child Development Services), மதிய உணவுத் திட்டம், இனப்பெருக்க மற்றும் குழந்தைகள் சுகாதார திட்டங்கள் (Reproductive and Child Health Programmes), மற்றும் தேசிய கிராமப்புற சுகாதாரப் பணி (National Rural health Mission) போன்ற திட்டங்களில் கணிசமான வளங்களை கொண்டு வருகின்றன. எவ்வாறாயினும், நாட்டின் ஊட்டச்சத்து குறைவான நிகழ்வுகளைத் தணிக்க இந்த முயற்சிளைத் திறம்பட அளவிடுவது அவசியமாகும்.

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பருவப் பெண்கள் ஆகியோரின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவருவதில் தமிழகம் ஒரு முன்னோடி பங்கைக் கொண்டுள்ளது. ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்திற்கான தமிழக அரசின் அடுத்தடுத்த வரவுசெலவுத்திட்ட செலவினங்கள் நாட்டிலேயே மிக அதிகமாகும். ICDS திட்டம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் ஆகியவற்றின் செயல்திறன் நாட்டின் மிகச் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகின்றன.

‘ஒரு ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத தமிழ்நாடு’ என்ற தமிழ்நாட்டின் கொள்கை, ஊட்டச்சத்துக் குறைபாட்டை அகற்றுவதற்காக மாநிலத்தின் நீண்டகால பல துறைக் கொள்கைகளை செயல்படுத்துகிறது. ‘அனைத்து வகையான மனித ஊட்டச்சத்துக் குறைபாட்டையும் சிறந்த செயல்திறன் கொண்ட நாடுகளின் நிலைக்குக் குறைப்பது’ என்பது இதன் குறிக்கோளாகும். “அனைத்து வகையான மனித ஊட்டச்சத்து குறைபாட்டையும் சிறந்த செயல்திறன் கொண்ட நாடுகளின் நிலைக்கு குறைப்பது” என்பது இதன் குறிக்கோளாகும். தமிழ்நாட்டில், 434 குழந்தைகள் மேம்பாட்டுத் தொகுதிகளில் (385 கிராமப்புற, 47 நகர்ப்புற மற்றும் 2 பழங்குடியினர்) 54,439 குழந்தை மையங்கள் (49,499 அங்கன்வாடி மையங்கள்) மூலம் ICDS செயல்படுத்தப்படுகிறது.

அணுகப்படாத பகுதிகளுக்கு நிலையான விரிவாக்கம், ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் பாதுகாப்பு, மேம்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் சேவைகளின் விரிவாக்கம் ஆகியவற்றுடன், ICDS இப்போது உலகின் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றாக கருதப்படுகிறது மற்றும் குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கான ஒரு மாதிரியாகும். சேவைகள் நோக்கம் கொண்ட பயனாளிகளை அடைவதை உறுதி செய்வதற்காக, இந்த திட்டம் உலகமயமாக்கப்பட்டு, சுகாதாரம், கல்வி, குடிநீர், சுகாதாரம் போன்றவற்றைக் கையாளும் தொடர்புடைய துறைகளுடன் ஒன்றிணைக்கப்படுகிறது.

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கும், தொடக்கப்பள்ளி சேர்க்கையை அதிகரிப்பதற்கும், இடைநிற்றல் விகிதங்களைக் குறைப்பதற்கும் நாட்டின் மிகப்பெரிய மதிய உணவுத் திட்டமாகக் கருதப்படுகிறது. நாட்டின் பிற மாநிலங்கள், தமிழகத்தின் முன்னோடி முயற்சிகளின் படி மதிய உணவுத் திட்டங்களை வடிவமைத்துள்ளன.

**சக குழு ஈடுபாடு அதிகரித்தல்:**

- பெண் குழந்தைகளை மேம்படுத்துவதற்கும் மாற்றத்தின் தூண்டுதலான வினையூக்கிகளாக மாற்றுவதற்கும் 'பதுமையர் குழு' வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- இளம் பருவப் பெண்களை இத்திட்டத்திற்கு ஈர்ப்பது, பல்வேறு பணிகளில் அவர்களை இணைப்பது மற்றும் செயற்பாடுகளில் அவர்கள் பங்கேற்பதை ஊக்குவிப்பது போன்ற புதுமையான அணுகுமுறைகள் பரிசீலிக்கப்படும். ஒன்பது மாவட்டங்களில் சேவைகளை விரிவுபடுத்துவதற்காக நடமாடும் மையங்கள் உருவாக்கப்பட்டது,
- 'பதுமையர் அட்டை' வழங்கப்பட்டு, மேலும் கண்காணிப்பு பலப்படுத்தப்படும்.

**தமிழ்நாட்டில் முக்கியமான திட்டங்கள்:**

1. **டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நலத் திட்டத்தின் (Dr. Muthulakshmi Reddy Maternity Benefit Scheme)** கீழ், ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.12,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. சக்திமிக்க உணவிற்கான செலவுகளை மேற்கொள்ளுதல் பிரசவக் காலத்தில் வருமான இழப்பினை ஈடுசெய்வது, மற்றும் புதியதாக பிறக்கும் குழந்தைகளின் குறைந்த எடை பிறப்பினை தவிர்க்க மூன்று தவணைகளில் பிறப்பிற்கு முந்தைய கவனிப்பைப் பெறுதல், அரச நிறுவனங்களின் குழந்தைகளை பிரசவித்தல் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்குதல் போன்றவை இதன் குறிக்கோளாகும்.
2. **முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீடு திட்டத்தின் (chief Minister's Comprehensive Health Insurance Scheme)** மூலம் அரசாங்கத்தால் இலவச மருத்துவ மற்றம் அறுவை சிகிச்சை வழங்கி அனைவருக்கும் உலகளாவிய உடல் நலம் வழங்கும் நோக்கில் 2011-12 ஆம் ஆண்டில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000க்கு குறைவாக இருந்தால் அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அனைத்து செலவுகளையும் அரசே ஏற்றுக்கொள்கிறது.
3. **தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டங்கள் (Tamil Nadu health Systems Projects)** இலவசமாக ஆம்புலன்ஸ் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. (108 அவசர ஆம்புளன்ஸ் சேவை)
4. **'பள்ளி சுகாதார திட்டம்' (School Health Programme)'** முக்கியமாக விரிவான சுகாதார சேவையை அரசு மற்றம் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதை வலியுறுத்துகிறது.
5. **தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டத்தின் (National Leprosy Eradication Programme)** மூலம் அனைத்து தொழு நோயாளிகளையும் கண்டறிந்து தொடர்ச்சியான சிகிச்சையை வழங்குவதை நோக்கமாக கொண்டு மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது.

**தமிழ்நாட்டின் சில ஊட்டச்சத்து திட்டங்கள்:**

1. **புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத்திட்டம் (Purachi Thalaivar M.G.R Nutrition Meal Programme):** கிராமப்புறங்களில் ஜூலை 1, 1982 முதலும், நகர்ப்புற பள்ளி மாணவர்களுக்கு 1984 முதலும், ஓய்வூதியதாரர்களுக்கு 1983 முதலும், கர்ப்பிணிப் பெண்களுக்கு 1995 முதலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
2. **ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம்: (National Programme of Nutritional Support to primary Education)**

APOLLO STUDY CENTRE

3. **பொது ICDS திட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள்: (General ICDS Projects and World bank Assisted Integrated Child Devgelopment Services)** 24 மாவட்டங்களை உள்ளடக்கிய 318 வட்டாரங்களில் 1991இல் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது. 318 கிராமப்புற வட்டாரங்கள் மற்றும் 19500 மையங்களுக்கும் 1991ல் இது விரிவாக்கப்பட்டது.

4. **பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம் ( Pradhan Manthri Gramodays Yojan Scheme):** 6மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையான குழந்தைகளுக்கு உணவில் ஊட்டச்சத்து வழங்கப்படாத குக்கிராமங்களில் வழங்கப்படுகிறது.

5. **தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் (Tamil Nadu Integrated Nutrition Programme):** இத்திட்டம் 1980இல் ஆரம்பிக்கப்பட்டு 6-36 மாத வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணி மற்றம் பாலூட்டும் பெண்கள் ஆகியோரை இலக்காக வைக்கப்பட்டது.

6. **மதிய உணவுத் திட்டம் (Mid-Day Meal Programme)** : இந்த திட்டம் 2-14 வயதுக்குட்பட்ட அங்கன்வாடி அல்லது பள்ளி குழந்தைகளுக்கு ஒரு பயனாளிக்கு தலா ரூ.0.90 வீதம் செலவழிக்கப்படுகிறது. இந்த திட்டம் 4426 வட்டாரங்களில் 5.57 கோடி குழந்தைகளை உள்ளடக்கியது.